1756

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

THIRD SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

13th, 14th, 16th and 17th August 1963.

Volume XIV (Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.

Tuesday, 13th August 1963.

	PAGES
I. Questions and Answers	1-27
II. Adjournment Motion re. the action of the Management of the B & C Mills in not taking back 32 of its employees	27
III. Calling attention to the low storage in the Mettur Reservoir ..	27-29
IV. Government Bills—	
(1) The Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 4 of 1962)	29
(2) The Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L. A. Bill No. 2 of 1962)	29
(3) The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 3 of 1962)	29
(4) The Madras Appropriation (No. 4) Bill, 1963 (L.A. Bill No. 14 of 1963)	29-30
(5) The Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963	30-50
(6) The Holdings (Stay of Execution Proceedings) Madras Amendment) Bill, 1963	50-51
(7) The Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1963	51-52
(8) The Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1963	53-57
(9) The Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963	57-61
(10) The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1963.	61-63
(11) The Payment of Wages (Madras Amendment) Bill, 1963 (L.A. Bill No. 10 of 1963)	63-64
(12) The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 (L.A. Bill No. 12 of 1963)	65-73

PAGES

V. Announcements—
- (1) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1963 — 57
- (2) The Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963 .. .. — 57
- (3) The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1963. — 1
- (4) The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 .. .. — 64

VI. Government Motion re: Change in the order of Business .. — 57

VII. Papers laid on the table of the House .. .. .. — 74

Wednesday, 14th August 1963.

I. Questions and Answers .. .. — 75–106

II. Calling attention to the outbreak of Cholera in Tiruchirappalli district .. .. — 106–108

III. Statement re. admission to Medical Colleges in the State .. — 108–111

IV. Government Bills—
- (1) The Madras Inams (Supplementary) Bill, 1963 .. .. — 111–112
- (2) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1963 .. .. — 112–126

V. Papers laid on the table of the House .. .. — 129

Friday, 16th August 1963.

I. Questions and Answers .. .. — 127–151

II. Announcements—
- (1) The Madras Appropriation (No. 4) Bill, 1963 .. .. — 151
- (2) Nomination of Council Members to the Committee on Estimates .. .. — 153
- (3) Nomination of Council Members to the Committee on Public Accounts .. .. — 153

III. Calling attention to the non-availability of raw materials for the match factories in Sattur .. .. — 151–152

IV. Statement re: admission to the Educational Institutions in the State .. .. — 152–153

V. Government Bills—
- (1) The Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963. — 153
- (2) The Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 .. .. — 154–179
- (3) The Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L. A. Bill No. 2 of 1962) .. .. — 179–218

VI. Discussion re: Turn System of Distribution of Cauvery Water in the Thanjavur district .. .. — 219–231

VII. Papers laid on the table of the House .. .. — 232

61423

PAGES

Saturday, 17th August 1963.

I. Questions and Answers .. .. — 233–284

II. Calling attention to unrest among students of the Madras Medical College Men's Hostel .. .. — 284–285

III. Points of Order—
- (1) Reported resignation of the Chief Minister .. .. .. — 285–286
- (2) Notice for consideration of Bills .. .. — 286–287

IV. Ruling re. matter under Rule 82 (Augmentation of electric power) .. .. — 287

V. Announcements—
- (1) Bills passed by the Legislative Council .. .. .. — 287
- (2) The Madras Inams (Supplementary) Bill, 1963 .. .. — 321

VI. Presentation of Reports—
- (1) Committee on Subordinate Legislation .. .. .. — 287
- (2) Committee on Government Assurances .. .. .. — 288

VII. Government Bills—
- (1) The Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 2 of 1962)—*cont.* .. .. — 288–289, 296–314
- (2) The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 3 of 1962) .. .. — 289–296, 314–318
- (3) The Madras Lease-holds (Abolition and Conversion in to Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 4 of 1962) .. .. — 318–320
- (4) The Madras Inams (Supplementary) Bill, 1963 (L.A. Bill No. 21 of 1963) .. .. — 321–328
- (5) The Madras District Police (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 13 of 1963) .. .. — 323–364

VIII. Government motion—
- Change in the order of business .. .. — 320

IX. Papers laid on the table of the House .. .. — 364–365

HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the Sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under those very Main Headings.

All the papers laid on the table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

A.M./Ad. Motion	Adjournment Motion.
Ann.	Announcement.
B.O.H.	Business of the House.
C.A.	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C.A.St.	Calling Attention Statement.
Consid.	Consideration stage of a Bill. This stage includes— (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.
Consid. Cl.	Consideration of clauses of a Bill.
D.E.E.	Demands for Excess Expenditure.
Dis. S.D.	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G.	Demands for Supplementary Grants.

G.A.	Governor's Address.
G.D.	General Discussion.
H.A.H. Dis./H.H.D. ..	Half-hour Discussion.
Int.	Introduction stage of a Bill.
L.A.	Legislative Assembly.
L.C.	Legislative Council.
M.	Motion.
P.M.	Privilege Motion.
R/Res.	Resolution.
St.	Statement.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Tuesday, 13th August 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மதுராந்தகத்தில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்

** 2 குறுகியகாலக் கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் 7—8—1963-ல் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது உண்மையா ?

(இ) தடியடிப் பிரயோகத்தாலும் துப்பாக்கிப் பிரயோகத்தாலும் காயமடைந்தவர்கள் எத்தனை பேர் ?

(உ) இந்தச் சம்பவத்தில் போலீஸ் தரப்பில் காயம்பட்டு ஆஸ்பத்திரியில் உள்ளவர்கள் எத்தனை பேர் ?

(எ) துப்பாக்கிப் பிரயோகத்துக்கு முன் எச்சரிக்கை கொடுக்கப்பட்டு பிறகு கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்யப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) ஆம். கூட்டம் கல்வீச்சில் ஈடுபட்டுக் கலவரம் விளைவித்தபோது, தற்காப்புக்காகப் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

(இ) துப்பாக்கிப் பிரயோகத்தால் ஒருவர் காயமுற்றார்.

(உ) ஒரு டெபுடி சூப்பிரிண்டெண்டெண்டு, ஒரு இன்ஸ்பெக்டர், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு எட்-கான்ஸ்டபிள்கள், நான்கு கான்ஸ்டபிள்கள் ஆக மொத்தம் பத்து பேர் போலீஸ் தரப்பில் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

(எ) எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. கண்ணீர்ப்புகை பிரயோகிக்கப்படவில்லை.

(a) Yes, the police opened fire in self-defence when a riotous mob pelted them with stones.

(b) Only one person was injured as a result of police firing.

(c) Ten persons including the Deputy Superintendent of Police, one Inspector, two Sub-Inspectors, two Head Constables and four Constables were injured on the police side. All of them were treated in the hospital.

(d) Warning was given. Tear-gas was not used

திரு. க. ர. நல்லசிவம்: பொதுமக்கள் மீது அவசியமற்ற முறையில் தடியடிப் பிரயோகம் செய்ததன் காரணமாகத்தான் கல் எறியப்பட்டது என்ற தகவல் சர்க்காருக்கு வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தத் தகவல் கனம் அங்கத்தினருடைய தகவலாக இருக்கலாம். என்னிடம் இருக்கும் தகவல், கல் அடி அதிகமாக ஏற்பட்டதன் காரணமாக போலீஸ்காரர்கள் எச்சரிக்கை செய்ததோடு, இம்மாதிரி உணர்ச்சி வேகத்திற்கு இடமில்லாத நிலையை ஏற்படுத்த முயன்றார்கள். 'வேலை நிறுத்தம் இல்லை, நின்று போய் விட்டது, உபவாசம் கூட நின்று போய் விட்டது' என்றெல்லாம் சொன்ன பிறகும் கூட கல் எறி தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததால் தான் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே, உண்ணாவிரதத்தின்போது 144 தடை உத்தரவு போட்டிருந்தால் இந்த நிகழ்ச்சிகளைத் தவிர்த்திருக்க முடியுமல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 144 தடை உத்தரவு எப்போது வேண்டுமோ அப்போதுதான் பிறப்பிக்க முடியும். நிகழ்ச்சி நடைபெற்றதற்கு ஆறு நாட்களுக்கு முன்னாலேயே உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. அமைதியாக இருக்கும் போது தடை உத்தரவு போட்டிருந்தால்தான் தவறு என்று இந்த மன்றம் கண்டிக்கும்.

திரு. ஜே. மாதா கவுடர்: இந்த பஸ் கம்பெனியில் உள்ள ஐந்து தொழிலாளர்கள்தான் இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு, அவர்கள் இந்தக் கலவரத்திற்காக என்றே பக்கத்தில் இருந்த கிராமவாசிகளை அழைத்து வந்து தூண்டி விட்டார்கள் என்பது பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கலவரத்திலே யார் யார் ஈடுபட்டார்கள் என்ற தகவல் அரசாங்கத்திடம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த நிகழ்சியைப் பற்றி விசாரணை செய்வதற்கு நீதிபதி யாராவது நியமிக்கப்பட்டார்களா ? அவர்கள் விசாரித்து ஏதாவது அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்களா ? அது சபையில் வைக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விதிகளின்படி இதைப் பற்றி விசாரிப்பதற்காக ஒரு ஆர்.டி.ஓ. நியமிக்கப்பட்டிருக்கிறார். இதற்கு நீதிபதி விசாரணை அவசியமில்லை. ஆர்.டி.ஓ. விசாரணை இன்னும் முடிவு பெறவில்லை.

திரு. க. ர. நல்லசிவம்: இந்த விசாரணை போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகிலேயே நடத்தப்படுகிறது. ஆகவே, நீதிமன்ற விசாரணையாக நடத்த சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நீதி மன்ற விசாரணை நடத்துவதற்கு யோசனை ஒன்றும் இல்லை. போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கிற இவ்வளவு தூரத்திற்குள் விசாரணை நடத்தக் கூடாது என்ற உத்தரவு இல்லை. அதற்கு அவசியமும் இல்லை.

திரு. கே. மூக்கையா தேவர்: கண்ணீர்ப் புகை உபயோகிக்கப்படவில்லை என்று சொன்னால் அதற்குக் காரணம் சர்க்காரிடம் ஸ்டாக் இல்லாததுதானா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சர்க்காரிடத்தில் ஸ்டாக் இருக்கிறது. எங்கெங்கு வைக்கப்பட வேண்டுமோ அங்கெல்லாம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கலவரம் சிறிதளவாவது எதிர்பார்க்கப்பட்டிருந்தால் கண்ணீர்ப் புகைக் குண்டை வைத்திருப்பார்கள். திடீரென்று கூட்டம் சேர்ந்து கல் எறிய ஆரம்பித்தால்தான் கண்ணீர்ப் புகை உபயோகிக்க முடியவில்லை.

திரு. எம். எஸ். மணி: உண்ணாவிரதம் இருந்த தொழிற்சங்கத் தலைவரைக் கைது செய்த பிறகு, பொதுமக்கள் அந்தத் தலைவரை விடுதலை செய்ய வேண்டும் என்றும், தங்கள் முன் கொண்டு வரவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தும் போலீசார் அவ்வாறு அவரைக் கொண்டு வராத காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் அறிவது அது அல்ல. கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் தவறு. உண்ணாவிரதம் இருந்தவர் கைது செய்யப்பட்டது சில நாட்களுக்குப் பிறகுதான். அவர் கைது செய்யப்பட்டது உண்ணாவிரதம் இருந்ததற்காக அல்ல. நடுத் தெருவில் உண்ணாவிரதம் இருந்து அமைதிக்குப் பங்கம் விளைவித்தால்தான் கைது செய்யப்பட்டார். 'அவர் உண்ணாவிரதத்தை விட்டு விட்டார், வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது' என்று சொல்லியும் கூட்டம் கல் எறிந்து கொண்டிருந்தது.

திரு. முனு. ஆதி: இந்த நிகழ்ச்சிக்கு முன் தினமே அங்குள்ள மக்கள் கடைகளை அடைக்க வேண்டும், ஹர்த்தால் செய்ய வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள். அதற்குப் பிறகும் முறையான ஏற்பாட்டைப் போலீசார் செய்யத் தவறிவிட்டதன் காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதை அரசாங்கம் உணருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: போலீஸ்காரர்கள் நடவடிக்கை எடுத்ததில் தவறு இல்லை. கல்லால் அடித்ததுதான் தவறு.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதற்கு முன் முறையான நடவடிக்கைகள், எச்சரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா ? என்னென்ன எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. ஒலிபெருக்கி மூலம், 'வேலை நிறுத்தம் நிறுத்தப் பட்டது, உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது, ஆகவே அமைதியாக இருக்க வேண்டும், கூட்டம் சேரக் கூடாது' என்றெல்லாம் கூறியும் அவர்கள் கல் எறிந்து கொண்டிருந்தார்கள். முதலில் ஒரு பஸ் வந்தபோது 'மெயில் பாக்'கை கண்டக்டர் எடுக்க வொட்டாமல் தடுத்தார்கள். போலீசார் பிரவேசித்தவுடன் அதை விட்டு விட்டார்கள். அதற்குப் பிறகு வந்த கூட்டம் பெட்ரோல் பங்க் வரை ஓடிப்போய் இன்னொரு பஸ் வரும் போது கல் எறிய ஆரம்பித்தார்கள். மற்றபடி எல்லா நடவடிக்கை களும் எடுத்துக் கொள்ளப்பட்டன. தடியடிப் பிரயோகம் செய்யப் பட்டது. அதெல்லாம் பயனளிக்காத காரணத்தால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

திரு. கே. ஏ. மதியழகன் : துப்பாக்கிப் பிரயோகத்தின் காரண மாக ஒருவருக்கு ஒரு தொடையில் குண்டு பட்டு இன்னொரு தொடை வரைக்கும் அது பாய்ந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அவருடைய சிகிச்சை நிலை எப்படி இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குண்டு ஒரு தொடையிலிருந்து இன்னொரு தொடைக்குப் போய்விட்டது என்ற தகவல் இல்லை. குண்டு தொடையில் பாய்ந்தது உண்மைதான். அதற்கு சிகிச்சை செய்யப்படுகிறது. சற்று முன்பு வந்த செய்தியின் படி அவருடைய உயிருக்கு ஆபத்தில்லை என்று தெரிகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், போலீசார் மீது கல் எறிந்து காயம் ஏற்படுத்திய விஷமிகளில் யாராவது கைது செய்யப் பட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சிலர் கைது செய்யப்பட்ட தாகத் தகவல் உண்டு.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து இருக்கப்படுமேயானால் உயிர்ச் சேதம் ஏற்படாமல் தடுத்து இருக்கக் கூடும். கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்யாமல் ஏன் நேரடியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப் பற்றித்தான் முன்பே நான் விடையளித்தேன். கண்ணீர்ப் புகை குண்டுகள் ஒவ்வொரு சர்க்கிளிலும் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் வைப்பதில்லை. எங்கு இம்மாதிரி குழப்பம் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கிறார் களோ அந்த இடங்களுக்குக் கண்டிப்பாகக் கண்ணீர்ப் புகை

குண்டுகளைக் கொண்டு போக வேண்டுமென்று உத்தரவு இருக் கிறது. இந்த ஸ்தலத்தைப் பொறுத்தமட்டில் இந்தச் சம்பவம் திடீரென்று ஏற்பட்டதாகும். ஆகவே, கண்ணீர்ப் புகை தேவை என்று முன்னாலேயே எதிர்பார்க்கப்படவில்லை.

திரு. க. ர. நல்லசிவம் : துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரண மான டெப்டி சூப்பரின்டென்டெண்ட் அன்றையதினம் ட்யூட்டி யில் இருந்தார்களா என்பதை ஆராயவாவது முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டெப்டி சூப்பரின்டென்டெண்ட் அவர்கள் அடிபட்டார் என்பதை கனம் அங்கத்தினர் மறுக்கிறார் கள் என்றால் இதற்கு விடை அளிப்பதில் பயன் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : எல்லா கண்டின்ஜன்ஸிகளையும் சமா ளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது. அடிக்கடி இப்படி நடைபெறுகிறது. உரப்பனூரில் மூன்று பேர்களைப் பலி கொடுத்தோம். இங்கும் படுகாயம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி யெல்லாம் நிலைமை இருந்தும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்று சொல்வது சரி என்று கருதுகிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சமாதானம் சொல்லக் கூடாது என்று கனம் அங்கத்தினர் விரும்பினால் அதைத் தவிர்க்க முடியாது.

திரு. கோ. சி. மணி : இனிமேலாவது ஒவ்வொரு சர்க்கிளிலும் கண்ணீர்ப் புகை உபயோகிக்கும் ஆயுதம் வைக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒவ்வொரு சர்க்கிளிலும் வைப்பது சாத்தியமில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : வேறு பஸ் கம்பெனிகளில் தொழி லாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளைவிட அதிகமான சலுகை இந்த பஸ் கம்பெனியில் கொடுக்கப்பட்டும் வேண்டு மென்றே வேலை நிறுத்தத்தைத் தூண்டி கலவரம் ஏற்படுத்தி யிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. இத்தகராறு ஏற்பட்டிருந்த நிலையில் நான் அஸிஸ்டென்ட் தொழிலாளர் கமிஷனரைக் கேட்டபோது தகராறு எல்லாம் தீர்க் கப்பட்டு வருகிறது, தகராறுக்கு ஒன்றும் இடமில்லை என்றுதான் சொன்னார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : இதை நீதிமன்ற விசாரணைக்குக் கொண்டுவர அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நீதிமன்ற விசாரணைக்குக் கொண்டு வரக்கூடிய விஷயம் அல்ல இது.

திரு. எம். எஸ். மணி: தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிர்வாகம் கொடுக்க மறுத்து, லேபர் கமிஷனர் விசாரணைக்கு நிர்வாகம் வர மறுத்த காரணத்தினால்தான் கடைசியாக அந்தத் தொழிற்சங்கத் தலைவர் உண்ணாவிரதம் இருந்தார் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது முற்றிலும் தவறு. காரணம் என்னவாகயிருந்தாலும் தொழிலாளர் தலைவர் உண்ணாவிரதம் இருப்பது முற்றிலும் தவறு.

திரு. முனு ஆதி: தாலுகா மாஜிஸ்ட்ரேட் அவர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டு சுட வேண்டுமென்று உத்தரவிட்டார்களா? அல்லது டெப்டி சூப்பரின்டென்டென்ட் தன் அதிகாரத்தை வைத்துச் சுட முற்பட்டாரா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றித் தனி கேள்வி வேண்டும்.

திரு. க. ர. நல்லசிவம்: அந்தப் பிராந்தியத்தைப் பொறுத்தவரை பெருவாரியான பேர்கள் தினசரி கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் கைது செய்யவேண்டியவர்கள் ஜாபிதாவை போலீஸ் வெளியிட்டால் அவரவர்களே ஆஜராக வசதியாயிருக்கும். தான்தோன்றித்தனமாகக் கைது செய்வது தடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: குற்றம் செய்தவர்களாக கருதப்படுபவர்கள் கைது செய்யப்படுவது தவிர்க்க முடியாதது.

புதிய கண்மாய் திட்டம் (மதுரை மாவட்டம்).

* 116 கேள்வி.—**திருமதி ஏ. கிருஷ்ணவேணி:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டாரம் மாவூற்று ஓடை—லட்சிபுரம் புதிய கண்மாய் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. பூ. கக்கன்: திட்டம் கைவிடப்பட்டது.

The proposal has been dropped.

MR. SPEAKER: **Question No. 117 is postponed.**

Government Royapettah Hospital, Madras.

* 118. *Q.*—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state the present stage of **the construction of a 500 bed block in the Government Royapettah** Hospital, Madras?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இவ் விஷயத்தை அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: தென் சென்னையின் அவசியத்தைக் கருதி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாவது இராயப்பேட்டை ஆஸ்பத்திரியை விருத்தி செய்கின்ற இவ்விஷயத்தில் நம் சர்க்கார் வற்புறுத்துமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அது ஏற்கெனவே அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

பயிர்ப் பாதுகாப்பு, கால்நடை இன்சூரன்ஸ் திட்டங்கள்.

* 119 கேள்வி.—**திரு. கே. நாராயணசாமி பிள்ளை:** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் பயிர்ப் பாதுகாப்பு, கால்நடை இன்சூரன்ஸ் முதலிய திட்டங்களை நம் சர்க்கார் சீக்கிரத்தில் கொண்டுவர ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: தேசீய நெருக்கடியை உத்தேசித்தும், செலவில் சிக்கனம் செய்ய வேண்டிய அவசியத்தை முன்னிட்டும், இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவினர் ஆலோசனைப்படி கால்நடை இன்சூரன்ஸ் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இம் மாநிலத்தில் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவரும் உத்தேசம் இல்லை.

In view of the National Emergency and the present need for economy in expenditure, the proposal for introducing Cattle Insurance Scheme in the State has been deferred as advised by the Government of India in the Indian Council of Agricultural Research.

There is no proposal to introduce a Crop Insurance Scheme in this State.

திரு. கே. ஏ. மதியழகன்: பல ஆண்டுகளாக எல்லாக் கட்சிகளாலும் கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டம், பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் இவை கொண்டுவரப்பட வேண்டுமென்று இம்மன்றத்தில் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அதனால் நன்மை அளிக்கிற இத்திட்டத்தை துரிதப்படுத்த சர்க்கார் முன்வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: கால்நடையைப் பொறுத்தவரை இத்திட்டத்தைக் கொண்டுவர இந்த அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. தேசீய நெருக்கடி காரணமாக இது ஒத்தி வைக்கப்பட்டது. அது பின்னால் எடுத்துக் கொள்ளப்படும். பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பொறுத்தவரை சிரமம் இருப்பதால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

[13th August 1963

கனம் திரு. பூ. கக்கன் : பருவ மழை தவறி விடுவதால் கஷ்டம் இருக்கிறது. இதை எப்படி கொண்டு வருவது என்று பார்த்து ஒரு முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : தேசீய நெருக்கடி சமயத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவது மிக அவசியம். ஆகவே பயிர் பாது காப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால் விவசாயிகள் தைரியமாக உற்பத்தி செய்ய முடியும். ஆகவே தேசீய நெருக்கடியைக் கருதி பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுல் செய்ய அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத் தைக் கொண்டு வரவேண்டும் என்று இன்று நேற்றல்ல, 1950-ல் இருந்தே அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்துத்தான் பின்னால் இப்போது கொண்டுவர முடியவில்லை என்று தெரிவித்தேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இதை ப்ரைவேட் கம்பனி கள் எடுத்து நடத்த தயாராயிருந்தால் சர்க்கார் ஏதாவது சலுகை கொடுக்க தயாராயிருக்கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம் : புஞ்சைப் பிரதேசங்களில் இல்லாமல் நஞ்சைப் பிரதேசத்தில் ஒரு ஜில்லாவில் மாதிரிக்காக இதை வைத்து நடத்திப் பார்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. மூக்கையா தேவர் : பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்ததன் பயனாக இத்திட்டத்தை முடிவாகக் கைவிட முடிவு செய்யப்பட்டிருக்கிறதா ? அல்லது இதைக் கொண்டு வருவதற்கு ஏதாவது சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : கைவிடுவது என்று கூற முடியாது. இப் போது கொண்டுவர சாத்தியம் இல்லை என்றுதான் சர்க்கார் முடிவிற்கு வந்திருக்கிறது. கால்நடையைப் பொறுத்தவரை கொண்டுவரவேண்டுமென்று நினைத்து தேசீய நெருக்கடி காரண மாக ஒத்தி வைத்திருக்கின்றோம், பின்னால் கொண்டு வரலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : மத்திய உணவு மந்திரி பட்டீல் அவர் கள் சென்ற பட்ஜட் கூட்டத்தின்போது பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அவசியம் அமுல் செய்யவேண்டு மென்று கூறியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக இந்த மாநில அரசாங்கத்திற்கு ஏதாவது தாக்கீது வந்திருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : தகவல் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : வேறு மாநிலத்தில் எங்கேயாவது இந்தத் திட்டம் நடைபெறுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

13th August 1963]

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஜீவ நதியே இல்லாத கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் இந்தப் பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவர உத்தேசிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு பகுதி, ஒரு கிராமம் என்றில்லை. மாநிலம் பூராவிலும் கொண்டு வந்தால் நன்றாயிருக்கும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தேசீய நெருக்கடி காலத் தில் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டியது அவசியம் என்ப தால் இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை அவசியம் மறுபடியும் பரி சீலிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பரிசீலனை செய்துதான் முடிவிற்கு வந்திருக்கிறோம்.

Fair Price Shops

* 120 Q.—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the quantity of rice supplied by the Centre for running the Fair Price shops;

(b) whether there is any proposal to open more Fair Price Shops; and

(c) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (a) The Government of India are supplying the requirements of rice for distribution through the fair price shops. The present supply is about 3,500 tonnes per month.

(b) & (c) There are at present 200 fair price shops whose continuance till the end of 30th September 1963 has been sanctioned with the concurrence of the Government of India and the number of additional fair price shops to be opened is under correspondence with the Government of India.

(அ) நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிப்பதற்கு நமக் குத் தேவைப்பட்ட அரிசியை இந்திய அரசினர் வழங்கி வருகின்றனர். தற்சமயம் மாதத்திற்கு சுமார் 3,500 மெட்ரிக் டன்கள் வழங்கப்படுகின்றன.

(இ), (உ) இப்பொழுது 200 நியாயவிலைக் கடைகள் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் 1963-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை அனுமதிக்கப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகள் இன்னும் திறக்க வேண்டிய எண்ணிக்கை பற்றிய விஷயம் மத்திய அரசாங்கத்துடன் கலந்து ஆலோசிக்கப் பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : மத்திய சர்க்கார் தங்களுடைய கோதுமைத் திணிப்புத் திட்டத்தின் ஒரு அம்சமாக அரிசிக்கு இனிமேல் பற்றாக்குறை வரப் போகிறது, ஆகவே கோதுமை சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும் என்று ஏராளமாக கோதுமையை அனுப்பியிருப்பது உண்மைதானா ?

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் அவர்கள் கற்பனை செய்வது முற்றிலும் தப்பிதம்.

திரு. கே. ஏ. மதியழகன்: அரிசி, பருப்பு வகைகள், காய்கறிகள் ஆகியவைகளின் விலைவாசிகளெல்லாம் உயர்ந்துகொண்டு போகிற காரணத்தினாலே, அவைகளைத் தடுக்காமல் இருந்தால், சர்க்கார் கடும் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கலெக்டர் அவர்கள் நேற்று கூட்டிய மகாநாட்டில் வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை செய்திருப்பது உண்மைதானா?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினர் அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால், அதைப் பற்றிப் பதில் சொல்லலாம்.

திரு. ஜே. மாதா கவுடர்: கோதுமைத் திணிப்பு என்று சொல்லி கோதுமை சாப்பிடாதவர்கள் இருந்தாலும், எங்கள் ஜில்லாவைப் போன்ற அரிசி விளையாத இடங்களில் கோதுமை, அரிசி இரண்டும் கிடைப்பதற்கு அதிகமாக நியாயவிலைக் கடைகளைத் திறப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: கோதுமை எங்கெல்லாம் தேவை இருக்கிறதோ அங்கெல்லாம் அனுப்பப்பட்டு வருகிறது. டாக்டர்கள் கோதுமை அதிகமாகச் சாப்பிடவேண்டும் என்று சொல்லுகிறார்கள். நீலகிரி ஜில்லாவில் 'பேர் பிரைஸ் ஷாப்' மூலம்தான் அதிகப்படியான அரிசி வழங்கப்படுகிறது. அங்கு கலெக்டர் அவர்கள் எப்பொழுது எவ்வளவு தேவை என்று எழுதுகிறார்களோ, அதைப் பரிசீலனை செய்து, கவனித்து உதவி செய்யப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகிற அரிசி அடக்க விலைக்குத் தரப்படுகிறதா? அல்லது விலை ஏற்றத் தாழ்வாகத் தரப்படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன்: நியாயமான விலைக்குத்தான் தரப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: மேலும் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு மத்திய அரசாங்கத்தைக் கோரியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்தெந்த இடங்களில் நியாய விலைக் கடைகள் திறப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன்: எந்தெந்த ஜில்லாக்களில் நியாயவிலைக் கடைகள் தேவை என்று கலெக்டர்கள் எழுதுகிறார்களோ, அதை அரசாங்கம் பார்த்து, பரிசீலனை செய்து, கவனித்து, அந்த இடங்களில் நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்தப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்ய சென்னையில் ஒரு லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்ததில், இப்பொழுது எவ்வளவு அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன்: ஒரு லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யவேண்டும் என்று மில் ஓனர்களைக் கூட்டிவைத்து ஒரு முடிவு எடுத்தோம். இப்பொழுது எதிர்பார்த்தபடி வரவில்லை. இருந்தாலும், மேலும் வற்புறுத்தி நாம் எதிர்பார்த்ததைச் சரிக்கட்ட வேண்டும் என்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. மூ. சண்முகம்: மத்திய சர்க்காரால் சப்ளை செய்யப்படும் அரிசியானது நம் நாட்டில் விளைவிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டதா? அல்லது வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டதா?

கனம் திரு. பூ. கக்கன்: இங்கேயே கொள்முதல் செய்யப்பட்ட அரிசியும், இதர மாகாணங்களில் கொள்முதல் செய்யப்பட்ட அரிசியும் இரண்டும் தான் சப்ளை செய்யப்படுகிறது.

திரு. சி. பொன்னுசாமி: நாள் செல்லச் செல்ல கோதுமை சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்பதை எடுத்துக்காட்ட ஏதாவது அறிக்கை இருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன்: கோதுமை சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகத்தான் இருப்பதாகத் தெரிகிறது.

திரு. மு. பொ. வடிவேல்: வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: 'நார்த் ஆர்காட் டிஸ்டிரிக்டில்' இப்பொழுது "The number of shops recommended by the Board is 16".

திரு. கே. பொன்னையா: தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டங்களிலே தொழிலாளர்கள் அவசியம் முதலாளிகளிடம்தான் அரிசி வாங்கவேண்டும் என்ற ஏகபோக உரிமை வைத்துக்கொண்டிருக்கிறார்களே, அதை ரத்து செய்து, எஸ்டேட்களில் நியாய விலைக்கடைகள் திறந்தோ அல்லது கோதுமையை நிறையக் கொடுத்தோ அந்த எஸ்டேட்களில் கடை வைக்க சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: மலைத் தோட்டத் தொழிலாளர் சகோதரர்களுக்கு எஸ்டேட் ஓனர்கள் மூலம் நியாய விலைக்கடைகள் வைத்து அங்கே அரிசி விநியோகிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை சங்கரன்: கோதுமை சாப்பிட்டால் உயரம் கூடும் என்று சொல்லுகிறார்கள். நமது நண்பர் அவர்கள் (திரு. கே. ஏ. மதியழகனை சுட்டிக் காட்டி) இந்தி பேசுபவர்கள் கோதுமை உபயோகப்படுத்துவதால் அதில் வெறுப்பு உணர்ச்சி கொள்ளாமல் கோதுமையைத் தாராளமாக உபயோகிக்க வேண்டும் என்று அவருக்கும், அவர் போன்றவர்களுக்கும் சர்க்கார் யோசனை கூறுமா?

(பதில் இல்லை.)

[13th August 1963

திரு. கரு. சீமைச்சாமி : புதியதாக நியாயவிலைக் கடைகள் திறக்கப்படும் பொழுது, நியாயவிலைக் கடைகளை நடத்துவதற்கு அனுமதி கோருபவர்களுடைய யோக்யதாம்சத்தைப் பரிசீலனை செய்து, பிறகு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : முக்கியமாக எங்கெல்லாம் கோஆப்பரேடிவ் சொசைடிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அந்த சொஸைடிகளின் மூலம் நியாய விலை முறையிலே அரிசி விநியோகிக்கப்படுகிறது. அம்மாதிரி சொஸைடிகள் இல்லாத இடங்களில் தனிப்பட்டவர்கள் அனுமதி கோரினால், அதைப் பார்த்து பரிசீலனை செய்து, நல்ல முறையில் விநியோகம் செய்வார்கள் என்று கருதினால், அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்படுகிறது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : கொள்முதல் செய்வதிலே அதிகாரிகள் கூலிக்கு அரைக்கும் ரைஸ் மில்காரர்களுக்கும் தொந்தரவு கொடுக்கிறார்கள் என்று சர்க்காருக்குத் தகவல் வந்திருக்கிறதா ? அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : பொதுவாக அரசாங்கம் ரைஸ் மில்காரர்களைக் கூட்டிவைத்துத்தான் ஒரு முடிவு எடுத்தது. தஞ்சை ஜில்லாவில் 12 சதவிகிதமும், இதர ஜில்லாக்களில் 10 சதவிகிதமும் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அதன் காரணமாகத்தான் இப்பொழுது அவர்களிடையே அரசாங்கம் அவர்கள் கொடுக்கவேண்டிய அரிசியைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. தனிப்பட்ட சிறு சிறு மில்கள், கூலிக்கு அரைக்கிற மில்களுக்கு விதி விலக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கம் பார்த்து பரிசீலனை செய்து, உண்மையை விசாரித்து உண்மையிலேயே அவர்கள் கூலிக்கு அரைக்கிற மில்காரர்களாக இருந்தால் அவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்படுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகள் மாவட்ட ரீதியாக எத்தனை வைக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரம் தர இயலுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுதிருக்கிற நியாயவிலைக் கடைகள் பற்றியும், இனிமேல் இருக்கவேண்டுமென்று போர்டு ரெகமெண்டு செய்திருப்பதுபற்றியும் புள்ளிவிவரம் தருகிறேன். சேலம் ஜில்லாவில் இப்பொழுது 25 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. இன்னும் 25 வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மதுரையில் 15 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. பதினைந்து கடைகள் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். செங்கல்பட்டில் 50 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. எழுபத்தைந்து கடைகள் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கன்யாகுமரியில் 15 கடைகள் இருக்கின்றன, 21 கடைகள் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நீலகிரியில் 50 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன, 70 கடைகள் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ராமநாதபுரத்தில் 25 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன, 70 கடைகள் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். கோயம்புத்தூரில் 20

13th August 1963]

கடைகள் இருக்கின்றன. இருபத்திமூன்று கடைகள் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். திருநெல்வேலியில் இப்பொழுது இல்லை. பதினெட்டு நியாயவிலைக் கடைகள் வேண்டுமென்று ரெகமெண்டு பண்ணியிருக்கிறார்கள். நார்த் ஆர்காட்டில் இப்பொழுதில்லை, 16 கடைகள் வேண்டுமென்று ரெகமெண்டு பண்ணியிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : அநியாய விலையில் பிளாக் மார்க்கெட்டில் விற்பதற்காக அண்டை மாகாணங்களுக்கு, ஆந்திர மாகாணத்திற்கு லாரி லாரியாக சர்க்கரை மூட்டைகள் இங்கிருந்து கடத்தப்பட்டு வருவது சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ? அப்படிக் கொண்டுவரப்பட்டிருந்தால், அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆந்திராவிலே சர்க்கரை இருக்கிறது. அங்கிருந்தும் வரலாம், இங்கிருந்தும் போகலாம். கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதாவது குறிப்பிட்ட நிகழ்ச்சியைச் சொல்லி அதைக் கவனிக்கவேண்டுமென்று எழுதினால், அதைப்பற்றிக் கவனிக்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த நியாயவிலைக் கடைகள் அரிசிக்கு மட்டும்தானா, மற்றப் பொருள்களுக்கும் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது அரிசிக்கு மட்டும்தான்.

திரு எம். தண்டாயுதபாணி : சர்க்கார் திட்டமிட்டபடி ஒரு லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிய வருகிறது. தஞ்சை ஜில்லாவில் 12 சதவிகிதம் எல்லா மில்காரர்களும் கொடுத்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது. மீதியுள்ள பகுதியில் எந்த அடிப்படையில் கொள்முதல் செய்வதாக உத்தேசம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பூராவும் தஞ்சை ஜில்லாவில் கொடுத்து விட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், இப்பொழுது நெல் விலை அதிகமாக இருக்கிறது, நெல்லாகக்கூட வாங்கி வைத்திருக்கிறார்கள். அப்படி வாங்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இனிமேல் எவ்வாறு ப்ரொக்யூர் செய்யவேண்டுமென்பது பற்றி அரசாங்கம் முடிவெடுத்து, பின் தெரிவிக்கும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : சிபாரிசு செய்யப்பட்ட நியாயவிலைக் கடைகள் எவ்வளவு காலத்திற்குள் துவக்கப்பட இருக்கிறது என்பதை அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கே மிகத் தேவையோ அங்கே வெகு சீக்கிரம் திறப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. உ. ஷண்முகம் : நியாயவிலைக் கடைகளைத் திறப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறதா ? அப்படியானால் அந்த நஷ்டத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்கிறதா, அல்லது மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் செலவிலேதான் நாம் ப்ரொக்யூர்மெண்ட் செய்து வைத்திருக்கிறோம். இதுவரையிலும் அவர்கள் தான் கொடுத்து வருகிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசுவாமி : மில்காரர்களிடமிருந்து கொள் முதல் செய்யக்கூடிய விலை குறைவாக இருக்கிறது என்று சர்க்காருக்குத் தகவல் வந்திருக்கிறதா? அப்படியென்றால் விலையைக் கொஞ்சம் உயர்த்த சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : பல மில்காரர்கள் அவ்வாறு சொன்னார்கள். ஆனாலும் இப்பொழுது விலையைக் கூட்டுவதற்கில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : விவசாயிகளிடமிருந்து குறைந்த விலையில் கொள்முதல் செய்து, அதிக விலைக்கு விற்பதற்கு வியாபாரிகள் சர்க்காரிடம் பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு சர்க்கார் யோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினருக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். நேரடியாகக் கொள்முதல் செய்வதிலே கொஞ்சம் சிரமங்கள் இருந்தன. ஏழைகளுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதை உத்தேசித்து மில்காரர்கள் பரிசீலனை செய்தால் நல்லது என்று கருதப்பட்டது. பின்னர் பரிசீலனை செய்து, நேரடியாக வாங்குவதா அல்லது மில்காரர்கள் மூலமாக வாங்குவதா என்பது பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தஞ்சை ஜில்லாவில் ஒரு லட்சம் டன் கொள்முதல் செய்திருந்தாலும், அரிசியாகக் கொள்முதல் செய்யாமல் நெல்லாகச் செய்திருந்தால் இந்த ஸீஸனிலேயே வாங்கியிருக்க முடியும். மீதியுள்ள பகுதிகளிலிருந்தாவது நெல்லாக வாங்குவதற்குச் சர்க்கார் ஆலோசனை கூறுமா?

கனம் திரு. பூ. கக்கன் : இதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : மாவட்டத்திற்கு இவ்வளவு நியாய விலைக் கடைகள் என்று சொன்னார்கள். அது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் நியாயவிலைக் கடைகள் வேண்டுமென்று மக்கள் சொல்லுகிறார்களோ, அதை கலெக்டர் பார்த்துப் பரிசீலனை செய்து, பின்னர் கேட்கின்ற கோரிக்கை நியாயம்தானா என்று பார்த்து நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : அரிசி மில்காரர்கள் இப்படி சர்க்கார் கோரும் அரிசியைக் கொடுக்காவிட்டால் லைசென்ஸ் ரத்து செய்யப்படுமென்று அதிகாரிகள் மிரட்டுவது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?. அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கத்தினுடைய எண்ணம் அதிகாரிகளுக்குத் தெரியும். அதனால் அப்படி மிரட்ட மாட்டார்களென்று நினைக்கிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி : அரிசிக்குப் பதிலாகக் கோதுமையை அதிகமாக உபயோகப்படுத்த வேண்டுமென்று அமைச்சர்கள் ஆலோசனை கூறினார்கள். கோதுமையை உபயோகப்படுத்தும் பழக்கம் ஏற்பட்டுவிட்டால், நமது தென்னகத்திலே நெல்லுக்குக் கிராக்கி இல்லாமல் போய்விடும். இந்த நிலைமையிலே வடநாட்டு மக்களை கோதுமைக்காக எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படாதா?

கனம் திரு. பூ. கக்கன் : நான் ஆலோசனை சொன்னது, பூராவும் கோதுமையை உபயோகிக்க வேண்டும் என்பதல்ல. யார் யார் கோதுமை சாப்பிட வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அவர்கள் கோதுமை சாப்பிடலாம். அரிசி சாப்பிடவேண்டுமென்று நினைக்கிறவர்கள் அரிசி சாப்பிடலாம்.

திரு. அ. ராகவ ரெட்டி : மில்காரர்களிடத்தில் கொள்முதல் செய்யும்போது, திட்டவட்டமான ஏற்பாடு இல்லாமல் அதிகாரிகள் இஷ்டம்போல் நடக்கிறார்களே. அதற்கு ஒரு ஏற்பாடு செய்யும் வரையில் கொள்முதலை நிறுத்துவார்களா? அல்லது உடனடியாக ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : கொள்முதலை இப்பொழுது நிறுத்துவதற்கில்லை. குறிப்பிட்ட குறைகளைச் சொன்னால், அவை விசாரிக்கப்படும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in view of the fact that the work of running the fair price shops has been entrusted to private individuals even though there have been offers from co-operative societies that they would run the fair price shops, will the Government issue instructions to the Collectors to entrust the work of running them to co-operative societies?

THE HON. SRI P. KAKKAN : Ordinarily we are giving licences only to co-operative societies and not to individuals. But in one or two cases, we have given licence wherever it is necessary.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அரிசி அதிகமாகச் சாப்பிடுவதனால், குழந்தைகள் அதிகமாகப் பிறக்கின்றன என்பது உண்மையா? அப்படியானால் மக்களுக்கு அதிகமாகக் கோதுமை வழங்குவதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

(பதில் இல்லை).

[13th August 1968

Visit to Primary Health Centres

* 121 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any order under which the Chairmen of Panchayat Union Councils and Members of Legislatures are not entitled to visit the Primary Health Centres and offer their remarks; and ...

(*b*) if so, whether the Government propose to cancel that order?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) எழாது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்களும் போகும்பொழுது, பார்வையாளர்கள் புத்தகத்தை கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சிலில் சேர்மன், கமிஷனர், சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் மெம்பர்களாக இருக்கிறார்கள். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூட்டம் கூடுகிறபொழுது ஜில்லா மெடிகல் ஆபீசரும் வருகிறார். அவர்களிடம் சொல்லி அங்கேயே குறைகளை தீர்த்துக் கொள்ளலாம். அப்படி பிரைமரி ஹெல்த் சென்டர் விசிட்டர்கள் புத்தகத்தில் எழுத வேண்டுமென்று சொன்னால், மெடிகல் ரிலீஃபைப் பற்றித்தான் எழுதலாம். வேறு எதையும் பற்றி எழுதுவதாக இருந்தால் அது நன்றாக இருக்காது.

Gambling in Social Clubs

* 122 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received the resolution of the Coimbatore Municipal Council about the cards play gamble in the various clubs and recreational centres in Coimbatore town; and

(*b*) if so, the steps taken to eradicate this social evil?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes Sir.

(*b*) Section 4 (1) (*a*) (vi) of the Madras Gaming Act, 1930, prohibits wagering or betting in which the receipt or distribution of winnings or prizes in money or otherwise is made to depend on chance. Prosecution can be launched by the Superintendents of Police, if any Club is engaged in illegal activities. The Police Department are aware of what is going on in these clubs. They are conducting raids frequently and are closely watching their activities.

(அ) ஆம்.

13th August 1968]

(இ) சென்னை 1930-ம் ஆண்டு சூதாட்டப் பந்தயச் சட்டத்தின் 4 (1) (a) (vi) பிரிவில் அதிர்ஷ்டத்தை நம்பிப் பந்தயம் கட்டி அல்லது பணயம் வைத்துப் பந்தயத் தொகையை அல்லது பரிசைப் பணமாகவோ வேறு விதமாகவோ வாங்குவதும், வாங்கிப் பிரித்துக் கொடுப்பதும் தடை செய்யப்பட்டிருக்கிறது. சட்டத்துக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்த கிளப் மீதும் போலீஸ் சூப்பிரண்டெண்டுகள் வழக்குத் தொடரலாம். இத்தகைய கிளப்புகளில் நடப்பது யாவும் போலீஸ் துறையினருக்குத் தெரியும். போலீஸ் துறையினர் அடிக்கடி திடீர் சோதனை நடத்தி அவர்களது நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வருகின்றனர்.

திரு. கே. ஏ. மதியழகன் : இது சம்பந்தமாக தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவசியமானபொழுது வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. மாதா கவுடர் : சென்னை நகரில் ஜிம்கானா கிளப்பில் ஒரு நகரசபை அங்கத்தினர் சூதாடினதாகவும் அவர் கைது செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுகிறதே. அவர் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் என்றும் சொல்லப்படுகிறதே, அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப் பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : மயிலாப்பூர் போலீசார் செய்தவிதத்தை முறையைப் பின்பற்றி, எல்லா இடங்களிலும் செய்தால், எல்லாக் கட்சிக்காரர்களும் இதிலே அகப்படக்கூடியவர்கள் என்பதை நம்முடைய கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தெந்த கட்சியில் யார் யார் சூதாடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. (சிரிப்பு.)

கனம் சபாநாயகர் : சூதாட்டத்திலே கூட கட்சிப் பிரசாரமா, என்ன ? (சிரிப்பு.)

வகுப்பில் மாணவியின் மரணம்

* 123 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா : கல்வி நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கும் பதிலளிப்பாரா—

(அ) மதுரை பாத்திமா கல்லூரியில் பி.யு.சி. வகுப்பு மாணவி கஸ்தூரி என்ற பெண், வகுப்பு நடந்துகொண்டிருக்கும்போது திடீரென்று மரணமடைந்தது உண்மையா ?

(இ) அப்படியானால், மரணத்திற்குக் காரணமென்ன ?

(உ) இது விஷயமாய் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) அம்மாணவி மாரடைப்பினுல் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) கல்லூரி அதிகாரிகள், சவத்தை அம்மாணவியின் பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர்.

(a) Yes.

(b) It is reported to be a case of heart failure.

(c) The body was handed over to the parents of the girl by the College authorities.

திரு. ஆ. கு. சுப்பையா : இப்படி திடீரென்று மாரடைப்பு வருவதற்குக் காரணம் என்ன? (சிரிப்பு)

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாணவியைப் பொருத்தவரையில் கல்லூரியில் சேர்வதற்கு முன்பே மாரடைப்பு ஏற்பட்டது. கல்லூரியில் சேர்ந்தால் கொஞ்சம் உடல் நிலை சரியாக ஆகுமென்று நினைத்து பெற்றோர்கள் அந்த மாணவியை கல்லூரியில் சேர்த்தார்கள். கல்லூரியிலே மெடிகல் பரிசோதனை செய்த பொழுதும் கூட, இருதயம் ரொம்பவும் 'வீக்காக' இருக்கிறது என்று பெற்றோர்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். இந்த நிலையிலேதான் திடீரென்று அந்த மாணவிக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

Salem District Board

* 125 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state what amount is due to Government from the erstwhile Salem District Board?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Rs. 4·83 lakhs.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தத் தொகையை மாஜி டிஸ்ட்ரிக்ட் போர்டிலிருந்து வசூலிக்க என்ன திட்டங்கள் இருக்கின்றன.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஜில்லா போர்டைப் பொருத்தவரை அவர்களுக்கு ஸ்தாவர சொத்துக்கள் இருக்கின்றன. அவற்றை அட்ஜஸ்ட் செய்து, அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய பணத்தை வசூலிக்க வேண்டியது பற்றி பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : அந்த ஸ்தாவர சொத்தில் மீதம் இருக்கும் தொகையை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்குப் பிரித்துக் கொடுக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வேறு விஷயம். சாதாரணமாக எந்த மாவட்ட போர்டானலும், ஸ்தாவர சொத்துக்கள் என்ன செய்யப் படுகிறதோ அம்மாதிரி இதிலும் கவனம் செலுத்தப்படும்.

Three-year Degree Course

* 126 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the progress made during the last two years by the adoption of Three-year Degree Course; and

(b) whether the Government are giving second thought to the scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) This is a matter with which the University is concerned.

(b) Does not arise.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இது பல் கலைக்கழக விவகாரம் என்றாலும், கொள்கை வகுக்கும் அதிகாரம் இந்த மன்றத்திற்கு இருப்பதனுல் இந்த அரசாங்கம் மூன்று ஆண்டுதான் தேவை என்று கருதுகிறதா அல்லது பழைய இரண்டு வருஷ படிப்பு வேண்டும் என்று கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மன்றம் அபிப்பிராயம் தெரிவிக்கலாம் என்றாலும், மூன்று ஆண்டு பாடம், படிப்பு என்று அவர்கள் தீர்மானத்தின் பேரில் தலையிடுவது முறையல்ல.

வடிகால் வசதித் திட்டம் (பிச்சங்கோட்டகம் கிராமம்)

* 127 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலூகா, பிச்சங்கோட்டகம் கிராமத்திற்கு வடிகால் வசதி செய்துத்தரக் கோரி அந்த ஊர் ரயத்துக்களிடமிருந்து மகஜர் வந்ததா?

(இ) அப்படியானல், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம், வந்தது.

(இ) சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த இடத்தைப் போய்ப் பார்வையிட்டனர். வடிகால் வசதி செய்து தரும் "திட்டம்" ஒன்றை வகுக்க அவர்கள் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

(a) Yes.

(b) The site was inspected by the officers concerned and necessary action is being taken by them for the formulation of a scheme for providing drainage facilities.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், அந்த திட்டம் எவ்வளவு ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது? எத்தனை ஆயிரம் ஏக்கர் வடிகால் வசதி பெறும்?

கனம் திரு. பூ. கக்கன் : 1,500 ஏக்கர். திட்டத்தின் [illegible] கைவசம் இல்லை.

[13th August 1963

Pharmacists (Pay)

* 128 *Q*.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Pharmacists without diploma and the Pharmacists with diploma are being paid the same scale of pay in spite of the scale of pay of Pharmacists with diploma having been fixed by the Government as Rs. 125—5—175;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) whether the Government will take steps to introduce the revised scale of pay of Rs. 125—5—175 to the Pharmacists with diploma?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம். டிப்ளோமா பெற்றுள்ள பார்மசிஸ்டுகளுக்கும் டிப்ளோமா பெறாத பார்மசிஸ்டுகளுக்கும் ஒரே சம்பள விகிதம்தான் கொடுக்கப்படுகிறது. அதாவது ரூ. 90-4-110-3-140 என்ற விகிதத்தில்தான் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. ரூ. 125-5-175 என்ற விகிதத்தில் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை.

(இ) பார்மசிஸ்டுகளின் வேலையை மேற்பார்வையிட வேண்டிய வரும் பார்மசிஸ்டுகளைவிட அதிகப் பொறுப்பை உடையவர்களுமான தலைமை பார்மசிஸ்டுகளுக்குத்தான் ரூ. 125-5-175 சம்பள விகிதம் வழங்கப்படுகிறது.

(உ) பார்மசிஸ்டுகளின் சம்பள விகிதத்தை இப்போது திருத்துவது அவசியமில்லை என்று அரசினர் முடிவு செய்துள்ளனர்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், பார்மஸிஸ்டுக்கும், சீப் பார்மஸிஸ்டுக்கும் ஏதாவது வித்தியாசம் காட்டி சம்பள ஸ்கேல் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? அல்லது எல்லோருக்கும் ஒரே வித சம்பளம் விதிக்கப்பட்டுள்ளதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பார்மஸிஸ்டு பிரமோஷன் ஆனபிறகு சீப் பார்மஸிஸ்டு ஆகியதும், அந்த ஸ்கேல் தரப்படுகிறது. தற்போது 418 பார்மஸிஸ்டுகளும், 23 சீப் பார்மஸிஸ்டுகளும் இருக்கிறார்கள். ஒவ்வொருவராகப் பிரமோஷன் ஆனபிறகு அந்த ஸ்கேல் வரும்.

திரு. ம. கமலநாதன் : கனம் தலைவர் அவர்களே, பார்மஸிஸ்டு டி. பார்மஸிஸ்டு பயிற்சி காலம் எவ்வளவு? நல்ல எதிர்காலம் இல்லாததால், பார்மஸிஸ்டுகளை கிராமங்களுக்கு வைத்தியர்களாக அனுப்ப பயிற்சி கொடுக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சீப் பார்மசிஸ்டும், ப்ரமோஷன் காடிகரி. வித்தியாசம் இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், பார்மசிஸ்டுகளுக்கு ஒரு ஸ்கேல் பிக்ஸ் செய்யப்பட்டுள்ளது சீப் பார்மசிஸ்டுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் காட்டாமல் ஸ்கேல் உரிமை உண்டு என்று அரசாங்கம் அறியுமா?

13th August 1963]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, டிப்ளோமா பெற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இரு சாரார்களுக்கும் இரண்டு வித சம்பளம் அளிக்கக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டிப்ளமோ என்றால், 1950 வரை எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்கள், காலேஜ் கோர்சுக்கு எலிஜிபிள் ஆக இருந்தவர்கள் ஒரு வருஷ கோர்ஸ் compounding course என்று செய்திருந்தோம். இப்பொழுது இரண்டு வருஷம் பார்மசிஸ்டுகள் என்று படிக்கிறார்கள். அதுதான் வித்தியாசம்.

Forest Engineering College (Dharmapuri taluk)

* 129 *Q*.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Forest Engineering College near Alagapady village in Dharmapuri taluk; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) இல்லை.

(இ) எழவில்லை.

Prohibition (Special Staff)

* 130 *Q*.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to appoint special staff exclusively for prohibition work?

The Hon. Sri P. KAKKAN : No.

—

இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், பணியாளர்களின் குறைவினால் இம்மாதிரி மதுவிலக்கு கேஸ்கள் அதிகமாகி நாளுக்கு நாள் அதிகரிக்கிறது என்பதை அரசாங்கம் உணருமா? பணியாளர்களின் எண்ணிக்கையை ஜாஸ்தி செய்தால் நலமாக இருக்கும் என்று உணருகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது போலீசு டிபார்ட்மெண்டு அந்த வேலையைப் பார்த்து வருகிறது. அவர்களோடு சேர்ந்து, ப்ரொகிபிஷன் இண்டெலிஜண்ட் பீரோ என்று ஒரு ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்களும் கேசுகளைக் கண்டு பிடிக்கிறார்கள். இம்மாதிரி திருட்டுச் சாராயம் காய்ச்சுதல், கள்ளிறக்குதல், முதலியவைகளைக் கண்டு பிடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், இன்டெலிஜன்ட் ஸ்டாப் மாதம் ஒரு முறை, இரண்டு முறை வருகிறார்கள். மற்ற நேரங்களில் போலீசுகாரர்கள் அதிகமாக இல்லாததால், அவர்கள்

எண்ணிக்கையை அதிகப் படுத்த முடியுமா? இல்லாவிடில், இண்டெலிஜண்ட் ஸ்டாப் வாரம் ஒரு முறை கிராமங்களுக்கு செல்ல ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : ஸ்தலப் போலீசுகாரர்கள் கேசுகளைக் கண்டு பிடிக்கிறார்கள். அவர்களுக்கு லாரி முதலியவை கொடுத்து, எவ்வளவு துரிதமாகப் போகமுடியுமோ அந்த விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களால் முடியாத கேஸ்களில், இண்டெலிஜண்ட் பீரோ வேலை செய்கிறார்கள்.

மீன் பிடித்தல் (நார்வே நாட்டு முறை)

* 131 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி** : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நார்வே மீன் பிடித்திட்டத்தை கிழக்கு இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் செயல்படுத்த ஏதாவது திட்டமுண்டா?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Yes.

திரு. கரு. சீமைச்சாமி : எப்பொழுது இந்த மீன் பிடி திட்ட வேலை ஆரம்பமாகும்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கூடிய சீக்கிரத்தில் ஆரம்பமாகும்.

Utilization of Cauvery water and of other rivers

* 132 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state the conclusions reached at the meeting of the Zonal Council held at Hyderabad during May 1963, regarding the utilization of waters in the River Cauvery and its tributaries and other inter-State West-flowing rivers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The finalised proceedings of the meeting of the Southern Zonal Council held at Hyderabad on the 28th May 1963 have not yet been received. A copy of the proceedings of the meeting as placed in the Library of the Parliament will be placed in due course in the Library of the State Legislative Assembly also. Till then, the proceedings of the meeting are not to be disclosed according to the Southern Zonal Council Rules of Procedure.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், சமீபத்திலே நம் மாநிலத்திலிருந்து கனம் ஆர். வெங்கட்டராமன் அவர்களும், கனம் ராமையா அவர்களும் கேரளத்திற்குச் சென்று நதித் தண்ணீர் சம்பந்தமாக ஏதாவது பேசப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வேறு விஷயம். தனிக் கேள்வி போடவேண்டும்.

கிள்ளை மீனவர் கூட்டுறவுச் சங்கம்.

* 133 கேள்வி.—**திரு. கோ. சி. மணி** : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கிள்ளை மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான விசைப்படகு ஒன்று சுமார் இரண்டாண்டு காலத்திற்குள் சென்னை அருகே கடலில் மீன் பிடிக்க போயிருந்தபோது கப்பல் ஒன்றினால் மோதப்பட்டு சேதமடைந்து உபயோகமில்லாது போனது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(இ) அது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட சங்கத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(உ) சேதமடைந்த விசைப்படகின் கிரயம் என்ன?

(எ) அதே கூட்டுறவுச் சங்கத்திற்கு வேறொரு புதிய விசைப் படகு வாங்கிக் கொடுத்திருப்பது உண்மையா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) அந்தச் சங்கத்திடமிருந்து, ஒப்பந்த நிபந்தனைகளை அனுசரித்துப் பாக்கித் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) அந்தப் படகின் முழுக் கிரயம் ரூ. 11,058.63. இந்தச் சங்கம் இதற்காகச் செலுத்த வேண்டிய சகாய விலை ரூ. 8,575.50.

(எ) இல்லை.

திரு. கோ. சி. மணி : அந்தப் படகு எந்தக் கப்பலால் மோதப்பட்டது? மோதப்பட்டதால் இவ்வளவு சேதம் அடைந்த காரணம் என்ன? தவறுதலாக படகு நிறுத்தப்பட்டிருந்ததா? அல்லது கப்பலை தவறுதலாக மோதினார்களா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தப் படகின் மீது மோதிய பிறகு இன்வெஸ்டிகேஷனில் தவறு ஒன்றும் இல்லை என்று அதன் மேல் எந்த ஆக்ஷனும் எடுக்காமல் விடப்பட்டது.

திரு. கோ. சி. மணி : அந்த சங்கம் மீண்டும் விரும்பினால் படகு வாங்கிக்கொள்ள அரசாங்கம் கடன் உதவி அளிக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தப் படகுக்குக் கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுத்து விட்டால் மறுபடியும் கடன் கொடுப்பதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த மாதிரியான படகுகள் நம் மாநிலத்தில் எத்தனை இருக்கின்றன? வேறு எங்காவது இந்த மாதிரி நடந்திருக்கிறதா?

கனம் திரு ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்கும் தனியாகக் கேள்வி தேவை என்று சொல்லிக்கொள்கிறேன்.

[13th August 1963

Neera permits

* 134 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether the Government are aware that Neera permits are being misused for tapping toddy by the permit holders; and

(b) if so, the action taken by Government to detect such cases?

THE HON. SRI P. KAKKAN: (a) Yes.

(b) The concession of neera tapping for the manufacture of jaggery is withdrawn wherever its abuse is noticed. The local Police have been and continue to be alert in conducting tope checks and also in checking consignments in transit from the topes to detect irregularities, especially in areas where tapping is done.

(அ) ஆம்.

(இ) பனை வெல்லம் தயாரிப்பதற்காகப் பதனீர் இறக்குவதற்குக் கொடுக்கப்படும் அனுமதியை முறை தவறிப் பயன்படுத்துவதாகத் தெரிந்தால், அது ரத்து செய்யப்படுகிறது. முக்கியமாக, பதனீர் இறக்கப்படும் பகுதிகளில் இந்த ஒழுங்கீனங்களைக் கண்டு பிடிப்பதற்காக உள்ளூர் போலீசார் தோப்புகளில் சென்று சோதனை போடுவதிலும், தோப்புக்களிலிருந்து செல்லும் பதனீரைச் சோதனை போடுவதிலும் எப்போதுமே உஷாராயிருந்து வருகிறார்கள்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், உள்ளூர் போலீசார் இதைச் சரிவர கவனிக்காத காரணத்தினால் இம்மாதிரி கேஸ்கள் அதிகம் இருக்கின்றன. ஆகையால் மறுபடியும் போலீசாரை சரிவர கவனிக்கும்படி சர்க்கார் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கெனவேயே சரியாக கவனிக்கத் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் சரியாக கவனிக்கவில்லை என்று ஏதாவது சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதைப் பற்றி விசாரிக்கலாம்.

திரு. எம். தண்டாயுதபாணி : பதனீர் இறக்கக் கொடுக்கப்படும் லைசென்ஸைத் தவருக உபயோகப்படுத்துகிற காரணத்தினால் லைசென்ஸ் கொடுக்காமல் நிறுத்தப்பட வேண்டும் என்று தஞ்சை ஜில்லா அபிவிருத்திக் கவுன்ஸில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அரசாங்கத்திற்குக் கிடைத்ததா? அதன் மீது என்ன முடிவு எடுக்கப்பட்டது?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தீர்மானத்தை நான் பார்க்கவில்லை. அதைப் பற்றிய தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. அதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. சி. பொன்னுசாமி : ஒரு சிலர் செய்யும் குற்றத்திற்காக எல்லோருக்கும் லைசென்ஸ் மறுப்பதில் சங்கடம் ஏற்படுவதை சர்க்கார் அறியுமா?

13th August 1963]

கனம் திரு. பூ. கக்கன் : எல்லோருக்கும் இந்த மாதிரி சங்கடம் ஏற்படாது. இப்போது தப்பிதமாக நடப்பவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. மு. பொ. வடிவேல் : ஆந்திர மாநிலத்தில் ஸ்வீட் (sweet) டாடி ஷாப் என்று ஏலம் விடப்படுகிறதே அது இந்த பதனீர் ஷாப் தானா? அம்மாதிரி முறையை நம் மாநிலத்திலும் ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : அங்கு ஏலம் போடுவது எனக்குத் தெரியாது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, கள் குடிப்பது உடலுக்கு நல்லது என்று டாக்டர்கள் தெரிவித்திருக்கிறார்களே, அது உண்மையா?

கனம் திரு. பூ. கக்கன் : சில டாக்டர்கள் இருக்கிறார்கள், அவர்கள் எல்லாவற்றுக்குமே சர்ட்டிஃபிகேட் கொடுப்பார்கள்.

திரு. சி. வே. வேலப்பன் : ஒரு சிலர் தவறுகள் செய்கிறார்கள் என்ற காரணத்தினால் அதை வைத்துக்கொண்டு உள்ளூர் போலீசார் பதனீர் இறக்கக்கூடிய லைசென்ஸ்தாரர்களை எல்லா மரங்களிலிருந்து பதனீர் இறக்கிவிட்டு கடைசியாக வரும்போது மீண்டும் எல்லா மரங்களையும் ஏறிக் காட்டவேண்டுமென்று சொல்லுவதைத் தடுக்க சர்க்கார் உத்திரவு போடுவார்களா?

கனம் திரு பூ. கக்கன் : நான் ஏற்கெனவே சபைக்குச் சொல்லியிருக்கிறேன். அந்தமாதிரி ஒரு சில போலீஸ்காரர்கள் தப்பிதமாக இருந்தால் எல்லோருமே அப்படி இருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. அந்த மாதிரியான புகார்கள் வந்தால் அரசாங்கம் விசாரிக்கும். அந்தமாதிரி நிகழ்ச்சி நடந்தால் கனம் அங்கத்தினர்களும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, பதனீர் இறக்கக் கூடிய இடத்திற்கு போலீசாரே சென்று பதனீரோ அல்லது மாறுபட்ட வஸ்துவாகிய பனை மரத்திலிருந்து வருகிற நீரைச் சாப்பிடுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அங்கேயே அந்தமாதிரிச் செய்வது முறையா?

கனம் திரு. பூ. கக்கன் : கேள்வி கேட்கும் அங்கத்தினருக்குத் தெரிந்திருந்தால் அதைத் தக்க அதிகாரிகளிடத்தில் சொல்லியிருக்க வேண்டும். அங்கே போய் பரிசோதனைகூடச் செய்யலாம். அதைப் பார்த்து கள்ளா, பதனீரா என்று பார்க்க ஒரு பேப்பர் இருக்கிறது; அதை வைத்துப் பார்த்து முடிவு எடுக்கிறார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், மது விலக்குக் கொள்கையை மேலும் தீவிரமாக அமலாக்க இந்த அரசாங்கம் மேலும் நல்ல நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கத்தில் எவ்வளவு நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவுக்குத் தக்க ஏற்பாடு செய்திருக்கிறது. கனம் அங்கத்தினருக்குப் புதிதாக ஏதாவது யோசனை இருந்தால், அதைப் பற்றிச் சொன்னால் பரிசீலனை செய்யலாம்.

திரு. சி. பொன்னுசாமி : பதனீரில் நல்ல சத்து இருக்கிறது என்று சொல்லுவதால் அதில் உள்ள போதை சத்தை எடுத்துவிட்டு இனிய சத்தைக் கொண்டு பானங்களைத் தயாரித்து மக்களுக்கு வினியோகிக்க ஒரு திட்டம் வகுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : பதனீர் நல்ல முறையில் பயன்படுவதால் தான் கூட்டுறவு வாயிலாக நல்ல முறையில் ஏற்பாடு செய்து இருக்கிறோம். பதனீரிலிருந்து சர்க்கரை மற்றும் இதரச் சாமான்கள், மிட்டாய்கள் செய்யத் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனை கனம் அங்கத்தினர் தெரிந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

திரு. கே. மூக்கையா தேவர் : பதனீரைப் பக்குவப்படுத்தி நெடுநாள் கழித்தும் உபயோகப்படுத்தும் திட்டம் இருந்ததாகச் சொல்லப்பட்டது. அதன் விவரம் என்ன ?

கனம் திரு பூ. கக்கன் : இப்போதும் ஒரு சில நாட்களுக்கு அம் மாதிரி வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இவ்வளவு பிரயோசனமாக இருக்கிற பதனீர் மரங்கள் அழிக்கப்பட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதை அபிவிருத்தி செய்ய ஏதாவது உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது தென்னங்கன்று, பனங்கன்று ஆகியவைகளை வைக்க ஏற்பாடு செய்து வருகிறோம். அழிக்கப்படுவதாக தகவல் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Motor Transport Workers' Act (Rules)

* 135 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the State Government have framed rules for any or all of the purposes referred to in section 40 (2) of the Motor Transport Workers' Act (Central Act 27 of 1961); and

(*b*) if so, whether a copy of the same would be placed on the Table of the House?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : The draft rules are under final scrutiny and are expected to be published soon for inviting objection and criticism.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

திரு. கே. மூக்கையா தேவர் : ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன், ஸார். நமது முதலமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்யப்போவதாகத் தெரிகிறது. அதனுடைய விவரத்தைச் சபைக்குத் தெரிவிக்க உங்கள் மூலமாக வேண்டிக் கொள்கிறேன். 9-30 a.m.

கனம் திரு. கு. காமராஜ்: ராஜிநாமா செய்தவுடனே சபைக்குத் தெரிவிக்கப்படும் (சிரிப்பு).

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II. ADJOURNMENT MOTION *re* THE ACTION OF THE MANAGEMENT OF THE B. & C. MILLS IN NOT TAKING BACK 32 OF ITS EMPLOYEES.

Mr. SPEAKER : I have received a notice of an Adjournment Motion from Sri M. S. Mani. It relates to the removal of 32 workers in the Buckingham and Carnatic Mills and a suggestion that one Sri Raghavanandam, Leader of the Munnetra Sangam, would go on fast, if the 32 workers of the above Mills are not reinstated.

An adjournment motion should relate to a matter which has suddenly happened. But the matter relates to something which may or may not happen. Further, 'fast' can never be the subject matter of an adjournment motion and therefore, consent is withheld for the same.

III. CALLING ATTENTION TO THE LOW STORAGE IN THE METTUR RESERVOIR.

Sri K. R. SAMBANDAM : Mr. Speaker, Sir, under Rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, viz.—

'owing to the failure of the monsoon, there is no rain in the catchment area of the river Cauveri, with the result the Mettur Dam is not filled and the Thanjavur district and the Tiruchirappalli district ryots are put to hardship and the necessity to get permission from the Mysore Government to draw more water has arisen.'

The Hon. Sri V. RAMAIAH : Mr. Speaker, Sir, the Government are aware of the partial failure of South-West Monsoon in the catchment area of Cauvery river and the consequent low storage in Mettur Reservoir. Usually, the South-West Monsoon in the catchment area of Cauvery river would be active from the second week of June. There were also occasions in the past when the South-West Monsoon set in as late as the first week of July.

This year, the South-West Monsoon actually set in on 2nd July 1963 and there had been some good rainfall up to 10th of July. These rains helped the Krishnarajasagar Reservoir in the Mysore State to get filled up to about one foot below full reservoir level and the maximum residual inflow into the Mettur Reservoir was about 49,000 cusecs on 13th July 1963. If the rains had continued as usual, the Mettur Reservoir would have been full. But actually the maximum level reached this year was 79·65 [illegible]

15th July 1963. The rainfall after 10th July 1963 became poor. Usually a further spurt of rains occurred in the second and third weeks of July, and it was expected that the Mettur Reservoir could get filled up then. Unfortunately, even this did not occur.

The situation arising out of the low storage in the Mettur Reservoir was reviewed by the Government on 26th July 1963. It was apprehended that if the rains did not intensify, a small cut in supplies would have to be imposed. But as there was prospect of good rainfall in the last week of July, it was decided to re-examine the position on 3rd August 1963 at a further conference of Public Works Department and Revenue officials. From 26th July 1963 onwards, there were only moderate rains at Mercara, which were not sufficient to fill up the Mettur Reservoir. On 3rd August 1963, a conference was held at Thanjavur at which the Commissioner of Land Revenue, the Secretaries to Government, Public Works, Revenue and Food and Agriculture Departments, the Chief Engineer (Irrigation), the Collectors of Salem, Tiruchirappalli, South Arcot and Thanjavur and the Joint Collector of Coimbatore were present. After an assessment of the facts, it was considered that the situation obtaining this year should be treated as one corresponding to an average bad year and accordingly the following decisions were taken :—

(i) To impose from the 15th August 1963, a 15 per cent cut in supplies from the Mettur Reservoir;

(ii) To allow supply from the Lower Bhavani Project for the first turn irrigation from the 15th August 1963;

(iii) To allow supply from the Mettur Canals from 10th August 1963; and

(iv) Not to open the Pullambadi and Kattalai High Level Canals for irrigation until the supply position improves materially. (These canals are entitled for supply only if there is surplus water in the Cauvery.)

It was also decided to review the position on 26th August 1963. The restrictions imposed have become necessary only on account of the poor storage and the Government are watching the position closely.

Regarding the possibility of getting more water from the Mysore Government, the only way of doing it in the absence of adequate rainfall is to get the required quantity of water stored in Krishnarajasagar Reservoir on a loan basis and replenish it later on. The Krishnarajasagar Reservoir also did not fill up this year and the storage in it on 10th August 1963 was only about 39,800 M.C. Ft. or 7.43 feet below F.R.L. In these circumstances it is doubtful if Mysore will agree to release extra quantities of water. There is also another aspect which needs to be considered. In case large inflows occur due to heavy rainfall, the chances of Krishnarajasagar getting filled up and surpluses will be greater and this surplus will become available for the Mettur Reservoir.

As stated earlier, the Government are watching the situation closely and will take appropriate action at the right time. I assure this House that these restrictions will be lifted at the earliest opportunity when the storage position improves.

IV. GOVERNMENT BILLS.

(1) THE MADRAS LEASE-HOLDS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1962 (L.A. BILL NO. 4 OF 1962).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg to present the Report of the Joint Select Committee on the Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 4 of 1962).

(2) THE MADRAS IRUVARAM INAM ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1962 (L.A. BILL NO. 2 OF 1962).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg to present the Report of the Joint Select Committee on the Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 2 of 1962).

(3) THE MADRAS MINOR INAMS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1962 (L.A. BILL NO. 3 OF 1962).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg to present the Report of the Joint Select Committee on the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 3 of 1962).

(4) THE MADRAS APPROPRIATION (NO. 4) BILL, 1963 (L.A. BILL NO. 14 OF 1963).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg to move—

'That the Madras Appropriation (No. 4) Bill, 1963 (L.A. Bill No. 14 of 1963) be taken into consideration.'

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Appropriation (No. 4) Bill, 1963 (L.A. Bill No. 14 of 1963) be taken into consideration.'

திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கல் மசோதாவை கனம் நிதி அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவதற்காக இந்த மன்றத்தில் வைத்திருக்கிறார்கள். 1963-64-ம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையின் மீதும், துணை மதிப்பீடு கோரிக்கையின் மீதும் சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்களை எல்லாம் கவனத்தில் எடுத்து, அவைகளை உட்கொண்டு திட்டங்களை நிறைவேற்று

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [13th August 1963

வதற்கு வேண்டிய தீவிர முயற்சிகளை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறிக் கொண்டு, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவை ஆதரித்து என் வார்த்தைகளை முடிக்கின்றேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்த நிதி ஒதுக்கல் மசோதாவை ஆதரித்ததை நான் மிகவும் வரவேற்கிறேன். எந்த நிலையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதையும், எம்மாதிரியான அவசியங்களை ஒட்டி துணை மதிப்பீடுகள் ஏற்பட்டன என்பதையும், அதற்கான நிதி ஒதுக்கல் கோரிக்கைகளைப்பற்றியும் இதே மன்றத்தில் நீண்ட நேரம் விவாதம் நடை பெற்றிருக்கிறது. அதன் மீது உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கள் எல்லாம் கவனிக்கப்படும் என்பதையும் கூறி, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

'That the Madras Appropriation (No. 4) Bill, 1963 (L.A. Bill No. 14 of 1963) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

The Schedule was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

'That the Madras Appropriation (No. 4) Bill, 1963 (L.A. Bill No. 14 of 1963) be passed.'

MR. SPEAKER: The question is—

'That the Madras Appropriation (No. 4) Bill, 1963 (L.A. Bill No. 14 of 1963) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(5) THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION (AMENDMENT) BILL, 1963.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I beg to introduce the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963* and move—

'That the Bill be taken into consideration.'

The life of the Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955) was last extended and it would be in force up to and inclusive of 26th September 1963. The object of

13th August 1963] [Sri V. Ramaiah]

this Bill is to protect the interests of cultivating tenants under this Statute pending comprehensive tenancy reforms. As it will take some time more for revision of tenancy laws, which is under consideration of Government, it has become necessary to extend the life of the present Act for a further period of two years from 27th September 1963. The Bill seeks to achieve this above object. I request the House to accept and pass the motion.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963, be taken into consideration."

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த சாகுபடி செய்யும் குத்தகைதாரர்கள், பாதுகாப்புத் திருத்த மசோதாவை கொண்டுவந்திருப்பதற்கான காரணங்களை இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். இவ் வாண்டு செப்டம்பர் மாதம் 26-ம் தேதியோடு இந்தச் சட்டத்தின் கெடு முடிகிறது. இதை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டுமென்று கோரப்படுகிறது. விவசாயிகள் சம்பந்தமான மற்ற சட்டங்கள் சர்க்காரின் பரிசிலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சில விஷயங்களைக் கொண்டுவருவது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தை இரண்டு வருஷங்களுக்கு நீடிக்க வேண்டுமென்று கோருவதைப் பார்க்கும்போது எனக்கு ஓர் அச்சம் பிறக்கிறது. ஏனென்றால், கொண்டுவர வேண்டிய சட்டத்தை இன்னும் நாள் கழித்துச் செய்வதற்குத் தான் இந்த நிலைமை இருக்கிறதோ என்கிற என்னுடைய அச்சத்தை நான் இந்த நேரத்தில் மறைக்க விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் என்று பெயருக்குத்தான் இருக்கிறதே தவிர, வேறொன்றுமில்லை. ஏழெட்டு ஆண்டுகளாக நடைமுறையில் பார்த்து வருவதில், அது மிராசுதார் பாதுகாப்புச் சட்டமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள்; இந்த நாடும் நன்றாக அறிந்திருக்கிறது. நடைமுறையிலும் பார்க்கிறோம். எவ்வளவோ விவகாரங்களில் ஏழை, எளிய விவசாயிகளுக்கு வேண்டிய பரிகாரங்கள் கிடைக்க முடியாத நிலையைத்தான் பார்க்கிறோம். இந்த சட்டத்தை இரண்டு வருஷங்களுக்கு நீடித்தாலும், அதற்குள்ளேயே, விரைவிலேயே, கூடுமானால் அடுத்த கூட்டத்திலேயே விவசாயிகள் சம்பந்தமான சட்டத்தைக் கொண்டுவருவதுதான் நல்லதே தவிர, சட்டம் முடிவதற்குள்ளாக, காலத்தை நீடித்துக் கொடுக்குமாறு திருத்தச் சட்டம் கொண்டுவருவது புனிதமான நிலையாக இருக்

[திரு. கே. ஏ. மதியழகன்] [13th August 1963

பல நாட்களாக விவசாயிகள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். ஒன்றிரண்டு அம்சங்களை மட்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இப்பொழுதிருக்கும் விவசாய குத்தகைக்காரர், சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஒரு வழக்குப் போட்டால், அதை ரெவினியூ டிவிஷனல் ஆபீசரிடத்தில் போடுகிறார்கள். ரெவினியூ கோர்ட்டுக்கு மேல் அப்பீல் ஹைகோர்ட்டுக்குத்தான் இருக்கிறது. அங்கிருந்து நேராக ஹைகோர்ட்டுக்குத்தான் அப்பீல் செய்ய வேண்டியிருக்கிறது. நியாய வாரச் சட்டத்தின்கீழ் ரென்ட் கோர்ட் இருக்கிறது. அதற்கு மேல் ரென்ட் ட்ரிப்யூனல் ஜில்லா முன்சீப்பிடத்தில் இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பாதுகாப்புச் சட்டத்தில் நேராக ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யவேண்டிய நிலைமை இருப்பதால் பெரிய இடைஞ்சல் ஏற்படுகிறது. சாதாரண ஏழை விவசாயிகள் ஹைகோர்ட்டுக்கு வர முடியவில்லை. கால தாமதம் ஆகிறது. "Justice delayed is justice denied" என்று சொல்வதுண்டு. நீதி வழங்குவதற்குத் தாமதம் இருக்குமானால், அது நீதி வழங்க மறுப்பது போலாகும். ஜில்லா நீதிபதியிடம் அப்பீல் செய்துகொள்வதற்கு இந்தப் பாதுகாப்பு மசோதாவில் இடம் இல்லை. இனி வர இருக்கிற மசோதாவிலாவது அதற்கு இடமளிக்கவேண்டும். ஒரு கருத்தை நான் மிகவும் வருத்தத்தோடுதான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உற்சாகத்தோடு சொல்ல முடியவில்லை என்பதை நான் அரசினருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் என்பது மிராசுதார்கள் பாதுகாப்புச் சட்டம் என்ற அளவுக்குத்தான் நடைமுறையில் வந்துவிட்டது. வேண்டுமானால், நான் அமைச்சர் அவர்களிடம் பல உதாரணங்களை ஆதாரத்தோடு எடுத்துச் சொல்ல முடியும்.

பல ஆண்டு காலமாக வந்த வழக்குகளை எடுத்துப் பாருங்கள். எத்தனை வழக்குகளில் சாகுபடியாளர்கள் பக்கம் தீர்ப்பு ஆகியிருக்கிறது, எத்தனை வழக்குகளில் மிராசுதார்களின் பக்கம் தீர்ப்பு ஆகியிருக்கிறது என்று பார்த்தால், பெரும்பாலானவை 90 சதவிகிதத்திற்கும் மேலாக மிராசுதார்கள் பக்கம்தான் தீர்ப்பாகியிருக்கிறது என்று வெளியிலே பேசிக் கொள்ளுகிறார்கள். நீதி மன்றங்களின் படிக்கட்டுகளில் ஏழை எளியவர்கள் ஏறி இறங்க முடியவில்லை. Landlord's Bench என்று கூடச் சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. ஹைகோர்ட்டுகளில் கூட சாதாரண ஏழை எளியவர்கள் . . . (கனம் திரு. கு. காமராஜ்: எங்களை வேண்டுமானால் சொல்லுங்கள். ஹைகோர்ட்டைப்பற்றிக் குறிப்பிடவேண்டாம்.) ஹைகோர்ட்டிலுள்ள நிலைமைகளைச் சொல்ல வருகிறபோது, கனம் முதல் அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட வேண்டாம் என்று சொல்கிறார்கள். ஹைகோர்ட்டின் மீது ' contempt ஆக நான் சொல்லவில்லை. (கனம் திரு. வெ. ராமையா: "Landlord's Bench" என்று சொன்னீர்களே.) மக்களுடைய கருத்து அவ்வாறு இருப்பதாக வெளியில் சொல்கிறார்கள். அந்த அளவிற்குத்தான் சட்டத்தினால் சரியான நன்மை ஏழை எளியவர்களுக்குக் கிடைப்பதில்லை.

13th August 1963] [திரு. கே. ஏ. மதியழகன்]

அதேபோல்தான் நில வெளியேற்ற உத்தரவும் இருக்கிறது. ஒரு டெபுடி கலெக்டர் உத்தரவிடுகிறார். அதற்கு மேல் அப்பீல் செய்துகொள்வதற்கு 90 நாள் இருக்கிறது. 90 நாள் இருக்கும்போது, டெபுடி கலெக்டர் உத்தரவு போட்டவுடனேயே விவசாயிகள் வெளியேற வேண்டுமென்று சொல்கிறார்கள். இதனால் நிலைமை என்ன ஆகிறது? சாதாரணமாக மிட்டா, மிராசுகள், நிலச் சுவாந்தார்கள், கிராமப் பகுதிகளில் போலீஸ், மற்றும் அவர்களுக்கிருக்கும் அத்து, ஆள், ஆசாமிகளை வைத்துக்கொண்டு என்ன செய்வார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ரிவிஷன் பெடிஷன் போட்டு அப்பீல் செய்துகொள்வதற்கு முன்னாலேயே, அதற்கான அவகாசம் சட்டப்படி இருந்தும், நில வெளியேற்ற உத்தரவைச் செயல்படுத்திவிடுகிறார்கள்.

ஓர் உதாரணம் சொல்கிறேன். சமீபத்தில் சிதம்பரத்தில் இப்படிப்பட்ட ஒரு வழக்கில் ஒரு நில வெளியேற்ற உத்தரவை ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் பிறப்பித்தார்கள். அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மறுநாள், வக்கீல் வைத்து ரிவிஷன் மனு கொடுத்திருப்பதாக விவசாயி சொல்லியும் கூட, அவசர அவசரமாக நில வெளியேற்றத்தைச் செயல்படுத்திவிட்டார்கள். அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட சட்டங்களையெல்லாம் கொண்டுவந்து ஏழை எளியவர்களுக்காகப் பாடுபடுவதாகச் சொல்கிறார்கள், அப்பீல் செய்துகொள்ள 90 நாள் அவகாசம் இருக்கும்போது, மிராசுதார் நில வெளியேற்றம் செய்துவிட்டால், அந்தக் குடியானவன் நிலத்தைத் திரும்பப் பெற வாய்ப்பு இருக்கிறதா? அப்படி இல்லாத நிலையில், பாதுகாப்புச் சட்டம் உண்மையிலேயே பாதுகாப்பு அளித்ததாகுமா? இதையெல்லாம் பற்றி இந்த மசோதா பரிசீலனைக்கு வரும்போது யோசித்து, தக்க பரிகாரம் காண முன்வரவேண்டும். மிராசுதார் பொஸெஷன் எடுத்துக்கொண்டுவிட்டால், நிலத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டுவிட்டால், விவசாயி அதைத் திரும்பப் பெற என்ன வாய்ப்பு இருக்கிறது என்று நான் கேட்கின்றேன். சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தில் நல்ல உரிமைகள், உத்தரவாதங்கள் சாகுபடியாளர்களுக்குக் கொடுத்து இருந்துங்கூட, அந்தச் சட்டத்தை நடைமுறையில் கொண்டுவரும்போது அதனுடைய பலன் விவசாயிகளுக்குக் கிடைக்காத நிலைமைகள் பல இடங்களில் இருக்கின்றன. 90 நாள் அவகாசம் இருக்கும்போது, அதற்குள் ஏழை விவசாயிகள் அப்பீல் செய்துகொள்ள இருக்கும் உரிமையை சர்க்கார் உத்தரவின் மூலமாவது உடனடியாக அமுல்படுத்த வகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். தற்போது ரிவிஷன் பெட்டிஷன் போட ஹைகோர்ட்டுக்குத்தான் வரவேண்டுமென்று நிலை இருக்கிறது.

வாய்மொழிக் குத்தகை செல்லுபடியாகும் என்று இருந்தாலும், எழுத்து மூலம் குத்தகைச் சீட்டு இருந்தால்தான் செல்லுபடியாகும் என்று சொல்லி, ஏழை விவசாயிகளின் மனுக்களைத் தள்ளி விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. இந்த நிலைமை பொதுவாகவே, சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பாக அமையவில்லை. இத்தனை ஆண்டுகளாக இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம் என்றாலும், மிக முக்கியமாகக் கவனிக்கவேண்டிய பல அம்சங்கள் இருக்கின்றன. இன்னும் சில இடங்களில் ரெவினியூ கோர்ட் நடைபெறுவதில்லை. சிதம்பரத்தில் இருக்கும் ரெவினியூ கோர்ட் இரண்டு வருஷங்களாக—பல வழக்குகள் இருந்தும்—நடைபெறவில்லை. இந்த அதிகாரிகளையெல்லாம் நாம் எப்படிக் கண்டிப்பது? குமராட்சி பக்கத்தில் இரண்டு வருஷங்களாக நடக்காத ரெவினியூ கோர்ட் இருக்கிறது. அதில் ஒரு வழக்கில் மட்டும் தான் தீர்ப்புக் கொடுத்தார்கள். அதுவும் ஒரு மிராசுதாருக்காக வெளியேற்றம் செய்து விட்டார்கள். டெபுடி கலெக்டர் மூவாயிரம், நாலாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு ஒரு முக்கிய வழக்கில் மட்டும் தீர்ப்புக் கொடுத்து விட்டார் என்று புகார் சொல்கிறார்கள். அப்படி மிராசுதார் குத்தகைதாரரை வெளியேற்றும் நிலைமை இருக்கிறது. இதை விசாரணை செய்யவேண்டும். சிதம்பரம் சம்பவத்தைக்கூட விசாரிக்க வேண்டும். குமராட்சி வழக்கு சரியாக நடைபெறுமலிருந்தும் திடீரென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது அப்படிப்பட்ட புகார் செய்திருக்கிறார்கள். இதையும் நம்முடைய ரெவினியூ அமைச்சருக்கு உதாரணமாக எடுத்துக் காட்டுவதற்குக் காரணம், ஏழை எளிய சாதாரண சாகுபடியாளர்களுக்கு நிம்மதி இல்லாத நிலைமை தான் இருக்கிறது என்பதற்காகத்தான். நாம் சொல்லிக்கொண்டிருக்கிற புனிதமான லட்சியங்கள், ஏழை எளிய சாதாரண விவசாயிகளுக்காகப் பாடுபடுவோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற உன்னதமான லட்சியம் எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகவே, இந்தச் சட்டத்தை இரண்டு வருஷங்கள் நீடித்தாலும், அதற்குள்ளாகவே விவசாயிகளுக்கான நல்ல சட்டத்தைச் செய்வதற்கு முயல வேண்டுமென்று சொல்லி, இதை நான் எதிர்க்கமுடியாவிட்டாலும், நான் சொன்ன இந்தக் கருத்துக்களுக்கு மதிப்பு அளித்து, விரைவுபடுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையை முடிக்கின்றேன்.

* **திரு. வை. சங்கரன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவானது விவசாயிகளுடைய பாதுகாப்புச் சட்டத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்காக கொண்டுவரப்படுகிறது. இதன் அவசியத்தை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் நடைமுறையில் ஒன்றிரண்டு கஷ்டங்கள் தென்படுகின்றன. அவற்றைமட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக செக்ஷன் 4-ல், செக்ஷன் 5-ல் சில பாதுகாப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதா 1956-ல் கொண்டுவரப்பட்டது என்றாலும் 1953-ல் பாதுகாப்புச் சட்டம் வந்தபோது அந்த நிலம் ஒரு சாகுபடியாளரிடம் இருந்து அதற்கு அப்புறம் அவர் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டிருந்தாலும் திரும்பவும் அவரிடமே பொசெஷன் கொடுக்க வேண்டும் என்று ஏற்படுத்தினோம். சப்-செக்ஷன் 5 பிரகாரம் 1955-க்குப் பிறகுகூட நிலத்தைவிட்டு வெளியேற்றியிருந்தால் இந்தச் சட்டம் 1956-ல் வருவதற்குள்ளாக, அவர்களுக்கும் திரும்ப பொசெஷன் பெறுவதற்குச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் செலக்ஷன் 4-லே "As far as it may be" என்று போட்டிருப்பதனால் அதைப் பலவகையில் இண்டர்பிரட் செய்வதற்கு இடமிருக்கிறது. 1953-லே விவசாயியின் கையில் அந்த நிலம் இருந்திருக்கவேண்டும். பின்னாலே 1955-லே கை மாறியிருக்கவேண்டும். இப்படியெல்லாம் இருந்தால் பொசெஷன் பெற வசதி ஏற்படும். ஆனால் இந்த செக்ஷன் 4-லே "The provisions of sub-section (4) shall apply as far as possible" என்று இருப்பது பலவகையில் விமர்சனம் செய்ய இடம் கொடுக்கிறது. ஆகவே இடையில் 1954-லோ, 1954-55-லோ நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டவராக இருந்தாலும் அவருக்கும் இதனால் நன்மை ஏற்படவேண்டும் என்ற வகையில் அதற்கு ஏற்றபடி இந்த ஷரத்தை அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அதேமாதிரி நிலச்சுவாந்தார் சம்பந்தப்பட்டவரை ஒரு விவசாயி ரெண்ட் கொடுக்காவிட்டால் ரெவின்யூ கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. பிறகு அவர்கள் ரெண்ட் கோர்ட்டார் கொடுக்கிற மூன்று மாத கெடுவில் கொடுக்கிறார். இப்படியே ஒவ்வொரு ஆண்டும் டிபால்ட் செய்துகொண்டிருப்பதும், கோர்ட்டுக்குப் போயே குத்தகை வசூல் பண்ணுவதுமாகச் சில சங்கடங்கள் இருக்கின்றன. எல்லோரும் இப்படிப் பண்ணாவிட்டாலும் சில விவசாயிகள் வேண்டுமென்றே இப்படிப் பண்ணுகிறார்கள் என்றால் அந்த நிலச்சுவாந்தாருக்கு இது பெரிய ஹராஸ்மெண்டாக இருக்கும். நம்முடைய நோக்கம் விவசாயிகளுக்கு நன்மை செய்வது தான். என்றாலும் சிறு நிலச்சுவாந்தார்கள் பெரிதும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றால் இப்படி வேண்டுமென்றே டிபால்ட் செய்கிற சாகுபடியாளரை நிலத்தைவிட்டு அப்புறப்படுத்த வழி இருக்க வேண்டும். குறிப்பாக ஒன்றிரண்டு முறைகளுக்கு மேல் டிபால்ட் செய்கிற சாகுபடியாளரை வில்புல் டிபால்ட் என்று ஏற்படுத்தியாவது நிலத்தைவிட்டு வெளியேற்ற வழி செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ரெண்ட் பிக்ஸ் பண்ணுவது என்றால் ரெண்ட் கோர்ட்டுக்குப் போக வேண்டும், எவிக்ஷன் சம்பந்தமாக என்றால் ஆர்.டி.ஓ. கோர்ட்டுக்குப் போகவேண்டும் என்று இருப்பதனால் இது ஓர் இடம், அது ஓர் இடமாக நிலச்சுவாந்தாரும், விவசாயிகளும் அலையவேண்டியிருக்கிறது. இந்த இரண்டு வழக்கையும் விசாரிக்க ஒரு அதிகாரிக்கே அதிகாரம் கொடுக்கலாம். குறிப்பாக மேலூர் [illegible]

ஆபீஸ் ஒரு இடத்தில் இருக்கிறது. ஆர்.டி.ஓ. ஆபீஸ் ஒரு பக்கத்தில் இருக்கிறது. அதுபோலவே நிலக்கோட்டையை எடுத்துக் கொண்டாலும் ஆர்.டி.ஓ. ஆபீஸ் ஓர் ஊரில் இருக்கிறது, தாசில்தார் ஆபீஸ் ஒரு ஊரில் இருக்கிறது. ஆகவே இதுபோன்ற இந்த இரண்டு வழக்கையும் விசாரிப்பது ஒரு அதிகாரியாக இருந்தால் நல்லதாக இருக்கும்.

அதோடு ஆர்.டி.ஓ.-க்கு நிர்வாக அதிகாரம் வேறு இருப்பதினால் இந்த வழக்கு விசாரணையில் காலதாமதம் ஆகிறது. ஒரு நாள் கேஸ் போடப்பட்டிருந்தாலும் அவர் நிர்வாக விஷயமாக வேறு இடத்திற்குப் போக நேரிட்டுவிடுகிறது. இதனால் இரண்டாண்டுகள் ஆகிற வழக்குக்கூட தீர்ப்புக் கிடைப்பதற்குள் காலதாமதமாகிறது. ஆகவே இந்த இரண்டையும் விசேஷமாக தனியாக ஏற்படுத்தப்பட்ட ஒரே அதிகாரியிடத்தில் கொடுக்கவேண்டும்.

மேலும் அப்பீல் சம்பந்தமாக ஹைகோர்ட்டுக்கு வரவேண்டும் என்று இருப்பதை மாற்றி ஜில்லா அளவிலேயே வைப்பது நல்லதாக இருக்கும். இதனால் பல விவசாயிகளுக்கு வசதி ஏற்படும்.

சிறு நிலச்சுவாந்தார்கள் சம்பந்தமாக விதிவிலக்கு வேண்டும் என்று சொல்லியிருந்தோம். ஒரு முறை—இலிங் சட்டம் வந்த போது அதற்கான பாதுகாப்பு அடங்கிய ஒரு சாப்டரே அதில் இருந்தது. என்ன காரணத்தினாலோ அதை நீக்கிவிட்டார்கள். அப்புறம் சிறு நிலச்சுவாந்தார்களுக்கு விதிவிலக்கு அளிக்கப் போகிறார்களா இல்லையா என்பதே புரியாமல் இருக்கிறது. சில இடங்களில் இரண்டு ஏக்கர் மூன்று ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் மாத்திரம் இருக்கிறார்கள். விதவைகள் இன்னும் அந்த நிலத்தையே நம்பி வேறு தொழில் இல்லாமல் இருப்பவர்கள் எல்லோருக்கும் விவசாய சட்டங்களிலிருந்து ஒரு விதிவிலக்கும் இல்லாததனால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட், ரென்ட் பிக்சேஷன் ஆக்ட் இவற்றினால் எல்லாம் அவர்கள் வருமானம் வெகுவாக குறைந்துவிட்டது. நிலவரியும் கூடுதலாகியிருக்கிறது. ஆகவே இவற்றையெல்லாம் கருதி சிறு நில சொந்தக்காரர்களுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மேலே சொல்லிய திருத்தங்களை எல்லாம் செய்வது அவசியம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தை நீடிக்கும் மசோதாவை விவசாயிகள் சார்பில் வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த சட்டத்தை இன்றையதினம் நமது ராஜ்யத்தில் அமல் படுத்துகிறபோது இதனால் விவசாயிகள் அல்லது நிலச் சொந்தக்காரர்கள் எந்த அளவுக்கு நன்மை அடைந்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, விவசாயிகளில் பெரும் பகுதியினர் பலன் அடைந்திருந்தாலும் சில விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல் குத்தகைக்கு சாகுபடி செய்து கொண்டிருக்கக் கூடிய விவசாயிகள் வழக்குத் தொடரக்கூடிய நேரத்தில் நெல்லை அளந்து கொள்ள மிராசுதார்கள் மறுத்து விடுகிறார்கள். அவர்கள் எத்தனை தடவை நடை நடந்தாலும் நெல்லை அளந்து கொள்ள மறுத்து விடுகிறார்கள். ஒரு சமயம் நெல்லை அளந்து கொண்டாலும்கூட, ரசீது கொடுப்பதில்லை. கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய விவசாயிகளை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக, விவசாயிகள் காலத்திலே நெல் அளக்கவில்லை என்றாலும் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குப் பிறகு நெல்லை விற்று முதல் செய்து கோர்ட்டுகளில் கட்டி விட்ட பிறகு கோர்ட்டுக்கு மனுக் கொடுக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் ரெவின்யூ கோர்டில் பணத்தைக் கட்டக்கூடிய நிலைமை இருந்தது. இப்போது கஜானாவில் கொண்டுபோய் சலான் போட்டுப் பணத்தைக் கட்ட வேண்டியதிருக்கிறது. இதன் காரணமாக விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அம்மாதிரிப் பார்க்கும் போது அப்பீல் என்று சொல்லி வழக்குகளைக் கூடிய சீக்கிரம் பைசல் செய்வதில்லை. வருஷக் கணக்கில் வழக்குகள் கோர்ட்டில் இருந்து கொண்டிருக்கின்றன. இதனைப் பற்றிப் பல தடவை கேள்வி மூலமாகக்கூட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் மீது வழக்குகள் தொடரப்பட்டால் அவர்கள் சென்னையில் இருக்கக்கூடிய ஹைகோர்ட்டுக்கு வந்து வழக்காடும்படியான வாய்ப்பும் வசதியும் இல்லாத காரணத்தால் அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படக்கூடிய ஆபத்தான நிலைமை ஏற்படுகிறது. எக்ஸ் பார்ட்டியாகத் தீர்ப்பளிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதில், சிறு சிறு தவறுகள் இருக்கின்றன. இன்றையதினம் நிலத்தினுடைய தரம் உயர்ந்திருக்கிறது. ஆகவே, வார நிர்ணயத்தை 1952-ஆம் ஆண்டுப் பிரகாரம் வாங்க முடியாது, அதிகமாகத் தங்களுக்கு வாரம் வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். தற்போது விவசாயச் செலவுகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. விவசாயிகள் தங்களுடைய முழு உழைப்பைச் செலுத்தி அதிகமான உரத்தைப் போட்டு உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ஏற்படக்கூடிய விவசாயச் செலவை எடுத்துக் கொண்டால் அதிகமான வாரத்தைப் பெறுவது எப்படி சாத்தியப்படும்? ஆகவே, அதிகமான வாரம் கொடுப்பதற்கான நிலைமை இல்லை என்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

விவசாயிகள் சம்பந்தப்பட்ட வரையில் சட்டத்தில் சில தவறான ஷரத்துக்கள் இருப்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சில ஷரத்துக்களை நிலச் சொந்தக்காரர்கள் தங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இம்மாதிரி இருக்கக் கூடிய தவறான ஷரத்துக்களை எடுத்து விட்டு நல்ல முறையிலே விவசாயிகளுக்குப் பலன் தரும் வகையில் விதிகளை அமைத்தால்

நலமாக இருக்கும். அவ்வாறு செய்யும்போது எல்லாச் சட்டங்களையும் ஒருங்கிணைத்து நல்ல முறையிலே நிலச் சீர்திருத்தத்தைச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டார்களேயானால், ஒவ்வொரு சட்டத்திற்கும் தனித் தனியாக மசோதா கொண்டு வந்து நீடித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த ஒரு காரியத்தைப் பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. அதுவும் குறுகிய காலத்தில் காலாவதி ஆகிவிடும் முறையிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரிச் சட்டங்களைக் கொண்டு விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளும்போது விவசாயிகள் சம்பந்தப்பட்ட சகல சட்டங்களையும் ஒன்றாக இணைத்து ஒரே சட்டமாகக் கொண்டு வந்து விவசாயிகள் நல்ல முறையில் பாதுகாக்கப்படுவதற்கும், ஊக்குவிக்கப்படுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை இரண்டு ஆண்டுகள் நீடிப்பதற்குப் பதிலாக அதற்கு மேலும் ஓராண்டு நீடிக்க வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கோ. சி. மணி: மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய ரெவினியூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் சென்னை சாகுபடி குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதாவை வரவேற்றுப் பேசுகின்ற நிலையில் இருந்தாலும், வந்திருக்கிற திருத்தம் எவ்வளவு நாளைக்கு வந்திருக்கிறது என்பதைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். விவசாயிகளுக்கு நல்வாழ்வு அளிப்பதற்காக அரசாங்கம் முற்பட்டு பாடுபட்டுக் கொண்டு வருகிறது. ஆயினும் இவர்களுக்கான பாதுகாப்பு இரண்டு வருஷங்களுக்குத்தான் என்றால், அதற்குப் பிறகு இவர்கள் என்ன செய்ய இருக்கிறார்கள்? வயிற்றை வலிக்கிறது என்று சொல்பவனுக்கு மருந்து கொடுப்பதற்கு மாறாக கடையில் விற்கும் சோடாவை வாங்கிக் கொடுத்தால், எப்படி நோயைப் பூரணமாகத் தீர்க்க முடியாதோ அந்த நிலைமையில்தான் இந்தச் சட்டத்தை இரண்டு ஆண்டுகள் நீடிப்பதானது இருக்கிறது. சோடாவைக் குடித்தால் உடனடியாக வலி நிற்குமே தவிர, நோய் தீராது. நோய் தீர டாக்டர் மருந்து கொடுத்துத்தான் ஆகவேண்டும். 1952-ஆம் வருஷத்தில் சென்னை சாகுபடியாளர்கள் பாதுகாப்பு மசோதா கொண்டு வந்ததிலிருந்து, அந்தச் சட்டத்தை நீடிப்பதிலும், துணை மசோதாக்களைக் கொண்டு வரும் நிலைமையிலுந்தான் இந்த அரசு இருக்கிறது. 1952-ஆம் வருஷ சாகுபடி பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படி கோர்ட் பீஸ் ஒரு ரூபாய் ஒட்டினால் போதும் என்று இருந்தது. நடைமுறையில் வரும்போது எவிடன்ஸ் ஆக்ட்-க்கு எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு சிவில் கேஸ்களில் ஸ்டாம்பு ஒட்ட வேண்டியிருக்கிறது. அப்பீலைப் பொறுத்தவரை ஆளும் கட்சி உறுப்பினர்களும், எங்கள் கட்சித்

தலைவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். எல்லாவற்றுக்கும் அப்பீலை மாவட்ட ரீதியில் வைத்து விட்டு, இதற்கு மட்டும் உயர்நீதி மன்றம் என்று ஏன் வைக்கவேண்டும்? ரெவின்யூ கோர்ட்டில் நடவடிக்கைகள் முடிந்து 90 நாட்களுக்குள் உயர்நீதி மன்றத்தில் அப்பீல், ரிவிஷன் செய்து கொள்ளலாம். ஸ்டே வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அவ்வாறு ரிவிஷன் செய்யும்போது, ரெவின்யூ கோர்ட் எவ்வளவு ரூபாய் கட்ட வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறதோ அந்தப் பணத்தைக் கோர்ட்டில் கட்டிவிட்டுத்தான் ரிவிஷன் செய்ய வேண்டுமென்றிருக்கிறது. தேவையில்லாத அளவுக்கு அதிகமான பணத்தைக் கட்ட வேண்டுமென்று ரெவின்யூ கோர்ட் உத்தரவு போட்டிருப்பதை எதிர்த்து அந்த உத்தரவை ரத்து செய்யவேண்டுமென்று கோருவது தான் அப்பீல் ரிவிஷன். அந்த நிலத்திலிருந்து வெளியேற்றாமல் ஒரு தடை உத்தரவு போடவேண்டுமென்று முறைப்படி உயர்நீதி மன்றத்தில் மனு கொடுக்கப்படுகிறது. ஆனால் உயர்நீதி மன்றத்தில் அதை ஏற்றுக்கொண்டு தடை உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டுமென்றால் கீழ் கோர்ட் எந்தளவு பணம் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறதோ அதைக் கட்டி முடிந்த பிறகுதான் உனக்குத் தருவேன், கட்டி முடித்த பிறகு நியாயமற்ற முறையில் கீழ் கோர்ட் உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்று தெரிந்தால் திருப்பித் தரப்படும் என்று சொல்கிற அளவில் உயர்நீதி மன்றம் ஸ்டே பெட்டிஷனை ஏற்றுக் கொள்ள சட்டம் இருக்கிறது. அப்பீல் போடுகிறவர்கள் தடை உத்தரவு போட வேண்டுமென்று கேட்கும்போது, அந்தத் தொகையைக் கட்டினால் தான் கொடுக்க முடியும் என்ற நியதியை மாற்றி அப்பீல், ரிவிஷன் பெட்டிஷன் கொடுத்தவுடன் ஸ்டே கேட்டால் அது தரப்பட வேண்டுமென்ற அளவிற்கு இச்சட்டத்திற்கு ஒரு திருத்தம் தயாரித்துக்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிலத்தை உழுகிறவன் நிலத்தை தவறுதலாகப் பயன்படுத்தினால் அவனை நிலத்திலிருந்து வெளியேற்றலாம் என்றிருக்கிறது. விவசாயம் சம்பந்தமல்லாத வேறு ஒரு காரியத்திற்கு உபயோகப்படுத்தினால் என்று இருக்கிற விதியை வைத்துக் கொண்டு ரெவின்யூக் கோர்ட்டில் உள்ளவர்கள் அதை துஷ் பிரயோகம் செய்கிறார்கள். வயலில் உள்ள வரப்பிலிருக்கும் ஒரு கருக மரத்தை விவசாயி தெரிந்தோ அல்லது தெரியாமலோ வெட்டினால், உடனே அந்த விவசாயி அந்த கருக மரத்தை வெட்டினான், அப்படி வெட்டும்போது வரப்பையே வெட்டியிருக்கிறான், அப்படி வரப்பை வெட்டியபோது அங்குள்ள மண்ணை வெட்டி விட்டான், வெட்டி அந்த மண்ணை எடுத்துக் கொண்டு போய் விட்டான், எனவே நஞ்சை பாழடைந்து விட்டது, அந்த மரத்தை வெட்டியதால் விவசாயம் அபிவிருத்தி அடையாமல் போய்விடும் என்று ரெவின்யூ கோர்ட்டில் கேஸ் போட்டு அந்த விவசாயி அப்படி வெட்டியது குற்றம், ஆகவே அவன் அங்கு விவசாயம் செய்வது சரியல்ல, அவன் அதிலிருந்து வெளியேற்றப்பட வேண்டுமென்று கோர்ட் முடிவு செய்திருக்கிறது. அந்த மரத்தை வெட்டியவன் மீது ஐ.பி.சி. படி நடவடிக்கைகள் [illegible]

திருக்கலாம். போலீஸில் புகார் செய்திருக்கலாம். அவனுக்கு அப்படி தக்க தண்டனை தந்திருக்கலாம். ஆனால் அந்த கருக மரத்தை வெட்டியதால் அவன் விவசாயம் செய்ய லாயக்கற்றவன், அவன் விவசாயத்தை பாழடித்து விட்டான், ஆகவே அவனை அந் நிலத்திலிருந்து வெளியேற்றிவிடலாம் என்று உத்தரவு பிறப்பிக்க இந்த சட்டம் இடம் தருகிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்யாது ஒரே ஒரு வார்த்தையில் கால நீடிப்பு என்று கொண்டு வந்திருப்பது வருந்தத்தக்கது. அடுத்து, உள்குத்தகைதாரர்களைப் பற்றிய பிரச்னை பற்றி இங்கு எடுத்துக் கூறியிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பப்ளிக் டிரஸ்ட்போர்ட் ஆக்டின் கீழ், நில உச்சவரம்புச் சட்டத்தில் பரிசீலனை செய்து பாதுகாப்பு அளிக்கிறோம் என்று சொன்னார்கள். பாதுகாப்பு அளித்திருக்கிறார்கள். இந்த விவசாயப் பாதுகாப்பு மசோதாவில், இத்திருத்த மசோதாவில் பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. கோவில் அல்லது மட நிலங்களை சாகுபடி செய்பவர்கள் உள் குத்தகைதாரர்கள் என்று வெளியேற்றப்படும்போது இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களைக் காட்டி தப்பித்துக் கொள்ளலாம். சாதாரண நிலச்சுவாந்தார்களிடம் சாகுபடி செய்து கொண்டிருக்கிற உள்குத்தகைதாரர்கள் எந்தளவு பயன் பெற முடியும் என்று பார்க்கவேண்டும்? இதை சாதாரணப் பிரச்னை என்று ஒதுக்கிவிடக்கூடாது. உள்குத்தகைதாரர்கள் என்ற முறையில் எவ்வளவு பேர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்ற வினாவை இங்கு எழுப்பியபோது 3,000 சொச்சம் பேர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. யார் உழைத்துக் கொண்டிருக்கிறார்களோ தன் முழுக் குடும்பத்தின் உழைப்பை யார் கொடுக்கிறார்களோ அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பால் வெளியேற்றப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் முறையில் இந்த சட்டத்தின் ஷரத்துக்களைத் திருத்தியிருக்கிறார்களா என்றால் இல்லை. நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிற உள்குத்தகைதாரர்கள் ரெஸ்டொரேஷன் பெட்டிஷன் கொடுத்தால் அவர்களுக்கு விவசாயத்திற்கு நிலம் கொடுக்கவேண்டுமென்ற உத்தரவை இந்த சட்டத்தின் மூலம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரெவின்யூ கோர்ட்டில் எவிக்ஷன் பெட்டிஷன் போடுகிறார்கள். 30 நாட்களுக்குள் குத்தகை பாக்கியை கட்டிவிட்டால் அதில் இருக்கலாம், இல்லாவிடில் அவர்கள் வெளியேற்றப்படலாம் என்ற உத்தரவு இருக்கிறது.

கனம் சபாநாயகர்: அவர்களும் அதைத்தான் சொன்னார்கள்.

திரு. கோ. சி. மணி: லட்சக்கணக்கில் கடன் வாங்கியிருப்பவர்கள் வருடக்கணக்கில் தவணை கேட்கிறார்கள். 1,000 ரூபாய் கடன் வாங்கி அதற்கு வாரன்ட் வந்தாலும் 50 ரூபாயை முன்சிப் கோர்ட்டில் கட்டி விட்டு மீதிப் பணம் கட்ட இரண்டு மாதத் தவணை கேட்கிறார்கள், கொடுக்கப்படுகிறது. அப்படியிருக்க இந்த விவசாயி

கள் மட்டும் 30 நாட்களுக்குள் முழுத் தொகையையும் செலுத்திவிடவேண்டும், அப்படி செலுத்தத் தவறினால் வெளியேற்றப்படுவார்கள் என்று இருப்பது சரியல்ல. நிலத்தை விட்டு வெளியேற்றுவதற்கு முன்னர் அறிவிப்பு உண்டா என்றால் இல்லை. சிவில் கோர்டில் டிக்ரி வாங்கினால் ஓர் ஆண்டு தாண்டி விட்டால் புது மனு கொடுத்து புதுப்பித்து அதைத் தெரிவித்த பின்னர் நிறைவேற்றுகிறார்கள். ஆனால் இவர்களுக்கு கொடுக்கப்படுகிற கெடு 30 நாட்களே. 30 நாட்கள் டைம் கொடுக்கும்போது 15 நாட்கள் கழிந்து விட்டால், இன்னும் 15 நாட்கள்தான் இருக்கின்றன. அப்படி கட்டத் தவறினால் நிலத்தை விட்டு நீங்கள் வெளியேற்றப்படுவீர்கள் என்று நோட்டீஸ் கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. அப்படி 30 நாட்கள் டைம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதே விவசாயிகளுக்குத் தெரியவில்லை. அப்படி தெரியாதவர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். நடுவில் நிலச்சுவாந்தார்கள், கொடுக்கவேண்டாமென்று ரத்து செய்து விடுகிறேன், பாதிப் பணத்தைக் கொடு என்று சொல்லி பாதிப் பணத்தை வாங்கிக் கொண்டு பின்னர் அவர்களை வெளியேற்றுகிறார்கள். இப்படி பல கேஸ்கள் நடந்திருக்கின்றன. அடுத்து, 60, 40 என்றிருக்கிறது. 1952-ம் ஆண்டு சட்டத்தில் விவசாயிக்கு 40 பாகமும், நிலச்சுவாந்தாருக்கு 60 பாகம் என்றும் இருந்தது. இப்போது விவசாயிக்கு 60, நிலச்சுவான்தாருக்கு 40 என்று இருக்கிறது. ஏற்கனவே இருந்த சட்டத்தில் அறுவடை செய்து கொடுக்க வேண்டியதற்குள்ள கூலியை கொடுத்து விட்டு . . .

MR. SPEAKER: The hon. Member need not go into the details. He should mention only the salient points and finish his speech.

திரு. கோ. சி மணி: நிறைய பேச வேண்டியிருக்கிறது.

கனம் சபாநாயகர்: நான்கு நாட்கள் பேசலாம், அது அவசியமில்லை. முக்கியமான விஷயத்தைக் கூறி முடித்துவிடுங்கள்.

திரு. கோ. சி. மணி: ஏற்கனவே இருந்தது போல், களவடை, கூலி, அறுவடைச்செலவு இது போன்ற செலவுகளை, அத்தனையையும் எடுப்பதற்கு முன்னால் பிரிப்பதைவிட இவ்வளவையும் கொடுத்துவிட்டு, எல்லாச் செலவுகளும் போக பின்னர் 60, 40 என்று பிரித்து விவசாயிக்கு 60 பாகம் கொடுக்கப்படவேண்டும். அந்த முறையில் சட்டத்தை திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உழுநிலம் உழுபவனுக்கே சொந்தமாக்கப்பட வேண்டுமென்று கருதுபவர்கள் நாங்கள். ஆகவே இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு, ஐந்தாண்டு என்று நீடிப்பதை விட்டு, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று சொல்லும் துணிவு இருந்தால் விவசாயிகளின் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, விவசாயம் உற்பத்தி பற்றிய குற்றங்கள் செய்யாத வரையில் அந்த நிலத்தை அவனுக்கே நிரந்தரமாக்கும் வகையில் சட்டத்தை திருத்தவேண்டுமென்று கேட்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

[13th August 1963

* **திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** கனம் சபாநாயகர் அவர்களே, சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு திருத்த மசோதாவின் பேரில் நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இது 1955-ல் உருவாக்கப்பட்டு 1958-ல் பழையபடி புதுப்பிக்கப்பட்டது. "Revision of the Tenancy law" கொண்டு வரப்படும் என்று 1961-ல் இந்த சபையில் உறுதி கொடுக்கப்பட்டது. இப்போது 1963-ல் இரண்டு ஆண்டுக்கு நீடிக்கும் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எட்டு ஆண்டுகளாக இந்தச் சட்டம் வரப்போகிறது, அதனால் குடியானவர்களுக்கு நன்மை கிடைக்கப் போகிறது என்று சொல்லப்பட்டு வந்தது. இப்போது இத்திருத்தம் வந்திருக்கிறது. இதிலுள்ள ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்சில் " It will take some more time for the revision of the Tenancy law" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "Some more time" என்றுதான் சொல்லப்படுகிறது. 1955-ல் இருந்து 1963-ம் ஆண்டு வரை, சாகுபடிதாரர்களுக்கு நன்மை செய்யப்படவேண்டுமென்று இருக்கிற இந்த சிறிய சட்டத்தைக் கொண்டுவர தாமதப்படுத்துவதால் எவ்வளவு குடியானவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்தச் சட்டம் செல்லாது என்று ஹைகோர்ட்டில் கூட challenge செய்யப்பட்டது. அங்கு நீதிபதி அவர்கள் இது டெம்பரரி சட்டம், ஆகவே இது செல்லும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் காரணமாகக் கூறப்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் வரை நிலச்சுவான்தார்கள் போய் கொண்டிருக்கிறார்கள். இதை சரிவர திருத்தி அமைக்காததால் குடியானவர்கள் சுப்ரீம் கோர்ட் வரை போகும் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு ஆண்டு காலமாக குடியானவர்கள் நன்மை அடையும் முறையில் ஒரு சட்டத்தை செய்ய முடியாவிட்டால் எப்படி குடியானவர்கள் நன்மை அடைய முடியும்? இப்போது அநேகம் பேர்கள் நிலத்தை விட்டு போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் பணம் படைத்த நிலச்சுவாந்தார்களை எதிர்க்க முடியவில்லை. ஒரு சிறிய 'ப்ளா' சட்டத்தில் இருப்பதாக வைத்துக்கொண்டு, சுப்ரீம் கோர்ட் வரை போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் ரிவிஷன் ஹைகோர்ட்டிற்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பீல் கொடுத்தால் என்ன? ஏனென்றால் ரிவிஷன் என்றிருந்தால், 'பாக்ட்ஸை'-ப் பற்றி சொல்ல முடியாது. அப்பீல் என்று இருந்தால் 'பாக்ட்ஸை'ப் பற்றி சொல்லலாம். ரிவிஷன் என்று போட்டிருப்பதால், 'பாக்ட்ஸில்' தலையிட முடியாது என்று தள்ளிவிடுகிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு அனுகூலம் கிடைப்பதற்கு வழியில்லை. என் இரண்டு வருஷம் கொடுக்கவேண்டும்? ஆறு மாதம் என்று தவணைவைத்து, இந்தத் திருத்த சட்டத்தைக் கொண்டுவந்தால் என்ன? விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், நியாயமாக டெனண்ட்ஸ் பாதுகாக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

13th August 1963] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

அதுபோக, இந்த விசாரணைக்கு ஒரு ஸ்பெஷல் ஆர்.டி.ஓ. அவசியம் தேவை. ஒரு விசாரணை ஆரம்பித்தால் கிட்டத்தட்ட 2 வருஷங்கள் ஆகின்றன. ஏதோ காரணம் சொல்லி ஆர்.டி.ஓ. வாய்தா போட்டுவிடுகிறார். தஞ்சை ஜில்லாவில் இதற்காக ஒரு ஸ்பெஷல் ஆர்.டி.ஓ. போட்டிருக்கிறார்கள். அம்மாதிரி இந்த சட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ஸ்பெஷல் ஆர்.டி.ஓ. போட்டால் போதும். அப்படிச் செய்தால் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும். காலதாமதத்தையும் தவிர்க்கலாம். இரண்டு வருஷம் என்று இருப்பதை 6 மாதங்களாக குறைத்து, புது சட்டம் சீக்கிரம் கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்தி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவின் மீது எனது கருத்துக்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதா கொண்டுவந்த பிறகு விவசாயிகளுக்கும், மிராசுதாரர்களுக்கும் இருந்த சுமுகமான உறவு அற்றுவிட்டது என்ற அளவுக்குக் கூறலாம். குறிப்பாக எனக்கு முன்பு பேசிய பல அங்கத்தினர்கள் கூட வற்புறுத்தினார்கள். குத்தகை பத்திரம் இருந்தால்தான் கோர்ட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த சட்டம் வருவதற்கு முன்பாக வாய்மொழியாக ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு விவசாயம் செய்து கொண்டிருந்த விவசாயிகளும், நிலச்சுவாந்தார்களும் இந்தச் சட்டம் வந்தபிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது என்ற ஒரு நிலை இருக்கிற காரணத்தினால், கட்டாய குத்தகைப் பத்திரம் எழுத வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல.

குறிப்பாக, இந்தச் சட்டம் வந்தபிறகு ஆலயங்களைப் பொறுத்தவரையில் மிகவும் தவறான வகையிலே இது பிரயோகிக்கப்பட்டு வருகிறது என்பது நாம் கண்கூடாகக் கண்ட விஷயம். 'பேர் ரெண்டு கோர்ட்டுக்கு' போகாமலேயே நிர்ணயம் செய்யப்பட்ட குத்தகையை, ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்ட குத்தகையை, ஆலயங்களின் நிலங்களைச் சாகுபடி செய்பவர்கள் சரியான அளவிலே ஒப்படைப்பதில்லை. அவர்கள் அப்படி ஒப்படைக்காமல் இருந்தாலும் மேலும் அவர்களுக்கு இரண்டு மாத காலம் தவணை கொடுத்தும்கூட, இரண்டு மாத காலத்திற்குள் குத்தகையை செலுத்தாத காரணத்தினாலே, மேற்கொண்டு கோர்ட்டு நடவடிக்கைக்கு செல்லும்பொழுது அங்கு மேலும் மூன்று மாதம் தவணை கொடுத்து விடுகிறார்கள். அந்தந் தவணை காலம் முடிவதற்குள் அடுத்த சாகுபடி செய்யக்கூடிய காலம் வந்துவிடுகிறது. சாகுபடியாளர்கள் கோவிலுக்கு நெல்லை அளக்காமல் இருந்தாலும், சட்டரீதியாக அவர்கள் அப்புறப்படுத்தப்படாத காரணத்தினாலே, அவர்கள் மறுபடியும் அந்த நிலங்களில் சாகுபடி செய்யக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. சாகுபடி செய்து ஒரு மாத காலம் [illegible]

[திரு. எம். தண்டாயுதபாணி] [13th August 1963

தான் 'பொஸெஷன்' ஒப்புவிக்கப்படுகிறது. அந்த நிலையில் 'பொஸெஷன்' கொடுத்தால், சாகுபடி செய்திருக்கிற நெல் யாரைச் சார்ந்தது, கோவிலைச் சேர்ந்ததா அல்லது விவசாயியைச் சேர்ந்ததா என்ற ஒரு நிலை உறுதிப்படாமல் இருக்கிறது. ஆகவே, அப்படி சாகுபடி செய்யப்பட்ட நெல் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை எழுகிறது. விவசாயிகள் மிகவும் ஏழையாக இருப்பதால், கோவிலார் வாய்மொழியாக ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு, அந்த நிலத்திலுள்ள நெல்லில் ஒரு பகுதியை விவசாயிகளுக்குக் கொடுத்துவிட்டு, மீதியுள்ள நெல்லைத்தான் கோவிலுக்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இம்மாதிரி காலதாமதம் ஏற்படாமல் சாகுபடி செய்வதற்கு முன்பே, கோவிலாரிடம் 'பொஸெஷன்' ஒப்புவிக்கக்கூடிய நிலை ஏற்படுவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில் ஆலய நிர்வாகத்தில் இருக்கிற நிலங்கள் விற்கப்பட்டுவருகிறது. விற்கப்பட்டு வருகிறது என்றால் பத்திரம் எழுதப்படுவதில்லை. சாதாரணமாக, ஒரு ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு நெல் அளப்பது என்று ஒரு விவசாயி குத்தகைக்கு எடுத்துக்கொண்டால், சட்ட ரீதியாக அவன் அளக்க வேண்டிய நெல்லை அளந்துவிட்டால், அடுத்த ஆண்டில் அந்த நிலத்தை இன்னொரு நபருக்கு சாகுபடிக்குக் கொடுத்து ஓரளவு தொகையை அந்த விவசாயி பெற்றுக்கொள்வதற்கு வசதி இருக்கிறது. சட்ட ரீதியாக ஆலயங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை செய்யப்படவில்லை. குத்தகைப் பத்திரத்தில் எழுதியிருக்கிற அந்த நெல்லைத்தான் பெறமுடியும். குத்தகைப் பத்திரப்படி ஒழுங்காக நெல் அளந்துவிடுவதினால் குத்தகைப் பத்திரத்தை மாற்றி எழுதுவதற்கு வசதி இல்லாமல் போய்விடுகிறது. அதே சமயத்தில் கிரயம் பேசி, சாதாரண குத்தகைக்கு ஒப்புக்கொண்டவர்கள் சாகுபடி செய்வதற்கு மற்றவர்களிடம் விற்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த ஒரு நிலையை அகற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் கூறியதுபோல அப்பீல் ஹைகோர்ட்டு லெவலில் இருப்பது மிகவும் சிரமம். ஜில்லா அளவில் அப்பீல் செய்வதற்கு வழி செய்தால், விவசாயிகளுக்கும், மிராசுதார்களுக்கும் உதவியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. பி. ஜயராஜ்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு திருத்த மசோதாவை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். இந்தச் சட்டம் நல்ல முறையில் விவசாயிகளுக்கு பயன்பட்டாலும் கூட, பெரும்பாலான அளவிலே விவசாயிகள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் அவர்கள்கூறிய

13th August 1963] [திரு. பி. ஜயராஜ்]

மாதிரி, நிலச்சுவான்தாருடைய நெருங்கிய தொடர்பும், உறவும் இருந்த காரணத்தினாலே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் சட்டத்தினால் விவசாயிகளுக்கு அதிகமாக நன்மை ஏற்படுகிறது என்ற காரணத்தையொட்டி, விவசாயிகளை எந்த வழியில் நிலத்தை விட்டு அப்புறப்படுத்தலாம் என்ற கெட்ட நோக்கத்தோடு, விவசாயிகளிடம் குத்தகை நெல்லைப் பெற்றுக்கொண்டு, ரசீது கொடுக்காமல் பல விவசாயிகள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். தஞ்சை ஜில்லாவில் அதிகமான விவசாயிகள் இம்மாதிரி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, தஞ்சை ஜில்லாவிலுள்ள அதிகமான விவசாயிகள் கூக்குரல் போட்டதினால்தான் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டம் இப்பொழுது அந்த விவசாயிகளுக்கு ஓர் அளவுக்கு பாதகம் செய்துகொண்டு வருகிறது. விவசாயிகள் எந்த அளவுக்கு நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள் என்பதை சற்று அரசாங்கம் உற்று கவனிக்கவேண்டும். சாகுபடி செய்பவர்கள் நம்பிக்கையின்பேரில் குத்தகை நெல்லை அளந்த பிறகு, பிறகு ரசீது தருகிறேன் என்று சொல்லிவிட்டு, அடுத்த ஆண்டில் ரசீது கொடுக்காமல் குத்தகை நெல் கொடுக்கவில்லை என்று ரெவின்யூ கோர்ட்டுக்கு மனு கொடுத்து, அதன் காரணமாக நிலத்தை விட்டு விவசாயிகள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். சட்டத்தினால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்பதை கவனிக்கவேண்டும். அரசாங்கம் இதுபற்றி தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வில்லேஜ் கர்ணம் குத்தகைக்காரர்கள் சாகுபடி செய்கின்ற நிலத்தை அடங்கலில் எழுதாமல் இருக்கிறார்கள். அவர்களை அடங்கலில் ஏன் எழுதவில்லை என்று கேட்டால், தாலுகா ஆபீஸுக்கு அனுப்பப்படுகிற குத்தகைச் சீட்டை அவர்களுக்கு அனுப்பிவைத்தால்தான் அடங்கலில் பதியமுடியும் என்று சொல்லுகிறார்கள். அங்கிருந்து எந்தவிதமான உத்தரவும் வரவில்லையென்றால் அடங்கல் புத்தகத்தில் எழுத முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். ரெவின்யூ கோர்ட்டு, ரெண்டு கோர்ட் ஆதாரமாக எடுத்துக்கொள்வது வில்லேஜ் முனிசீப், கர்ணம் அடங்கல் புத்தகம் தான். அடங்கல் புத்தகம் தான் கோர்ட்டில் செல்லுபடியாகிறது. அடங்கலில் ஒரு "காலம்" இருக்கிறது. அதுபற்றி அடங்கலில் பதிவு செய்யவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டு, அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்தால், ஓரளவுக்கு விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும்.

அடுத்தபடியாக, விவசாயிகள் திடீரென்று இறந்துவிட்டாலும், அல்லது உடல் நலம் சரியாக இல்லாததன் காரணத்தினால் சாகுபடி செய்ய முடியவில்லையென்றாலும், அவர்களுடைய உறவினர்கள், சொந்தக்காரர்கள், அல்லது பின்னால் இருக்கிற வாரிசுகள் சாகுபடி செய்யக்கூடிய நிலைமை இல்லை. அந்த மாதிரி நிலைமை ஏற்படும்படி அரசாங்கம் உத்தரவிட்டால் விவசாயிகளுக்கு நல்ல பாதுகாப்பாக இருக்கும்.

கோவில் நிலங்களைப் பொறுத்தவரையிலே, பெரும்பாலான விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தினால் நன்மை ஏற்பட்டாலும் கூட, சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாகவும், புயலின் காரணமாகவும் பயிர்கள் பாதிக்கப்பட்டதினால், கோவில் நிலங்களில் விவசாயம் செய்கின்ற விவசாயிகள் நெல்லை அளக்க முடியாத அளவுக்கு கணக்கு கூறப்படுகிறது. அதன் காரணமாக இவர்கள் கோவில் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் இதன் காரணமாக 2,000, 3,000 விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து, பரிசீலனை செய்து நிலம் இழந்த விவசாயிகளுக்கு, நிலத்தை சாகுபடி செய்வதற்குக் கொடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்தச் சட்டத்திற்கு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை திருத்த மசோதா கொண்டு வரப்படுகிறது. சென்ற இரண்டாண்டுகளுக்கு முன்னால் கொண்டுவந்த திருத்தத்தையே இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு நன்மை பயக்கின்ற அளவுக்கு இந்த திருத்த மசோதாக்கள் அமைய வேண்டும், அதன் காரணமாக விவசாயிகள் நல்வாழ்வு வாழ்வதற்கு வழி காண வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

10-30 a.m. * திரு. க. ர. நல்லசிவம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். அதே சமயத்தில் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒருங்கிணைந்த ஒரு சட்டத்தை கொண்டு வருவதிலே தாமதத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் இந்த மசோதாக்கள் இருக்கக் கூடாது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இரண்டு ஆண்டு காலத்திற்கு, இந்த மசோதா நீடிக்கப்பட்டிருக்கிறது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் சர்க்கார் அதிகாரிகள் கோரும் தகவல்களை நிலச்சுவான்தார்கள் கொடுக்கிறார்களா என்றால், அவர்கள் சரியான தகவலை கொடுத்ததே கிடையாது. நிலச் சீர்திருத்தச் சட்டம் சரியான முறையில் அமல் ஆக்கப்பட்டால் தான், ஒருங்கிணைந்த சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அது ஊன்றுகோலாக இருக்கும். சரியான தகவல்களைப் பெறுவதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. இவற்றில் எல்லாம் சர்க்கார் உத்தரவுகள் போட்டு துரிதப்படுத்தினால், இந்த ஒருங்கிணைந்த சட்டத்தை விரைவிலே கொண்டு வருவதற்கு உதவியாக இருக்கும். இம்மாதிரி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நீடித்துக் கொண்டு போவதினால், ஒருங்கிணைந்த சட்டம் கொண்டு வருவதிலே மேலும் காலதாமதம் ஏற்படுகிறது. அப்படி செய்வதின் மூலமாகத் தான் விவசாயிகளிடையே கலவரமோ குழப்பமோ ஏற்படாமல் இருக்கும். பல ராஜ்யங்களிலே நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒழுங்காக அமல் செய்யப் படவில்லை என்று திட்டக் கமிஷனே சொல்லி இருக்கிறார்கள். பத்திரிகையிலும் இந்தச் செய்தியைப் பார்த்திருக்கிறோம். எல்லா விஷயங்களிலும் மூத்

போக்காக இருக்கிற நமது அரசாங்கமாவது, மற்ற ராஜ்யங்களைப் போலில்லாமல், ஒருங்கிணைந்த சட்டத்தை இன்னும் ஒரு வருட காலத்திற்குள்ளே கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன் இந்தத் திருத்தத்தின் மூலமாக இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப் பட்டாலும் கூட, ஒரு வருடத்திலே கொண்டு வருவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. கோ. நாராயணசாமி நாயுடு : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் மேலும் இரண்டு வருடங்கள் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று கொண்டு வந்துள்ள இந்த திருத்த மசோதாவை ஆதரித்து, இந்த சட்டத்தினால் யார் பலனடைந்தார்கள் என்பதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லி, எப்பொழுதாவது இந்தச் சட்டத்தை நல்ல முறையில் திருத்த ஏற்பாடு செய்தாலொழிய, இது விவசாயிகளை ஓரளவுக்கு பாதிக்கின்ற சட்டமாகத் தான் நடை முறையிலே இருந்து வருகிறது என்பதை சர்க்காருக்கு நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளைக் குறித்து கொண்டு வந்த பல சட்டங்கள் சர்க்காருடைய பலத்தை மேலும் வளர்ப்பதற்கு பதிலாக, அவர்களுடைய பலத்தை மேலும் மேலும் குறைத்துக் கொண்டே இருக்கிறது என்பதுதான் என்னுடைய இதய பூர்வமான, பரீட்சை செய்து பார்த்த, அபிப்பிராயம். இந்த சட்டம் கொண்டு வந்த காலத்தில் எத்தனை விவசாயிகள் நிலத்தில் இருந்தார்களோ, அதிலே ஒரு பாதிக்கு மேல் நிலத்தை விட்டு அப்புறப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். "அடுப்பு நெருப்பும் போச்சு வாய்த் தவிடும் போச்சு" என்று சொல்லுவார்கள். அம்மாதிரி ஆயிற்று உழவன் நிலை. இந்த புதிய சட்டங்களின் காரணமாக, எவ்வித இடையூறும் இன்றி, குறிப்பாக எஜமானனுடைய இடையூறின்றி, தன்னுடைய நிலம் என்ற உணர்ச்சி ஏற்பட்டு, உழவன் நல்ல முறையில் பாடுபடுவதன் காரணமாக விவசாய உற்பத்தியை மேலும் பெருக்க வேண்டுமென்கிற எண்ணம் போய் முன்னைவிட கடுமையான அளவுக்கு மாச்சர்யம் ஏற்பட்டிருக்கிறது. கன்ஸிலியேஷன் கோர்ட்டுகள் எல்லாம் கிட்டத்தட்ட எவிக்ஷன் கோர்ட்டுகளாக மாறி, 10 விவகாரங்கள்போனால், 9 விவகாரங்களிலே உழவர்களை அப்புறப்படுத்துகிற சட்டமாகத் தான் இந்த சட்டம் இருந்து வருகிறது. நமது சர்க்காரிலே சட்டத்தை ஆக்குகின்றவர்கள் அவ்வளவு திறமையாக இல்லையோ என்ற சந்தேகம் கூட எனக்கு ஏற்படுகிறது. எந்தச் சட்டம் வந்தாலும் சாதாரணமாக சர்க்காரின் நோக்கம் தோற்றுக் கொண்டே போகிறது. எந்த நோக்கத்துடன் சர்க்கார் சட்டம் கொண்டு வந்தார்களோ, அந்த நோக்கம் இன்று வரையிலும் நிறைவேறியதாக எனக்குத் தெரியவில்லை. இதுவரை எத்தனை விவசாயிகள் வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது, எத்தெந்த முறையிலே அவர்கள் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்

பொழுது, சட்டத்தின் நோக்கம் பூராவும் தவிடு பொடியாகி விட்டது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். திரு. ஜெயராஜ் அவர்கள் சொன்ன மாதிரி, இரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை அல்லது மூன்று வருஷத்திற்கு ஒரு தடவை திருத்த மசோதாக்கள் கொண்டு வருவதால், சர்க்காரை எதிர்ப்பார்த்து என்ன ஆகுமோ என்ற சந்தேகத்திற்கு இடமில்லாமல், நிலம் விளைய வேண்டும் நிலத்திற்கு உடையவர்களுக்கு நெல் போய்ச் சேர வேண்டும், என்ற முறையில் இந்த இரண்டிற்கும் பாது காப்புக் கொடுத்து, அந்த நிலம் பரம்பரையாக ஒரே விவசாய குடும்பத்தில் இருந்தால் யாரையும் அப்புறப் படுத்த முடியாது என்ற நிலைமை ஏற்படும். விவசாயிகளுக்கு திருப்திகரமான வாழ்வு அளிக்க வேண்டும், அவர்களுக்கு நிச்சயமான வாழ்க்கை அளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தான் சட்டம் கொண்டு வரப் படுகிறது. இந்த இரண்டும் இந்தச் சட்டத்தின் மூலமாக நிறைவேறப் படவில்லை என்பதை பார்க்கிற பொழுது, இந்த சட்டம் நல்ல முறையில் திருத்தப்பட்டு, விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலம் அவர்களுக்குப் பின்னரும் அவர்கள் குடும்பத்திலே இருக்கும் என்கிற எண்ணத்தை ஊட்டி, அவர்களை விவசாயத்தில் நல்ல முறையில் ஈடுபடும்படி செய்து, அவர்களுக்கு கொடுக்கப்படும் கடன்கள் சரியான முறையிலே விவசாயத்திற்கு உபயோகப்படும்படி செய்ய, அவர்களுக்கு நிச்சயமான வாழ்க்கையை உண்டு பண்ண வேண்டும். அப்படி இல்லாமல் எவ்வளவு தீவிரமாக சாகுபடி சட்டத்தைக் கொண்டு வந்தாலும், உத்தேச அளவை எட்டிப் பிடிக்க முடியாத நிலைமை தான் இருந்து கொண்டு இருக்கும். சமீபத்திலே சில கிராமங்களிலே பார்த்ததில் உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்த பிறகு, அதிகப்படியான நிலம் உள்ளவர்களைவிட, குறைந்த நிலம் உள்ளவர்களின் நிலங்கள் பறிக்கப் பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி அதற்குரிய ஆதாரங்களோடு கனம் அமைச்சர் அவர்களுக்கும் சர்க்கார் அதிகாரிகளுக்கும் பல மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வருஷம் மாத்திரம் 15 ஆயிரம் மூட்டை குருவை நெல் விளைய வேண்டிய நிலம் இன்று வரையிலும் சாகுபடி செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கிறது என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்து என்னுடைய உரையை நான் முடித்துக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா, இப்பொழுது இருக்கக்கூடிய சட்டத்தை மேலும் தொடர்ந்து இரண்டு வருஷங்கள் நீடிக்க வேண்டுமென்ற அடிப்படையில் வந்திருக்கிறது. திருத்த மசோதா என்ற உடனே, இப்பொழுது இருக்கக் கூடிய சட்டம் நல்ல முறையில் இயங்கும் பொழுது அதிலே காணப்படுகின்ற பல்வேறு குறைபாடுகளை கனம் அங்கத்தினர்கள் சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தில், இந்த விவாதத்திலே பங்கெடுத்துக்கொண்ட அங்கத்தினர்கள் பல ஆலோசனைகளைக் கூறினார்கள். சில குறைபாடுகளை அரசாங்கம்

உத்தரவுகள் மூலமாக நீக்க முடியும் என்ற கருத்தையும் சொன்னார்கள். இன்னும் பொதுவாகப் பார்த்தால், விரைவிலே வர இருக்கும் "காம்பிரஹென்சிவ்" லெஜிஸ்லேஷனுக்கு நல்ல ஆலோசனைகளையும் சொல்லி இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த "காம்பிரஹென்சிவ்" லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதிலே அதிக தாமதம் இருப்பதாக பல அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டினார்கள். கான்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதிலே எந்தவிதமான தயக்கத்தையும் அரசாங்கம் காட்டவில்லை. ஆனால், இதுபோன்ற பிரச்னைக்கு கான்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவர வேண்டுமானால், அதை ஆலோசனை செய்யும் பொழுது அதிலே ஏராளமான சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்த சிக்கல்கள் ஏதோ இப்பொழுது ஏற்பட்டு நாளை மறையக்கூடிய பிரச்னைகள் அல்ல. இந்தக் கஷ்டங்களை பல நூற்றுக்கணக்கான வருஷங்களாக பல கட்டத்திலே பலர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னைகளைப் போக்குவதற்கு மொத்தமாக சட்டம் கொண்டுவர வேண்டுமென்றால். அதிலே ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. அதை எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் பொழுது, ஒவ்வொன்றிற்கும் நல்ல தீர்வுகள் கண்டாக வேண்டும். ஏதோ அவசரமாக ஒரு கான்பிரஹென்சிவ் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தில் மட்டும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால், சில சந்தர்ப்பங்களிலே அது நல்ல ஒரு சூழ்நிலையை ஊக்குவிப்பதற்குப் பதிலாக ஏராளமான கொந்தளிப்பையும் குழப்பத்தையும் உண்டு பண்ணலாம். அந்த அடிப்படையில்தான் இந்த comprehensive legislation-ஐ, அது விவசாயிகளுக்கு பயன்படும் முறையில், அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு இருக்கிறது. ஆனால் இதற்கிடையில், விவசாயிகளுக்கு ஏற்படக் கூடிய கஷ்டங்கள் இருந்தால், அந்தக் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய உடனுக்குடன் சட்டங்கள் கொண்டு வந்திருப்பதும் இந்த சபைக்கும் அங்கத்தினர்களுக்கும் தெரியும். இப்பொழுது நமக்குமுன் இருக்கும் பிரச்சினை விவசாயிகளுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் இந்த சட்டத்தை மேலும் இரண்டு வருஷம் நீடித்து, அந்த comprehensive legislation இன்னும் சாங்கோபாங்கமாக பரிசீலனை செய்து அதிகக் குறைபாடுகள் இல்லாமல் கொண்டுவர நேரம் வேண்டுமென்ற காரணத்தினால் இந்த மசோதாவை இந்தத் தடவை கொண்டு வந்திருக்கிறோம். இப்பொழுது இருக்கக் கூடிய நிலையைப் பார்த்தால், கூடிய விரைவில் அந்த comprehensive legislation வந்து விடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் கூறியது போல இரண்டு வருஷங்கள் காத்திராமல், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதை அரசாங்கம் செய்யும் என்று சொல்ல விரும்புகிறேன்.

[திரு. வெ. ராமையா] [13th August 1963

இந்த சந்தர்ப்பத்தில், விவாதத்தில் பங்கு கொண்ட அங்கத்தினர்கள் நடைமுறையில் இருக்கும் கஷ்டங்களை நீக்க எக்ஸிக்யூடிவ் ஆர்டர்ஸ் ஏதேனும் போட வேண்டுமென்று ஆலோசனை சொன்னார்கள். அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்து இப்பொழுது இருக்கக்கூடிய சட்டத்தில் இருக்கும் கஷ்டங்களை, இடைஞ்சல்களைப் போக்க உத்தரவு போடவேண்டுமென்றால், அதற்குத் தயங்காது என்று சொல்லுகிறேன். மேலும், comprehensive legislation தொகுக்கும்போது, மற்ற ஆலோசனைகளையும் இப்பொழுது சட்ட அடிப்படையில் இருக்கும் கஷ்டங்களைச் சொன்னார்கள், அந்த கஷ்டங்களையும் தொடர்ந்து இல்லாமல் இருக்கச் செய்ய அரசாங்கம் தயங்காது என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொண்டு, இப்பொழுது நான் கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்த மசோதாவை இருக்கக்கூடிய சட்டத்தை அப்படியே இன்னும் இரண்டு வருஷம் நீடிக்க வேண்டும் என்று கோரும் இந்த மசோதாவை, சபை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடிக்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963 be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

"That the Madras Cultivating Tenants' Protection (Amendment) Bill, 1963 be passed."

MR. SPEAKER : The question is—

"That the Madras Cultivating Tenants' Protection (Amendment) Bill, 1963 be passed."

The motion was put and carried and the Bill was passed.

(6) THE HOLDINGS (STAY OF EXECUTION PROCEEDINGS) (MADRAS AMENDMENT) BILL, 1963.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg to introduce the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1963[a] and move—

'That the Bill be taken into consideration.'

Sir, the Holdings (Stay of Execution Proceedings) Act, 1950 was in force in the Kanyakumari district and the Shencottah taluk

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 29th July 1963.

13th August 1963] [Sri V. Ramaiah]

at the time of their transfer to this State from the former Travancore-Cochin State in 1956. Consequent on the extension to the Shencottah taluk of the Cultivating Tenants Protection and Fair Rent Acts by Madras Act XXVIII of 1959 with effect from 2nd March 1960, the Holdings (Stay of Execution Proceedings) Act, ceased to be in force in that taluk. It is now in force only in the Kanyakumari district. The Act provides for the stay of proceedings in execution of a decree in a suit for the recovery of possession of a holding, in so far as they relate to the delivery of possession of the holding. The life of the Holdings (Stay of Execution Proceedings) Act, 1950, in its application to the Kanyakumari district, is due to expire on the 24th September 1963. Pending a decision on the policy to be adopted with regard to the land tenure systems prevalent in that district, it is considered expedient to extend the life of the Act by two years from 25th September 1963. The Bill seeks to achieve this object.

I request the House, Sir, to accept and pass the motion moved by me.

MR. SPEAKER : The question is—

"That the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1963 be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

'That the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1963 be passed.'

MR. SPEAKER : The question is—

'That the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1963 be passed.'.

The motion was put and carried and the Bill was passed.

(7) THE MADRAS TENANTS AND RYOTS PROTECTION (AMENDMENT) BILL, 1963.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg to introduce the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1963[a], and move—

"That the Bill be taken into consideration."

Sir, the Madras Tenants and Ryots Protection Act, 1949 (Madras Act XXIV of 1949) was enacted in 1949 with a view to provide for the temporary protection against eviction, among others of the tenants of private lands in estates governed by the Madras

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 24th July 1963.

Estates Land Act and against the sale of the holdings of the ryots in such estates and to provide for the stay of suits and other proceedings relating to such eviction and sale, pending the taking over of the estates by the Government under the Madars Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).

The Act provided that during its continuance, no tenant of any private land in an estate shall be liable to be evicted by the landholder of the estate in pursuance of a decree or order for eviction and that no holding of a ryot in an estate shall be liable to be sold or brought to sale in pursuance of a decree, order or other proceedings for recovery of rent. It also laid down that all suits, proceedings in execution of decrees or orders and other proceedings for the eviction of such tenants from their lands or in which the sale of the holding of a ryot for recovery of rent was claimed shall stand stayed subject to certain conditions.

The Act was enacted originally for a period of two years in the first instance. It has been continued from time to time. The life of the Act was extended up to the 7th October 1963 when the Act was last amended in 1961.

The process of taking over estates under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948) is not yet completed, as some estates still remain to be taken over. The Madras Truwaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 2 of 1962) is under the consideration of Joint Select Committee and it has just been presented to this House. Until all the estates are taken over, tenants of private land in estates should continue to have protection against the sale of their holdings for arrears of rent. The Government therefore consider that the Madras Tenants and Ryots Protection Act, 1949 (Madras Act XXIV of 1949) should continue to be in operation for some time more. They have accordingly decided that the life of the Act, which is due to expire on 7th October 1963, should be extended for a further period of two years beyond that date. The Bill accordingly provides for extension of the life of the Act for a further period of two years from 7th October 1963, i.e., upto 7th October 1965. With these words I request the House to accept the motion.

MR. SPEAKER: The question is—

"That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1963 be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move—

"That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1953 be passed."

MR. SPEAKER: The question is—

"That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1963 be passed."

The motion was put and carried and the Bill was passed.

(8) THE MADRAS ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1963.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I beg to introduce the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1963* and move—

"That the Bill be taken into consideration."

The Bill together with the Statement of Objects and Reasons was published in the *Fort St. George Gazette* (Extraordinary), dated 29th July 1963. While administering the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, it has been brought to the notice of Government that the existing provisions of the Act did not provide for payment of claims made to the Tribunal after the lapse of the time-limit prescribed. According to sub-section (1) of Section 42 of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948) every person claiming the amount of compensation deposited or any portion thereof, should apply within six months from the date on which the amount was so deposited or within such further time as the Tribunal may, in its discretion, allow, but not exceeding six months. But under sub-section (2) of Section 42, every claim against the compensation which is not made to the Tribunal within the time aforesaid shall cease to be enforceable. This resulted in persons who did not apply in time, foregoing the compensation, the amount itself lying in deposit. It was not the intention that this amount should lapse to Government. Government only want that there should be no claims against amount already disbursed.

The present amendments give effect to this. Belated claims can be entertained subject only to not disturbing payments already made by the Tribunal or orders of payment already passed by it.

All amounts deposited and remaining unpaid with the Tribunal shall be withdrawn by the Tribunal and deposited in the District Court having jurisdiction over the estate concerned in the name of the estate or, as the case may be, in the name of the person or persons in whose favour an order for payment has been made by the Tribunal or Special Tribunal. Government are given the power to prescribe by rules the procedure for payment of such amounts by the District Court on application by parties. This provision will apply to—

(a) Advance compensation;

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 29th July 1963.

[Sri V. Ramaiah] [13th August 1963

(*b*) Final compensation;

(*c*) Interim payments; and

(*d*) Arrears of rent.

The amendments provide for another difficulty noticed in the course of the judgment in W.P. No. 961/60. The High Court had observed there that the intention of Section 42 (2) is that claims against compensation (i.e. claims in the nature of maintenance, or a debt due to a third party as distinct from claims for the compensation) are not enforceable after the time allowed in sub-section (1) of Section 42. The Bill seeks to remedy this defect.

Hon. Members will therefore see that the Government have taken all efforts to ensure that every bonafide claimant to compensation or arrears of rent is enabled to present his claim however belated and that protection is granted only to amounts already disbursed. With these words, Sir, I commend the Bill for the acceptance of the House.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1963, be taken into consideration."

* **திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவானது ஒரு வரவேற்கத் தகுந்த மசோதா. ஏனென்றால் ஒரு சில ஆண்டுகளாக இந்த விஷயமாக இந்த மன்றத்திலே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. போன சட்ட சபையில் அங்கத்தினராக இருந்த திரு. ஆர். சீனிவாச அய்யர் கூட தனியாக ஒரு மசோதா கொண்டு வந்தார். இது நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த மசோதா. குறிப்பாக இது போன்ற நஷ்ட ஈட்டை ஆறு மாதங்களுக்குள் பெற வேண்டும் அல்லது மேற்கொண்டு டைம் கேட்க ட்ரிப்யூனலுக்கு அப்ளை செய்து வாங்க வேண்டும் என்று இருந்தது. ஒரு நஷ்ட ஈட்டுக்கு அருகதை உள்ளவர்கள், பெற வேண்டியவர்கள் வெளியூரில் அல்லது வெளி நாட்டில் இருந்து காலாகாலத்தில், ஒரு வருஷத்தில் மனுச் செய்துகொள்ளத் தவறிவிட்டால் சட்டப்படி கொடுக்க முடியாது இருந்தது. ஒரு சில கேஸ்களில்கூட ஹைகோர்ட்டுக்குப் போய் மெரிட்டைப் பார்த்துக் கொடுக்கலாம் என்று இரண்டு கேஸ்களில் இந்த மாதிரி தீர்மானம் ஆகியிருக்கிறது. ஒவ்வொரு கேஸுக்கும் ஹைகோர்ட்டுக்குப் போய் மெரிட்டைப் பார்த்துச் செய்வது கஷ்டமாக இருக்காதா. இப்போது ஆறு வருஷம் வரையில் கொடுக்க வேண்டும் என்று மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு இப்போது வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்திற்குள் பெறவிட்டால் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் டெபாஸிட் செய்ய வேண்டியது. டெபாஸிட்டை எத்தனை நாள் வைத்திருப்பார்கள் என்று சர்க்கார் ரூல்ஸிலே செய்யவேண்டியது என்று மசோதாவிலிருந்து தெரிகிறது. குறைந்தது அவர்கள் மூன்று வருஷங்கள் வைத்திருப்பார்கள் என்று தெரிகிறது. சட்டத்தில் ஆறு வருஷம்

13th August 1963] [திரு. வை. சங்கரன்]

வரையில் கிடைக்க வழி செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. இது நல்லதொரு ப்ரொவிஷன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்வதிலேகூட மூன்று மாதம் என்பதை ஆறு மாதம் என்று அதிகமாக்கப்பட்டிருக்கிறது. அதுவும் நல்லதொரு வரவேற்கத் தகுந்த அம்சம். ஆகையால் இது நல்லதொரு மசோதா என்று சொல்லிக்கொண்டு, இதை எல்லோரும் வரவேற்று ஒத்துழைக்க வேண்டிய மசோதா என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஜமீன் ஒழிப்பு, ரயத்துவாரி ஆக்க சட்டத் திருத்த மசோதாவின் பேரில் என்னுடைய ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் திருத்த மசோதாவினால், நஷ்ட ஈடு பெற வேண்டியவர்கள் பெறாமலிருந்தால் அவர்களுக்குக் காலம் நீடிக்கப்படுகிறது என்ற நிலை இருந்தாலும் கூட உண்மையிலேயே மாவட்ட நீதி மன்றத்திற்கு மூன்று மாத காலத்திற்குள்ளாக ட்ரிப்யூனலில் மனுப் போடாமல் இருந்தால் கூட போட்டுக்கொள்ளலாம் என்ற நிலை இருந்தாலும் கூட, டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் ஒரு சில சச்சரவுகள், யாருக்கு எவ்வளவு பங்குத் தொகை நஷ்ட ஈடாகக் கொடுப்பது என்ற சச்சரவுகள் வந்தால் மீண்டும் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிலிருந்து அந்த விவகாரம் ட்ரிப்யூனலுக்கு அனுப்பப்படவேண்டுமென்ற முறையில் வாசகம் அமைந்திருக்கிறது. ஒரு சில சச்சரவுகள் அல்லது சந்தேகங்கள் 11-00 a.m.
ஏற்பட்டால், யாருக்குக் கொடுக்கவேண்டும், எவ்வளவு கொடுக்கப்படவேண்டும் என்கிற சச்சரவுகள், சந்தேகங்கள் ஏற்பட்டால் டிஸ்ட்ரிக்ட் கோர்ட் மீண்டும் ட்ரிப்யூனலுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று வாசகங்கள் அமைந்திருக்கின்றன. டிஸ்ட்ரிக்ட் கோர்ட் இதைப்பற்றி விசாரித்து யார் யாருக்கு பணம் கொடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்யவேண்டியதாக இருக்கிறது. அதோடு டிரிபூனல் பணத்தை யாருக்கு கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்து விட்டாலும், பணம் உரியநேரத்தில் கொடுக்கப்படாது இருக்கும்போது அதை கோர்ட்டில் டெப்பாஸிட் செய்துவிடுவதற்கு 57-எ பிரிவு வழிசெய்திருக்கிறது. இது மிகவும் வரவேற்கக்கூடிய தொன்றாகும். கொடுக்கப்படவேண்டியது காம்பன்ஸேஷன் ஒருவருக்கோ அல்லது பல பேர்களுக்கோ கொடுக்க வேண்டிய நிலைமை வரும். அதிலும் பிற்பாடு பல சச்சரவுகள் வரக் கூடும். அப்படியிருக்கும்போது திரும்பவும் ஏன் டிரிபூனலுக்கு போகவேண்டும் என்று தெரியவில்லை. கோர்டிலேயே இதைப்பற்றி முடிவுசெய்து பணத்தை கொடுத்துவிடுவதற்குரிய ஷரத்துக்கள் இருந்தால் மிகவும் நல்லதாக இருக்கும். மேலும் 43-வது பிரிவு முதல் 50-வது பிரிவு வரையில் காம்பன்ஸேஷன் சம்பந்தமாக யாராவது பாதிக்கப்பட்டிருந்தால், அவர்கள் மூன்று மாத காலத்தில் உயர்நீதி மன்றத்தால் தீர்மானிக்கப்படுகிற நீதிபதியிடம் அப்பீல் செய்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருப்பது

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [13th August 1963

மிகவும் வரவேற்கத் தக்கது. அதே போன்று டிரிபூனல் பே-மெண்ட் உத்தரவு வந்து அதை மூன்று மாத காலத்திற்குள் பணத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இருந்தால் அல்லது, மூன்று மாதகாலத்திற்குள் மனு செய்து கொள்ளாமல் இருந்தால், டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு போகலாம் என்று இருக்கிறது. இதில் மூன்று மாதம் என்று சொல்லப்பட்டிருப்பதற்கு பதிலாக ஒரு வருடம் என்றோ, இரண்டு வருடங்கள் என்றோ மாற்றி அமைத்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் கட்டப்படும் டெப்பாஸிட் மூன்று வருடங்களுக்குப் பின்னால்தான் சர்க்காருக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே மனு செய்து கொள்வதற்கும் மூன்று வருடம் என்று சொல்லியிருந்தால் நல்லது என்பதை தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் சபாநாயகர் அவர்களே கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் பணம் கொடுப்பதை எந்த கால அளவுக்குள் செய்யவேண்டும் என்பதைப் பற்றி சொன்னார்கள். அதோடு இதைப்பற்றி விதி முறை அமைக்கப்படும்போது எவ்வளவு காலத்திற்குள் கொடுக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி தீர்மானிக்கலாம் என்றும் தெரிவித்தார்கள். இப்போது இருக்கக்கூடிய அமைப்புப்படி கால நிர்ணயம் எவ்வளவு என்று இன்னும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எத்தனை வருடங்கள் ஆனாலும், பணத்திற்குரியவர்கள் மனு கொடுத்து டிப்பாஸிட்டை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் கொடுக்கிறோம். அந்த முறையில்தான் இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. கரிவேங்கடம் அவர்கள் பேசும்போது இந்த மசோதாவில் இருக்கக்கூடிய அமைப்புக்களை வரவேற்றுவிட்டு ஒரு சில குறைகளையும் தெரிவித்தார்கள். பணம் யாருக்குச் சேர வேண்டும் என்கின்ற உரிமையை டிஸ்டிரிக்ட் கோர்ட் நிர்ணயம் செய்து விடுகிறார்கள். சில நேரங்களில் பணம் பெற்றுக்கொள்வதில் கால தாமதம் ஏற்படுகிறது. இப்போது இருக்கக்கூடிய முறையில் யாருக்கு பணம் சேரவேண்டுமோ அவர்கள் மனு செய்து வாங்கிக்கொள்ளலாம் என்ற அமைப்புத்தான் இருக்கிறது. ஆகவே இதில் எந்தவிதமான புதிய கஷ்டங்களையும் ஏற்படுத்தவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1963, be taken into consideration."

"The motion was put and carried and the Bill was taken into consideration."

Clauses 2 to 7 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

"That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1963, be passed."

13th August 1963]

MR. SPEAKER : The question is—

"That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1963 be passed."

The motion was put and carried and the Bill was passed.

V.—ANNOUNCEMENTS.

(1) THE MADRAS GENERAL SALES-TAX (SECOND AMENDMENT) BILL, 1963.

MR. SPEAKER : I have to announce that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1963.

VI.—GOVERNMENT MOTION re : CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, Under Rule 21 (3) of the Assembly Rules, I move—

"That item 9 in the Agenda for to-day, viz., the introduction and consideration of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1963, be taken up on 14th August 1963."

MR. SPEAKER : The question is—

"That item 9 in the Agenda for to-day, viz., the introduction and consideration of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1963, be taken up on 14th August 1963."

The motion was put and carried.

V.—ANNOUNCEMENTS—*cont.*

(2) THE MADRAS IRRIGATION (LEVY OF BETTERMENT CONTRIBUTION) AMENDMENT BILL, 1963.

MR. SPEAKER : I have to announce that the Governor has given his recommendation to the introduction in and consideration by the Legislative Assembly of the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963.

IV.—GOVERNMENT BILLS—*cont.*

(9) THE MADRAS IRRIGATION (LEVY OF BETTERMENT CONTRIBUTION) AMENDMENT BILL, 1963.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg to introduce the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill), 1963[a], and move—

"That the Bill be referred to a Select Committee consisting of :

1. The Hon. Sri V. Ramaiah.
2. The Hon. Sri M. Bhaktavatsalam.
3. Sri A. R. Subbiah Mudaliar.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 31st July 1963.

[Sri V. Ramaiah] [13th August 1963

4. Srimathi A. S. Ponnammal.
5. Sri V. Sankaran.
6. Sri P. K. Muthuvelappa Gounder.
7. Sri K. S. Subramania Gounder.
8. Sri G. Rajaram.
9. Sri M. Dhandayuthapani.
10. Srimathi N. K. Ranganayaki.
11. Sri P. Ramachandran.
12. Sri A. P. Dharmalingam.
13. Sri S. Madhavan.
14. Sri K. S. Mani.
15. Sri K. R. Nallasivam.
16. Sri A. Raghava Reddy.
17. Sri C. Venkiduswamy Gounder, and
18. Sri S. J. Ramaswamy."

The levy and collection of betterment contribution from landholders of lands benefited by the construction, expansion or alteration by the Government on or after 1st January 1947 of any irrigation or drainage work, the cost of which exceeds Rs. 25,000 are provided for in the Madras Irrigation (Levy of Betterment Contribution) Act, 1955 (Madras Act III of 1955). The Act lays down that the lands benefited should be divided into suitable classes and the annual increase in the gross produce of each class of lands should be estimated with reference to the average of the prices prevailing, in the case of works completed before the commencement of the Act, during the three years immediately preceding such commencement and in the case of works completed after the commencement of the Act during the three years immediately preceding after such completion. Ten times the annual increase in the gross produce thus estimated should be deemed to be the increase in the capital value of each class of lands; and one half of the difference between the increase in the capital value and the cost of making the lands fit for advantageous irrigation under the work should be the contribution payable in respect of such class of lands. In the case of lands which were originally under dry cultivation and which, with a view to derive benefit from the work, were brought under wet cultivation, a sum representing the difference between the cost of wet cultivation and the cost of dry cultivation should be deducted from the increase in gross produce for the purpose of calculating the increase in capital value of those lands.

In 1957 and 1958 special staff was employed in the districts of Coimbatore, Tiruchirappalli, Thanjavur, South Arcot and Salem for the preliminary work connected with the implementation of the Act, at a cost of Rs. 1.45 lakhs. It was found that the progress of work connected with the levy of betterment contribution was slow for the reason that preliminary work involved in determining the betterment contribution in accordance with the procedure laid

13th August 1963] [Sri V. Ramaiah]

down in the Act and the rules made thereunder is considerable and complicated beset with several practical difficulties. Inspite of the special staff, it was not possible to finalise the fixation of the betterment contribution even in respect of a single work in the State. It was therefore decided not to proceed further with the implementation of the Act until it is amended and the procedure for determining the betterment contribution is revised and simplified. The Planning Commission also has suggested that the procedure laid down in the Act may be simplified and that the rates of betterment contribution may be specified in the Act itself by suitably amending the Act.

The Government have accordingly brought forward the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963. According to the new procedure for the levy of betterment contribution proposed in clause 3 of the Bill, the ayacut benefited by the execution of a notified irrigation or drainage work will be classified as "new ayacut" and "improved old ayacut". New ayacut will further be classified into one or more of the three zones, namely, wet zone, intermediary zone and irrigated dry zone, depending on the availability of water for raising crops in a fasli year. Every zone will be divided into blocks according to the soil classification, the dry lands being classified according to the corresponding wet *taram* rates. The rates of betterment contribution leviable per acre of new ayacut are specified in the Schedule. They vary from Rs. 80 to Rs. 200 per acre. As provided in the Principal Act, no betterment contribution is to be levied on lands in any new ayacut under a notified work, the cost of which does not exceed Rs. 25,000.

Improved old ayacut will comprise of lands which are significantly benefited by the execution of a notified work, i.e., lands with more assured supply of water or better drainage facilities. The net expenditure on the notified work will be ascertained by deducting from the gross expenditure on such work twenty times the annual increase in revenue, if any, from all the lands comprised in the improved old ayacut. The net expenditure as so ascertained will be apportioned on all the lands and if the net expenditure per acre of land is over Rs. 150 or more, the betterment contribution will be Rs. 50 per acre; but if such net expenditure is less than Rs. 150, the betterment contribution will be one-third of the net expenditure. No betterment contribution is to be levied on lands in any improved old ayacut under a notified work, the cost of which does not exceed Rs. 50,000 or where the settlement classification of the irrigation source has been raised to a higher classification in consideration of the improvement effected as a result of the execution of such work and the net annual increase of wet assessment consequent on such raising exceeds 4 per cent of the cost of such work.

The Bill also provides for postponing the inclusion of any land in the ayacut of a notified work on the ground that such land requires expensive lowering of the level or on such other ground

[Sri V. Ramaiah] [13th August 1963

as may be prescribed. Levy of betterment contribution in respect of such lands is to be made after the expiry of the period of postponement. In respect of lands included in the ayacut of a notified work, which are not fit for irrigation on the date of such inclusion for such reasons as may be prescribed, the betterment contribution is to be levied from the fasli in which the lands are brought under irrigation.

The Bill further provides for payment of betterment contribution by a landholder in annual instalments at the rate of Rs. 10 per acre or one-twentieth of the total amount of the contribution payable by him, which is higher.

In respect of a landholder, who has agreed to pay any sum as a condition precedent to the execution of any notified work, the Bill provides for the recovery of the excess amount which he is liable to pay in pursuance of the agreement in addition to the amount which he is liable to pay under the Act.

The Bill also provides that all cases of irrigation and drainage works already notified under Rule 7 of the Madras Irrigation (Levy of Betterment Contribution) Rules, 1956 and the works to be notified after the Bill becomes law are to be treated alike in regard to the levy of betterment contribution.

As the Bill is being referred to a Select Committee it does not seem necessary for me to go into further details. I request the House, Sir, to accept the motion.

MR. SPEAKER: The question is—

"That the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963 be referred to a Select Committee consisting of the following members:

1. The Hon. Sri V. Ramaiah.
2. The Hon. Sri M. Bhaktavatsalam.
3. Sri A. R. Subbiah Mudaliar.
4. Srimathi A. S. Ponnammal.
5. Sri V. Sankaran.
6. Sri P. K. Muthuvelappa Gounder.
7. Sri K. S. Subramania Gounder.
8. Sri G. Rajaram.
9. Sri M. Dhandaynthapani.
10. Srimathi N. K. Ranganayaki.
11. Sri P. Ramachandran.
12. Sri A. P. Dharmalingam.
13. Sri S. Madhavan.

13th August 1963] [Mr. Speaker]

14. Sri K. S. Mani.
15. Sri K. R. Nallasivam.
16. Sri A. Raghava Reddy.
17. Sri C. Venkiduswamy Gounder.
18. Sri S. J. Ramaswamy."

The motion was put and carried.

MR. SPEAKER: Under Rule 99 (1) of the Madras Assembly Rules, I nominate the Hon. Sri V. Ramaiah to be the Chairman of the Committee.

V.—ANNOUNCEMENTS—*cont.*

(3) THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1963.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Agricultural Income-Tax (Amendment) Bill, 1963.

IV.—GOVERNMENT BILLS—*cont.*

(10) THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1963.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Agricultural Income-Tax (Amendment) Bill, 1963*, and move—

"that the Bill be taken into consideration."

In the Madras Plantations Agricultural Income-Tax (Amendment) Act, 1958 while extending the Act to crops other than plantations a special provision was made to collect tax for the assessment year 1958–59 applying the composition formula, i.e., without detailed assessment of the income derived. The above provision was extended for the assessment years 1959–60 to 1962–63 to enable the assessees who would not have maintained proper accounts for the accounting years 1958–59 to 1961–62 to apply for composition.

Similarly while extending the Act, to the territories transferred to this State by the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 provision was made in Section 14 of the Madras Agricultural Income-Tax (Extension to Added Territory) Act, 1961 to allow the agriculturists to compound the tax. The said provision was extended for the assessment year 1962–63 also.

It has been considered necessary to extend the benefit of Section 34 of the Madras Plantations Agricultural Income-Tax (Amendment) Act, 1958 and Section 14 of the Madras Agricultural

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 2nd August 1963.

[Sri V. Ramaiah] [13th August 1963

Income-Tax (Extension to Added Territory) Act, 1961 in respect of assessment years 1963–64 to 1965–1966, i.e., for three years by suitably amending the said sections. The Bill provides for this.

I request the House, Sir, to accept the motion.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் திருத்த மசோதாவின் மீது என்னுடைய இரண்டொரு கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

விவசாயிகள் கணக்கு வைத்துக்கொள்வது என்பது மிகவும் சிரமமான காரியம் என்பதைத் தெளிவாகத் தெரிந்திருக்கும் காரணத்தால் தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். விவசாய வருமான வரிச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, சர்க்காருக்கு அதிக வருமானம் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டதும், ஆனால், நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்த பிறகு விவசாய வருமான வரி மிகவும் குறைந்து விட்டது என்பதும் நன்றாகத் தெரிந்ததே. தற்போது நாம் அதிகமாக உயர்த்தியிருக்கும் நிலத் தீர்வையின் அடிப்படையில், தேவையான அளவு வரி உயர்த்தியிருக்கிறோம். அதற்கு மேலே, விவசாய வருமான வரி விதிப்பது விவசாயிகளுக்கு மிகவும் தொந்தரை கொடுக்கும் என்று பல முறை இந்தச் சபையில் நான் வலியுறுத்தியிருக்கிறேன். குறிப்பாக, இந்த வரி வசூலிக்கும் இலாகா, வரி வசூலிக்கும் அளவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது அவ்வளவு வருமானம் உடையதாக இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

குறிப்பாக இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் கட்டக்கூடியவர்கள் நாலுக்கா வாரியாகக் கணக்கு எடுத்தால் மிகமிக அதிகமான அளவுக்குக் குறைந்துவிட்டது என்பது நமக்குத் தெரியும். நிலச்சீர்திருத்தச் சட்டம் அமலுக்கு வந்துவிட்டது. மேலும் நிலத்தின்மீது அதிக வரியை இப்போது விதித்திருக்கிறோம். ஆகவே இந்த அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் சட்டத்திற்கு அவசியமே இருக்காது என்று நான் கருதுகிறேன். இதன் கீழ் கணக்குக்காட்டி வரி நிர்ணயம் செய்து கொள்கிறவர்களுடைய எண்ணிக்கை மிகமிகக் குறைவு. கணக்கைப் பார்க்காமல் நிர்ணயம் செய்து கொள்கிறவர்கள்தான் அதிகம். ஆகவே இந்தச் சட்டத்தையே நீக்கிவிடலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டு, அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தையே நீக்கவேண்டும் என்பதற்கு முக்கியமாகச் சில காரணங்களை திரு. தண்டாயுதபாணி பிள்ளை சொல்லிவந்தார்கள். சிறு விவசாயிகளைக் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டுமென்ற தொந்தரவுக்கு உள்ளாக்க நினைக்க

13th August 1963] [திரு. வெ. ராமைய்யா]

வில்லை. பல விவசாயிகள் இப்போது கணக்கு வைத்துக் கொள்ளவில்லை, சில பேர்களே தான் இன்கம்டாக்ஸ் கட்டு கிறார்கள் என்றும் அவரே சொன்னார். ஆனால் இது அவசியம் தானா என்ற கேள்வியை எழுப்பினார். இப்போது நிலச் சீர்திருத்தம் வந்த காரணத்தினால் பலர் இன்கம்டாக்ஸ் கட்டும்படியாக இல்லையென்றும் சொன்னார். சிலர் கட்டுகிறார்கள் என்றால் அவர்களுக்கு வருமானம் இருக்கிறது. அவர்களுக்கு அதிகமான வருமானம் வரும்போது அதில் ஒரு பங்கை அரசாங்கத்திற்குக் கொடுக்க யாருக்கும் ஆட்சேபனை இருக் காது என்று நான் நினைக்கிறேன். யார் யார் கொடுக்க முடியுமோ, அவர்களிடம்தான் வாங்கப்படுகிறது. இப்போதுள்ள சங்கடமான நிலைமையில் எவ்வளவு பணம் வந்தாலும் அது தேசத்திற்கு நன்மை தான். மேலும் வருமானம் உள்ளவர்களிடத்தில் மட்டுமே வசூல் செய்வது இந்தச் சட்டத்தின் நோக்கம். ஆதலால் இதை அவரே ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Agricultural Income-Tax (Amendment) Bill, 1963 be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I move—

"That the Madras Agricultural Income-Tax (Amendment) Bill, 1963 be passed".

MR. SPEAKER : The question is—

"That the Madras Agricultural Income-Tax (Amendment) Bill, 1963 be passed".

The motion was put and carried and the Bill was passed.

(11) THE PAYMENT OF WAGES (MADRAS AMENDMENT) BILL, 1963 (L.A. BILL NO. 10 OF 1963).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

"That the Payment of Wages (Madras Amendment) Bill, 1963[a], (L.A. Bill No. 10 of 1963) be taken into consideration."

Instances have been brought to the notice of the Government that electricity supplied by the Madras State Electricity Board has not been paid for by the employees to whom the Payment of Wages

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 9th August 1963.

[Sri M. Bhaktavatsalam] [13th August 1963

Act applies and for whom house accommodation is provided by employers. Government are advised that clause (d) of sub-section (2) of section 7 of the Payment of Wages Act, 1936, dealing with deduction which may be made from wages and which authorises deductions for house accommodation provided by the employer cannot be pressed into service for the deduction of electricity charges payable by an employed person. It has therefore been decided that section 7 of the Act should be amended to enable deductions for electricity supplied being made from the wages under that section. It is also proposed to introduce a new section requiring the employers to make such deductions on a requisition in writing by the State Electricity Board or by an Officer authorized by it in this behalf and to remit the amount in such manner as may be prescribed.

The concurrence of the Government of India to the Bill has been obtained.

I move that the Bill be taken into consideration.

MR. SPEAKER: The question is—

"That the Payment of Wages (Madras Amendment) Bill, 1963 be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Payment of Wages (Madras Amendment) Bill, 1963 be passed".

MR. SPEAKER: The question is—

"That the Payment of Wages (Madras Amendment) Bill, 1963 be passed".

The motion was put and carried and the Bill was passed.

V.—ANNOUNCEMENTS—cont.

(4) THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL AMENDMENT BILL, 1963 (L.A. BILL NO. 12 OF 1963).

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation for the consideration by the Legislative Assembly of the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963.

13th August 1963]

IV.—GOVERNMENT BILLS—cont.

(12) THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) AMENDMENT BILL, 1963 (L. A. BILL No. 12 OF 1963).

THE HON. SRIMATHI JOTHI VENKATACHELLUM: Mr. Speaker, Sir I move—

"that the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 (L.A. Bill No. 12 of 1963a, be taken into consideration."

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 (L.A. Bill No. 12 of 1963) be taken into consideration".

* **திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று வீட்டு வாடகை கட்டுப்பாடு சட்டமானது மேலும் இரண்டாண்டுகள் நீடிப்பதற்காக இந்தத் திருத்த மசோதா வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தை நீடிக்க வேண்டும் என்பதைப்பற்றி இரண்டுவித அபிப்பிராயம் கொள்ள முடியாது. இந்தச் சட்டத்திற்கு இன்னும் தேவை இருந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்திலே இன்னும் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றை மட்டும் சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

குறிப்பாக ஒரு சட்டம் வந்தவுடன் அதற்காக ரூல்ஸ்கள் உடனுக்குடன் வருவதுஇல்லை. ஆனால் இந்தச் சட்டம் சம்பந்தப்பட்ட வரையில் உடனே விதிகள் வந்துவிட்டன. அந்த விதிகளைப் பற்றியெல்லாம் 26-8-61-லேயே சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டியில் வைத்துப் பரிசீலனை செய்தபோது ரூல்கள் நடைமுறைப்படுத்தும்போது உள்ள சில சிக்கல்களை எல்லாம் எவ்வாறு நீக்கவேண்டும் என்பதற்குச் சில ஆலோசனைகளைக் கூறினார்கள். சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி இது பற்றி ஒரு ரிப்போர்ட் சமர்த்திருக்கிறது. ஆனால் இரண்டாண்டுகளானாலும் கூட அவை என்ன ஆயிற்று, எந்த எந்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன, எவை ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்பது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

குறிப்பாக கட்டிடத்திற்கு மதிப்பிடும்போது க்ளாஸ் 1, க்ளாஸ் 2, க்ளாஸ் 3 என்று எந்த எந்த மாதிரியான கட்டிடங்கள் எந்த எந்தப் பிரிவில் வரும் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஒருவிதமான கட்டிடத்தில் ஒரு குறிப்பிட்ட ஐட்டம் வேறு ஒருவிதமாகச் சேர்ந்திருந்தால் அந்தக் கட்டிடத்தை முதலில் கண்ட பிரிவில் கீழும் கொண்டுவர முடியாத சிக்கல் இருக்கிறது. இது ஓரளவு ப்ளெக்ஸிபிளாக இருக்கவேண்டும். வால்யூ டிடர்மின் பண்ணுகிறபோது தான், இப்போதுள்ள ரூல்களின்கீழ் ஏற்பட்டுள்ள சிக்கல், கஷ்டம் தெரியும். ஆகவே சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி '

"The Committee is of the opinion that the specifications enumerated under the schedule leave no choice or discretion to the

officers concerned in the matter of fixing the classifications of the building. Therefore, the Committee recommends that the schedule be recast in such a way that it is simple and serves as a guide to the authorities concerned to classify the buildings in the way suggested by the Superintending Engineer."

என்று சொல்லியிருக்கிறது. குறிப்பாக இதுபற்றி பி. டபிள்யூ.டி. என்ஜினியர் குறிப்பிட்டது என்ன வென்றால்—

"That the specifications were enumerated only for the purpose of guiding the officers to classify the buildings under one category or the other, even in the absence of a few specifications, if they were not very material."

ஆகவே தான் நாங்கள் அந்த மாதிரியான ஒரு யோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அது நடைமுறைக்கு இன்னமும் வராமையினால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

அதோடு 'பிளின்த் ஏரியா' என்று கணக்கிடும்போது மாட்டுக் கொட்டகை போன்றவைகளையும் சேர்த்துக் கணக்கெடுத்து விடுகிறார்கள். ஆகவே, பிளின்த் ஏரியா என்று கணக்கிடும்போது கட்டடப் பகுதியை மட்டும் கணக்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்க வேண்டும்.

'பில்டிங்' என்று சொல்லும்போது 'வேகன்ட் சைட்'-யும் சேர்த்து அதற்கும் 'வால்யூ' போடுகிறார்கள். அதற்கும் சேர்த்து 'வால்யூ' போடுவதால் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அதையும் சரியானபடி தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'டிப்ரிஸியேஷன் வால்யூ' போடும்போது 1½-லிருந்து 4 பர்சன்ட் போட்டிருக்கிறார்கள். அந்த வகையில் பார்க்கும்போது, 50 அல்லது 60 ஆண்டுகள் போனால் அந்தக் கட்டடத்திற்கு 'நில் வால்யூ' வந்து விடுகிறது. மதுரையில் உள்ள திருமலைநாயக்கர் மகாலுக்கு இப்போது 'மைனஸ் வால்யூதான்' இருக்கும். அதெல்லாம் பழைய கட்டடமாக இருந்தாலும் அதனுடைய மதிப்பு குறையவில்லை. ஆனால் 'வால்யூ' போடும்போது இப்படிப் போடுகின்ற காரணத்தால் 'மைனஸ் வால்யூ'-க்கு வந்து விடுகிறது. இந்தக் குறையை மாற்ற சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டியில் கூட சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. 50 சத விகிதம் என்ற அளவுக்கு மேல் போகாது நிறுத்திக் கொள்ளலாம். அந்த 'சஜ்ஜெஷனை' சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டியில் கொடுத்திருக்கிறோம். அவ்வாறு சொல்லப்பட்ட நல்ல யோசனைகள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கின்றன.

'எக்ஸ்பார்ட்டி' சம்பந்தமாக திரும்ப 'ரெஸ்டோர்' பண்ணி பெட்டிஷன் போடுவதற்கு 15 நாள் நோட்டீஸ் 'ஃபிரம் தி டேட் ஆப் தி ஆர்டர்' என்று இருக்கிறது. அந்த நோட்டீஸைப் போஸ்டில் அனுப்பினால் போதும் என்று இருக்கிறது. அந்த நோட்டீஸ் பார்டி கையில் போய்ச் சேரவே 15 நாட்கள் ஆகிவிடுகிறது. 'ஃபிரம் தி டேட் ஆப் தி ஆர்டர்' என்பதை 'ஃபிரம் தி டேட் ஆப் ரெசிப்ட்

ஆப் தி ஆர்டர்' என்று மாற்றுவதோடு அதை ரிஜிஸ்டர் செய்து பார்டிக்கு அனுப்புவதற்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டும். இந்த யோசனையையும் சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி-யில் எடுத்துக் கூறியிருக்கிறோம். இந்த மாதிரி முக்கியமான திருத்தங்கள் எல்லாம் இந்த மசோதாவில் இடம் பெறாதது வருந்தத்தக்க நிலைதான். இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யாவிட்டால் மிகவும் கஷ்டமும் இடையூறுகளும் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, 'டிரஸ்ட்' சம்பந்தமாக விதி விலக்கு கொடுக்கப்படுகிறது. பிரைவேட் டிரஸ்டுகளுக்கும் தங்கள் சொந்தக் காரியங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு விதி விலக்குக் கொடுக்கவேண்டும். 'டிமாலிஷன் ஃபார் ரிகன்ஸ்ட்ரக்ஷன்' வேண்டுமென்று கேட்கும்போது 'போனபைட் பார்ட்டி'க்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நான் சொன்ன திருத்தங்களையெல்லாம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை ரென்ட் கன்ட்ரோல சட்டத்திற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிப்பு தேவை என்ற காரணத்தினால் இந்தச் சட்டத்தைத் திருத்த மசோதாவாக கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள் இந்தச் சட்டத்திலே இருக்கிற சங்கடங்களை நீக்க சில திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று கோரினார்கள். நான் நகரத்தின் பிரதிநிதி என்ற காரணத்தினால் ஒருசில கஷ்டங்களை எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன், 'ரெசிடென்சியல் ஏரியா', 'நான்-ரெசிடென்ஷியல் ஏரியா' என்று பிரித்து 250 ரூபாய்க்கு மேல் ஒரு வீட்டுக்கு வாடகை வந்தாலும், 400 ரூபாய்க்கு மேல் ஒரு வியாபார ஸ்தலத்துக்கு வாடகை வந்தாலும் இந்தச் சட்டம் அமலாகாது என்று கூறியிருக்கிறோம். இந்த விதியை நாம் நல்ல எண்ணத்தோடுதான் கொண்டு வந்தோம். ஆனால் அமல் நடத்துகிற போதுதான் பல கஷ்டங்களைக் காண்கிறோம். இது பற்றி நான் இடையிலே ஒரு திருத்த மசோதா கூடக் கொண்டு வந்தேன். அடிக்கடி திருத்தம் கொண்டு வரக் கூடாது என்ற காரணத்தினால் அப்போது அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கருதுகிறேன். தனிப்பட்ட வீடுகளைக் காட்டிலும் வியாபார ஸ்தலங்களாக இருப்பவற்றுக்கு, உதாரணமாக ஹோட்டல் வைத்திருக்கும் ஒரு இடத்திற்கு 410 ரூபாய் வாடகை என்றாலும் இந்தச் சட்டம் அமலாகாத காரணத்தால், ஹோட்டலை மூட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதிலே ஹோட்டல் முதலாளிகளுக்கு ஏற்படக் கூடிய கஷ்டத்தைக் காட்டிலும் ஹோட்டல் தொழிலாளர்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்டந்தான் பெரிதாக இருக்கிறது. ஆகவே, இவற்றுக்கெல்லாம் முன் மாதிரி உச்ச வரம்பு இல்லாமல் செய்துவிட்டால் நலமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன். அதன் காரணமாக [illegible]

ஸாளர் வர்க்கத்திற்குப் பெரிய நன்மையைச் செய்தவர்களாவோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் சொன்ன மாதிரி எக்ஸ்பயரி தேதியைப் பொறுத்த வரை 'டேட் ஆப் தி ஆர்டர்' என்பதற்குப் பதிலாக 'டேட் ஆப் தி ரெசிப்ட் ஆப் தி ஆர்டர்' என்று மாற்றுவது நல்லது. 'டேட் ஆப் ஆர்டர்' 2-8-1963 என்றும், டேட் ஆப் டெஸ்பாட்ச் 17-8-1963 என்றும், டேட் ஆப் ரெசிப்ட் 23-8-1963 என்றும் இருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் கையில் போய்ச் சேருவதற்கே 15 நாட்களுக்கு மேல் பிடிக்கிறது. இடையில் ஏற்படுகின்ற இந்தக் காலதாமதத்தால் பாதிப்பு ஏற்படுவதற்கு காரணம் உண்டாகிறது. ஆகவே, 'டேட் ஆப் தி ரெசிப்ட் ஆப் தி ஆர்டர்' என்று மாற்றுவதோடு, அதை 'ரிஜிஸ்டர்டு போஸ்ட் அக்னாலெட்ஜ்மெண்ட் டியூ'வில் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அனுப்பினால், அனுப்பியதற்கான அத்தாட்சி இருப்பதோடு நாளை அப்பீலுக்குப் போக முடியாத நிலைமையும் ஏற்படும். இந்தத் திருத்தத்தையும் கனம் அமைச்சர் அவர்கள் யோசித்துக் கொண்டு வருவது மிக மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நகரத்திலே 'அர்பன் லாண்ட் டாக்ஸ்' போட்டு விட்டால் அதை முதலாளி கட்டப் போவதில்லை. அது குடியிருப்பவன் தலையில்தான் வந்து விழும். மேலும் 15, 20 அதிகமாக்கி அவன் 250 ரூபாய் கொடுத்து வந்த வீட்டுக்கு 270 ரூபாய் வாடகை கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே, அந்த வாடகைக்கும் இந்தச் சட்டத்துக்கும் தொடர்பில்லை என்று கூறிவிடுவதும் மிகச் சுலபமாகிவிடும். அப்படிப்பட்ட வரிகள் இந்தச் சட்டத்தைப் பாதிக்காது என்ற திருத்தத்தை நகரத்தை பொறுத்தவரை கொண்டு வர வேண்டும். ஆகவே, இது போன்ற கஷ்டங்களை நீக்கும் வகையில் திருத்தங்களை கொண்டு வந்து நிறைவேற்றினால் பாதகம் ஏற்படக் கூடிய நிலைமை மாறும். திருத்தங்களைக் கொண்டு வருவதால் சட்டம் பலவீனம் அடைந்துவிடும் என்று நினைப்பது தவறு. நிலைமையைத் தடுப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம். ஆகவே, இந்தத் திருத்தங்களையெல்லாம் கொண்டு வந்து நிறைவேற்றுவதால் மக்களுடைய வரவேற்பு கிடைத்து சட்டத்திற்குப் புதிய பலத்தைத் தரும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, லீஸ் அண்டு ரெண்ட் கண்ட்ரோல் திருத்த மசோதாவை இரண்டு ஆண்டு மீண்டும் நீடிக்கவேண்டுமென்பதை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய அம்மையார் அவர்கள் குடியிருப்பு பகுதியில் 250 ரூபாய்க்கு மேற்பட்டால் இந்தச் சட்டம் கட்டுப்படாது, அதேமாதிரி வியாபாரத் துறையில் உள்ள கட்டி

டங்கள் 400 ரூபாய்க்கு மேற்பட்டால் இந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்ற கருத்தை மாற்றியமைக்கவேண்டுமென்று கருத்தைத் தெரிவித்தார்கள். அதை நான் எதிர்க்கிறேன். 250 ரூபாய் கொடுப்பவர்களோ அல்லது 400 ரூபாய் கொடுப்பவர்களோ கீழ்தரத்தில் இருப்பவர்கள் அல்ல. அல்லது நடுத்தரத்தில் இருப்பவர்கள் அல்ல. ஒருசில முதலாளிகள் அல்லது ஒருசில வியாபாரிகள் நடுத்தரவகுப்பினரின் வீடுகளை 100 அல்லது 200 அல்லது 300 ரூபாய்க்கு வாடகைக்கு எடுத்துவிட்டு வருடக்கணக்கில் அதை அனுபவித்து வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு எந்தவித நலனும் இல்லாதபடி செய்து விடுகிறார்கள். ஆகவே இந்தச் சட்டம் நீடித்திருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது மட்டுமல்ல. 400 ரூபாய் என்றிருப்பது சென்னை நகருக்கு பொருத்தமானதுதான். 250 ரூபாய் என்றிருப்பது சென்னை நகரம் போன்ற பெரிய நகரத்திற்கு பொருத்தமானதே. ஆனால் மதுரை போன்ற நகரங்களுக்கு இன்னும் குறைவான தொகை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த விதி மிக இன்றியமையாதது ஒன்று என்பதில் இரண்டுவித அபிப்பிராயம் இருக்க முடியாது. முதலில், மனிதனுக்கு மிக இன்றியமையாத வீட்டு நிலை பற்றிய வசதிகள் அற்றுப் போகாமல் காப்பதற்குரிய திட்டத்தையும் அதற்கு வேண்டிய பணியைச் செய்கிற இச்சட்டத்தின் இன்றியமையாமையும் வரவேற்று இதிலுள்ள சில குறைபாடுகளை இப்போது முடியாது என்று தெரிந்திருந்தாலும் விரைவில் அது திருத்தப் பெறவேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பேசுகிறபோது ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், தேய்மானம் போட்டுக் கொண்டே போனால் 50 வருடத்தில் 'நில்' என்ற நிலைமை, ஒன்றும் இன்மை என்ற நிலைக்கு வந்து விடும் என்று. அவர் கணக்கு தெரியாமல் அப்படிச் சொல்கிறார்கள் என்று சொல்ல இல்லை. அதன் மதிப்பு அதிகமாகக் குறைந்து விடும் என்பதைத்தான் இப்படிச் சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். ஒரு கோடி வருடங்களானாலும் தேய்மானம் போட்டுக் கொண்டே வந்தால் கணக்கில் 'நில்' என்று வரவே மாட்டாது. இது கணிதமுறை தெரிந்தவர்களுக்குத் தெரியும். 1, 2, 5, சதவிகிதம் என்று டிப்ரிஸியேஷன் போட்டுக் கொண்டே வந்தாலும் கடைசியில் ஒரு தொகை நிச்சயமாக மிஞ்சத்தான் செய்யும். (குறுக்கீடு).

திருமதி டி. என். அனந்தநாயகி: ஒரு ரூபாய் தொகையை மாட்டாது.

திரு. சா. கணேசன்: ஒரு ரூபாய் என்றாலும் அதன் 'ப்ராக்ஷனை' போட்டாலும் 'நில்' என்று வந்து விடாது. [illegible] பைசா என்று இருக்கிறது ஒரு ரூபாய்க்கு. (கன

ஒரு ரூபாய் என்கிறார்.) ஒரு ரூபாய் என்பது 100 பைசா கொண்டது. ஒன்று என்பது தொகை அல்ல. ஆயிரம் கிராம் கொண்டது ஒரு கிலோ கிராம் என்கிறோம், அது போல்தான் ஒரு ரூபாயும் 100 பைசா கொண்டது அது. ஆகவே அதுவும் ஒரு தொகைதான். அப்படி ஒரு ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் அதன் பிராக்ஷன் ஆனாலும் 'நில்' ஆகி விடமாட்டாது.

வீட்டுச் சொந்தக்காரர்கள் எல்லாரும் முதலாளிகள் என்று ஒருவர் நினைத்துக் கொண்டிருக்கிறார். இன்னொருவர், அவர்கள் எல்லோரும் ஏழைகள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். இரண்டும் சரியல்ல. வீட்டுக்குரியவர்களில் ஏழைகளும் இருக்கிறார்கள், குடியிருப்பவர்களில் மிகப் பெரிய பணக்காரர்களும் இருக்கிறார்கள். இதை நாம் மறந்துவிடப்படாது. பெரிய பெரிய வியாபாரிகள், கோடிக்கணக்கான பற்று வரவு செய்யக் கூடியவர்களும் குடியிருப்பவர்களாக இருக்கிறார்கள், அதேபோன்று வீட்டிலிருந்து வருகிற வாடகையை வைத்தே சாப்பிட வேண்டுமென்ற நிலையிலிருக்கிற கைம்பெண்கள் போன்றவர்கள் வீட்டுச் சொந்தக்காரர்களாகவும் இருக்கிறார்கள். இதை நாம் மறந்து விடப்படாது. இதை மனத்தில் கொண்டு எல்லோருக்கும் கூடிய அளவு பொருத்தமாயிருக்கும்படி விதி அமைவதாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் இச்சட்டத்தினால் நாம் பலன் அடைய முடியும். ஒரு ரூபாய்க்கு சாமான் வாங்கி அதை பத்து ரூபாய்க்கு விற்று ஒன்பது ரூபாய் லாபம் அடையும் ஒருவர் பத்து ஆண்டுகளுக்கு முன் 100 ரூபாய் வாடகை கொடுத்து வந்தவர் இப்போது 200 ரூபாய் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுவது எவ்வளவு நியாயமாகயிருக்கும்? வீட்டில் வாடகைக்கு இருப்பவர் ஒரு துணி வியாபாரி என்று வைத்துக் கொள்ளுவோம். வீட்டு வாடகை 100 ரூபாய் என்று வைத்துக் கொள்ளலாம். வீட்டுக்கு உரியவர், எனக்கு வாடகை பணமாக வேண்டாம். அந்த வாடகை ரூபாய்க்கு பீஸ் துணி கொடுங்கள் என்று சொல்லி 150 கஜம் துணி வாங்கிக் கொண்டிருந்தார் என்று வைத்துக்கொள்வோம், அன்று துணியாக, பண்டமாற்றுப்போல கொடுத்தார். அதை மனத்தில் வைத்துக்கொண்டு இன்றும் அதேபோல் 150 கஜம் துணி கொடுங்கள் என்றால் அதற்கு அவர் ஒப்புக்கொள்வாரா? மாட்டார். சட்டம் இருக்கிறது, சட்டத்தின் நிழல் இருக்கிறது, எனக்குச் சட்டத்தின் பாதுகாப்பு இருக்கிறது, கோர்ட் இருக்கிறது, வாதாட வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள் என்ற துணிச்சலில் அதற்கு ஒப்புக்கொள்ளமாட்டேன் என்றுதான் சொல்வார். இதை நாம் மனத்தில் கொள்ளவேண்டும். மனத்தில் கொண்டு யாருக்கும் பாதகம் இல்லாத நிலையில் இது அமையும்படி திருத்த வேண்டும். இப்போது இது நாம் வேண்டாமென்று சொன்னால் எத்தனை இடையூறுகள் இருக்கின்றன என்பதெல்லாம் எனக்கும் தெரியும். இப்போது ஒப்புக் கொண்டுவிடுவோம். மிக விரைவில் நல்ல, செம்மை

யான—எல்லோருக்கும் முற்றிலும் பொருந்துகிற சட்டத்தை உலகில் எங்கும் இயற்ற முடியாது என்றாலும்—யாருக்கும் பெரும் பாதகம் இல்லாதபடி, பெரும்பான்மையினர் ஏற்றுக் கொள்ளும்படியான விதியை அமைக்கவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்கிறேன். எந்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டாலும் அது ஒருவர்மீது பிரயோகிக்கப்படும், மற்றவர்கள்மீது பிரயோகிக்கப்படமாட்டாது என்ற நிலை இருக்குமானால் அது முறையானதாக, நியாயமானதாக கணிக்கப்பட முடியாது. அப்படி கணிக்கப்பட முடியாத நிலையில் இந்த சட்டத்தில் சில இடையூறுகள் இருக்கின்றன என்பதை நான் இச்சபையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். தனி மனிதருக்குரிய வீட்டிலிருந்து குடியிருப்பவர்களைப் போகச் சொல்ல முடியாது. குடியிருப்பவர் எவ்வளவு பணக்காரராகயிருந்தாலும், வீட்டுக்குரியவர் எவ்வளவு ஏழையாக இருந்தாலும் அதிகம் கேட்க முடியாது. 10, 20 சத விகிதம் கேட்டு வாங்கிக் கொள்ளலாமே தவிர வீட்டை விட்டு போகச் சொல்லமுடியாது. அதே சட்டம் எல்லாத் துறையிலும் அமல் ஆக வேண்டும் அல்லவா? ஆனால் அப்படி ஆகவில்லை. முனிசிபாலிட்டிகளுக்கு இது அமல் ஆகவில்லை. அவைகள், சந்தைகளில், மார்க்கட்டில் காய்கறி போன்ற பண்டங்களை வைத்து விற்க வாய்ப்புள்ள இடத்தை காண்ட்ராக்ட்டுக்கு இரண்டு வருடத்திற்கு ஒருக்கால், மூன்று வருடத்திற்கு ஒருக்கால் ஏலத்திற்கு விடுகிறார்கள். மவுண்ட் ரோட்டில் வரிசையாக கடைகள் இருக்கின்றன. அதில் பத்து கடைகள் எந்தக் காரணத்தினாலோ முனிசிபாலிட்டியின் உடைமையாக இருக்கின்றன. சைனா பஜாரில் 1-ம் நம்பர் கடையில் உள்ள ஒருவரை வெளியே போகச்சொல்ல முடியாது. பிக்ஸ் செய்யப்பட்ட வாடகையைத்தான் அவர்கள் கொடுப்பார்கள். ஆனால் இரண்டாம் நம்பரில் இருப்பவர் மூன்றாவது ஆண்டில் வெளியேற வேண்டாம். அவருக்கும் எனக்கும் விரோதம் இருந்தால் நான் ஏலத்தில் அதை 200 ரூபாய்க்கு கேட்டேன். கண்ணால் கண்டதை, காண்பதைக் கூறுகிறேன். அப்படிக் கேட்டு விட்டு ஒரு மாத வாடகை கொடுத்து விட்டு மறுமாதம் போய்விடுகிறேன். அப்போது முன்னால் இருந்தவர் கடைகளில் உள்ள பண்டங்கள் எல்லாவற்றையும் அப்புறப்படுத்தி இன்னொரு இடத்தில் கொண்டுபோய் போட்டு கடையை நடத்த வேண்டும். லெட்டர் ஹெட் போன்றவற்றை மாற்ற வேண்டும். நம்மைப்போல் பையை மட்டும் எடுத்து செல்வது போல் அல்ல அது. அப்படி மாறிவிட்டு மறுபடியும் ஒரு மாதம் கழிந்து திரும்பவும் அவர் இங்கு வர மாட்டார். வர முடியாது. ஆகவே அப்படிப்பட்டவர்களை கெடுப்பது சுலபம். ஒரு காம்பவுண்டிற்குள் இருக்குமானால் அப்படி ஏலத்திற்கு விடலாம். கடைவீதிகளில் இப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது. ஆகவே முனிசிபாலிட்டி சட்டத்தின்கீழ் அங்ஙனம் கடை வீதியில் வாடகைக்குள்ள வியாபாரிகளுக்கு

[திரு. சா. கணேசன்] [13th August 1963

இடையூறு, நஷ்டம் இல்லாத வகையில் எல்லோருக்கும் நியாயமான அடிப்படையில் பாதுகாப்பு அளிப்பதற்குள்ள வழிவகைகள் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் இச்சட்டம், யாருக்கும், யார் வேண்டும், யார் வேண்டாம் என்று இல்லாதபடி நியாயமான அறத்தின் அடிப்படையில் எழுந்த சட்டமாக அமைகிறது என்று சொல்லலாம். **இப்பொழுது இருக்கிற சட்டம் முழு**வதும் அறத்தின் அடிப்படையில் அமையவில்லை என்ற குற்றச்சாட்டு இல்லை. முடிந்த வரையிலே, செய்யக்கூடிய அளவிலே, சத்தியமான அளவிலே, இது இன்னும் அறத்தின் அடிப்படையிலே அமையத்தக்க நிலையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கருத்துக்களையெல்லாம் இப்பொழுது சொல்லியிருக்கிறேன். இவற்றையெல்லாம் அமைச்சர் அவை ஏற்று, அதைக் கணித்துப் பார்த்து, நான் சொல்வதிலே நியாயம் இருக்குமானால், அவற்றை ஏற்று, முறையான சட்டமாக, அழுத்தமான திருத்தத்தைச் செய்து, நல்ல பயனுள்ள சட்டமாகச் செய்து, எல்லோரும் விரும்பிப் பாராட்டும் வண்ணம் இதை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டும் அமைகிறேன். வணக்கம்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் சபா நாயகர் அவர்களே, இந்த வாடகை கட்டுப்பாடு சட்டம் செப்டம்பர் 30-ஆம் தேதி முடிவடைகிறது என்ற காரணத்தினால், அதை அக்டோபர் முதல் தேதியிலிருந்து மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு வேண்டி இந்தச் சபை முன்பு இந்த மசோதா வைக்கப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும், கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள் ஸபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டியின் ரெகமென்டேஷன்களைப் பற்றியெல்லாம் கூறினார்கள். அவைகளையெல்லாம் பப்ளிக் வொர்க்ஸ் டிப்பார்ட்மெண்டும், லா டிப்பார்ட்மெண்டும் பரிசீலனை செய்துகொண்டு வருகிறார்கள். அவைகளை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும் என்பதெல்லாம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் சில திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று கூறினார்கள். குறிப்பாக 'டேட் ஆப் ஆர்டர்' என்று இருப்பதை 'டேட் ஆப் ரெஸிட் ஆப் ஆர்டர்' என்று மாற்ற வேண்டும், ஆர்டர் வந்த தேதியிலிருந்து 'எபெக்ட்' எடுக்கவேண்டுமென்று கூறினார்கள். ஏற்கனவே ஒரு திருத்தத்தையும் கொண்டுவந்தார்கள். 'ரெஸிடென்ஷியல், நான்-ரெஸிடென்ஷியல்' பில்டிங்குக்கு உள்ள வாடகைப் பற்றி ஒரு திருத்தம் கொண்டுவந்தார்கள். ஏற்கெனவே ஜாயிண்டு செலக்ட் கமிட்டியில் பல சட்டசபை அங்கத்தினர்கள் இருந்து, அவர்களெல்லாம் ஆலோசனை கூறி, கொண்டுவரப்பட்ட ஒரு வாடகைச் சட்டம் தான் இது. அங்கத்தினர் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள இயலாது என்று மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள்.

13th August 1963] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

கனம் அங்கத்தினர் திரு. சா. கணேசன் அவர்களும் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொன்னார்கள். முனிசிபாலிடிகளில் இருக்கும்படியான பல இடங்கள் வாடகைக்கு கொடுக்கப்படுகின்றன என்றும், அதிலும் குறிப்பாக கடைவீதியிலே இருக்கிற கட்டிடங்கள் பற்றி கூறினார்கள். அவைகளெல்லாம் லீஸுக்கு கொடுக்கிற அளவுக்கு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஏற்கனவே, 1960-ம் ஆண்டில் நாம் இந்தச் சட்டத்தைத் திருத்தினோம். உடனடியாக இப்பொழுது திருத்தவேண்டும் என்பது இயலாத காரியம். இருந்தபோதிலும் கனம் அங்கத்தினர்களெல்லாம் கூறியிருக்கிற பல திருத்தங்கள் பற்றியும், பல ஆலோசனைகள் பற்றியும் அரசாங்கம் பரிசிலனை செய்யும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

ஏற்கனவே, இந்தச் சட்டம் மூன்று ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும் என்று இருந்தது. எனக்கு முன்பாக அகாமடேஷன் கண்ட்ரோல் பொறுப்பை ஏற்றிருந்த அமைச்சர் அவர்கள் அதை ஒரு ஆண்டுக்குப் பிறகு பரிசீலனை செய்து அந்த சட்டத்தை நிறுத்திவிடவேண்டும் என்று யோசனை செய்தார்கள். இருந்தபோதிலும், ஜில்லா கலெக்டர்கள், அகாமடேஷன் கண்ட்ரோலர், மற்றும் இதைச் சார்ந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சேர்ந்து நிலைமையை பரிசீலனை செய்து பார்த்த பொழுது, அப்படி இந்தச் சட்டத்தை நிறுத்துவது முடியாத காரியம் என்று நினைத்ததினால்தான், இந்த சட்டத்தை நீடிப்பதற்கு இப்பொழுது முன்வந்து, மேலும் அதை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த மசோதாவை இந்தச் சபை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

'That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 (L.A. Bill No. 12 of 1963) be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1 and the preamble were put and carried.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I move—

'That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 (L.A. Bill No. 12 of 1963) be passed.'

MR. SPEAKER: The question is—

'That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 (L.A. Bill No. 12 of 1963) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

11-55 a.m. MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

VII—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

† 167. *Notification issued with G.O. Ms. No. 3282, Industries, Labour and Co-operation (Labour), dated 20th June 1963, exempting for a further period of one year on and from 20th June 1962 every beedi industry in the Tirunelveli district carried on by a woman in her residence from the provisions of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958 and rules, 1959.)* [*Laid on the Table of the House under section 11 (3) of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958 (Madras Act XXXII of 1958).*

B. Reports, Notifications and other papers.

* 47. *The Payment of Wages (Madras Amendment) Bill, 1963.*

---

* Circulated to Members on 10th August 1963.
† Placed on the table of the House on 12th August 1963.

7369
7396
4.8.64 -REV.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 14th August 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the Clock, Mr. Speaker (The Hon. Sri S CHELLAPANDIAN) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மாவட்ட வளர்ச்சி மன்றம் (தீர்மானங்கள்)

** 136 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன்:** கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் நிறைவேற்றி அனுப்பும் தீர்மானங்கள் அரசாங்கத்துறைகளால் ஏற்றுக்கொள்ளப் படுகின்றனவா ?

(இ) அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படவில்லை என எந்த மாவட்ட வளர்ச்சி மன்றமாவது அரசாங்கத்துக்குத் தெரிவித் துள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *(அ) ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களின் தீர்மானங்களை அரசாங்கம் பரிசீலனை செய்து, சாத்தியமான இடங்களில் அவற்றை ஏற்றுக்கொள்கிறது.*

(இ) இல்லை.

(*a*) The resolutions of District Development Councils are examined by Government and are accepted, wherever possible.

(*b*) No.

புலவர் கா. கோவிந்தன்: *வளர்ச்சி மன்றங்களிலே இடம் பெறு கிற பாராளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்களும், பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களும், கல்வி, பாசனம், விவசாயம், போன்ற துறைகளிலே ஆங்காங்கு உள்ள சிக்கல்களை அறிந்தவர்கள் ஆத லின், அவர்கள் கூறுகிற கருத்துக்களுக்கு அரசாங்கம் முக்கியத்து வம் கொடுக்குமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *இந்த அபிவிருத்திக் குழுக் களிலே தெரிவிக்கப்படுகிற கருத்துக்கள், பாராளுமன்ற உறுப் பினர்களாய் இருந்தாலும்சரி, சட்ட மன்ற உறுப்பினர்களாய் இருந்தாலும்சரி, மற்ற உறுப்பினர்களாய் இருந்தாலும்சரி, கவனிக்கப்பட்டு, முடிவு எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அங்கே சொல்லுகின்ற யோசனைகள், குறைகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளுவது சாத்தியமல்ல. ஒரு ஜில்லாவுக்குத் தேவை கள் எவ்வளவோ இருக்கும். அந்த ஜில்லாவிலே இரண்டு [illegible] ரிகள் நிறுவ வேண்டும் என்று தீர்மானம் போடலாம். [illegible]*

[14th August 1963

எவ்வளவு தூரம் அவற்றை அடைக்கலாமென்பது பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம். ஒரு ஆற்றின் குறுக்கே அணை கட்டி நீர்ப் பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் போடலாம். ஆனால் ஆற்றிலே எவ்வளவு தண்ணீர் போகிறது, அணை கட்ட முடியுமா, அந்த ஆண்டிலேயே செய்வது சாத்தியப் படுமா என்பதை எல்லாம் பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்க வேண்டும். அந்த வகையிலே பார்க்கும்பொழுது, எல்லா சிபாரிசு களையும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்காது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : வளர்ச்சி மன்றங்களிலே விவாதிக் கப்படும் விஷயங்களை நேரடியாக அறிந்துகொள்ளும் பொருட்டு, ஏதாவது ஒரு அமைச்சரை அந்தக் கூட்டங்களுக்கு வந்து கலந்து கொள்ளும்படி அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு அரசாங்கம் உத்தர விட வேண்டியதில்லை. அரசாங்கத்தின் சார்பாக கலெக்டர் அவர் களே தலைவராக இருக்கிறார்கள். விஷயங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். சில சமயங்களில், சந்தர்ப் பம் நேரிடும்பொழுது, அமைச்சர்களும் வளர்ச்சி மன்றக் கூட்டங் களில் கலந்து கொள்கிறார்கள்.

திரு. எம். தண்டாயுதபாணி : ஜில்லா அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலே நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், அதிலே நடக்கின்ற நடவடிக் கைகளையாவது 6 மாதங்களுக்கு ஒரு முறை ஜில்லா அபிவிருத்தி மன்றத்திற்குத் தெரிவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஜில்லா அபிவிருத்தி மன்றங் கள்மூலம் இந்த யோசனை கூறப்பட்டால் அது கவனிக்கப்படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தென் ஆற்காடு மாவட்டத்தி லுள்ள அபிவிருத்தி கவுன்சில் கடலூரில் ஒரு கல்லூரி வைக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அதனை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, தென் ஆற்காடு மாவட்ட மன்றத்திற்கு கலெக்டர் மூலமாக தபால்கூட எழுதினார்கள். இதுவரையிலும் அதைக் கவனிக்கவில்லை. எப்பொழுது கவனிப்பார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கேள் வியை எதிர்பார்த்துத்தான் உதாரணமாகச் சொன்னேன். கல் லூரி வேண்டுமென்று தீர்மானம் போடுவது சுலபம். எவ்வாறு அதை நிறைவேற்றுவது, அந்த ஸ்தலத்தில் உள்ள மக்கள் எவ்வ ளவு தூரம் முன்னோடியாக நின்று ஒத்துழைப்பார்கள் என்பதை யோசித்துத்தான் தீர்மானத்தை நிறைவேற்ற முடியும். முன்பே நான் கனம் அங்கத்தினர்களுக்குக் குறிப்பிட்டிருக்கிறேன், ஸ்தலங் களில் உள்ளவர்கள் நிதி திரட்டினால், அடுத்த ஆண்டில் கல்லூரி வைப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யலாம்.

திரு. முனு ஆதி : மாவட்டத்திலிருந்து வருகிற அதிகாரி களுக்கு அந்த மாவட்ட அபிவிருத்திக் குழுவில் கொண்டு வரப் படும் பிரச்சனைமீது வோட்டு அளிக்க உரிமை உண்டா ? கலெக் டருக்கே அதனுடைய விவரம் தெரியவில்லை.

14th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. ஏதாவது அவ்வாறு அதிகாரிகள் வோட்டு அளித்து, மற்ற உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்திருந்தால், கனம் அங்கத்தினர் தெரிவிக்கலாம். அப்படிப் பிரச்னை ஏற்பட் டால், அது ஆராயப்பட்டு என்ன நிலைமை என்பதை விளக்கலாம்.

திரு. கே. பொன்னையா : ஒரு சில மாநிலங்களில் வளர்ச்சி மன் றங்களின் தலைவர்களாக நான்-அபிஷியல்களைப் போட்டிருக்கிறார் கள். நமது மாநிலத்தில் கலெக்டர் இருக்கிறாரே, அதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்ட மன்றம் அதை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து, இந்த மாநிலத்திலே அந்த மன்றங் களுக்கு கலெக்டர் அவர்களே தலைவராக இருப்பது என்று முடிவு செய்திருக்கிறது. அதுதான் காரணம்.

State Transport Systems (fares)

* 137 *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the proposals under consideration of the Government for revising the fare structure of the State Transport System;

(*b*) when the revised structure of fare would be brought into force; and

(*c*) the amount of additional revenue anticipated for the year 1963–64 as a result of the proposed revision?

THE HON. SRI R. VENKATARAMAN : As the proposal for the revision of fare structure of the Madras State Transport Department is still under consideration, Government are not in a position to disclose details regarding (*a*) and (*b*) and (*c*) as yet.

திரு. கே. ஏ. மதியழகன் : கேரள மாநிலத்தில் பஸ் கட்டணங் களை உயர்த்தியதன் விளைவாக ஏற்பட்ட கிளர்ச்சிகளை மனத்தில் கொண்டு, இந்த பஸ் கட்டணங்களை உயர்த்துகிற முயற்சியைத் தவிர்க்க அரசாங்கம் முயலுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பட்ஜெட் விவாதத்தின் போது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் நஷ்டத்திலே ஓடுகிறது என்று எதிர்க் கட்சியினர் குற்றச்சாட்டுச் சொல்லாமல், பொது மக்க ளுடைய வரிப்பணத்திலிருந்து ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டை ஸப் ஸிடைஸ் பண்ணி நடத்தலாம் என்று சொல்லி ஆதரித்தால், எதை யும் யோசனை செய்யலாம்.

புலவர் கா. கோவிந்தன் : பஸ்களுக்கான லைசென்சு கட்டணங் களை உயர்த்திய நேரத்தில், தனியார் பஸ் கட்டணங்களை உயர்த்தி விடுவார்கள் என்று சொன்னபோது, கனம் அமைச்சர் அவர்கள்

சர்க்கார் துறையில் நடத்துகிற பஸ்களுக்கு கட்டணம் உயராது என்ற உறுதி மொழியைக் கொடுத்தார்கள். அந்த உறுதி மொழியைக் காப்பாற்றுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த உறுதிமொழி காப்பாற்றப்பட்டுவிட்டது என்பதை கனம் அங்கத்தினர் தெரிந்து கொள்ளவில்லை என்பதுதான் ஆச்சரியம். கடந்த ஆண்டு பஸ் கட்டணம் சம்பந்தமாக, ராஜ்ய சர்க்கார் எந்தவிதமான உயர்வும் செய்யவில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: சென்னை நகரிலுள்ள பஸ் கட்டணத்தை ஒரே மாதிரியாக, அதாவது ஃபிளாட் ரேட்டாக ஆக்குகின்ற யோசனை அரசாங்கத்துக்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சொந்த முறையிலே எனக்கு அது ரொம்பவும் பிடித்தமான யோசனை. ஆனால் நம்முடைய ராஜ்யத்தில் அமல் நடத்துவது அவ்வளவு சுலபம் அல்ல என்ற எண்ணம் இருக்கிறது. ஏனென்றால் குறைந்த தூரப் பிரயாணிகள் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றால், அவர்கள் கஷ்டப்படுவார்கள். அதனால்தான் இந்த யோசனையை ஏற்க இயலாத நிலைமை இருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு டிராக்டர்கள்

* 138 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன்களுக்கு கிராம அபிவிருத்தி ஸ்தல நிர்வாக இலாகாமூலம் டிராக்டர் வாங்கி வாடகைக்கு விடும் உத்தேசம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) அதுபற்றிய முடிவு எப்போது எடுக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The question of supplying tractors to the Panchavat Unions under the Hire Purchase Scheme is under consideration of the Government.

(b) It has been decided that tractors may be supplied initially to two or three Panchavat Unions as an experimental measure and that the position should be reviewed before the scheme is extended to other Panchayat Unions. The Director of Agriculture has accordingly been asked to select two or three Panchayat Unions and supply tractors to them under the Hire Purchase Scheme. The question of supplying tractors to other Panchavat Unions will be considered after reviewing the results in those Panchaayt Uniors.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை பரீட்சார்த்தமாக எல்லா மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலில் இருக்கும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்குமா? ஏனென்றால், இரண்டு மூன்று பஞ்சாயத்துக்கு மட்டும் கொடுத்து விட்டால் மற்ற மாவட்டங்களில் அதன் பலனை அடைய முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே, குறைந்த பட்சம் மாவட்டங்களில் ஒவ்வொரு டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு ஆகிலும் இத்தனை என்று கொடுக்க முயற்சி எடுப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பரீட்சார்த்தமாகச் செய்வது என்றால், ஒவ்வொரு டெவலப்மென்ட் கவுன்சிலிலும் உள்ள பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக் கொண்டாலும், அது அதிகமாக இருக்கும், வினைவு எவ்வாறு நடைபெறும், அது பலன் தருமா என்று பார்த்து அதற்குமேல் செலவு செய்ய வேண்டி இருக்கும். ஆகவேதான், இரண்டு மூன்று பஞ்சாயத்து யூனியன்களில் பரீட்சார்த்தமாக நிறைவேற்றுவது, அதற்குப் பிறகு எல்லா பஞ்சாயத்துக்கும் விஸ்தரிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திருமதி சி. குழந்தையம்மாள்: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது சொன்னார்கள், பரீட்சார்த்தமாக இரண்டு மூன்று பஞ்சாயத்து யூனியன்களில் செய்யப்படும் என்று. பஞ்சாயத்தின் நிதிநிலையை பொருத்து ட்ராக்டர் உபயோகம் செய்வது பற்றி முடிவு செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ட்ராக்டர்கள் வேண்டுமென்று ஒவ்வொரு யூனியனும் கோருகிறார்கள். ஆனால், அதை நடத்துவது நல்ல முறையிலே இருக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள பரீட்சை செய்யப்படுகிறது.

திரு. சி. பொன்னுசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது பரீட்சார்த்தமாகச் செய்வதில் என்ன பலன் கிடைத்திருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் கொடுத்த விடையில், எந்த பஞ்சாயத்து யூனியன்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்குமாறு விவசாய இலாகா டைரக்டர் கேட்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். பரீட்சார்த்தத் திட்டம் இன்னும் தொடங்கவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: ஸார், நிதி வசதி இருக்கிற பஞ்சாயத்து யூனியனில் ட்ராக்டர் வாங்க அரசாங்கம் அனுமதி கொடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நிதி வசதி முக்கியமான பிரச்சினை அல்ல. சாதாரணமாக இருக்கும் பஞ்சாயத்துக்களும் வாங்குவதில் அவ்வளவு தூரம் தவறு இல்லை. ஆனால், பலன் தரும் வகையில் நிறைவேற்ற முடியுமா என்று பரீட்சை செய்யப்பட வேண்டும். ஆகவேதான் இரண்டு மூன்று பஞ்சாயத்துக்களை எடுக்க உத்தேசம்.

திரு. கோ. சி. மணி: ஸார், இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் வாடகைக்கு வாங்குவதற்கு எழுதிக் கொடுக்கும் எக்ரிமெண்ட் முறை, பத்தரத்தில் கொடுப்பது கடினமானதாக இருக்கிறது என்று முறையீடு வந்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தகவல் இல்லை.

[14th August 1963

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களைத் தேர்ந்தெடுக்கும்போது, மாவட்ட வாரியாக எடுக்கும்போது, பல திட்ட வேலைகளைச் செய்து, முதல் பரிசு இரண்டாம் பரிசு பெற்றிருப்பவர்களுக்கு முதல் இடம் அளிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படிப்பட்டவர்கள் ட்ராக்டர்கள் நடத்துவதில் பரிசு பெறவில்லை. மற்ற திட்டங்களில் பரிசு பெற்றவர்கள் என்பதற்காக பஞ்சாயத்துக்களைத் தேர்ந்தெடுக்க முடியாது.

திரு. சி. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்கள் துறையிலும் ட்ராக்டர்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. அவர்களுடன் கலந்து அவர்கள் அனுபவத்தையும் தெரிந்துகொள்ள முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கமே கொடுத்து வருகிறது. தனிப்பட்டவர்களிடம் பஞ்சாயத்து யூனியன்கள் எப்படி நடத்துவது என்பது பற்றி அறிந்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லாமல், பரீட்சை நடத்தப்படுகிறது. அதில் அவர்கள் தெரிந்துக்கொள்ளலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், விவசாய இலாகாவிலுள்ள ட்ராக்டர்கள் அடிக்கடி பழுது அடைந்து, ஸ்பேர் பார்ட்டுகள் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய வெளி நாடுகளிலிருந்து வர வேண்டி இருப்பதால், ஒரு வருஷம், இரண்டு வருஷம் அப்படியே கடந்து விடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, வேண்டிய அளவுக்கு முதலிலேயே ஸ்பேர் பார்ட்டுகள் வைத்துக்கொள்ள முயற்சி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஸ்பேர் பார்ட்டுகள் அன்னிய நாடுகளிலிருந்து வரவேண்டி இருந்தால், அன்னிய செலாவணி வேண்டி இருக்கிறது. அதனால் தாமதம் ஏற்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்ட குறை என்னவென்றால் அதிகமாக ஸ்பேர் பார்டுகளை வாங்கி வைத்து விட்டார்கள் என்பது. எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு வைத்துக் கொள்ளலாம். ஆனால், அதற்கும் அன்னிய செலாவணிப் பற்றாக்குறை இருக்கிறது. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுப்பது பற்றிய இந்தக் கேள்வி சம்பந்தப்பட்டவரை, அவைகளுக்கு புதிய ட்ராக்டர்கள்தான் கொடுக்கப்படும், பரீட்சை செய்யப்படும். அதில் ஸ்பேர் பார்ட்டு குறை ஏற்படாது என்று நினைக்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, உழுது பயிரிடக் கூலி, ஏர்க் கூலி அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்த ட்ராக்டர் கொடுக்கும் திட்டத்தை எல்லா வளர்ச்சி மன்றங்களுக்கும் கொடுத்து, உடனடியாகச் செயல்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே விடையளித்தேன். பரீட்சை செய்து பார்த்து, அதைப் பரிசீலனை செய்து ஒரு முடிவு எடுத்துக்கொண்ட பிறகு எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்க உத்தேசம்.

14th August 1963]

திரு. ஆர். ரங்கசாமி : ஸார், சக்தி வாய்ந்த ஹார்ஸ் பவர் உள்ள ட்ராக்டர்களைக் கொண்டு ஒவ்வொரு விவசாயியும் அதிகமாக வேலை செய்ய முடியாமல் இருப்பதால், சிறு சிறு ஹார்ஸ் பவர் உள்ள ட்ராக்டர்களை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்து பரீட்சை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது பரீட்சை செய்வது இரண்டு மூன்று யூனியன்களில்தான். அதில் அதிகப் பெரியதாகவும், மிகச் சிறிதாகவும் இல்லாமல், நடுத்தரமான ட்ராக்டர்களைக் கொடுக்க வேண்டும் என்பது அபிப்பிராயம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அமைச்சர் அவர்கள் பதிலில், இரண்டு மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் பரீட்சைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். இந்த இரண்டு மூன்று பஞ்சாயத்து யூனியன்களும் எந்த எந்த ஜில்லாக்களில் உள்ளன என்று அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பே விடை அளித்தேன். கனம் அங்கத்தினர் அதைக் கேட்கவில்லையோ அல்லது பின்னால் வந்தார்களோ தெரியாது. விவசாய இலாகா எந்த யூனியன்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்று யோசனை கூறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்னும் அவர்களிடமிருந்து தகவல் வரவில்லை.

திரு. கி. இரா. சம்பந்தம் : இப்பொழுது நிலச் சீர்திருத்தம் காரணமாக குறைந்த ஏக்கரேஜ் உள்ள நிலங்களாக இருப்பதால், தஞ்சை ஜில்லாவிலுள்ளவர்கள் ட்ராக்டர் வாங்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பரீட்சையை தஞ்சை ஜில்லாவிலேயே ஆரம்பிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நிலச் சீர்திருத்தம் காரணமாக, நிலம் ஒன்றும் மாறவில்லை. நிலம் அப்படியேதான் இருக்கிறது. ஒருக்கால் உண்மையிலேயே ஏக்கரேஜ் குறைந்திருந்தால், பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்படும் ட்ராக்டர்களை கூட்டுறவு முறையிலே பயன் படுத்திக் கொள்ளலாம்.

Milk Pasteurisation at Thanjavur

* 139 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any scheme for establishing a milk pasteurisation plant at Thanjavur; and

(b) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) The installation of the plant for Pasteurisation of milk at Thanjavur by the Thanjavur Co-operative Milk Supply Union is expected to be started in the year 1963–64. The work for the construction of building, etc., will be commenced by about July, 1963. The procurement and installation of machinery will be completed by the end of 1964 and the plant commissioned.

[14th August 1963

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த மாதிரியான இடங்கள் எத்தனை உள்ளன ? எங்கெங்கு உள்ளன ?

கனம் திரு. பூ. கக்கன் : தமிழ் நாட்டில் பல உள்ளன. தனியாகக் கேள்வி கேட்டால் அதைப் பற்றிய விவரங்களைக் கொடுக்கலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : எத்தனை ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சையில் நிறுவப்படுவது 12 லட்சம் ரூபாய் செலவில். முதலில் அந்த இடத்திற்கு 25,000 ரூபாய் கொடுக்கிறோம். கட்டடம் கட்ட 5 லட்சம் ரூபாய் கொடுக்கிறோம். 50—50 பேஸிஸில் கூட்டுறவு சொஸைட்டி பாதி போடும், அரசாங்கத்தில் பாதி கொடுக்கிறோம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், உதகையில் இந்த மாதிரித் தொழிற்சாலை ஆரம்பிக்க உத்திரவிடப்பட்டிருக்கிறது. யந்திர சாதனங்கள் மாதவரத்திலிருந்து கொண்டு சென்று அமைப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் யந்திரங்கள் உதகைக்குப் போய்ச் சேர்ந்து விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மாதவரத்தில் பெரிய பாஸ்டரைசேஷன் ப்ளாண்ட் வைத்து உபயோகப்படுத்தப்படுகிறது. அங்கு வைப்பதைத் தனியாகத்தான் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

திரு. சி. பொன்னுசாமி : இப்போது இயங்கும் கூட்டுறவுப் பால் பண்ணைகள் இது போன்ற இயந்திரங்களை சீரிய முறையில் வைத்திருக்கிறதா ? சீரிய முறையில் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கூட்டுறவு மூலமாகப் பால் வழங்கும் ஸ்தாபனங்களெல்லாம் நல்ல முறையில் பாலைச் சுத்தமாக வைத்துத்தான் வழங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். பால் பல மணி நேரம் கெட்டுப் போகாமல் வைக்கத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, ஒரு படி பால் ரூ. 1¼, ரூ. 1½-க்கு இப்போது விற்கிறது. இதைக் குறைக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? அல்லது உற்பத்தியைப் பெருக்கியாவது விலையைக் குறைக்கத் திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பால் விலை அது கிடைப்பதைப் பொருத்திருக்கிறது. அதிகமாகக் கிடைக்கும்போது விலை குறையும். கிடைப்பது கஷ்டமாக இருக்கும் போது விலை கொஞ்சம் உயரும்.

Anti-scorpion serum

*141 Q.—SRI S. NANJUNDA RAO : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the import of anti-scorpion serum has been stopped;

14th August 1963]

(b) whether there is any stock of serum in all the Government hospitals in the State;

(c) whether any deaths have occurred due to the non-availability of this serum; and

(d) whether there is any scheme to manufacture this serum in the Madras State?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) குறிப்பிட்ட தகவல் எதுவும் வரவில்லை.

(எ) கிண்டியிலுள்ள கிங் இன்ஸ்டிட்யூட்டில் இந்த Serum (ஸீரம்) தயாரிப்பதற்கு வேண்டிய திட்டம் யோசனையில் இருக்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மருந்து நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதற்கு முன் இதைத் தடை செய்தது சரியா ? என்ன காரணத்தினால் தடைப்படுத்தப்பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 1959-ம் ஆண்டு வரையில் லீஸ்டர் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ப்ரிவெண்டிவ் மெடிஸின்ஸ், லண்டனிலிருந்து வந்துகொண்டிருந்தது. அவர்களிடம் ஆர்டர் ப்ளேஸ் செய்தபோது ராமெட்டீரியல்ஸ் கிடைக்காத காரணத்தினால் சப்ளை செய்ய இயலாது என்று குறிப்பிட்ட பிறகு அது நிறுத்தப்பட்டது.

திரு. சா. கணேசன் : ராமெட்டீரியல் என்றால், மூலிகை வகையா, அல்லது மருந்து வகையா அல்லது தேளே தானா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் சொல்லிய மூன்றில் எது வேண்டுமானாலும் இருக்கலாம்.

திரு. ஆர். ரங்கசாமி : நம் நாட்டிலே தேள் கடிக்கு மருந்து போடுவதைக் காட்டிலும் மந்திரம் போடுவது தான் அதிகமாக இருக்கிறது. ஆகையால் மந்திரம் போடும் முறையை அதிகரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள், மணி, மந்திரம், ஔஷதம் என்று. மூன்றும் இருந்தால் நன்மை.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : ஆண்டி-ஸ்கார்ப்பியன் ஸீரம் தயார் செய்யும் திட்டத்தை உடனடியாக சாங்ஷன் செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதைத்தான் சொன்னேன் ஏற்கெனவே. பிரிலிமினரி ப்ரொஸீஜர் எல்லாம் கவர்ன்மெண்ட் கன்ஸிடரேஷனில் இருக்கிறது.

[14th August 1963

திரு. கே. பொன்னையா : தேள் கடிக்கு என்னிடம் கைக்கண்ட மருந்து இருக்கிறது. அரசாங்கம் உத்திரவு கொடுத்தால் பரீட்சித்துக் காட்டுகிறேன். அதற்கு அரசாங்கம் உத்திரவு கொடுப்பார்களா ?.

கனம் சபாநாயகர் : ஒரு போர்டு எழுதிப் போட்டுக்கொண்டால் போயிற்று (சிரிப்பு.)

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அமைச்சர் அவர்கள் மணி, மந்திரம், ஔஷதம் என்று சொன்னார்கள். இப்போது ஆஸ்பத்திரிகளில் மருந்து இருக்கிறது. மந்திரவாதிகளையும் வைத்து நிறைவேற்ற ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மந்திரவாதிகளை ஆஸ்பத்திரிகளில் வைக்கும் உத்தேசம் இல்லை. அது நோயாளிகளுடைய விருப்பு வெறுப்பைப் பொறுத்தது.

திரு. மு. சண்முகம் : தேள் கடி போன்ற விஷக் கடிகளுக்கு மருந்து நம் நாட்டிலே கிடைக்கக் கூடிய வழிகள் இருந்தும் வெளிநாடுகளிலிருந்து அப்போதைக்கப்போது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போது நான் இண்டிஜினஸ் முறையில் கிடைக்குமா, கிடைக்காதா என்று ஆராய்ச்சி செய்திருக்கிறது. அதற்குப் பிறகு கிண்டி இன்ஸ்டிட்யூட்டில் ஆரம்பிக்க வேண்டும் என்று ப்ரிலிமினரி ப்ரொஸீஜர்களையெல்லாம் ஃபாலோ செய்துகொண்டு வருகிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : மந்திரிகளைத் தேள் கடித்தால் கனம் அங்கத்தினர் பொன்னையா அவர்களைக் கூப்பிட்டு வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

(பதில் இல்லை)

திரு. சி. பொன்னுசாமி : தேள் கடியால் பாதிக்கப்பட்டவர்கள் வருஷம் ஒன்றுக்குச் சராசரி எத்தனை பேர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்குத் தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் (விருத்தாசலம் தாலுக்கா)

* 142 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் (திரு. கே. நாராயணசாமி பிள்ளை சார்பில்) : கனம் செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலுக்காவில் வேப்பூரிலாவது அல்லது நல்லூரிலாவது சப்-ரிஜிஸ்திரார் ஆபீசு ஒன்று அமைக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இல்லை.

14th August 1963]

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, சப்-ரெஜிஸ்டிரார் நிலையங்கள் அமைப்பதற்கு மக்கள் தொகை அடிப்படையாகக் கொள்ளப்படுகிறதா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன். 9-00 a.m.

கனம் திரு. கோ. பூவராகன் : மக்கள் தொகையோ அல்லது நிலப்பரப்போ கொண்டு பத்திரப் பதிவு நிலையத்தை அமைப்பதில்லை. எங்கெங்கு இந்நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்கிறார்களோ, அதைப் பரிசீலித்து, அந்த இடத்தில் உண்மையாகவே அதிகமான வேலை இருக்கிறதா என்பதையும் பார்த்து, போக்குவரத்துக்கும், பாதுகாப்பிற்கும் அங்கு போகின்ற மக்களுக்கு உணவு அருந்துவதற்கும் வசதியாக இருக்குமா என்பதையெல்லாம் பார்த்து அதற்குத் தகுந்த பிரகாரம் ஏற்படுத்தப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : நில உடைமைக்கு உச்சவரம்பு வந்ததன் பின்னால் பத்திரப் பதிவு நிலையங்களில் வேலை குறைவாக இருக்கின்றது என்ற காரணத்தினால்தான் புதிதாகப் பதிவு நிலையங்கள் ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : அப்படி ஒன்றுமில்லை.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம் : ஸார், இப்போது பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ்கள் எல்லாம் நல்ல ஸெண்டர்களில் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், இந்தப் பத்திரப் பதிவு நிலையங்களை அந்த இடத்திலேயே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்போது இருக்கின்ற ஆபீஸ்கள் எல்லாம் வசதியான இடங்களில் தான் இருக்கின்றன. இவைகளை மாற்ற வேண்டும் என்ற உத்தேசம் அரசாங்கத்திற்கில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், 100 ரூபாய் வரையில் பெறுமான பத்திரங்களைப் பஞ்சாயத்துக்களிலேயே ரெஜிஸ்டர் செய்யலாம் என்ற முறை இருந்து வந்ததே, அது இப்போது அமல் செய்யப்படுகிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இது பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ரெஜிஸ்டிரார் ஆபீசிலும் அதிக வேலை இவ்வளவு, குறைந்த வேலை இவ்வளவு என்று தெரிந்து கொள்வதற்கு ஏதாவது உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : ஒவ்வொரு நாளைக்கு, அல்லது மாதத்திற்கு, அல்லது ஆண்டுக்கு எத்தனைப் பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்பதை வைத்துக் கணக்கிடப்படுகின்றன.

புலவர் கா. கோவிந்தன் . ஒவ்வொரு பதிவு நிலையத்திலும் எத்தனை பத்திரங்கள் பதிவு செய்யவேண்டும் என்று ஏதாவது விதி முறை இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : எத்தனை பத்திரங்கள் வருகின்றதோ அத்தனையும் பதிவு செய்ய வேண்டியதுதான்.

திரு. முனு. ஆதி: தலைவர் அவர்களே, இப்போது பத்திரப் பதிவு நிலையங்களில் பத்திரங்களை வாங்குவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. பக்கத்தில் வேறு எங்காவது போய் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே பத்திரப் பதிவு நிலையத்திலேயே பத்திரங்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: பத்திரங்களை பத்திரப் பதிவு நிலையத்திலேயே விற்பதற்கு இப்போது அனுமதிக்கப்படுவதில்லை. பக்கத்தில் வசதியாக இருக்கும் இடங்களில் விற்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்படுகின்றன.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, இப்போதுள்ள முறைப்படி ஒரு வில்லங்க சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்றாலும் அதிகமான அளவில் கட்டணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதைக் குறைக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: இக் கேள்வி பத்திரப் பதிவு நிலையங்கள் ஏற்படுத்துவது சம்பந்தமாக உள்ளது. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் விபரங்களுக்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஸார், இப்போதுள்ள முறைப்படி ஒரு சொத்தைக் கிரயம் வாங்க வேண்டுமென்றால், இதற்கென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும் டிக்ளரேஷன் பதிவு ஆபிஸில் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனை இருக்கிறது. சாதாரணமாக 100 ரூபாய்க்கு ஒரு சொத்தைக் கிரயம் வாங்குபவர்கள்கூட இந்த ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதைத் தொல்லை என்று கருதி கிரயம் வாங்க முன்வரத் தயங்குகிறார்கள். ஆகவே இந்த விதி முறையைத் திருத்தி அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: இப்போது இருக்கின்ற முறையில், கேட்டிருக்கின்ற பல கேள்விகளுக்குப் பதில் சொல்லுகின்ற முறையில் ஸ்டேட்மெண்ட் கொடுத்தால் தான் இதிலிருந்து கிடைக்கின்ற விபரங்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும். ஆகவே இதை இப்போது மாற்றுவதற்கு உத்தேசமில்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஸார், நெய்வேலியின் பக்கத்திலுள்ள கிராமங்களிலுள்ள மக்கள் பக்கத்தில் பத்திரப் பதிவு ஆபீஸ் இல்லாத காரணத்தால் நீண்ட தூரம் வந்து தங்கள் பத்திரங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே அங்குள்ள மக்களுக்கு வசதியாக மருங்கூர் என்ற இடத்தில் ஒரு உப-பதிவு ஆபீஸை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. கோ. பூவராகன்: இது சம்பந்தமாகத் தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. ஆ. துரையரசன்: தலைவர் அவர்களே, அறந்தாங்கியை அடுத்துள்ள திருப்புன்னவாசலிலுள்ள மக்கள் பக்கத்தில் பத்திரப் பதிவு ஆபீஸ் இல்லாததால் 30 மைல் தூரம் அறந்தாங்கி வந்து பத்திரங்களைப் பதிவு செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே அறந்தாங்கி பக்கத்திலேயே உள்ள மிமிசலில் ஒரு பத்திரப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள் தங்கள் இடத்தைப்பற்றிக் கேட்டுக் கொண்டிருப்பதால் எப்படி அமைச்சர் பதில் சொல்ல முடியும்?

கனம் திரு. கோ. பூவராகன்: இந்தக் கேள்வி விருத்தாசலம் பக்கத்தில் வேப்பூரில் பத்திரப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்துவது பற்றியது. தனியாகக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களை எல்லாம் நாம் ஏற்படுத்தியாய் விட்டது. ஆகவே தனியாக பத்திரப் பதிவு நிலையங்கள் இருப்பதை எல்லாம் ஒழித்துவிட்டு பஞ்சாயத்து யூனியன் ஆபீசிலேயே இதை இணைத்துவிட்டால் செலவைக் குறைக்க முடியுமல்லவா? ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன்: இது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: 1963-64-ம் ஆண்டில் எத்தனை சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் திறப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு. கோ. பூவராகன்: இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

ஜெயங்கொண்ட சோழபுரம் அரசாங்க மருத்துவ மனை

***143 கேள்வி.—திரு. எஸ். ராமசாமி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்ட சோழபுரத்திலுள்ள அரசாங்க மருத்துவமனைக் கட்டிடத்தை விரிவுபடுத்தும் உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால், எவ்வளவு தொகை செலவழிக்கப்படும்?

(உ) அங்கு பெண் வைத்தியர் ஒருவரை நியமிக்கும் உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ), (இ) ஜெயங்கொண்டசோழபுரம் அரசாங்க மருத்துவ மனையைத் தாலுகா தலைமையிட மருத்துவ மனையாக உயர்த்த வேண்டுமென்றும் மருத்துவத்துறை நெறியாளரது யோசனையை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இதற்காக, அந்த மருத்துவமனைக்குத் தேவைப்படும் அபிவிருத்திக்காக ரூ. 3,17,000 செலவுத் தொகையையும் [illegible] அனுமதித்துள்ளது.

(உ) இல்லை.

[14th August 1963

திரு. எஸ். ராமசாமி: இந்த விஸ்தரிப்புத் திட்டம் எப்போது அமல் செய்யப்படும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்போதுள்ள தகவலின்படி ஜெயங்கொண்ட சோழபுரத்தில் மருத்துவ மனை ஏற்படுத்துவதற்கு "டாப் பிரையாரிடி" கொடுக்கப்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன்: மருத்துவ மனைகள் ஏற்படுத்தி விட்டு, அதில் வேலை செய்யும் டாக்டர்கள், நர்சுக்கள் இவர்களுக்குக் குடியிருக்க வீட்டு வசதி இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு வேண்டிய வீட்டு வசதியைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்போதுள்ள ஸ்கீம் படி மருத்துவ மனைகளில் வேலை செய்கின்ற டாக்டர்கள், நர்சுகள் இவர்களுக்கெல்லாம் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான். ஆனால் எமர்ஜென்ஸி காரணமாகச் சில திட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதிகளில் இம்மாதிரி ஏதாவது கஷ்டங்கள் இருந்தால், அவற்றைப் போக்குவதற்கு கனம் அங்கத்தினர்கள் போன்றவர்கள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: மருத்துவ மனைகள் ஏற்படுத்துகின்ற விஷயம் மக்களுக்கு மிகவும் முக்கியமாக இருப்பதால், தேசிய நெருக்கடியைப் பார்க்காமல் மருத்துவ மனைகளை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எக்ஸ்டென்ஷன் செய்ய வேண்டியது, புதிதாகக் கட்டிக் கொடுப்பது போன்ற பல திட்டங்கள் எல்லாம் எமர்ஜென்ஸி காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் எது மிகவும் முக்கியம் என்பதைப் பார்த்து அவற்றிற்கெல்லாம் உடனடியாக, விரைவாக இல்லாவிட்டாலும், மெதுவாகவாவது திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டுள்ளது.

போலி மருந்துகள்

*144 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கத்தார் நமது ராஜ்ஜியத்திலே விற்கப்படும் போலித் தன்மை வாய்ந்த மருந்துகளைப் பறிமுதல் செய்ய யோசனை தெரிவித்தார்களா?

(இ) அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) & (b): No special communication from the Central Government for confiscating spurious drugs sold in our State was received. The Drugs Controller, India has however asked the State authorities to check the quality of the products manufactured by certain firms and to report the details of the investigation to the Licensing authority of the State concerned and to the Drugs Controller, India. Investigation has accordingly been made and certain stocks of ampoules have been frosen as per Section 22 of the Drugs Act.

14th August 1963]

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், இம்மாதிரியான போலி மருந்துகள் எந்தெந்த இடத்திலிருந்து வந்தன? அப்படித் தயார் செய்த கம்பெனிகளின் பெயர் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: வெளி மாகாணத்திலிருந்து தான் இம்மாதிரி போலி மருந்துக்கள் வந்திருக்கின்றன. In the interests of public I do not want to reveal the names of those firms.

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், அதிகமாக டிஸ்டில்ட் வாட்டரில் தான் இந்த போலிச் சரக்குகள் வருவதாகச் சொல்லப்படுகிறது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இம்மாதிரியான போலி மருந்துகள் வராமல் இருப்பதற்கும், விற்பனையாகாமல் இருப்பதற்கும் எந்தெந்தத் தடுப்பு முறைகள் எடுக்க வேண்டுமோ அவைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. செ. மாதவன்: அம்பிஸ்ட்ரின் ஊசி மருந்து சமீபத்தில் சில பேர்களுக்குப் போடப்பட்டு ஒரு பெண் இறந்து விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? அதன் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அம்பிஸ்ட்ரின் போட்டதால் இறந்து போய் விட்டார் என்று சொல்ல முடியாது. சில பேர்களுக்கு இன்செக்ஷனில் அலர்ஜி இருக்கும். வேறு ஏதாவது காரணம் இருந்திருக்கலாம். அதை சாதாரணமாக எவ்வளவோ பேர்களுக்குப் போடுகிறார்கள். ஆயிரத்தில் ஒரு கேஸ் இப்படியிருக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: எந்தெந்தக் கம்பெனிகளில் போலி மருந்துக்கள் கிடைத்தன என்பதைப் பொது நன்மையை முன்னிட்டு சொல்லக் கூடாது என்று சொன்னார்கள். உயிரை மாய்க்கும் கொலை பாதகமான மருந்தைச் செய்யக் கூடியவர்களின் அட்டவணையைக் கொடுத்தால் என்ன தவறு?

கனம் திருமதி ஜோதி வெங்கட்டாசலம்: போலி மருந்து எங்கெல்லாம் இருக்கிறதோ அதைக் கண்டுபிடித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவர்களை எமனாகக் கருதினால் தப்பு.

திரு. மு. கருணாநிதி: அம்பிஸ்ட்ரின் ஊசி சம்பந்தமாக ஒரு பெண் இறந்த பிறகு அந்தக் கடையில் உள்ள ஊசி மருந்துகளை ஆயிரக்கணக்கில் தடை செய்து, விற்கக் கூடாது என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பார்டிகுலரா என்ன இன்ஸ்டன்ஸ் என்று கூறினால் அதுபற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்து சரியான தகவல் கொடுக்க முடியும்.

[14th August 1968

திரு. எஸ். ராமசாமி : ஒரே நகரில் அல்லது ஒரே கிராமத்தில் இருக்கும் கடைகளில் மருந்துகளின் விலைகளில் மாற்றம் இருப்பதால் மருந்துகளின் விலைப் பட்டியலைக் கடைகளுக்கு முன்னர் தொங்க விட ஏற்பாடு செய்யப்படுமா ?

MR. SPEAKER : This question relates to spurious medicines and not to the price of the medicines.

திரு. எஸ். ஜே. ராமசாமி : சென்ற ஆண்டு சென்னையில் ஒரு இடத்தில் காலி சீசாக்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகச் செய்தித் தாள்களில் பார்த்தோம். அது குறித்து கேஸ் போட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? எந்தக் கம்பெனி இதுமாதிரி செய்கிறது என்று ஒரு அறிவிப்புக் கொடுத்தால் டாக்டர்கள் உஷாராக இருப்பார்கள். அதையாவது செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கட்டாசலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுகிற ஆலோசனை ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கிறது. இண்டரஸ்ட் ஆப் தி பப்ளிக்-ன் பேரில் நேம்ஸ் ஆப் போர்ம்ஸ்-ஐ சொல்ல மாட்டேன் என்று சொன்னேனே தவிர, வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : போலி மருந்துகளை உற்பத்தி செய்தார்கள் என்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதன் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலை தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கட்டாசலம் : தனிக் கேள்வி போட்டால் சொல்ல முடியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : போலி மருந்துகள் விற்பதைப் போலவே உற்பத்தி செய்கிறவர்கள் திரை மறைவில் இருந்து பெரிய குற்றங்களைச் செய்வதால் உற்பத்தி ஸ்தானத்தைச் சோதனை செய்து அதைத் தடுக்க ஏதாவது வழிமுறைகள் இருக்கின்றனவா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. முனு ஆதி : மூட்டைப் பூச்சி மருந்து குடித்துப் பலர் இறந்து போகிறார்கள். மனிதன் சாகாமல் எலி மட்டும் சாகும்படி அது உற்பத்தி செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மனிதன் அதைச் சாப்பிடக் கூடாது என்று, தற்கொலை செய்துகொள்ள நினைக்கிறவர்களைக் கண்டு பிடித்து பிரசாரம் செய்தால் நல்லதாக இருக்கும்.

Scholarships for poor students

*145 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the difficulties of the poor students studying in schools and colleges and who have applied to the Harijan Welfare Department for scholarship to pay the special and other fees; and

14th August 1968]

(*b*) if so, whether it is proposed to arrange to defer the collection of these fees from such students till the scholarship is sanctioned to them?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government have exempted the students belonging to Scheduled Castes, Scheduled Tribes, Denotified Tribes and Most Backward Classes from the payment of special fees for three items, namely, Library, Laboratory and Medical Inspection in standards VIII to X. The oGvernment have also issued orders that pending sanction of scholarships by the Harijan Welfare Department, 'ad hoc' advances not exceeding Rs. 60 per student studying in high schools and Rs. 200 per student studying in colleges may be granted in deserving cases.

திரு. வை. சங்கரன் : இந்த வருடத்தில் கூட ஏழை மாணவர்களிடமிருந்து உயர்நிலைப் பள்ளியில் இருக்கிறவர்கள் ஸ்பெஷல் பீஸோடு முதல் மாதச் சம்பளம், இரண்டாம் மாதச் சம்பளம் இவை வாங்குகிறார்கள், பின்னால் அது திருப்பித் தரப்படுமென்று. அதை நிறுத்த ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எட்டாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை விசேஷக் கட்டணங்கள் எல்லாம் வாங்கக் கூடாது என்று சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வாங்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸ்காலர்ஷிப் வழங்குவதற்குக் காலதாமதம் ஆவதால் அதைச் சீக்கிரமாக வழங்குமாறு ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஸ்காலர்ஷிப் வழங்குவதில் சிறிது தாமதம் ஏற்படுகிறது என்ற காரணத்தினால்தான் இப்போது அதைத் துரிதமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் கல்லூரி மாணவர்களுக்கு டைரக்டர் ஆபீசிலிருந்து சாங்ஷன் செய்து கொண்டிருந்தோம். இப்போது ஆர்ட்ஸ் காலேஜ் மாணவர்களுக்கு அங்குள்ள ஹரிஜன நல இலாகா அதிகாரிகளே கொடுக்கலாம் என்று இருப்பதால் இப்போது அதிகம் தாமதம் ஆவதில்லை.

திரு. செ. மாதவன் : கல்லூரிகளைப் பொறுத்தவரை கொடுக்கக் கூடிய உதவிச் சம்பளத்தில் மத்திய சர்க்காரும் நம் மாநில சர்க்காரும் கொடுக்கக்கூடிய தொகையில் வேறுபாடு இருக்கிறதா ? அதற்குக் காரணம் என்ன ? நம் மாநில சர்க்கார் உதவித் தொகையைக் கட்ட உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் கொடுக்கிற ஸ்காலர்ஷிப்பில் வேறுபாடு இருக்கிறது. மத்திய சர்க்கார் கொடுக்கிற ஸ்காலர்ஷிப் ஓரளவு மாணவர்களுக்குப் போதவில்லை என்றாலும், குறைந்திருந்தாலும் மாநில சர்க்கார் நிதி நிலைக்குத் தக்கபடி ஓரளவு கூடுதலாகக் கொடுக்க [illegible] இருக்கின் [illegible]

திரு. ஜே. மாதா கவுடர் : இப்போது ஹரிஜன மாணவர்கள், மோஸ்ட் பாக்வேர்ட் கம்யூனிட்டி மாணவர்கள் இவர்களுக்கு அட்வான்ஸ் தரப்படுகிறது என்று சொன்னார்கள். பாக்வேர்ட் கம்யூனிட்டியில் உள்ள கஷ்டப்படுகிற மாணவர்களுக்கு அட்வான்ஸ் கொடுப்பதற்கும் அதை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

திரு. க. ர. நல்லசிவம் : கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஸ்காலர்ஷிப் இவ்வளவு பேர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று வரையறை ஏதாவது இருக்கிறதா ? அல்லது ஜாபிதாவிற்கு உட்பட்டிருக்கக் கூடிய அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : கல்லூரியில் படிக்கிற மாணவர்கள் ஹரிஜனங்களாயிருந்தால் மத்திய அரசாங்கம், மாநில சர்க்கார் கொடுக்கிறார்கள். பின்தங்கிய மாணவர்கள் 50 சத விகிதம் மார்க் எடுத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று திட்டம் இருக்கிறது. மோஸ்ட் பாக்வேர்ட் கம்யூனிட்டியைச் சார்ந்தவர்களுக்கு 45 சத விகிதம் மார்க் எடுத்திருந்தால் கொடுத்து வருகிறோம். எப்படியிருந்தபோதிலும் பணம் இருப்பதைப் பொறுத்துத்தான் கொடுப்போம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கல்லூரியில் ஒரு மாணவன் படிக்கும்போது ஸ்காலர்ஷிப் சாங்க்ஷன் ஆகிவிட்டது. நான் எழுதிய மாதிரி கள்ளக் கையெழுத்து போட்டு 'இவன் வசதியாக இருக்கிறவன், ஆகவே கொடுக்க வேண்டாம்' என்று எழுதிக் கொடுக்கப்பட்டது. இதை அந்த இலாகா அதிகாரிகளிடம் சென்று இப்படிக் கள்ளக் கையெழுத்திட்டு ஒரு தகவல் வந்ததா என்று கேட்டேன். அதன் பேரில் மனுச் செய்து கொண்டேன். அதன் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது ?

கனம் சபாநாயகர் : இது ஒரு 'இண்டிவிடுவல்'-ஐப் பொறுத்த கேள்வி. போலீசாரிடம் சொல்லி, கள்ளக் கையெழுத்திட்டவரை உள்ளே தள்ளச் சொல்லலாம்.

கனம் திரு. பூ. கக்கன் : எழுத்து மூலம் கொடுக்கப்பட்டால் பரிசீலிக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : ஹரிஜன மாணவர்கள் அதிகப் பேர்கள் இப்போது படிக்க முன் வருகிறார்கள். அவர்கள், மாணவர்கள் விடுதியில் இடம் கிடைக்காது அல்லல்படுகிறார்கள். ஆகவே நகரில் உள்ள மாணவர்கள் விடுதியில் இடங்களை அதிகரிக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அம் மாணவர்களுக்கு ஏற்கெனவே எம். ஸி. ராஜா ஹாஸ்டல் இருக்கிறது. எவ்வளவு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு பேர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஒரேயடியாக அதிகமானால் தனிப்பட்ட

ஹாஸ்டலில் இருப்பவர்களுக்கு, அவர்களுக்குக் கொடுக்கக் வேண்டிய ஈவைக் கொடுக்கிறார்கள், மீதியை அவர்கள் கையிலிருந்து போட்டுக் கொள்ள வேண்டும்.

திரு. எஸ். முத்துலிங்கம் : இராணுவத்தில் வேலை பார்க்கிறவர்களுடைய பிள்ளைகளுக்கும் எக்ஸ்-சர்வீஸ்மென்களின் பிள்ளைகளுக்கும் தற்போது எந்த முறையில் ஸ்காலர்ஷிப் வழங்கப்படுகிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசினரிடமிருந்து ஆண்டுதோறும் வருகின்ற உபகாரச் சம்பளத் தொகை ஒரே சீராக வந்துகொண்டிருக்கிறதா ? அல்லது, மாணவர்களுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் ஆண்டுதோறும் கூட்டப்பட்டு வருகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : எப்பொழுதும் கிடைத்து வருகிற மாதிரி ஒரே அளவில்தான் கிடைத்து வருகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸ்காலர்ஷிப் என்னும்போது சம்பளம் கட்ட வேண்டியதில்லை என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், 'ஸ்பெஷல் ஃபீஸ்' என்று சொல்லி, அதைக் கட்டினால்தான் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வோம் என்று சொல்லி சில காலேஜ்களில் வாங்கிவிடுகிறார்கள். ஸ்பெஷல் ஃபீசும் வாங்கக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : In colleges, students are exempted from tuition fees.

திரு. கி. இரா. சம்பந்தம் : இப்பொழுது பிற்பட்ட வகுப்பு மாணவர்களிடமிருந்து அதிகமாக ஸ்காலர்ஷிப்புக்கான மனுக்கள் வந்துகொண்டிருக்கிறபடியால், அந்த ஸ்காலர்ஷிப்புக்காக ஒதுக்கப்படும் நிதியை அதிகரிப்பது சம்பந்தமாக இப்பொழுது ஏதாவது யோசனை இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், வருஷா வருஷம் மனுக்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருகிறது. பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் அரை கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கிறார்கள். இருந்தாலும், மாணவர்கள் அதிகமாக வருவதைப் பார்த்து, நாமும் அதிகமாகத்தான் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

"சென்னை செய்தி" பத்திரிகை

*** 146 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னைச் செய்தி (Madras Information) இதழ் ஒன்று அச்சிடுவதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

[14th August 1963

(இ) மாதம் ஒன்றுக்கு வெளியாகும் பிரதிகளின் எண்ணிக்கை என்ன?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) 65 புதிய காசுகள், சராசரியாக.

(இ) 5,383 பிரதிகள், சராசரியாக.

திரு. செ. கோ. விசுவநாதன்: சென்னைச் செய்தியில் சட்டசபை நிகழ்ச்சிகளையும் எதிர்க் கட்சி உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் வெளியிட அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. கோ. பூவராகன்: சட்டசபை நடவடிக்கைகளைத் தனியாக அச்சிடுகிறார்கள். 'சென்னைச் செய்தியில்' தனியாக இவற்றை அச்சிடுவதற்கு உத்தேசம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: 5,000 பிரதிகளில் இலவசமாக எத்தனை பிரதிகள் அனுப்பப்பட்டு வருகின்றன?

கனம் திரு. கோ. பூவராகன்: இலவசமாக சுமார் 800 பிரதிகள் அனுப்பப்படுகின்றன.

திரு. வி. எஸ். எஸ். மணி: '[illegible] இன்பர்மேஷன்' இல் சில புகைப் படங்கள் வெளியிடுகிறார்கள். சட்ட மன்றம் கூடியிருக்கும் போதும் சில புகைப் படங்கள் எடுக்கப்படுகின்றன. அந்தப் புத்தகத்தில் பார்த்தால் அமைச்சர்கள் இருக்கும் வரிசைதான் வெளிவருகிறதே தவிர, எதிர்க் கட்சியில் இருக்கும் உறுப்பினர்களுடைய படம் வெளியிடப்படுவதே இல்லை. இது என்?

கனம் திரு. கோ. பூவராகன்: எதை முக்கியமாக எடுத்து வெளியிட வேண்டுமென்று நினைக்கிறார்களோ அதை எடுத்து வெளியிடுகிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: இந்த ஏடு லாபகரமாக நடைபெறுகிறதா? அப்படியானால் எவ்வளவு லாபம் வருகிறது?

கனம் திரு. கோ. பூவராகன்: லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக இந்த ஏடு நடைபெறவில்லை. அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்கள், மற்றும் இருக்கும் காரியங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக இது நடைபெறுகிறது.

திரு. சி. பொன்னுசாமி: விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளைப்பற்றி வெளிநாட்டுப் பத்திரிகைகளில் நல்ல அம்சங்கள் வெளியிடப்படுகின்றன. அந்தப் பத்திரிகைகளிலிருந்து முக்கியமானவற்றை எடுத்து நமது 'சென்னைச் செய்தி'யில் வெளியிட ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. கோ. பூவராகன: விவசாயத் துறை, தொழில் துறை இன்னும் மற்ற ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக ஏடுகள் இருக்கின்றன. அவற்றில் அம்மாதிரி கூட வெளியிடுகிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்த ஏடு லாபகரமாக நடைபெறவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இதற்காகச் செலவிடும் பணத்தைக்கொண்டு, மற்ற பத்திரிகைகளில் அரசினருடைய காரியங்களைக் குறித்து விளம்பரம் செய்யலாம் அல்லவா?

14th August 1963]

கனம் திரு. கோ. பூவராகன்: மற்ற பத்திரிகைகளுக்கும் விளம்பரம் கொடுக்கப்படுகிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: 800 பிரதிகள் இலவசமாக அனுப்பப்படுவதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார். ஒவ்வொரு நூல் நிலயத்திற்கும் இந்தப் பிரதி அனுப்பப்படுகிறதா? அப்படியில்லையென்றால், ஒவ்வொரு நூல் நிலையத்திற்கும் இந்தப் பிரதியை அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: நூல் நிலையத்திற்கு இப்பொழுது அனுப்பப் படுவதில்லை. அதைப்பற்றியும் பரிசீலனை செய்து அனுப்பலாம் என்கிற உத்தேசம் இருக்கிறது.

திரு. செ. கோ. விசுவநாதன்: அரசாங்க அச்சகத்தில் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறதென்பது உண்மையா? அப்படியானல் அந்த அச்சக இடத்தை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. கோ. பூவராகன்: இதற்குத் தனிக் கேள்வி போடலாம்.

போலீஸ் காவலறையில் மரணம்.

* **147. கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் மே மாத முதல் வாரத்தில் போலீஸ் லாக்கப்பில் இருந்தவர் யாரேனும் மரணமடைந்தாரா?

(இ) ஆமெனில், அவர் எப்போது கைது செய்யப்பட்டார்? எப்போது மரணமடைந்தார்?

(உ) அவர் இறந்ததற்குக் காரணமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ), (இ), (உ) 4—5—1963 அன்று காலை 11 மணி அளவில் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் காணப்பட்டார் என்ற காரணத்தின் பேரில் எஸ். கே. பாபு என்பவர் கைது செய்யப்பட்டு போலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வரப்பட்டார். சிறிது நேரத்திற்குள் பாதுகாப்பு அறையிலிருந்த அவர் வாந்தி எடுக்கத் தொடங்கினார். தான் கைது செய்யப்படுவதற்கு சிறிது நேரத்திற்குமுன் அரளி விதையைத் தின்றதாக அவர் போலீசிடம் ஒப்புக்கொண்டார். உடனே போலீசார் அவரை இராயப்பேட்டை மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு தகுந்த சிகிச்சை செய்த போதிலும், மறுநாள் 5—5—1963 அன்று அதிகாலையில் இறந்துவிட்டார். சென்னை அரசாங்க பெரிய ஆஸ்பத்திரியில் நடத்திய பிரேத பரிசோதனையின் படியும், குடல் ரசாயன சோதனையின் படியும், பாபு அரளி விதையை தின்றதின் காரணமாக இறந்திருக்கக்கூடும் என்பது தெரிந்தது.

(a) to (c) : On 4th May 1963 at about 11 a.m., an individual named S. K. Babu was arrested under suspicious circumstances, taken to the Teynampet Police Station and kept in the lock-up. Within a short while, he started vomitting in the lock-up room. He confessed to the Police that he had consumed Oleander seeds prior to his arrest. Thereupon the police immediately rushed him

to the Royapettah Hospital. In the early hours of 5th May 1963, he died in the Hospital in spite of treatment. According to the post-mortem examination of the body and the Chemical analysis of viscera and the stomach contents, the prisoner might have died due to the effects of the Oleander seeds he had consumed.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பாபு என்ற நபர் எப்பொழுது அரசாங்க ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்? காலை 11 மணிக்குக் கைது செய்யப்பட்டவர் இரவு நேரத்தில் அழைத்துச் செல்லப்பட்டாரா? எத்தனை மணி நேரம் அவர் போலீஸ் 'லாக்-அப்' பில் இருந்தார்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர் போலீஸ் லாக்-அப்' பில் இருந்தபோது பகல் 12-10-க்கு அவர் வாந்தி எடுத்தார். அதற்கு பிறகு அவரை கேட்டபோது, 'அரளி விதை சாப்பிட்டுவிட்டேன்' என்று சொன்னார். அதற்குப் பிறகு உடனே ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார். அன்று இரவு அவர் இறந்தார்.

திரு. மு. கருணாநிதி: 'அவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். 'அவர் அரளி விதை சாப்பிட்டுத் தற்கொலை செய்ய முயற்சிக்கிறார்' என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டாரா? அல்லது 'சந்தேகத்தின் பேரில்' என்னும்போது வேறு என்ன காரணம் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆள் பேரில் சந்தேகம் ஏற்பட்டால் போலீசார் விசாரிப்பார்கள். விசாரித்து விடை அளிக்கும் போது மேலும் சந்தேகம் ஊர்ஜிதப்படுகிறது. அந்த நிலையில் தான், போலீசார் புலன் விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகக் கைது செய்து, நடவடிக்கை எடுக்கிறார்கள்.

திரு. இராம அரங்கண்ணல்: இதைப்போன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறுவதாக நாம் கேள்விப்படுகிறோம். ஆகவே போலீஸ் நிலையத்திற்குக் கைது செய்யப்பட்டுக் கொண்டுவரப்படுகிற கைதிகள் நல்ல முறையில் பாதுகாப்பாக விசாரிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எல்லாப் பாதுகாப்புக்களும் இருக்கின்றன. தற்கொலை செய்துகொள்வது என்பது நம் நாட்டில் மாத்திரம்தான் என்பதல்ல. வேறு நாடுகளிலும் கூட தற்கொலை அதிகமாக நடைபெறுகிறது. உலகப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது ஐரோப்பாவில் தற்கொலைகள் அதிகம் இருப்பதாகத் தெரிகிறது.

திரு. செ. மாதவன்: சந்தேகத்திலே கைது செய்யப்படுவதை 'முக்காடு கேஸ்' என்று சொல்வார்கள். இது வெள்ளைக்காரன் காலத்தில் கொண்டுவரப்பட்ட நிலை. அதே நிலை இந்தக் காலத்திலும் நீடித்திருப்பதால் பல சொரூபங்களில் அது போலீசாருக்குப் பயன்படுகிறது என்பது உண்மையா? இதை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வெள்ளைக்காரன் கையாண்ட முறைகள் எல்லாவற்றையும் நாம் விட்டுவிடவேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. சந்தேகம் ஏற்பட்டால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். அது போலீசாருடைய கடமையும் பொறுப்பும் ஆகும்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் தலைவர் அவர்களே, அந்தக் கைதி அரளி விதை சாப்பிட்டதாகக் கூறப்படுகிறது. கைது செய்யப்படுவதற்கு முன்னாலேயே அரளி விதை சாப்பிட்டதாகக் கருதப்படுகிறதா? அல்லது, 'லாக்-அப்' பில் அடைத்து வைக்கப்பட்டிருந்தபோது அரளி விதை சாப்பிட்டதாகக் கருதப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முதலில் சந்தேகம் ஏற்பட்டு கைது செய்யப்பட்டார். வாந்தி எடுத்ததும் விசாரித்ததில், 'அரளி விதை சாப்பிட்டிருக்கிறேன்' என்று சொன்னார். அரளி விதை சாப்பிட்டது, கைது செய்யப்படுவதற்கு முன்பு. சந்தேகம் போலீசாருக்குத் தோன்றியதற்கும், போலீஸ் அவர்களைக் கைது செய்ததற்கும் அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். 9-36 p.m.

திரு. க. ர. நல்லசிவம்: அரளி விதை சாப்பிட்டதாகச் சொல்லப்பட்ட அந்தக் கைதியின் பிணம் 'போஸ்ட் மார்ட்டம்' செய்யப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 'போஸ்ட் மார்ட்டம்' செய்ததோடு கூட, குடலைப் பிரித்து எடுத்து ரசாயனப் பரிசோதனையும் செய்து பார்த்தார்கள். இரண்டு பரிசோதனைகளையும் செய்து பார்த்த பிறகு அவர் அரளி விதை சாப்பிட்டு இறந்திருக்கலாம் என்று கருதுகிறார்கள்.

திரு. செ. கோ. விஸ்வநாதன்: போலீஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்டு லாக்கப்பில் வைத்திருப்பவர்களுக்காக உணவுக்கு ஒதுக்கப்படுகிற தொகை எவ்வளவு? அவர்களுக்குச் சரியாக உணவு அளிக்கப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உணவு சரியாகத்தான் அளிக்கப்படுகிறது. எவ்வளவு தொகை என்பதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. கி. இரா. சம்பந்தம்: இந்த மாதிரி அரளி விதையைச் சாப்பிட்டு அதிகமான பேர்கள் இறந்து கொண்டு போகிற காரணத்தால் இந்த அரளி செடி வளர்ப்பதை அடியோடு தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அசல் விஷமாக இருந்தால் கூட அதுவும் சிலவற்றிற்குப் பயன்படுகிறது. அதே போன்று இந்த அரளி விதையும் வேறு வகையில் பயன்படக் கூடியதாக இருக்கும். விஷத்தையெல்லாம் அடியோடு அகற்றுவது என்பது அசாத்தியமான காரியம்.

[14th August 1963

Taxis

* 148 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to encourage fleet owners to operate taxis on a large scale in the City of Madras; and

(*b*) if so, the number of licences granted to fleet owners in 1963 ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) 85.

திரு. செ. மாதவன் : இப்படி கொடுக்கப்பட்ட அனுமதிகள், அந்த உரிமையாளர் மற்ற டாக்சிகாரர்கள் ஸ்டிரைக் செய்தாலும் அந்த ஸ்டிரைக்கில் பங்கு பெருமல் இருக்கவேண்டுமென்ற கட்டுப் பாட்டின் மீது கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுப்பதை அர சாங்கம் ஏற்றுக் கொள்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படிச் சொன்னல் கூடத் தவறு ஒன்றும் இல்லை. டாக்சிகள் போதாது என்பதற்காக ப்ளீட் ஓனர்களுக்கும் டாக்சி ஓட்டுவதற்காக அனுமதி கொடுக்கப்பட் டிருக்கிறது. அவர்கள் ஸ்டிரைக் செய்வார்களா, மாட்டார்களா என்று கேட்டுத் தெரிந்து கொண்டு அனுமதி கொடுப்பதில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : டாக்சி டிரைவர்களுடைய கட்டுப் பாட்டைக் குலைப்பதற்காக கிவ்ராஜ் கம்பெனி என்ற நிறுவனத்தை 50 டாக்சிகளை ஓட்டும்படி சர்க்கார் கேட்டது வாஸ்தவந்தானு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இருக்கக் கூடிய டாக்சிகள் போதாது என்று இந்த மன்றத்திலேயே அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அதிகமாக டாக்சிகள் பெருக வேண்டு மென்பதற்காக ப்ளீட் ஓனர்கள் எடுத்து நடத்திஞல் நலம் என்று போலீசாரோ, அரசாங்கமோ கருதிஞல் அதில் தவறுதல் இல்லை. டாக்சி டிரைவர்கள் என்ன செய்தாலும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் நினைப்பதாய் இருந் தால் அதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. இராம. அரங்கண்ணல் : தனிப்பட்ட முதலாளிகளைப் போல் சர்க்காரும் சில டாக்சிகளை விட்டு நடத்துவதற்கு முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு உத்தேசம் இப்போது ஒன்றும் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : டாக்சி கார்கள் வைத்திருக்கக் கூடிய ஒரு சிலர் வேண்டுமென்றே ஸ்டிரைக்கில் ஈடுபடுவதற்கு முயற்சிக் கும் காரணத்தால் பொதுமக்களுக்கு அதிகமான இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஏதாவது தனிப்பட்ட ஸ்தாபனத்திற்கு டாக்சிகள் ஓட்டுவதற்கான அனுமதி கொடுத்து ஸ்டிரைக் இல்லா மல் பொதுமக்களுக்கு உதவியாக டாக்சிகள் ஓடுவதற்கான முயற்சி கள் மேற்கொள்ளப்படுமா ?

14th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டாக்சி ஓட்டுகிறவர்கள் திடீ ரென்று ஸ்டிரைக் செய்வதற்கும் புதிதாக லைசென்ஸ் கொடுப்பதற் கும் ஒருவிதமான சம்பந்தமும் இல்லை.

விவசாய அபிவிருத்தி

*** 149 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் விவசாய அமைச் சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் விவசாய அபிவிருத்திக்காக மாவட்ட வாரியான திட்டங்கள் தயாரிக்க [illegible] திட்டக் கமிஷன் யோசனை கூறியதா ?

(இ) அப்படி கூறியிருந்தால், [illegible] திட்டங்கள் தயாரிக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இவ்விஞவிற்கிடமில்லை.

(*a*) No Sir.

(*b*) Does not arise.

61423

Rural Housing Scheme (Sing[illegible])

* 150 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have granted loan to the Harijans under Rural Housing Scheme at S.S. Kottai village in Singampunari Panchayat Union in Ramanathapuram district;

(*b*) whether it is a fact that these houses are incomplete for want of funds; and

(*c*) if so, the action taken by the Government in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Loans have been granted to Harijans, among others, under the Village Housing Project Scheme towards construction of houses in the village mentioned by the hon. Member.

(*b*) The houses are in different stages of construction.

(*c*) Does not arise.

திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்தின்படி எப்படி இந்த வீடுகளைக் கட்டவேண்டு மென்று முதலிலே நியமிக்கவில்லை. அப்படி ஒரு நியமனமான உத்தரவு பிறபிக்காத காரணத்தால் கடன் வாங்கியவர்கள் தங்க ளுக்குக் கொடுக்கப்பட்ட பணம் போதாமல் வீடுகள் கட்டி முடிக் கப்பெருமல் இருக்கின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சற்றேறக் குறைய 2,000 ரூபாய்க்கு அதிகப்படாமல் வீட்டைக் கட்ட வேண்டுமென்பது கொள்கை, அவர்களுக்குப் பணம் எப்போது கொடுக்கப்படுகிறது என்று சொன்னல், பேஸ்மெண்ட் கட்டியவுடன் ஒரு இன்ஸ்டால் மெண்ட், ரூப்லெவல் வந்த பிறகு ஒரு இன்ஸ்டால்மெண்ட்,

[14th August 1963

அதற்குப் பிறகு முடியும்போது ஒரு இன்ஸ்டால்மெண்ட் என்ற விதத்தில் பணம் கொடுக்கப்படுகிறது. வீடு கட்டும்போது அந்த அந்த ஸ்டேஜ் வருகிற நேரத்தில் பணம் கொடுப்பார்கள்.

திரு. செ. மாதவன்: எஸ். எஸ். கோட்டை என்ற ஊரிலே ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒரு பிளான்படி ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் வீடு கட்டுவதற்கு உடனடியாகப் பண உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: என்னிடத்தில் இருக்கிற லிஸ்டில் கனம் அங்கத்தினர் சொல்லுகிற தகவல் இல்லை. தனியாகக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதினால் விசேஷ கவனம் செலுத்தப்படும்.

திரு. ம. கமலநாதன்: கிராம வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களிலே வீடு கட்ட கடன் பெறுவோர் பெயரிலே அந்த நிலம் இல்லாத காரணத்தால் அப்படிக் கடன் கொடுக்கப்படுகிற நிலத்திற்கு இந்தத் திட்டம் சரியாக இயங்கவில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த திட்டம் நிலம் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்குத்தான் கடன் கொடுக்கும் திட்டம். நிலம் சொந்தமாக இல்லையென்றால் கடன் கிடைக்காது.

Cement

* 151 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether it is a fact that some flour mills in Salem district are grinding mud to be mixed with cement for adulteration; and

(b) if so, the steps taken to prevent the same?

THE HON. SRI V. RAMAIAH: (a) Some flour units in Salem district are mainly engaged in crushing granite and cuddappah stones. It cannot be said that they are crushing them for adulteration of cement.

(b) It is under investigation whether business by adulterating cement with cuddappah stone powder is being done.

(அ) சேலம் ஜில்லாவில் சில மாவு மில்கள் கிரானைட், கடப்பைக் கல் இவற்றை அரைப்பதில் முக்கியமாக ஈடுபட்டுள்ளன. சிமிட்டியில் கலப்படம் செய்வதற்காகவே அவற்றை அரைக்கின்றன என்று சொல்வதற்கில்லை.

(இ) சிமிட்டியில் கடப்பைக் கல் பொடியைக் கலந்து வியாபாரம் செய்யப்படுகிறதா என்பது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி: சிமிண்ட் பர்மிட் கொடுக்கும் வேலையானது தாலுகா தாசில்தார் அலுவலகத்தில் . . .

MR. SPEAKER: This question does not relate to issue of permit for cement. It relates to some other subject.

14th August 1963]

* 152 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether any suggestion has been received from the Union Government for introducing control measures for ensuring equitable distribution of cement;

(b) whether those suggestions have been acted upon; and

(c) whether a copy of the rules governing the distribution of cement will be placed on the table of the House?

THE HON. SRI V. RAMAIAH: (a) to (c): With reference to the suggestion of the Government of India, this Government have introduced permit system of distribution of cement. The question of issuing cement control order under the Industries (Development and Regulation) Act, 1951 is under consideration. A copy of the order will be placed on the Table of the House when finalised.

திரு. வி. எஸ். எஸ். மணி: சார், சிமெண்ட் பர்மிட் கொடுக்கும் வேலை தாலூகா ஆபீசில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தாலூகா ஆபீஸ் வேலை பாதிக்கப்படுகின்ற காரணத்தால் சிமெண்ட் பர்மிட் கொடுக்கும் வேலையைக் கவனிப்பதற்காகத் தனியாக ஒரு அதிகாரியை நியமித்து சரியாகக் கண்காணிக்க ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இப்போது சிமெண்ட் பர்மிட் கொடுக்கும் பொறுப்பை தாலூகா காரியாலயங்களில் கொடுத்திருப்பதற்கு காரணமே ஸ்தலத்தில் இருக்கக் கூடிய பொதுமக்கள் சிமெண்ட் வேண்டுமென்று கேட்கும்போது அதை நன்றாக ஆராய்ந்து உண்மையிலேயே தேவையா என்று தெரிந்து கொடுக்கப்பட வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான். இதற்கு விசேஷ அதிகாரி போட்டால் இன்னும் அதிகச் சிக்கல் ஏற்படும் என்பது அரசாங்கத்தின் கருத்து.

* 153 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Works be pleased to state the quantity of cement required by Madras Government as additional allotment during 1962 and the actual additional allocation made?

THE HON. SRI V. RAMAIAH: The additional allotment sought for by this Government during 1962 was 50,000 tonnes and the allotment made was 24,000 tonnes.

திரு. கே. ஏ. மதியழகன்: நாம் கேட்டதற்குப் பாதிதான் கிடைத்திருக்கிறது. இதற்குக் காரணம் அவர்களுக்கு நம் மீது இருக்கிற அசிரத்தையா அல்லது அவர்களால் கொடுக்க முடியாத நிலைமையா?

கனம் திரு. வெ. ராமைய்யா: நமக்குக் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் தீவிரமாக நினைக்கக் கூடிய காரணத்தால்தான் நெருக்கடி இருக்கும்போது கூட நாம் கேட்ட அளவுக்குக் கொடுக்காவிட்டாலும் கணிசமான பங்கைக் கொடுத்திருக்கிறார்கள்.

[14th August 1963

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய அபிவிருத்தி திட்டங்களின் வேலைகளுக்கு, குறிப்பாக பரம்பிக்குளம் ஆளியாறு போன்ற அணைக்கட்டு வேலைகளுக்காக மத்திய சர்க்காரிடமிருந்து அதிகமான சிமெண்டைப் பெறுவதற்காக நம்முடைய மந்திரிசபை கமிட்டி நியமித்தார்கள். அது அமைக்கப்பட்டு ரொம்ப நாள் ஆயிற்று. அந்த கமிட்டி வற்புறுத்தி எவ்வளவு சிமெண்ட் பெற்றிருக்கிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் கூறக்கூடிய கமிட்டிக்கும், சிமெண்ட் கொடுப்பதற்கும் சம்பந்தமே இல்லை. பரம்பிக்குளம்—ஆளியாறு போன்ற முக்கிய திட்டங்களுக்கான சிமெண்டையெல்லாம் மத்திய கோட்டாவில் இருந்து மத்திய அரசாங்கமே கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, இவற்றுக்கு வேண்டிய சிமெண்டை நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுத்து வாங்க வேண்டிய அவசியமில்லை.

* 154 Q.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the requirement of cement and the allotment made in the year 1962 to Madras State;

(b) whether the allotment for 1962 has been received in full; and

(c) if not, what is the gap and the reasons for the gap?

The Hon. Sri V. RAMAIAH : (a) The requirements sent to the Government of India under State quota in the year 1962 was 13,74, 374 tonnes and the allotment made was 5,35,200 tonnes.

(b) No.

(c) There was a gap of 1,12,364 tonnes in the despatch of cement by the cement factories. This was due to short supply by the factories and also due to supplies made to Defence, Railways, Power and Irrigation Projects on priority basis.

திரு. கே. ஏ. மதியழகன் : நமக்காக ஒதுக்கப்பட்ட சிமிண்டுக்கும் கேட்கப்பட்ட சிமிண்டுக்கும் வித்தியாசம் மலைக்கும் மடுவுக்குமாக இருக்கிறதே, அது ஏன் ?

கனம் திரு. வெ. ராமையா : போதுமான சிமிண்டு நாட்டில் இல்லாததுதான்.

*** 155 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்டங்களில் சிமிட்டி யார் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது ?

(இ) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் மூலம் விநியோகம் செய்ய அனுமதி தர உத்தேசமுண்டா ?

The Hon. Sri V. RAMAIAH : (a) Distribution of cement in the districts is being made by the Collectors, Tahsildars, Depufy Tahsildars of sub-taluks and the Headquarters Deputy Tahsildars of taluks.

14th August 1963]

(b) No.

திரு. ஆ. கு. சுப்பையா : பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் மூலம் விநியோகம் செய்வதற்கில்லையென்று சொன்னார்கள். பஞ்சாயத்து வேலைகள் மிகவும் தாமதப்படுகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கும் ஒரு கோட்டா என்று ஒதுக்கி உதவி செய்ய அரசாங்கம் யோசனை செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்கு கலெக்டரே சிமெண்டு ஒதுக்கிவிடுகிறார்கள். இது பொது மக்களுக்கு ஒதுக்கக்கூடிய சிமிண்டு கோட்டா பற்றியது. ஆகவே நான் இதை பஞ்சாயத்து யூனியன் கமிஷனரைக் கொண்டு ஒதுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன்.

திரு. சா. கணேசன் : பல்வேறு இடங்களில் பொதுமக்களுக்காக ஒதுக்கப்பட்ட சிமிண்டு கோட்டாக்கள் இரண்டு மூன்று மாதங்களுக்கு மேலாகியும் வியாபாரிகட்கு வந்து சேராமையினால், சிறிய வீடுகள், இதர வேலைகளை மேற்கொண்டுள்ள மக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்பதை உணர்ந்து கோட்டா ஒதுக்கப்பட்டவுடனேயே அந்த அந்த பிராந்தியத்திற்கு அவை போய்ச் சேரும்படியாக ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நமக்கு பாக்டரிகளில் இருந்து எப்போது சிமிண்டு கிடைக்கிறதோ அப்போதே எந்தெந்த பிராந்தியத்திற்கு எவ்வளவு கோட்டா கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்து கொடுத்து விடுகிறோம். அதை வியாபாரிகள் எடுப்பதில் ஏதாவது சிக்கல் இருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கனம் அங்கத்தினர் கொண்டு வந்தால் உடனே தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. சா. கணேசன் : வியாபாரிகள் எடுப்பதில் சிக்கல் எதுவும் இல்லை. கோட்டாவே ஒதுக்குவதில்லை, அதில் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. குறிப்பாக காரைக்குடி, பரமக்குடி போன்ற இடங்களில் இரண்டு மூன்று மாதங்களுக்கு மேலாக கோட்டா ஒதுக்கியும் சிமிண்டு வந்து சேருவதில்லை என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இதுபோன்ற குறைபாடு இருக்கும் பட்சத்தில் அதை நீக்க முடியும்.

திரு. கே. டி. கோசல்ராம் : இன்றைக்கு கள்ளமார்க்கெட்டில் விற்கப்படுகிற சிமிண்டு பெரும்பாலும் நம்முடைய பெரிய பெரிய திட்டங்களுக்காக அலாட் செய்யப்படுவதுதான் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? தெரிந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

[14th August 1963

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பொதுமக்களுக்கு எளிதில் சிமிண்டு கிடைப்பதில்லை. இருபது, முப்பது மைல் தூரம் போய் சிமெண்டு கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது. பத்து மைல் தூரத்திற்குள் சிமிண்டு கிடைக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

கனம் திரு. வெ. ராமையா: இப்போதுள்ள முறையை மாற்றும் யோசனை இல்லை.

திரு. ஆர். ரங்கசாமி: பஞ்சாயத்து யூனியன்களில் மிகவும் அவசியமாகப் பல காரியங்களுக்கு, கட்டிடம் கட்டுவதற்கு, கிணறு வெட்டுவதற்கு சிமெண்டு தேவைப்படுவதால் கமிஷனர் மூலம் விநியோகம் செய்யும் ஏற்பாட்டைக் கொண்டு வருவார்களா?

கனம் திரு. வெ. ராமையா: இப்போதுள்ள விநியோக முறையை மாற்றுவதாக இல்லை.

திரு. ம. கமலநாதன்: பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்கு சிமிண்டு தனியாகக் கொடுப்பதற்கு கோட்டா ஒதுக்கியிருந்தும் அதை அவர்களுக்குக் கொடுப்பதற்கும் காலதாமதம் செய்கிறார்கள். பொதுமக்களுக்குச் சிமிண்டு கிடைப்பதும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே கலெக்டர் பொறுப்பிலே இருக்கக்கூடிய இந்த ஏற்பாட்டை மாற்றி அமைக்கும் யோசனை உண்டா?

கனம் திரு. வெ. ராமையா: பொதுமக்களுக்கு ஒதுக்கக்கூடிய சிமிண்டுக்கும், பஞ்சாயத்து யூனியனுக்கு ஒதுக்கக்கூடிய சிமிண்டுக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இப்போது சிமிண்ட் விநியோகிப்பதுடன் அதிகாரிகள் நின்றுவிடுகிறார்கள். எந்தக் காரியத்திற்காகச் சிமிண்டு கோரினார்களோ, சிமிண்டு வாங்கியவுடன் அந்தக் காரியத்தைச் செய்தார்களா என்று அதிகாரிகள் விசாரித்தறிய ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: அப்படி இப்போது செய்வதாக உத்தேசம் இல்லை.

MR. SPEAKER: Questions are over.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II. CALLING ATTENTION TO THE OUTBREAK OF CHOLERA IN TIRUCHIRAPPALLI DISTRICT.

திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சில பகுதிகளில் சில நாட்களாகக் காலரா பரவியுள்ளதும், அது விஷயமாக அரசினர் எடுத்துக் கொண்டுள்ள தடுப்பு நடவடிக்கை பற்றியதுமான பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Mr. Speaker, Sir the first recent case of cholera in the Tiruchirappalli district occurred on 20th June 1963 in Soorampatty village

14th August 1963] [Srimathi Jothi Vencatachellum]

hamlet of Kidaram in Totiam Panchayat Union area of Musiri Taluk and subsided after two attacks. The infection spread to other neighbouring villages through labourers who had gone for agricultural operations to earn their livelihood. Most of the villages affected were in the neighbourhood of Kidaram in Thottiam Block.

Prompt action on the part of the Public Health staff brought the infection quickly under control in these villages, but the infection however developed in Musiri town about 15 miles lower down the river Cauvery with nine attacks and two deaths. This town has no protected water supply and the people depend solely on the river water, as all the wells are reported to contain brackish water.

The District Health Officer on receipt of information about the occurrence of cases of cholera visited the affected areas with Reserve Health Inspectors and started an intensive anti-cholera drive besides pot chlorination of water. A temporary isolation shed was also put up by the Musiri Town Panchayat for isolation of cases.

The District Health Officer and his Personal Assistant have been visiting the affected areas and instituting necessary preventive and control measures. As many as 25 Reserve Health Inspectors were posted to the District from the State Epidemic Reserve with a view to augment the existing Panchayat Union staff. On the advice of the District Health Officer, the District Collector has notified the entire District as threatened with cholera under Section 76 of the Madras Public Health Act, 1939.

The ambulance van of the Second Mobile Epidemic Unit stationed at Madurai has been diverted to Tiruchirappalli district besides one jeep with a trailer already available with the District Heatn Officer, Tiruchirappalli for effective supervision and transportation of cases to the nearest hospital or isolation shed. One of the Assistant Directors of Public Health has also been camping in the District along with the Epidemological Unit van to ensure effective supervision and to tighten up anti-cholera measures to check the further spread of infection. The District Health Officer is of opinion that the epidemic has shown signs of abatement.

The incidence of cholera in the Tiruchirappalli Municipality commenced from 19th July 1963 at Palakarai and then spread to other areas of the Municipality. From 19th July 1963 upto 29th July 1963, 72 attacks and 17 deaths occurred in the Municipality. The Municipal Health Officer took necessary preventive and control measures to check the spread of the infection. Measures such as chlorination of water supplies, disinfection of premises, disposal of the dead, health education of the public, general sanitation, isolation of cases and their treatment and intensification of anti-cholera inoculation drive were taken. The infectious diseases shed in the Government Hospital has been completely renewed and provided with extra beds. Cholera Inspectors and other anciliary cholera staff have also been appointed. So far 32,492 anti-cholera inoculations have been done.

[Srimathi Jothi Vencatachellum] [14th August 1963

Besides the above measures, the Municipal Health Officer has alerted hotel owners about cleanliness in Hotels. He has also prohibited exposure of food stuffs to dust and flies and selling of rotten and cut fruits. He has also issued a pamphlet in Tamil explaining to the public the measures to be taken by them to guard against the incidence of cholera. The cholera situation in the Municipality is being brought under control.

III. STATEMENT *re* ADMISSION TO MEDICAL COLLEGES IN THE STATE.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, on a point of order. Rule 82 says—

'A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker, but no question shall be asked at the time the statement is made.

என்ற விதி இருக்கிறது. இப்பொழுது 82-வது விதியின்படி நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த ஸ்டேட்மெண்ட்டை செய்யவில்லை. ஆனால், காலிங் அடென்ஷன் நோட்டீஸ் கொடுத்ததை, தாங்கள் ரூல் 82 ஸ்டேட்மெண்டாக 'கன்வெர்ட்' செய்திருக்கிறீர்கள், அதனால் அமைச்சர் அவர்கள் இந்த ஸ்டேட்மெண்டை இப்பொழுது கொடுக்கப்போகிறார்கள். நேற்றையதினம் நான் ஒரு 'காலிங் அடென்ஷன் நோட்டீஸ்' கொடுத்திருந்தேன்.

'As the Legislative Assembly is likely to adjourn on the 17th August 1963 and as more than one notice under rule 41 cannot be included for a day, the following rule 41 notices in respect of which statements have been received will be converted into statements under rule 82 of the Assembly rules and the Hon. Minister concerned as stated below will be making the statements, on the dates noted against each . . .'

என்ற குறிப்பை எனக்கு அனுப்பியிருக்கிறீர்கள். என்னுடைய ஆட்சேபனையெல்லாம், அமைச்சர் அவர்கள் இந்த ஸ்டேட்மெண்டுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க முன்வரவில்லை என்பதுதான். மெம்பர்கள் கவன ஈர்ப்புப் பிரச்சனையாகக் கொடுத்த நோட்டீஸ்கள் இம்மாதிரி திருப்பப்பட்டிருக்கின்றன.

MR. SPEAKER : Therefore hon. Member does not want a statement,—

SRI K. A. MATHIALAGAN : Sir, I will explain ....

MR. SPEAKER : It is I who has converted it, just to facilitate the statement being made today. If the hon. Member does not want it ....

SRI K. A. MATHIALAGAN : Sir, I respectfully agree.

14th August 1963]

MR SPEAKER : The statement will be sent to the hon. Member by post of the hon. Member has got any objection to this procedure.

திரு. கே. ஏ. மதியழகன் : 'மை கிரீவன்ஸ் ஈஸ்' இது ஒரு முக்கியமான பிரச்சனை. இந்த பிரச்சனையைப் பற்றி இந்த மன்றத்திற்கு அறிவிக்கவேண்டும். இந்த மன்றத்தினுடைய பொறுப்பையும் . . .

MR. SPEAKER : That has already been stated. What does the hon. Member want ? I have converted it because there cannot be more than one statement under rule 41 on the same day.

SRI K. A. MATHIALAGAN : I have no objection to it. But I want to raise another point.

எட்டு நாட்களுக்கு மன்றம் உட்கார்ந்து இருக்கிறது. 6 நாட்களுக்கு கவன ஈர்ப்பு பிரச்சனை வந்திருக்கிறது. இன்னும் இரண்டு 'காலிங் அடென்ஷன் நோட்டீஸ்' கூட ஒரு நாளைக்கு ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம். 41-வது விதியின்படி ஒரு நாளைக்கு ஒரு கவன ஈர்ப்புப் பிரச்சனையைத்தான் எழுப்ப முடியும் என்றிருப்பதால் ஒரு நாளைக்கு ஒன்று கொண்டு வரப்பட்டிருக்கலாம். மெடிகல் காலேஜில் இடம் இல்லை என்பது ஒரு முக்கியமான பிரச்சனை.

கனம் சபாநாயகர் : அதெல்லாம் சரிதான். What should be done now ?

திரு. கே. ஏ. மதியழகன் : இப்படிப்பட்ட ஒரு முக்கியமான பிரச்சனையைப் பற்றி இந்த மன்றத்தில் சொல்லவேண்டியது மிகவும் அவசியம். மன்றத்திற்கு மரியாதை கொடுக்காமல் ரொம்பவும் அலட்சியப்படுத்துகிறார்கள். அந்த நிலையை மாற்றவேண்டும் என்று வற்புறுத்துவதற்குத்தான் இந்த ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன்.

கனம் சபாநாயகர் : இதில் ஒழுங்குப் பிரச்சனை ஒன்றுமில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமைச்சர்களைப் பொறுத்தமட்டில், அங்கத்தினர்கள் எழுப்புகின்ற கவன ஈர்ப்புப் பிரச்சனைகளுக்கு ஸ்டேட்மெண்ட்கள் தயாரித்து, அவைகளை சட்டமன்ற அலுவலகத்திற்கு அனுப்புகிறார்கள். அது என்றைக்கு சபை முன்பு வைக்கப்படுகிறதோ, அன்றைக்கு அமைச்சர்கள் விடை அளிக்கிறார்கள். இதிலே அலட்சியப்படுத்துவதோ, மரியாதைக் குறைவோ ஒன்றும் கிடையாது. கவன ஈர்ப்புப் பிரச்சனையின் பேரில் ஒரு நாளில் ஒரு ஸ்டேட்மெண்டுக்கு மேலே கொடுக்க முடியாது என்று விதி இருப்பதினால், 2, 3 ஸ்டேட்மெண்டு கொடுக்கலாம் என்று தாங்களே இதை ரூல் 82 ஸ்டேட்மெண்டாக மாற்றியிருக்கிறீர்கள். இதில் ஒழுங்குப் பிரச்சனையோ, ஆட்சேபனையோ, கவனம் இன்மையோ எதுவுமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[14th August 1963

கனம் சபாநாயகர்: இதிலே 'பாயிண்டு ஆப் ஆர்டர்' ஒன்றும் கிடையாது. அலட்சியப்படுத்தவேண்டுமென்று எண்ணமும் கிடையாது. அலட்சியப்படுத்துவதற்கு சந்தர்ப்பமும் கிடையாது. கவன ஈர்ப்பு நோட்டீஸ்கள் அதிகமாக கொடுக்கப்பட்டிருந்தால், சீக்கிரம் இந்த மன்றத்தில் அவைகளுக்கு விடை அளிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரிய வேண்டுமென்பதற்காக, இந்த ஸ்டேட்மெண்ட்களை ரூல் 82-ன் படி கொடுக்க வேண்டுமென்று மாற்றப்பட்டது. கனம் அங்கத்தினர் இதற்கு சம்மதப்படாவிட்டால் அவர் கொடுத்த நோட்டீஸுக்கு ஸ்டேட்மெண்டு அவருக்கு போஸ்டு மூலமாக வரும். அப்படிச் செய்தால் விஷயம் மற்ற அங்கத்தினர்களுக்குத் தெரியாமல் போய்விடும்.

We must thank the Hon. Minister for coming forward to make a statement voluntarily. The Hon. Minister will now make a statement.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Mr. Speaker, Sir, I wish to make the following statement:—

Till the academic year ending April 1958, there were three Medical Colleges in this State with provision for annual admissions of 345 students as indicated below:—

1. Madras Medical College, Madras	... ...	135
2. Stanley Medical College, Madras	... ...	110
3. Madurai Medical College, Madurai	...	100
Total	...	345

From July 1958, another Medical College was opened at Thanjavur with provision for the admission of 75 students.

2. In order to augment the availability of medical manpower the Government of India suggested that the number of annual admissions to Medical Colleges might be increased up to 150 without the efficiency of the Colleges being affected. After an examination of this suggestion in consultation with the University of Madras, the Government ordered the following increase in the admissions to the Medical Colleges with effect from the academic year 1960–61:—

1. Madras Medical College, Madras—From 135 to 150.
2. Stanley Medical College, Madras—From 110 to 125.
3. Thanjavur Medical College, Thanjavur—From 75 to 100.

3. From the year 1960–61, the G.C.I.M. course was abolished and the College of Integrated Medicine was converted into one of Modern Medicine College (Now named the Kilpauk Medical College) with provision for an annual admission of 75 students. Again, the annual admissions in Government Medical Colleges

14th August 1963] [Srimathi Jothi Vencatachellum]

were increased from 550 to 600, i.e., by increasing the admission in the Madurai Medical College, from 100 to 150 with effect from July 1961.

4. In order to meet the National Emergency and also to meet the requirements of the Defence Services and on the recommendation of the Medical Council of India, the number of annual admissions in the Government Medical Colleges has been increased from 600 to 700 with the consent of the University of Madras, with effect from July 1963 as indicated below:—

1. Stanley Medical College, Madras—From 125 to 150
2. Madurai Medical College, Madurai—From 150 to 200
3. Thanjavur Medical College, Thanjavur—From 100 to 125

5. It will thus be seen that from 1958 onwards the Government are taking all possible steps to meet the demands of the students in regard to admissions to the medical course. However, the number of applications received every year for admission to Medical Colleges is about four times the number of seats available. Hence it will not be possible for the Government to provide admissions for all eligible candidates, as the opening of more Medical Colleges involve a huge outlay on buildings and equipment.

* **திரு. செ. மாதவன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 10–00 a.m.
மன்றம் துவங்கி, இரண்டு மூன்று தினங்களாகத் தொடர்ந்து கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களிலே "**The Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963**" என்ற மசோதா சேர்க்கப்பட்டிருந்தது. நேற்றும் இன்றும் கொடுக்கப்பட்டிருக்கிற அஜெண்டாவிலே "**any other item left over from the Agenda of 13th August 1963.**" என்று சொல்லப்பட்டிருக்கிறது. 13-ம் தேதி அஜெண்டாவிலே இந்த மசோதா வரவில்லை. இந்த மசோதா என்ன ஆனது என்று அங்கத்தினர்களுக்குத் தெரியவில்லை. இந்த மசோதா எடுபட்டுப் போனதா, அல்லது வாபஸ் வாங்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: It is coming up on the 16th August 1963.

IV. GOVERNMENT BILLS.

(1) THE MADRAS INAMS (SUPPLEMENTARY) BILLS, 1963.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras Inams (Supplementary) Bill 1963."

MR. SPEAKER: The question is—

"That leave be granted for the introduction of the Madras Inams (Supplementary) Bill, 1963."

[14th August 1963

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

(2) THE MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1963.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I beg to introduce the Madras General Sales Tax (Second Amendment) Bills, 1963 and move—

"That the Bill be taken into consideration".

கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய ராஜ்யத்தில் விற்பனை வரிச் சட்டம் 1939-ம் ஆண்டு வருஷத்தில் கொண்டு வரப் பட்டது. அதற்குப் பிறகு 1959-ம் வருஷத்தில் பழைய சட்டத்தை ரத்து செய்து, புதிய சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. புதுச் சட்டத்திலே 61-வது விதியின் படி என்னென்ன அலுவல்கள் பழைய சட்டத்தின்கீழ் தொடங்கப் பட்டு இருக்கிறனவோ, அவை எல்லாம் புதுச்சட்டத்தின்கீழ் தொடர்ந்து நடத்தலாம் என்று விதிகள் போட்டோம். ஆனால் பழைய சட்டத்தின் கீழ் வரியை ஏமாற்றி, அந்த வரியானது, 1959-க்கு முன்பு கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால், இப்பொழுது புதிய சட்டம், அதாவது 1959-ம் வருஷத்திய சட்டம் வந்த பிறகு, அதைப் பற்றி நடவடிக்கை எடுக்க முடியாது என்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு நாம் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சொன்னால் நம்முடைய ராஜ்யத்திற்கு அதனால் பணம் நஷ்டமாவதுடன், ஏமாற்றியவர்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்த மாதிரி ஆகி விடும். அதற்காக இந்த ஷரத்தை இப்பொழுது திருத்தி, ஏதாவது சட்டப்படி கொடுக்கவேண்டிய பாக்கிகள் அவை கண்டு பிடிக்கப்படாமல் இருந்தால் பின்னர் வழக்குத் தொடர முடியும் என்ற திருத்தத்தை 61-வது பிரிவின் கீழ் கொடுத்திருக்கிறோம்.

அடுத்தாற்போல், எல்லா ராஜ்யங்களும் ஒன்றாகச் சேர்ந்து 'லக்ஸரி குட்ஸ்' என்று சொல்லக் கூடிய ஆடம்பரப் பொருள்களுக்கு அதிகமான வரி விதிக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அந்த ஆடம்பரப் பொருள்கள் 1959-வது வருஷத்திய சட்டத்தின் முதல் ஷெட்யூலில் 1-லிருந்து 14 வரை இருக்கின்றன. இப்பொழுது அவைகளுக்கு 7 சத விகிதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இப்பொழுது மற்ற ராஜ்யங்களில் செய்து இருப்பதுபோல அந்த ஆடம்பரப் பொருளின்மீது 10 சத விகிதம் விதிக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கின்றோம். இந்த வரியானது சர்க்கார் குறிப்பிடுகிற தேதியிலிருந்து அமல் ஆகும்.

மூன்றாவது முக்கியமான ஷரத்து என்னவென்றால், கட்டித் தங்கத்திற்கு (அதாவது புல்லியனுக்கு) எவ்வளவு வரி விதிக்க வேண்டுமென்பதைப் பற்றியது. 1959-ம் வருஷத்திய

14th August 1963] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

சட்டத்திலே கட்டித் தங்கத்திற்கு ½ சத விகிதம் விற்பனை வரி விதிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம். இது டிரிப்யூனலுக்குச் சென்ற உடன், கட்டித் தங்கம் என்று சொன்னால் அது கலப்படம் இல்லாத தங்கமாக இருக்க வேண்டும், அதற்குத்தான் ½ சத விகிதம் கலப்படத் தங்கமாக இருந்தால், அது 22 காரட் தங்கமாக இருந்தாலும் சரி, அல்லது அதற்குக் குறைவாக இருந்தாலும் சரி, அதற்கு இரண்டு சத விகிதம் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பளித்து விட்டார்கள். சர்க்காருடைய நோக்கம் கட்டித் தங்கத்திற்கு ½ சத விகிதம் விதிக்க வேண்டும் என்பதுதான். ஆகவே அந்தத் தீர்ப்புக்கு மாறுதலாக 59-வது பிரிவின் கீழ் ஒரு நோட்டிபிகேஷன் செய்தோம். அதாவது, கட்டித் தங்கத்திற்கு ½ சத விகிதம்தான் வரி விதிக்க வேண்டுமென்று போட்டோம். அந்த நோட்டிபிகேஷனை இப்பொழுது சட்டபூர்வமாக ஆக்குகிறோம். இதற்கிடையில் ஐகோர்ட்டார் புல்லியன் அல்லது கட்டித் தங்கம் என்று சொன்னால், அது எவ்வளவு தரமாக இருந்தாலும், அது கட்டித் தங்கம் தான் என்கிற சர்க்காருடைய அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்து விட்டார்கள். என்றாலும் இதில் எந்த விதமான சந்தேகங்களுக்கும், இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காக இப்பொழுது திருத்தத்தைக் கொண்டு வந்து, கட்டித் தங்கம் என்ன காரட்டாக இருந்தாலும், எவ்வளவு அலாயாக இருந்தாலும், ½ சத விகிதம்தான் என்று போட்டிருக்கிறோம். இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவிலே கொண்டு வந்திருக்கின்ற மூன்று முக்கிய திருத்தங்களைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதலாவது திருத்தத்தின்படி விட்டுப்போன வரி ஏதாவது இருந்தால். அதை வசூல் செய்வதற்கு இப்பொழுது இடம் அளிக்கப்படுகிறது. ஆடம்பரப் பொருள்களுக்கு இப்பொழுது 7 சத விகிதமாக இருக்கும் வரியை 10 சத விகிதமாக உயர்த்துவதற்கு இரண்டாவது திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மூன்றாவது திருத்தத்தின்படி கட்டித் தங்கத்திற்கு, கலப்புள்ள தங்கமாக இருந்தாலும், அதற்கு ½ சத விகிதம் என்று செய்யப்பட்டிருக்கிறது.

முதலாவது திருத்தம் கண்டிப்பாக கொண்டு வரவேண்டிய ஒரு திருத்தம். இரண்டாவது திருத்தத்தைப் பொறுத்த வரையில், அதாவது 10 சத விகிதமாக வரியை உயர்த்துவது பற்றி "Statement of objects and reasons"-ல் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். நமது மாநிலத்தின் வருவாயை அதிகரிப்பதற்காக மற்ற ராஜ்யங்கள் எல்லாம் ஒப்புக்கொண்டபடி, இந்த ஆடம்பரப் பொருள்களின் மீது 10 சத விகிதத்திற்கு வரிபோட்டப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது விஷயமாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தப் பொருள்கள் ஆடம்பரப் பொருள்களாக இருந்தாலும், சில தொழில்கள் நம்முடைய [illegible]

புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம். மேலும் நமக்குப் பக்கத்திலுள்ள ராஜ்யங்கள் இந்த அதிகப்படியான வரி விகிதத்தை அமுலுக்குக் கொண்டு வந்து விட்டார்களா என்றும் தெரியவில்லை. மேலும் ஒன்றாவது ஷெட்யூலிலே, டைப்ரைட்டர்கள், கடிகாரங்கள், மோட்டார் சைகிள்கள், ரெப்ரிஜெரேட்டர்கள், வயர்லெஸ் ரிஸப்ஷன் கருவிகள், கேமிராக்கள், புரொஜக்டர்கள் போன்ற பலவகைக் கருவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை சம்பந்தப்பட்டத் தொழில்கள் நம்முடைய ராஜ்யத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தால், இப்பொழுது இந்த 7 சத விகிதத்தை 10 சத விகிதமாக ஆக்குவதன் காரணமாக இந்தத் தொழில்களின் உற்பத்தி ஓரளவுக்கு பாதிக்கப்பட்டு அவைகள் நசித்துவிடாத முறையிலே அவைகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தத் திருத்தத்தை கொண்டு வந்தபொழுது, இதை எல்லாம் கருத்திலே கொண்டிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். பொதுவாக எந்த ஒரு தொழிலும் நசித்து விடக்கூடாது என்ற அடிப்படைக் கருத்தை கனம் மந்திரி அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்படி உயர்த்துவதால் நம்முடைய ராஜ்யத்திலுள்ள தொழில்கள் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த அளவிலே இதை எல்லாம் பார்த்துப் பரிசீலனை செய்து அதற்கான விளக்கத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மூன்றாவது திருத்தத்திற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. இப்பொழுது 14 காரட் தங்கம் வந்து விட்டது. 22 காரட் தங்கம் கூட சுத்தத் தங்கம் இல்லை. ஆதலால் இந்தத் திருத்தம் கொண்டு வருவது மிகவும் அவசியம். ஆகவே இந்த மசோதாவை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவினை ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதனைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதா சில காரணங்களுக்காக இங்கே வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன காரணங்கள் என்று இன்னும் சற்றுத் தெளிவாக சொல்லி இருந்தால், நல்லதாக இருந்திருக்கும். எத்தனை லட்சம் ஏமாற்றி இருக்கிறார்கள், வசூலிக்கப்பட்ட வரிகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றால், எத்தனை அளவில் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படும் என்பவை போன்றவைகளை மெமோராண்டத்தில் கொடுத்திருக்கவேண்டும். இந்த மசோதா இருக்கும் வகையில் அதனைக் காணோம். இந்த மசோதாவில் இருக்கும் அடிப்படை நோக்கம் என்ன? வரியை வியாபாரிகள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதனை வசூலித்தமுறை சட்டத்திற்குப் புறம்பாக உள்ளது; அரசியல் சட்டத்தில் கொடுக்கப் பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானது என்ற காரணத்தினால், வியாபாரிகள் உயர் நீதி மன்றங்களில் ரிட் மூலமாக அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; அவர்களுடைய கோரிக்கை

திருத்துவதாக இருந்தால், உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டி இருக்கும் அளவிலே, சட்டத்தை திருத்தினால் சாலச் சிறந்ததாக இருக்குமே ஒழிய, ஒரு சட்டம் முறை தவறி நடத்தப்பட்டு, அதிலிருக்கும் ஓட்டை உடசல்களை வியாபாரிகள் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக, மீண்டும் கண்டுபிடிக்கப்பட்ட ஓட்டை உடசல்களைச் சரிசெய்ய சட்டம் திருத்தப்படுவது என்பது அவ்வளவு நல்லதல்ல. நியாயம் கிடைக்க வேண்டுமென்று உயர் நீதி மன்றத்திற்கு செல்லுகிறார்கள். உயர் நீதி மன்றத்திலே அளிக்கப்பட்ட நியாயத்தினால், அரசாங்கத்திற்கு பல லட்ச ரூபாய் நஷ்டம் என்றால், அதற்காக சட்டத்தைத் திருத்துவதும், பழைய கணக்கைப் பார்ப்பதும், தீர்ப்பை "ஸர்கம்வெண்ட்" செய்வது போலவும், அரசியல் சட்டத்தைப் புறக்கணிப்பது போலவும்தான் ஆகும். 1959-ம் ஆண்டு, ஏப்ரல் ஒன்றாம் தேதிக்குப் பிறகு பழைய பாக்கிகளை வசூலிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், அதை "வேலிடேட்" செய்யும் முறையில் இந்த திருத்தம் வந்து இருக்கிறது என்றாலும், நாம் செய்யும் தவறுதலுக்கு வியாபாரிகளை இன்னல்களுக்கு உள்ளாக்கக்கூடாது. வியாபாரிகள் ஆண்டாண்டு தோறும், கணக்கை எடுக்கிறார்கள். தனிப்பட்ட கம்பெனிகளில் ஷேர் ஹோல்டர்களுக்கு லாபக் கணக்குப் பார்த்து பங்கு கொடுத்திருப்பார்கள். இவ்வளவு நாட்களில் கம்பெனியே மாறுதல் அடைந்திருக்கும். 1959-லிருந்து மீண்டும் பின்னால் பரிசீலனை செய்ய வேண்டுமென்றால், கம்பெனியில் இருந்த பழைய ஷேர் ஹோல்டர்கள் தொடர்ந்து இருக்கிறார்களோ என்னவோ. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளால், கம்பெனிக்கு நஷ்டம் ஏற்பட்டால் அவர்கள் யாரிடம் போய் வசூலிப்பார்கள்? ஆகவே இம்மாதிரியான இடற்பாடுகளை அலசிப் பார்க்கவேண்டும். இன்றையதினம் வியாபாரிகள் ஏமாற்றுகிறார்கள் என்றால், அவர்களிடத்தில் குற்றம் இருக்கிறதா என்று கண்டு பிடித்து தண்டனை கொடுக்க முன்வரவில்லை. உயர் நீதி மன்றத் தீர்ப்புக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும். அதைப் புறக்கணிக்கும் முறையில் இன்றைக்குத் திருத்தம் வருகிறது. அஸெஸ்மெண்ட் செய்த அதிகாரிகள் தவறு செய்து விட்டார்கள் என்றால், அரசாங்கத்திற்கு சில பல ஆயிரம் ரூபாய்கள் நஷ்டம் இருந்தால், அதற்காகச் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை. திருப்பிக் கொடுக்க வேண்டியது எத்தனை லட்ச ரூபாய் என்று சொல்லி இருக்கவில்லை. ஆகவே, இதைப் புனர் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஹைகோர்ட் தீர்ப்புகளுக்கு அரசாங்கம் மதிப்புக் கொடுக்க வேண்டும்.

துருவி துருவிப் பார்த்துப் பார்த்து, ஹைகோர்ட்டு தீர்ப்பிற்கு புறம்பாக மீண்டும் அதைச் செல்ல வைக்க வேண்டுமென்று செய்வது சட்டத்தை திருத்துவது அவ்வளவு சாலச் சிறந்தது அல்ல.

இரண்டாவதாக, வரி விகிதங்கள் மாற்றப் படுவது பல இடங்களுக்கு வரவேற்கத் தக்கது. ஆனால், அதிலும் சிலவற்றிற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். சாதாரணஏழைகளுக்கும், நடுத்தர வர்க்கத்தினர்களும் உபயோகிக்கும் வாச்சுகள், கடிகாரங்கள், சைக்கிள்கள், ரேடியோக்கள் இவற்றிற்கும் ஏழிலிருந்து பத்து சதவிகிதம் என்று உயர்த்தி இருக்கிறார்கள். விலைவாசிகள் உயர்ந்துங் கொண்டே போவதன் காரணமாக அலுவலகங்களில் உள்ளவர்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்துகொண்டே போகிறது. பலவற்றை லக்ஷரி குட்ஸ் என்ற முறையில் சொல்ல முடியாது. ஒரு குமாஸ்தாவிற்கு கடிகாரம், சைகிள் போன்றவை லக்ஷரி குட்ஸ் என்று சொல்ல முடியாது. உண்மையான லக்ஷரி குட்ஸுகளுக்கு 7 லிருந்து 10 சதவிகித உயர்வை வரவேற்க முடியும். மோட்டார் கார்கள், மோட்டார் சைக்கிள்கள், மற்றும் உயர்ந்த ரக பொருள்கள். இவை மீதும் விழும் உயர்வை ஆதரிக்க முடியுமே தவிர, "நெஸஸரி குட்ஸுகளான கடிகாரம், டைப்ரைட்டர், சைகிள், ரேடியோ இவைகள் மீது போடப்படும் 10 பர்சென்டை ஆதரிப்பது முடியாத நிலைமை. அப்படி உயர்த்துவதன் காரணமாக நடுத்தர மக்கள், குறைந்த சம்பளம் வாங்குபவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த வரி விதிப்பின் காரணமாக அவர்களுடைய மாதச் செலவில் இன்னும் 2, 3 ரூபாய்கள் அதிகமாக ஆகிவிடும். ஒரு சைகிள் இல்லாமல், அவர்கள் சரியாக அலுவலகத்திற்கு வருவது பாதிக்கப்படும்; கடிகாரம் இல்லாவிட்டாலும் அவர்கள் அலுவலகத்திற்கு வருவது பாதிக்கப்படும். அவர்களுக்கு ஒரு சிறிய பொழுது போக்கு ரேடியோதான். உயர்ந்த ரக ரேடியோக்கள் தவிர, ஒரு 300 ரூபாய்க்கு அல்லது அதற்குக் குறைவாக இருக்கும் ரேடியோக்களுக்கு 10 பர்சென்டாக உயர்த்தாமல் இருந்தால், நல்லபடியாக இருக்கும். ஆகவே அந்த முறையில் வரி விகிதத்தை மாற்றி அமைக்க வேண்டும், அப்படிப் பட்டவர்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தங்கள் எல்லாம் பெரும்பாலும் நடைமுறைக் கஷ்டங்களை நிவர்த்திக்கக் கூடியவை. முதல் திருத்தம், பழைய வரி பாக்கிகளை வசூலிக்க என்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வியாபாரிகளுக்கு அதிக சிரமம் இல்லாமல் அந்த முறை பயன் படுத்தப்படும், அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று நம்புகிறேன். அந்த முறையிலே இந்த திருத்தத்தை உபயோகிக்க வேண்டும்

இரண்டாவது திருத்தம் பொருத்த மட்டில், பர்சென்டேஜை அதிகமாக்கி இருக்கிறார்கள். அதற்குக் காரணம், சொல்லியிருப்பது என்னவென்றால், மற்ற இராச்சியங்களிலே அந்த முறை அமுலுக்கு வந்து விட்டதால், நம் ராச்சியத்திற்கும் அது தேவை என்று விளக்கப்பட்டிருக்கிறது. இந்த விளக்கத்தை அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே அடிக்கடி தந்திருக்கிறார்கள். ஆனால், இந்த முறை சாதாரண மக்களால் உபயோகிக்கப்படக் கூடும் பொருள்களைக்கூட பாதிக்கும் அளவில் இருக்கிறதா என்று சிந்திக்க வேண்டும். மற்ற இராச்சியங்களிலே உயர்த்தி இருக்கும் ஒரே காரணத்திற்காக, நம் ராச்சியத்திலும் உயர்த்தவேண்டும் என்று நினைப்பது பொதுவாக இருக்கும் நிலையை உத்தேசித்தா என்று விளக்க வேண்டும். இன்னொரு காரணம் குறிப்பிட்டு இருப்பது போல மாநிலத்தின் வருவாய் அதிகப்படவேதானா என்று அமைச்சரவர்கள் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நம் மாநிலத்தினுடைய வருவாயை அதிகப்படுத்த வேண்டுமென்று மாற்றி அமைத்தால் அது சாதாரணமாக எல்லோருக்கும் தேவைப்படும் பொருள்களை பாதிக்காத அளவுக்கு மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த விற்பனை வரித் திருத்தச் சட்டத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விற்பனை வரிக் கணக்குகளை, 1959-ம் ஆண்டுக்கு முன் இருந்தும் கணக்குகளை பரிசீலிக்கலாம், மறுபடியும் அவர்கள் விற்பனை வரியிலிருந்து ஏதாவது தப்பித்து இருந்தாலோ, கணக்கில் ஏதாவது வித்தியாசங்கள் இருந்தாலோ, விற்பனை வரி செலுத்த வேண்டிய பொருளுக்கு ஏதாவது விற்பனை வரி செலுத்தாமல் வியாபாரம் செய்திருந்தாலோ, இப்போது அதைக் கண்டுபிடித்து வரி போடுவதற்கு வகை செய்யும் போது, பெரிய வியாபாரிகள் 1959-ம் ஆண்டினுடைய விற்பனையை ஃபைனலைஸ் செய்த பிறகு அந்த வருஷக் கடைசியில் விற்பனை வரி அதிகாரிகள் இவ்வளவு என்று போட்டதை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்தமாக என்னுடைய வருமானத்தில் இத்தனை வரி செலுத்தியிருக்கிறேன், மீதியுள்ள வருமானத்திற்கு வருமான வரி போடவேண்டுமென்று கணக்குக் கொடுப்பது வழக்கம். அப்படிக் கொடுக்கும்போது 1959-ம் ஆண்டுக்கு முன் விடப்பட்ட வரியை இந்த ஆண்டு வசூலிக்க வழி செய்து விட்டால் அந்த விற்பனை வரியை இந்த் ஆண்டு வருமானத்திலிருந்து கழித்துக்கொள்ள விற்பனை வரி இலாகாவினர் ஒப்புக்கொள்வார்களா என்பது சந்தேகமே. அதற்கு வழியிருந்தால் பாவாயில்லை. தப்பித்து

[திரு. ஜே. மாதா கவுடர்] [14th August 1963

வியாபாரிகளுக்குத் தெரியாமல் விடப்பட்டிருந்தால் அந்தப் பொறுப்பை வியாபாரிகள் தலையில் சுமத்துவதும் அவ்வளவு உசிதமல்ல. அதிகாரிகள் ஏமார்ந்த வரியை இன்றைக்குக் கண்டுபிடித்துப் போட்டால், வருமானத்திலிருந்து கழிக்க முடியாது, இந்த வருஷத்தில் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று சொன்னால் வியாபாரிகளின் நிலைமை என்ன ஆகும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, இப்படி பலமுனை வரியில் அடிக்கடி மாறுதல்கள் வரும் காரணத்தினால் ஒன்று செய்து விடுவது நல்லது. ஒருமுனை வரி, பலமுனை வரி என்ற நிலையில் பல தொல்லைகள் விற்பனை வரி இலாகாவில் ஏற்பட்டிருக்கிறது. நான் முன்புகூட என்னுடைய கருத்தை சொல்லியிருக்கிறேன். பலமுனை வரி என்று விதித்துவிட்டால் இந்தக் குழப்பம் ஏற்படாது. இப்போதுகூட 7 சதவீதத்தை பத்து சதவீதமாக செய்யலாமா என்று வழி வகை செய்கிறோம். இதெல்லாம் எதற்காக? பழைய மாதிரி பலமுனை வரி என்று போட்டால், வியாபாரம் செய்யும் அத்தனை பேர்களும் விற்பனை வரி செலுத்தினால், நமது மாகாணத்தின் விற்பனை வரி வருவாய் குறையாது என்று திட்டவட்டமாக மாகச் சொல்ல விரும்புகிறேன். இப்போது எத்தனை கோடி ரூபாய் வருவாய் வருகிறதோ அதைக் காட்டிலும் அதிகமாக நிச்சயமாக வரும் என்பதைப் பற்றி எந்தவிதமான சந்தேகமும் படவேண்டியதில்லை. நிச்சயமாக வருவாய் குறையாது. இந்த மாதிரி ஒருமுனை வரி வேண்டுமென்று வியாபாரிகள்தான் முதலில் தொல்லை கொடுத்தார்கள். அது எனக்குத் தெரியும். அது உண்மைதான். ஒரு சில வியாபாரிகள் தங்கள் சுயநலத்தைக் கருதி முன்பு தவறுதலாக ஏற்பாடு செய்து விட்டார்கள். இன்றைக்குக் கண்கூடாகப் பார்க்கும்போது மறு பரிசீலனை செய்து பலமுனை வரியாகச் செய்தால் எந்த ஒரு குறிப்பிட்ட பொருள் மீதும் வரியை அதிகமாகப் போட்டு விட்டார்கள் என்ற குறைபாடு இருக்காது. சாதாரணமாக லக்ஷுரி குட்ஸ் என்று போட்டு விட்டால், கார் வாங்குகிறவர்கள் அல்லது பெரிய குட்ஸ் வாங்குகிறவர்களுக்குப் போட்டால் இதையெல்லாம் சொல்ல மாட்டார்கள். சாதாரணமாக பவுடர் டின்னை எடுத்துக் கொள்ளுங்கள். பெண்கள் எல்லோரும் சாதாரணமாக உபயோகிக்கக்கூடிய பொருள். அதற்கு 10 சதவீதமாகச் செய்து விட்டார்கள் . . . .

14th August 1963]

திரு. ஜே. மாதா கவுடர்: ஆடம்பரப்பொருள் என்றோ, ஆடம்பரம் இல்லாத பொருள் என்றோ பாகுபாடு தேவையில்லை என்ற கருத்தைத் தான் நான் சொல்லுகிறேன். ஒரு வஸ்து ஒருவருக்கு ஆடம்பரப் பொருளாக இருக்கலாம். அதே வஸ்து இன்னொருவருக்கு ஆடம்பரமில்லாத பொருளாக இருக்கலாம். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி என்ன சொன்னார்? இதே போலத் தான் அவருடைய தொகுதியிலும் சொல்லுவார். கிளார்க்குகள் கட்டிக் கொள்ளும் வாட்சுக்குக் கூட வரியை அதிகமாக்கி விட்டார்கள். அவர்கள் வாங்கிக் கொள்ள முடியாவிட்டால் எப்படி அவர்கள் சரியாக 10 மணிக்கு வர முடியும் என்று சொல்லுவார்கள். சர்க்கார் பேரில் குறையைச் சொல்லக் கூடிய அளவில் இருப்பதால் எல்லாப் பொருள்களுக்கும் பல முனை வரி போட்டுவிட்டால் சர்க்கார் பேரில் குறை சுமத்தக்கூடிய அளவில் இல்லாமல் இருக்கும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அதை மறு பரிசீலனை செய்வது நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது தங்கமே விற்பனை செய்வது கிடையாது. தங்கம் என்ற பொருளுக்கே ½ சதவீதம் என்று வந்திருக்கிறது. தங்கமே இல்லாதபோது ½ சதவீதம் தங்கத்திற்கு வரி வேண்டுமா, விற்பனை வரி இல்லை என்று போட்டுவிட்டால் என்ன பாதகம் ஏற்பட்டு விடும், அதனால் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டு விடும் என்று கேட்க விரும்புகிறேன். தங்கமே விற்பனைக்கு இல்லாமல், 14 காரட் தங்கத்தை இண்ட்ரட்யூஸ் செய்து வாங்குங்கள் என்று சொல்லும் போது ½ சதவீதம் வரி என்று வைப்பதால் பலன் உண்டா? இதை வைத்துக்கொண்டு பல பிரசாரத்திற்கு இடம் ஏற்படுமே என்று அஞ்சுகிறேன். இதையும் அமைச்சர் அவர்கள் கவனித்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இன்னொரு திருத்தம் என்ன என்பதைப் பார்க்கும்போது, நான் நேற்று சினிமாவுக்குப் போயிருந்தேன். சினிமா டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே போகும்போது போர்டு போட்டிருந்ததைப் பார்த்தேன். அப்போது அமைச்சர் ஞாபகம் வந்தது. டிக்கெட்டில் பாதியைத் தொலைத்து விட்டால் 500 ரூபாய் அபராதம் என்று போட்டிருந்தது. வாங்குகிறவர்களுக்கு அபராதமா அல்லது விற்பனை செய்கிறவர்களுக்கு அபராதமா என்று கேட்கிறேன். விற்பனை செய்கிறவர்கள், தியேட்டர் அதிபர்கள் டிக்கெட் இல்லாமல் உள்ளே அனுப்பியிருந்தால் அதைக் கண்டுபிடிப்பது நியாயம். டிக்கெட் வாங்கிவிட்டு, பாதி டிக்கெட்டைத் தொலைத்து விட்டால் 500 ரூபாய் அபராதம் என்று சொன்னால் என்ன அர்த்தம் என்று புரியவில்லை. அந்த போர்டையும், ஸ்லைடையும் பார்த்த பிறகு என்னால் படம் பார்க்கவே முடியவில்லை. அப்போது அமைச்சர் ஞாபகம்தான் வந்தது. எங்கே பாதி டிக்கெட்டைத் தொலைத்து விடுவோமோ, மறு நாள் பேப்பரில் சட்ட மன்ற உறுப்பினருக்கு அபராதம் என்று வந்து விடுமோ என்று பயம் ஏற்பட்டு படம் பார்க்க முடியவில்லை. இப்படி குற்றம் சுமத்தக்கூடிய [illegible]

[திரு. ஜே. மாதா கவுடர்] [14th August 1963

வருவதைத் தவிர்த்து, விற்பனை வரியைப் பொருத்த வரையில் சரியான அளவில் பல முனை வரி போட நடவடிக்கை எடுத்து ஒரே சட்டமாகக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டு பொது விற்பனை வரித் திருத்த மசோதாவின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் திருத்த மசோதா இந்த ஆண்டிலேயே, அதுவும் மார்ச் மாதத்திற்குப் பின்னால் வருகிற இரண்டாவது திருத்த வரி அதிகரிப்பு மசோதா என்று சொன்னால் அது மிகையாகாது. 1939-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் வந்தது. அதற்குப் பின்னால் பல திருத்தங்கள் செய்யப்பட்டு 1959-ம் வருஷ வாக்கிலே டாக்டர் லோகநாதன் ரிப்போர்ட்டை வைத்து அதற்கிணங்க சட்டத்தைத் திருத்தி ஒரு புதுச் சட்டத்தையே உருவாக்கியிருக்கிறோம் என்ற முறையில் செய்தார்கள். இருந்தாலும்கூட அதற்குப் பிறகு பல திருத்தங்கள் வருவதைப் பார்க்கிறோம். சென்ற சட்ட மன்ற கூட்டத் தொடரில் காஸ்மெட்டிக்ஸ், டாய்லெட்ஸ் ஆகியவற்றுக்கு ஒரு முனை வரி என்று இருந்ததை பல முனை வரியாக மாற்றி, ஒரு முனை வரியைக் குறைத்து, அதே சந்தர்ப்பத்தில் பல கோடி ரூபாய் வரியாக வரும் என்ற முறையில் திருத்தி அமைக்கப் பட்டது. கூடுதலாகப் பணம் வரலாம். அதோடு மட்டுமல்லாமல் சென்ற கூட்டத் தொடரில் பற்றுக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும் புது வரி போடவில்லை என்று சொல்லப்பட்டது.
10–30 a.m. ஆனால் இந்த திருத்த மசோதாவின் மூலமாக 1-லிருந்து 14 இனங்கள் வரை உள்ள பொருட்களுக்கு 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் என்று உயர்த்தியிருக்கிறோம். ஏற்கனவே பற்றுக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும், புது வரிகள் ஒன்றும் போடப்படவில்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது வரிவிகிதத்தை உயர்த்திக்கொண்டு வருகிறார்கள். இதிலிருந்து வரி அதிகமாக போடப்படுகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆகவேதான் நாங்கள் எங்கள் ஆட்சேபணையை தெரிவிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இப்போது உயர்த்தப்பட்டிருக்கும் பொருட்கள் எல்லாம் ஆடம்பரப் பொருட்கள் தானே என்று சொல்லக்கூடும். ஆகவே தான் எங்கள் ஆட்சேபணையை ஓரளவுக்கு நாங்கள் காட்டுப்படுத்திக்கொள்ளவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இருப்பினும் நடுத்தர மக்கள் அதிகமாக உபயோகிக்கக்கூடிய 1-ம் 2-ம் இனங்களிலுள்ள பொருட்களுக்கு, அதாவது தட்டெழுத்து இயந்திரங்கள், அது சம்பந்தமான சாமான்கள், கிளாக், டைம்பீஸ்கள், வாட்ச்கள் அது சம்பந்தமான பொருட்கள், கிராமபோன், அது சம்பந்தமான பொருட்கள் இவைகளுக்கு எல்லாம் இப்போது 10 சதவிகிதம் என்று உயர்த்தியிருப்பதை நாங்கள் வன்மையாக ஆட்சேபிக்கிறோம். ஆகவே அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஏற்கனவே இருந்தது போன்று விட்டு, உயர்த்தாமல் இருக்கும்படி

14th August 1963] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, 1959-ம் ஆண்டில் நல்ல முறையில் விற்பனைவரி சட்டத்தை நாம் இயற்றியிருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அடிக்கடி திருத்த வேண்டுமா என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இப்படி அடிக்கடி திருத்தம் கொண்டு வருவதைப் பார்த்தால், பட்ஜெட் சமயத்தில் செய்யவேண்டியதைத்தான் இப்போது செய்கிறார்களோ என்று எண்ண வேண்டிய நிலைமையில் இருக்கிறது. அடிக்கடி ஒரு பொருள் ஒருமுனை வரியாக இருக்க வேண்டுமா அல்லது பல முனை வரியாக இருக்கவேண்டுமா என்று ஆராய்ச்சி செய்யவேண்டிய தேவையில்லை. 1959-ம் ஆண்டில் பொருளாதார நிபுணர் ஒருவரை நியமித்து, இன்னின்ன பொருட்களுக்கு ஒருமுனை வரி இருக்க வேண்டும், இன்னின்ன பொருட்களுக்கு பலமுனை விற்பனை வரி இருக்கவேண்டும் என்பதையெல்லாம் திட்டவட்டமாக சொல்லியிருக்கிறார்கள். அதோடு அவசியம் ஏற்படுகின்ற நேரத்தில் தேவைப்படும் ஒரு சில பொருட்களுக்கு மட்டும், ஏதாவது மாற்றம் செய்யவேண்டுமென்றால் அப்போது மட்டும் திருத்திக்கொண்டால் போதுமானது. அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பது சரியாக இராது. பொதுவாக இந்த திருத்த மசோதாவின் மூலமாக சர்க்காருடைய கஜானாவுக்கு வருவாய் அதிகமாகிறது. அமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் மற்ற மாநிலங்களில் எல்லாம் சில பொருட்களுக்கு வரி அதிகமாக இருக்கிறது. ஆகவே நாம் அந்த மாநிலங்களோடு போட்டி போட முடியாது. ஆகவே நாமும் அவர்களைப் போன்று வரியை அதிகரித்தாக வேண்டும் என்று சொன்னார்கள். மற்ற மாநிலத்திலுள்ள மக்கள் வேறு பல துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள், அதே போன்று நாம் முன்னேறியிருக்கிறோமா, மற்ற மாநிலங்களில் எல்லாம் எத்தனையோ புதுச் சட்டங்களெல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நாம் நிறைவேற்றியிருக்கிறோமா? ஆகவே மற்ற மாநிலங்களை இம்மாதிரிப்பட்ட காரியங்களுக்கு உதாரணமாக காட்டுவது சரியாக இராது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே பல வரி விதிப்புகளால் நடுத்தர மக்கள் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் இப்போதும் நடுத்தர மக்கள், பாட்டாளி மக்கள் உபயோகிக்கக்கூடிய பொருட்கள் மீது இருக்கின்ற வரியை உயர்த்தக்கூடாது என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவைப்பற்றி ஓரளவு தவறான கருத்துக்கள் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால்தான் இதைப்பற்றி குறைபாடுகள் சொல்லப்பட்டன என்று நினைக்கிறேன். புலியன் சம்பந்தமாக இன்றைக்கு நாம் செய்திருக்கின்ற திருத்தம், டிரிபுனல் இன்னும் அதிகமாக வரி விதிக்கவேண்டும் என்று சொல்லியிருந்தாலும், இப்போது இருக்கின்ற வரியே நீடிக்க வேண்டும் என்பதுதான். இதை யாரும் எதிர்க்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அடுத்தபடியாக, சில பொருட்களுக்கு 7 சதவிகிதம் என்றிருந்ததை 10 சதவிகிதம் என்று உயர்த்தப்பட்[illegible]

[திரு. கோ. வெங்கட்டராமன்] 14th August 1963]

பதைப்பற்றி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இதன் காரணமாக நமது நாட்டிலுள்ள தொழில் பாதிக்காதா என்று கனம் சங்கரன் அவர்கள் கேட்டார்கள். பொதுவாக நம்முடைய நாட்டோடு முக்கியமாக இந்தப் பொருட்களில் போட்டி போடக் கூடியது மகாராஷ்டிரம்தான். அங்கிருந்துதான் இச்சாமான்கள் அதிகமாக வருகின்றன. நம்முடைய பக்கத்து ராஜ்யங்களில் எல்லாம் இதற்கு 10 சதவிகிதம் என்று நிர்ணயித்து இருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் இப்போது இருக்கின்ற முறைப்படி பார்த்தால் 7 சதவிகிதம் கொடுக்கவேண்டும், மத்திய விற்பனைவரியாக 2 சதவிகிதம் கொடுக்கவேண்டும். இப்படி 9 சதவிகிதத்திற்கு சென்னை ராஜ்யத்தில் மட்டும் விற்க முடியும். இதன் காரணமாக நம்முடைய ராஜ்யத்திலுள்ள டிரேடர்ஸ் பாதிக்கப்படுவார்கள். இப்போது 100 ரூபாய்க்கு ஒரு பண்டத்தை மகாராஷ்டிரத்திலிருந்து விற்பனை செய்யவேண்டும் என்றால், நம்முடைய ராஜ்யத்திலுள்ள 7 சதவிகிதமும் மத்தியவரியாக 2 சதவிகிதமும் கொடுத்து 9 சதவிகிதத்தில் நம்முடைய சென்னை ராஜ்யத்தில் விற்கவேண்டும். அதே நேரத்தில் பம்பாயில் 10 சதவிகிதத்திற்கு விற்கவேண்டும். அதாவது 100 ரூபாய் பெறுமான ஒரு பண்டத்தை நம்முடைய ராஜ்யத்தில் 109 ரூபாயாகவும், பம்பாயில் 110 ரூபாயாகவும் விற்கவேண்டும். இதனால் பொதுவாக வியாபாரம் பாதிக்கப்படும். இதை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். இன்டர் ஸ்டேட் டிரேட் எப்போதுமே எல்லா ராஜ்யங்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டும். ஒரு ராஜ்யத்திலிருந்து இன்னொரு ராஜ்யத்திற்கு அனாவசியமாக பொருட்கள் போவதையும் நாம் தடுத்தாக வேண்டும். ஆகவேதான் இதில் எல்லா ராஜ்யங்களும் ஒரே முறையில் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் 10 சதவிகிதம் என்று போடப்பட்டிருக்கிறது. இதனால் ஓரளவுக்கு சர்க்காருக்கு வருமானம் வரும் என்பது உண்மை. வருமானம் வருகிறது என்ற காரணத்திற்காக இதை எதிர்ப்பது என்பது சரியல்ல. இதன் மூலமாக நமது ராஜ்யத்திற்கு நன்மையா இல்லையா என்பதை பார்த்துத்தான் தீர்மானிக்கவேண்டும். வருமானம் வருகிறது என்பதை வைத்துக்கொண்டு இதை எதிர்க்கிறேன் என்று சொன்னால் அது சரியான வாதம் என்று சொல்ல முடியாது.

அடுத்ததாக, இந்தச் சட்டத்தைத் திருத்துகின்ற பொழுது, பழைய கணக்கில் ஏமாற்றப்பட்டு ஏதாவது தொகை இருக்குமானால் அதை வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் கொடுக்க வேண்டும் என்பது. கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில், அப்படி ஏதாவது வியாபாரிகள் ஏமாற்றியிருந்தால்கூட, இதை திருப்பி வசூல் செய்யக்கூடாது, அவர்கள் முன்பே தப்பித்துவிட்டார்கள், தப்பித்துக்கொண்டவர்கள் தப்பித்துக்கொள்ள வேண்டியது தான். அவர்களைப்போய் இப்போது வரியைக் கொடுங்கள் என்று கேட்கக் கூடாது, அதை விட்டுவிட வேண்டியதுதான் என்று சொன்னார்கள். ஒருவர் கணக்கில் தப்பித்துக்கொண்டார் [illegible]

14th August 1963] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

அதைப்பின்னால் உள்ள கணக்கிலிருந்துதான் கண்டுபிடிக்க முடியும். ஒரே வியாபாரியின் பின்னாலுள்ள கணக்கிலிருந்தோ அல்லது மற்றவர்களுடைய கணக்கிலிருந்தோதான், ஏமாற்றப் பட்டதை கண்டுபிடிக்க முடியும். இதற்கு முன்னால் சட்டத்தில் போட்டிருந்த 8-வது கிளாஸ் போதும் என்று நினைத்திருந்தோம். அது இப்போது ஹைகோர்ட்டில் போதாது என்று சொல்லி விட்டார்கள். இப்போதுள்ள விதிமுறை போதாது, தகுந்த விதி முறை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பின்னால் கணக்குகளை பரிசீலனை செய்யும்போதுதான் ஏமாற்றியிருப்பது தெரியும். ஆகவேதான், பின்னால் அவ்விதம் ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இப்போது சொல்லப் பட்டிருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்தத் திருத்த மசோதாவுக்கு கொடுத்திருக்கின்ற காரணத்தில்

"To overcome the situation created by the judgment of the High Court and to validate the levy and collection of taxes due for any period prior to the 1st April 1959, but levied and collected after the said date".

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏமாற்றுவது என்பதுமட்டுமல்ல, ஏற்கனவே வசூல் செய்ததை "ரிஃபண்ட்" செய்யவேண்டி யிருக்கும். அதை தடுக்கவேண்டும், வசூல் செய்ததை திருப்பிக் கேட்பார்கள், "ரிஃபண்ட்" கேட்கும்போது அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படும். ஆகவே அதை தடுக்கவேண்டும் என்றுதான் காரண-காரியத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அதைதான் நான் எடுத்துச் சொன்னேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதிலேயே மேலும் ஒரு வரி படித்திருந்தால் நன்றாகத் தெரிந்திருக்கும். அதாவது—

"The High Court has, however, held that the said proviso does not provide for initiation of fresh proceedings for enforcement of that liability after the commencement of the Madras Act I of 1959, that Section 8 of the Madras General Clauses Act, 1891 (Madras Act I of 1891) cannot be called in aid, and that therefore the fresh proceedings taken by the Department against the dealers in question after the 1st April 1959 were not sustainable. The result is that a dealer evading tax under the old Act cannot be assessed now even after the escaped turnover has come to the notice of the authorities.' இதுதான் முக்கியமானது. ஹைகோர்ட்டில் என்ன சொன்னார்கள்? "முன்பே 'ப்ரொஸீடிங்ஸ்' எடுத்திருந்தால், அந்த ப்ரொஸீடிங்ஸைத் தொடர்ந்து நடத்தலாம், அதற்கு ஒன்றும் 'அப்ஜெக்ஷன்' இல்லை. [illegible] சட்டம் வந்த போது கூட கண்டுபிடிக்கப்படாமலிருந்து பின்னால் கண்டு பிடிக்கப்பட்டால், அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்கு [illegible]

விதிகள் வேண்டும்" என்று சொன்னார்கள். ஒதுக்கப்பட்ட அஸெஸ்மென்டை விட்டுவிட வேண்டும் என்பதை யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் பேசும்போது, "இதனால் ஒரு புதிய harassment இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று சொன்னார்கள். சர்க்காருடைய நோக்கமும் அதுதான். பழைய கணக்கு எல்லாவற்றையும் புதிதாகப் பரிசீலனை செய்வதாக உத்தேசம் இல்லை. முதலில் ஏமாற்றப்பட்டிருந்து, பின்னால் கணக்குகளைப் பரிசீலனை செய்யக்கூடிய நேரத்தில் தெரிகிறது. அதற்குத்தான் வழி செய்யப்படுகிறது. ஆனால், பழைய கணக்குகள் பூராவையும் பொறுத்து de novo enquiry நடத்துவது இல்லை. இந்த மசோதாவில் எதிர்ப்பதற்குரிய அம்சம் ஒன்றுமில்லை என்று சொல்லி, இந்த மசோதாவை சபை ஏற்றுக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசும்போது, வேறு மாநிலங்களில் அத்தியாவசியப் பொருள்களின் மீது 10 சதவிகித வரி இருக்கும் காரணத்தால் இங்கு குறைப்பதற்கில்லை என்ற காரணத்தை எடுத்து விளக்கினார்கள். அந்தக் காரணம் இந்த நிலைமையைப் பொறுத்தவரையில் சரியாக இருந்தாலும், நடுத்தர மக்களும், ஏழை மக்களும் பாதிக்கப் படுகிறார்கள் என்பதையும் கவனிக்கவேண்டும். பொதுவாக, ஏழை மக்களுடைய நல்வாழ்வையும், அவர்களுடைய வாழ்க்கை வசதிகளையும் அடிப்படையாக வைத்து, எல்லா மாநில அமைச்சர்களையும் கலந்தாலோசித்து, இப்படிப்பட்ட வரியை விதிப்பதற்கு யோசிக்கக்கூடாதா? அதுபற்றி இந்த அரசாங்கம் மற்ற மாநில அமைச்சர்களுக்கு யோசனை வழங்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதிலே இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமா? அல்லது நடுத்தர வர்க்கத்தினரின் கஷ்டங்கள் தவிர்க்கப்படவேண்டுமா? என்பதைக் கவனிக்கவேண்டும்—என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். சர்க்காருடைய அபிப்பிராயமாக இதை நினைக்கவேண்டாம்—தொழில் வளர்ச்சி ஏற்படுவதுதான் முக்கியமானது. காரணம் என்னவென்றால், நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதன் மூலமாகத்தான் நடுத்தர வர்க்கத்தினருக்கு வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். வாழ்க்கைத்தரமும் உயரும். நடுத்தர வர்க்கத்தினருக்கு விலைகள் அதிகமாகப் போகக்கூடாது என்று மட்டும் சொல்லிக்கொண்டிருந்தால், பல காரியங்களை நாம் இங்கே செய்ய முடியாது. காரணம் என்னவென்றால், யாராவது ஒருவர் புதிதாகத் தொழில் ஆரம்பிக்கும்போது பல சலுகைகள் கொடுக்கவேண்டியிருக்கும். அப்படிச் சலுகைகள் கொடுக்கும்போது சிலர் பாதிக்கத்தான் படுவார்கள். ஒரு நாட்டின் நிர்வாகத்தை நடத்தும்போது பல கஷ்டங்கள் ஏற்படலாம். அந்தக் கஷ்டங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, அந்தக் கஷ்டங்களில் எதை ஏற்றுக்கொண்டால் நாடு

பூராவுக்கும் நன்மையாக இருக்கும் என்பதைப் பார்த்துத்தான் செய்யவேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படுவது முக்கியமானது. மேலும், இந்தத் தொழில்களெல்லாம் நம்முடைய ராஜ்யத்தில் நடந்துகொண்டிருக்கும் தொழில்கள் ஆகும். ஆகவேதான், அதற்கு அவசியம் ஆகிறது.

பொதுவாக, ராஜ்யங்கள் பூராவும் ஏன் இந்த உயர்வைச் செய்தார்கள் என்றால், அந்தந்த ராஜ்யத்தில் இருக்கும் நிதி நெருக்கடியை ஒட்டி முடிவு செய்கிறார்கள். அந்த முடிவினால் நம்முடைய ராஜ்யம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு நாம் சில காரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் கோருகிறேன். அண்டை ராஜ்யத்தில் 10 சதவிகிதம் என்றும், நம்முடைய ராஜ்யத்தில் 7 சதவிகிதம் என்றும் வரி இருந்தால், பொருளின் விலை 109 ரூபாயாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய ராஜ்யத்தில் 7 சதவிகிதமாக இருந்தால், அந்தப் பொருளை உற்பத்தி செய்கிறவர்கள் 107 ரூபாய்க்கு விற்பார்கள். அங்கிருந்து வரும்போது 109 ரூபாய்தான் ஆகிறது. இதனால் நமக்கு அனுகூலம்தானே? எப்படிப் பிரதிகூலம் ஆகும்? மற்ற ராஜ்யத்தில் 7 சதவிகிதமாக இருந்து, நம் ராஜ்யத்தில் 10 சதவிகிதமாக இருக்கும்போது, நேரடியாக அந்த ராஜ்யத்திற்குப் போய் கார் வாங்கிவிட்டால், அங்கே 7 சதவிகிதமாக இருப்பதால், 107 ரூபாய்தான் ஆகிறது. ஆனால், இங்கே வரும்போது 110 ரூபாய் ஆகிறது. அப்படியிருப்பது நம்மை ஓரளவுக்குப் பாதிக்கத்தானே செய்யும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வர்தக முறை கனம் அங்கத்தினர் நினைப்பது போல் அல்ல. எந்த ராஜ்யத்தில் சரக்குகள் அதிகமாகச் செலவாகுமோ, அந்த ராஜ்யங்களுக்குச் சரக்குகளைக் கொண்டுசென்று விற்கின்றார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஒரு சத விகிதம் லாபம் இருக்கும். அந்தவிதமான சரக்குகளை எந்த எந்த ராஜ்யங்களில் குறைவான விலைக்கு விற்க முடியுமோ அந்த ராஜ்யங்களுக்கு அனுப்பிவிடுவார்கள். அப் 10-45 a.m.
பொழுது நம் ராஜ்யத்தில் உற்பத்தியாகும் பண்டங்களுக்குக் காம்பெடிஷன் இருக்காது. யூனிஃபார்ம் டாக்ஸ் இருந்தால்தான் அந்தந்த ராஜ்யத்தின் உற்பத்தி சரியாகப் பாதுகாக்கப்பட்டதாகும்.

MR. SPEAKER : The question is—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1963, be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3 and 4 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

[14th August 1963

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1963, be passed".

MR. SPEAKER : The question is—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1963, be passed."

The motion was put and carried and the Bill was passed.

4-45 p.m. MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Friday, the 16th August 1963.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Ruls and Orders.

Nil

B. Reports, Notifications and Other Papers.

* 48. *Annexure to the Payment of Wages (Madras Amendment) Bill*, 1963 (*L.A. Bill No.* 10 *of* 1963).

* 49. *The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill*, 1963 (*L.A. Bill No.* 12 *of* 1963) *with Annexure.*

* 50. *The Madras Appropriation* (*No.* 4) *Bill*, 1963 (*L.A. Bill No.* 14 *of* 1963).

† 51. *Joint Select Committee Report on the Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill*, 1963 (*L.A. Bill No.* 2 *of* 1963) *and the proceedings relating thereto.*

† 52. *Joint Select Committee Report on the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill*, 1962 (*L.A. Bill No.* 3 *of* 1962) *and the proceedings relating thereto.*

† 53. *Joint Select Committee Report on the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Bill*, 1962 (*L.A. Bill No.* 4 *of* 1962) *and the proceedings relating thereto.*

* Circulated to members on 12th August 1963.

† Placed on the Table on the House on 13th August 1963.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 16th August 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Deputy Speaker (SRI K. PARTHASARATHY) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

எஸ். எஸ். எல். சி. தேர்வு

*156 கேள்வி.—**திரு. எஸ். ஆறுமுகம் :** கனம் நிதி **அமைச்சர்** தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நடந்த எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சையில் கலந்து கொண்ட மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) அதில் தேர்ச்சி அடைந்தவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) கலந்துகொண்டவர்கள்—93,490.

(இ) தேர்ச்சி அடைந்தவர்கள்—40,895.

திரு. வி. எஸ். எஸ். மணி : தனியார் நடத்தும் உயர்நிலைப் பள்ளியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விகிதாசாரம் என்ன? அரசாங்கம் நடத்துகிற பள்ளியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விகிதாசாரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு தனியாகச் சராசரி எடுக்கவில்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பரிட்சையில் கலந்து கொண்ட 93,490 மாணவர்களில் தேர்ச்சி பெற்றவர்கள் 40,895; என்றாலும் இவர்களில், எத்தனை சதவிகிதத்தினர் கல்லூரிகளில் சேர்க்கப் பட்டனர் ? எத்தனை பேர் விண்ணப்பித்துக் கொண்டார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இப்படித் தேர்ச்சி பெற்றவர்களில் எத்தனை பேர் பெண்கள் ? எத்தனை பேர் ஆண்கள் ? பரிட்சையில் கலந்துகொண்டவர்களில் எத்தனை சதவிகிதம் பெண்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் ? ஆண்களுடைய சதவிகிதம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தப் புள்ளிவிவரம் என்னிடம்

[16th August 1963

புலவர் கா. கோவிந்தன் : தேர்ச்சி பெற்ற மாணவர்களில் கல்லூரிகளில் சேர்ந்தவர்கள் பாலிடெக்னிகில் சேர்ந்தவர்கள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தவர்கள் போக எதிலுமே இடம் பெறாதவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனியாகக் கேள்வி போட்டால் புள்ளிவிவரம் கொடுக்கலாம்.

திரு. ஜெ. மாதா கவுடர் : சென்ற ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வாண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களின் சதவிகிதம் அதிகமா ? குறைவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கோ. சி மணி : தேர்ச்சி பெற்ற மாணவர்களில் ஆதித் திராவிட மாணவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கும் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். தண்டாயுதபாணி : இந்தப் பரிட்சையில் எத்தனை பேர் தமிழில் எழுதினார்கள் ? எத்தனைப்பேர் ஆங்கிலத்தில் எழுதினார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழில் பரிட்சை எழுதியவர்களைவிட ஆங்கிலத்தில் எழுதியவர்கள் எண்ணிக்கை குறைவாகத் தான் இருக்கவேண்டும். அந்தப் புள்ளிவிவரம் என்னிடம் இல்லை.

திரு. சி. ம. அம்பிகாபதி : தேர்ச்சி பெறாதவர்கள் மீண்டும் அதே பள்ளியில் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கும் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : கல்லூரிகளுக்கு ஆண்டுதோறும் எத்தனை பேர் விண்ணப்பித்துக்கொள்கிறார்கள் ? எத்தனை பேர் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆண்டுதோறும் என்று கேட்டால் எப்படி இப்போது பதில் கொடுக்க முடியும் ? எந்த ஆண்டையாவது குறிப்பிட்டுத் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : உயர்ந்தபட்ச மார்க் வாங்கி தேர்ச்சி பெற்றவர்களுக்கு "தினத்தந்தி" பரிசுத் திட்டம் ஏற்படுத்தியிருப்பது போல, அரசினரே இப்படி ஏதாவது பரிசுத் திட்டத்தை ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹரிஜன மாணவர்களுக்கு அந்த திட்டம் இருக்கிறது. எண்டௌமெண்டு மூலம் பல பள்ளிகளில் அந்தமாதிரி திட்டம் இருக்கிறது.

16th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு என்னிடம் புகார் வரவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தேர்ச்சி பெறாத மாணவர்களில் அநேகமாகப் பலர் சோஷல் ஸ்டடியில் தான் தோற்றுவிட்டார்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த எந்தக் காரணத்தினால் என்கிற விவரம் என்னிடம் இல்லை. பொதுவாகச் சரியாகப் படிக்காதது தான் ஒரு காரணம்.

திரு. அ. ராகவ ரெட்டி : தனியார்ப் பள்ளிகளில் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களைவிட ஜில்லா போர்டு பள்ளிகளில் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதனால் ஜில்லா போர்டு பள்ளிகளில் சொல்லிக்கொடுக்கும் திறனை இவ்வாண்டாவது அதிகரிக்கச் செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் ஒவ்வொரு ஆண்டும் இந்தப் புகாரைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பரிட்சையில் தேர்ச்சி பெற்றவர்களுடைய புள்ளிவிவரத்தை ஜில்லா அடிப்படையில் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் கொடுக்கலாம்.

திரு. எஸ். ஜெ. ராமசாமி : ஜில்லா போர்டு பள்ளிகளில் வாத்தியார் இல்லாததனால் தான் அதிகமான மாணவர்கள் ஃபெயிலாகின்றார்கள் என்று சொல்லப்படுகிற காரணம் உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு இருக்க முடியும் என்று என்னால் ஒத்துக்கொள்ள முடியாது.

Cuddalore Municipality.

* 157. *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the reasons for the wholesale resignations of the Chairman and Councillors of Cuddalore Municipality during May 1963; and

(*b*) if so, the steps taken for the continuous functioning of the Municipality?

(அ) ஆம்.

(இ) கடலூர் நகராட்சி மன்றத்தில் தற்போதுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொண்டு நகராட்சி அலுவல்களை நடத்த முடியாததால், மேற்படி நகராட்சி மன்றத்தை ஏன் கலைக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டும்படி கடலூர் நகராட்சி மன்றத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. கடலூர் நகராட்சியின் அன்றாட அலுவல்களை மேற்படி நகராட்சி ஆணையாளரே கவனித்துக் கொள்வார்.

திரு. சா. கணேசன் : நகராட்சி மன்றத்தின் அங்கத்தினர்களில் மிகப் பெரும்பாலோர் ராஜிநாமாச் செய்வதற்குக் காரணம் என்ன? அரசாங்கத்தின் தலையீடு தான் காரணமா? அல்லது வேறேதேனும் காரணம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் கருதுவது போல அரசாங்கத்தின் தலையீடு ஒன்றும் காரணம் இல்லை. கடலூர் நகராட்சி மன்ற நிதி நிலையே மிகவும் பற்றாக்குறையாக இருந்தது. நகராட்சி மன்றத்தின் வருமானத்தை அதிகப்படுத்த ஏன் இன்னும் கொஞ்சம் வரிவிதிப்பின் சத விகிதத்தை உயர்த்தக் கூடாது என்று மூன்பு சொன்னோம். இது தலையீடாகாது.

திரு. கே. ஏ. மதியழகன் : கடலூர் நகரசபையைக் கலைத்து விடுவதாக சர்க்கார் உத்தேசித்திருப்பது உண்மையா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏன் கலைக்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டும்படி கடலூர் நகராட்சி மன்றத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது என்று தான் நான் சற்று முன்பு சொன்னேன். கடலூர் நகராட்சி மன்றத்தின் மொத்த ஸ்தானங்கள் 32. அதில் நான்கு ஸ்தானங்கள் காலியாக இருந்தது. பாக்கியிருந்த 28 அங்கத்தினர்களில் 23 பேர்கள் ராஜிநாமாச் செய்தார்கள். மீதியுள்ள 5 அங்கத்தினர்களை வைத்துக்கொண்டு நகராட்சி மன்றக் கூட்டங்களை நடத்துவது என்பது முடியாத காரியம். ஆகவே தான் இதைக் கலைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : கட்டாயமாக வரி விதிக்கத்தான் வேண்டுமென்று சர்க்கார் வற்புறுத்தியதன் காரணமாகத்தான் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் ராஜிநாமாச் செய்ய முன் வந்தார்கள் என்பது உண்மையா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மற்ற வரிகளுக்கும் எஜுகேஷனல் டாக்சுக்கும் வித்தியாசம் உண்டு. கல்வி வரி என்று நகராட்சி மன்றம் எவ்வளவு வசூல் செய்கிறார்களோ அதே தொகை அரசாங்கம் உதவித் தொகையாக ஒவ்வொரு நகராட்சி மன்றத்திற்கும் கொடுத்து வருகிறது. ஆகவே இந்தக் கல்வி வரியை விதிக்க முடியாது என்று எந்த நகராட்சி மன்றமும் ஆட்சேபிப்பதற்குக் காரணம் இல்லை.

வரியைக் கூட்டுவதானது பொதுமக்களை அதிகமாகப் பாதிக்கும் என்பதனால் இந்தக் கல்வி வரியை விதிக்கக்கூடாது என்றதோடு இதனால் வரக்கூடிய பணத்தை ஏற்கனவே இருக்கக்கூடிய தண்ணீர் வரியோடு ஈடு செய்துவிடுவதாக அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டார்களா? அப்படி மற்ற இனத்தின் மூலமாக ஈடு செய்வதாக அவர்கள் விண்ணப்பித்துக்கொண்டிருந்தும் அரசாங்கம் அனுமதி கொடுக்காததன் காரணம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் சொல்வது போல, ஏற்கனவே 32 சத விகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது, அதற்கு மேல் 5 சத விகிதம் உயர்த்தச் சொன்னார்கள் என்பது சரியாக இருக்காது. குறிப்பிட்ட ஒரு வரியை விதிக்காமல் மற்ற வரிகளின் மூலம் ஈடு செய்வதாக அவர்கள் சொல்லியிருக்கலாம். இருந்தாலும் அவர்களுடைய ஜெனரல் பண்டிலேயே 68 ஆயிரம் சொச்சம் பற்றாக்குறை இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : கல்வி வரி விதிப்பதைப் பற்றி நகராட்சி மன்றத்தின் ரிப்போர்ட் என்ன சொல்லுகிறது? அந்த வரியை விதிக்கக்கூடாது என்றுதான் எதிர்த்திருக்கிறார்களா?

கனம் சே. ம. அ. மஜீத் : சர்க்கார் 1960-61 பட்ஜெட் எஸ்டிமேட்டிலேயே பற்றாக்குறை இருப்பதைச் சுட்டிக்காட்டி, ஏன் வரியை உயர்த்தக்கூடாது என்று கேட்டார்கள். அவர்கள் மறுத்து விட்டார்கள். பின்பு 1962 பட்ஜெட்டிலேயும் இந்தப் பற்றாக்குறை எடுத்துக் காட்டப்பட்டது. கமிஷனர் ஒத்துக்கொள்கிறார், கவுன்சில் தான் ஏற்றுக்கொள்ளவில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, பற்றாக்குறையைப் போக்க அரசாங்கம் கூறிய யோசனையை ஏற்றுக் கொள்ளாது தண்ணீர்க் கட்டணத்தை ஏற்றுவதன் மூலமாகப் பற்றாக்குறையைப் போக்கலாம் என்ற யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மறுத்தது ஏன்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி ஒரு யோசனை கூறியதாக என்னிடம் தகவல் இல்லை

ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் (கலெக்டராக நியமனம்)

* 158 **கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் முதல் அமைச்சர்** தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா கலெக்டர்களாக நியமிக்கப்படுபவர்கள் ஐ.ஏ.எஸ். பரீட்சை பாஸ் செய்த பிறகு ஏழு ஆண்டுகள் வேறு பல துறைகளில் அனுபவம் பெற்ற பிறகே அந்தப் பதவிக்கு நியமிக்கப்படவேண்டுமென்ற உத்தரவு ஏதேனும் மத்திய சர்க்காரிடமிருந்து சென்னை அரசாங்கத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆமென்றால், அதன்மீது மாநில சர்க்கார் கொடுத்த பதில் என்ன?

[16th August 1963

திரு. டி. கார்ச்சா கவுடர் : அமைச்சர் அவர்கள் பதிலில் 'இல்லை' என்று கூறினாலும், சென்னை அரசாங்கம் இவ்விதமான யோசனையைப் பரிசீலிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசாங்கம் எதையும் தாக்கீது இடவில்லை என்று சொன்னேன். யோசனையும் கூறவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போது யோசனை கூறுகிறார்கள். அம்மாதிரி யோசனையைப் பரிசீலிப்பதாக அரசாங்கத்துக்கு உத்தேசம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : கலெக்டர்களாக நியமிக்கப்படுகிறவர்கள் எந்த முறையில் நியமிக்கப்படுகிறார்கள் ? அவர்கள் எங்காவது பயிற்சி கொடுக்கப்படுகிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஐ.ஏ.எஸ். தேறியவர்கள் நியமிக்கப்பட்ட பிறகு பயிற்சி பெறுகிறார்கள். பரீட்சை தேறுவதற்கு முன்பே சில பயிற்சிகளைப் பெறுகிறார்கள். செலக்ஷன் ஆன பிறகு ஆர்.டி.ஓ. வின் கீழ் அல்லது கலெக்டரின் கீழ் பயிற்சி பெறுகிறார்கள். அதற்குப் பிறகு அஸிஸ்டெண்ட் கலெக்டர்களாக ஆர்.டி.ஓ. வாகவோ போஸ்ட் செய்யப்படுகின்றார்கள். அவர்களுக்கு உரிய காலத்தில் பிரமோஷனில் கலெக்டர்களாகவோ, டிபுடி செகரடரியாகவோ வரலாம்.

SRI R. V. SWAMINATHAN : May I know from the Hon. Leader of the House, whether I.A.S. officers with less than seven years of service are now serving as Collectors?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Member were to put a separate question, I shall look into it and answer.

Polytechnic at Vadippatti.

* 159 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any representation for opening a polytechnic at Vadipatti in Madurai district; and

(*b*) if so, the decision taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : மதுரை மாவட்டத்தில் புதிதாகப் பாலிடெக்னிக் திறக்க அரசாங்கத்திடம் திட்டம் உண்டா ? மதுரை மாவட்டத்தில் எந்த ஊரில் அது திறக்கப்பட இருக்கிறது ?

16th August 1963]

Madras Khadi Board

* 160. Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount sanctioned by the All-India Khadi and Village Industries Board to the Madras Khadi and Village Industries Board in 1961–62 and 1962–63;

(*b*) the amount spent;

(*c*) the various projects undertaken by the Madras Khadi Board during the said period; and

(*d*) how many persons have been able to secure employment as a result of these various projects?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) For 1961–62, a total sum of Rs. 62·16 lakhs was sanctioned as grants and Rs. 80·87 lakhs as loans and for 1962-63, a total of Rs. 47·33 lakhs as grants and Rs. 186·98 lakhs as loans;

(*b*) The entire amount recieved from the Khadi Commission was utilised on the sanctioned items.

(*c*) No projects as such were taken up but during the two years, the Board, besides continuing to implement the Khadi Scheme, took over and added lime kiln industry, fibre industry and cane and bamboo industry also to the existing other eleven industries taken up by it for development, viz :—

1. Tanning,
2. Soap making,
3. Handmade paper,
4. Palmgur,
5. Village Oil Industry,
6. Hand-pounding of paddy,
7. Bee-keeping,
8. Blacksmithy and carpentry,
9. Village Leather,
10. Village pottery,
11. Gur and Khandsari.

(*d*) As a result of the working of the schemes relating to Khadi and Village Industries, which provide part-time employment generally and full time employment wherever feasible, a total of about 4·82 lakhs of people have been able to secure employment.

(அ) அகில இந்திய கதர்-கிராமத் தொழில்கள் போர்டு 1961-62-ல் மானியமாக ரூ. 62.16 லட்சமும், கடனாக ரூ. 80·87 லட்சமும், 1962-63-ல் மானியமாக ரூ. 47.33 லட்சமும், கடனாக ரூ. 186·98 லட்சமும் அனுமதித்துள்ளது.

(உ) திட்டங்கள் என்ற வகையில் எவற்றையும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளில் கதர் போர்டு, கதர்த் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்ததோடு பின் வரும் பதினொரு தொழில்களுடன், சுண்ணாம்புக்காளவாய்த் தொழில், நார்த் தொழில், பிரம்பு, மூங்கில் தொழில் இவற்றையும் எடுத்துக்கொண்டு அந்தொழில்களை அபிவிருத்தி செய்து வந்துள்ளது.

1. தோல் பதனிடுதல்,
2. சோப்பு தயாரித்தல்,
3. காகிதம் தயாரித்தல்,
4. பனை வெல்லம்,
5. கிராம எண்ணெய்த் தொழில்,
6. நெல் கைக்குத்தல்,
7. தேனீ வளர்த்தல்,
8. தச்சு வேலை-கருமார் தொழில்,
9. தோல் சாமான் செய்தல்,
10. மண்பாண்டத் தொழில்,
11. வெல்லம், கண்டசாரி.

(எ) பொதுவாக, கதர்-கிராமக் கைத்தொழில் சம்பந்தமான திட்டங்கள் செயல்படுவதால் பகுதிநேர வேலையும், சில இடங்களில் முழுநேர வேலையும் கிடைக்கிறது. இதன்மூலம் சுமார் 4.82 லட்சம் மக்கள் வேலை பெற முடிந்தது.

திரு. கே. ஏ. மதியழகன் : கதர் உற்பத்தியின் மூலமாக நம்முடைய மாநிலத்தில் இருக்கிற உடைத் தேவையில் எத்தனை சதவிகிதம் தேவையைக் கதர் உற்பத்தி பூர்த்தி செய்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது ஒரு சிறு பகுதியாகத்தான் இருக்கும். ஆனால் அந்தப் புள்ளிவிவரம் என்னிடம் இல்லை.

திரு. எம். தண்டாயுதபாணி : சென்னை கதர் போர்டுக்கு ஜில்லாவாரியாக அங்கத்தினர்கள் நியமிக்கப்படுகிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கத்தினர்கள் சட்டப்படி நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, மேற்கொள்ளப்பட்டிருக்கிற திட்டங்களின் மூலமாக லாபகரமாக நடைபெறுகின்றனவா ? அப்படியானால் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது ?

பும், பகுதி நேர வேலை வாய்ப்பும் கொடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் இது துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. ஆனால் இதில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : கதர் போர்டு திட்டத்திலே அம்பர் சர்க்காப் பயிற்சி நடைபெற்று வருகிறதா ? இடையிலே அது நிறுத்தப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். அப்படியானால் மீண்டும் அதைத் துவக்கி நடத்த முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : கதர் போர்டின் தலைமை நிலையமான திருப்பூரில் ஐந்தாறு வருஷங்களாக லட்சக்கணக்கான மதிப்புள்ள கதர் கிடங்குகளிலே இருந்த காரணத்தினால் பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்பது உண்மையா ? அதைப் பரிகாரம் செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப் பற்றிய விவரத்தைக் கேட்டிருந்தால் தெரிவித்திருப்பேன். இதற்கு முன்பு இதைப் பற்றிக் கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட பிறகு அதைப் பற்றி நான் மேலும் பரிசீலனை செய்து பார்த்தேன். அதிலே தவறுதல் ஒன்றும் இல்லை. இதைப் பற்றித் தனிக் கேள்வி கேட்டால் முழு விவரத்தையும் சொல்ல முடியும். ஆடிட் ரிப்போர்ட்டில் இருக்கிற நிலைமையைக் கூறினார்கள். அதைப் பற்றிப் பின்னர் எடுத்து விளக்கியபோது அவர்களும் அதை உணர்ந்து கொண்டார்கள். 1961-62-இல் உற்பத்தி செய்ய வேண்டிய இலக்கு 122 லட்சம், ஆனால் 99 லட்சந்தான் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் சேல்ஸ் 121 லட்சமாகும். 1962-63-இல் உற்பத்தி 122 லட்சம்; சேல்ஸ் 122 லட்சம்.

திரு. ஜே. மாதா கவுடர் : கதர் பேரிலே அதிகமான அக்கறை கொண்டிருக்கக்கூடிய நண்பர் திரு. மதியழகன் போன்றவர்களைக் கதரைப் பயன்படுத்தும்படியாக அமைச்சர் அவர்கள் ஆலோசனை கூறுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவது எனக்கு ஒன்றும் புரியவில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : அனாதைகள், அங்கஹீனர்கள், குருடர்கள் ஆகியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்பதற்காக நீண்ட காலமாக நடத்தி வரும் இந்தத் தொழிலிலே அந்த வகையைச் சார்ந்தவர்கள் எவ்வளவு பேர்கள் ஈடுபட்டு வாழ்வு பெற்றிருக்கிறார்கள் என்ற விவரத்தை அரசாங்கத்தார் தெரிவிப்பார்களா ?

[16th August 1963

கைத்தொழில்களில் மட்டுமல்லாது வேறு தொழில் வகையிலும் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்கும் ஸ்தாபனமும் இதிலே கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கதருக்காக அளிக்கப்பட்டு வந்த தள்ளுபடி தொகை அதே அளவில் இருக்கிறதா ? அல்லது குறைக்கப்பட்டிருக்கிறதா ? இப்போது எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரிபேட்டில் இப்போது ஒன்றும் மாறுதல் இல்லை. வேறு சில யோசனைகள் மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையிலும், மத்திய போர்டின் பரிசீலனையிலும் இருக்கின்றன.

திரு. கே. ஏ. மதியழகன் : கதர் கிராமக் கைத்தொழில் போர்ட் நிறுவுவதற்கு முன்னால் இருந்து கதர் இலாகாவின் லாப நஷ்டக் கணக்குகள், அதைத் தொடர்ந்து கதர் போர்டின் பல ஆண்டு லாப நஷ்டக் கணக்குகள் ஒப்படைக்கப்படாமல் இருந்து சமீபத்தில்தான் ஒப்படைக்கப்பட்டது என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விடை அளிக்கலாம்.

திரு. எஸ். சின்னையன் : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் தோல் பதனிடும் தொழில் மேற்கொள்ளப்பட்டதாகச் சொன்னார்கள். இத்தொழிலை மேற்கொண்டதால் எவ்வளவு தொழிலாளர்கள் நன்மை அடைந்திருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தப் புள்ளி விவரம் இப்போது என்னிடம் இல்லை.

திரு. எம். தண்டாயுதபாணி : இந்தக் கதர் போர்டில் தஞ்சை ஜில்லா சார்பாக காலஞ்சென்ற வேதரத்னம் பிள்ளை அவர்கள் அங்கத்தினராக இருந்ததாகத் தெரிய வருகிறது. அதற்குப் பதிலாக தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர் யார் என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கதர் போர்ட் அமைப்பு சட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிறது என்று சொன்னேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் இது அமைக்கப்படவில்லை.

Shooting incident (Urappanur)

* 161 *Q.*—SRI K. MOOKIAH THEVAR :
SRI K. CHEEMAICHAMY :
SRI V. KRISHNAMOORTHY : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Revenue Divisional Officer has sent his report on his findings regarding the Urappanur shooting incident on 17th March 1963;

16th August 1963]

(*c*) will the Government place on the Table of the House the report of the officer?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) the enquiry was ordered on the 17th March itself and the enquiry report was submitted on the 1st April 1963.

(*c*) The Government consider that it will not be in public interest to place on the Table of the House the report of the enquiry made by the Revenue Divisional Officer, Usilampatti in the case of firing at Mela Urappanur.

(அ) ஆம்.

(இ) விசாரணை நடத்துமாறு 17-ந் தேதி அன்றே உத்திரவு இடப்பட்டது. விசாரணையின் அறிக்கை 1—4—1963 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

(உ) மேல் உரப்பனூரில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் பற்றி உசிலம்பட்டி ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் நடத்திய விசாரணையின் அறிக்கையைச் சபையின் முன் வைப்பது பொது நன்மைக்கு உகந்ததல்ல என்று அரசாங்கம் கருதுகின்றது.

திரு. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி சுட்டது தவறு, இலகுவாக அதைத் தவிர்த்திருக்கலாம் என்று அந்த ரிப்போர்ட்டில் கண்டிருப்பதால் அது அவர்களுக்குச் சாதகம் இல்லாத காரணத்தினால்தான் அந்த ரிப்போர்ட் வைக்கப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆர். டி. ஓ. ரிபோர்டின் முடிவில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால் இந்த மாதிரி போலீசார் சுட்டது அங்கிருந்த கூட்டத்தைப் பாதுகாக்கவும், அங்கு பணியில் ஈடுபட்டிருந்த போலீசாரைப் பாதுகாக்கவும் சுடப்பட்டது; சுடப்பட்டது நியாயமே என்றும் குறைந்தபட்சம் போர்ஸ்தான் உபயோகிக்கப்பட்டது என்றெல்லாம் ரிப்போர்ட்டில் காணப்படுகிறது. அதைக் கலெக்டர் அவர்களும் ஏற்றுக் கொண்டு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கமும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. 300 பேர்கள் இருந்த இடத்தில் 1,000 பேர்கள் கூடித் தாக்கும்போது 300 பேர்களை பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையில் வேறு வழியில்லாமல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையை இங்கு சமர்ப்பிக்க முடியாது என்று நான் சொல்லக் காரணம், பொதுவாக வேறு சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது 30 பேர்கள் மீது போலீசார் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். போலீஸ் மீதும் ஒரு வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் கோர்ட்டில் இருக்கின்றன. இந்த நிலையில் இதைச் சட்ட சபை முன்பு வைப்பது சரி அல்ல என்றுதான் நான் கூறினேன்.

[16th August 1963

Sir, whether the R.D.O. has given any findings or comments on the way in which some of the Officers—Police as well as Revenue—have committed mistakes in that case?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Just now in Tamil, I stated about the comments made in the Report. These comments are under the examination of the Government. Further I also stated that it would not be advisable to reveal all the comments in the public interest. There are certain cases under judicial purview and therefore the matter is *sub judice*.

SRI R. V. SWAMINATHAN : In view of the strained feelings that exist among the people of that area, may I know from the Hon. the Leader of the House whether he will take into confidence some of the Members of this House whomsoever he likes and show at least the nature of the report?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : May I tell the hon. Member that I have confidence in every member of this House. There is one prosecution case against Police Officers who indulged in firing and the Police have also filed cases against some people and therefore, the matter is *sub judice*. Till the matter is over, the Government do not consider it advisable to show the other comments made in the report by taking any hon. Member into confidence. It is not right to show the report to any hon. Member.

திரு. கே. மூக்கையா தேவர் : ஆர். டி. ஓ. ரிப்போர்ட்டில் சுட்டது சரி என்று சொல்லியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதையே அரசாங்கமும் அங்கீகரித்திருக்கிறது. உண்மையிலே இந்த மாதிரி கலவரம் ஏற்படுமென, நீண்ட நாட்களாக 18 ஆண்டுகளாக அந்நிலை அங்கிருக்கிறது. மீன் பிடிக்கிற நிகழ்ச்சி நடப்பதற்கு முதல் நாள் வந்தில் அவர்கள் நேரிடையாகப் போய் டி. எஸ். பி. யைப் பார்த்து இந்த மாதிரி நிலைமை மோசமாக இருக்கிறது என்று கூறி உடனடியாக வந்து தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டார். அப்படி எச்சரிக்கப்பட்டிருந்தும் சுடுகிற அளவிற்கு நிலைமை வந்ததற்குக் காரணம் என்ன? முன் ஏற்பாடுகள் ஏதாவது செய்திருந்தால் அவை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பிரச்னை பற்றி முன்பே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடை அளித்துள்ளேன். இப்போதும் கூறியிருக்கிறேன். இதற்கு மேல் கூறுவதற்கு விசேஷம் ஒன்றும் இல்லை.

திரு. கே. ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் : அது சம்பந்தப்பட்ட போலீஸ் சூப்ரின்டென்டென்ட் மீது பாதிக்கப்பட்ட பொது மக்களால் கேஸ் போடப்பட்டிருக்கிறதா?

16th August 1963]

திரு. மா. இராசாங்கம் : துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்த 17-ம் தேதி என்று நிச்சயிக்கப்பட்ட பிறகும் வெகு நாட்களுக்குப் பிறகு இந்த ரிப்போர்ட் சமர்ப்பித்திருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விசாரணை நடத்தி ஏராளமான சாட்சியங்களை விசாரித்திருக்கிறார்கள். அதற்குப் பின் ரிப்போர்ட் தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள். இதில் தாமதம் ஒன்றுமில்லை.

திரு. க. ர. நல்லசிவம் : ஆர்.டி.ஓ. விசாரணை மீது கொடுக்கப்பட்ட ரிப்போர்ட்டை வைத்து போலீஸ் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது சம்பந்தப்பட்ட மக்கள் மீது ஏதாவது விசேஷ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆர்.டி.ஓ. விசாரணை முடிவுகளைக் குறிப்பிட்டேன். அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டேன். வேறு சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. சா. கணேசன் : ஏற்கனவே இது முன்னமேயே சபை முன் வந்து கொஞ்ச நேரம் விவாதம் செய்யலாம் என்று ஒப்புக்கொண்டோம். அப்படியிருக்க அப்போது கனம் அமைச்சர் அவர்கள் ரிப்போர்ட் வந்த பிறகு நான் அதை இங்கு சமர்ப்பிக்கிறேன் என்று சொன்னதாக எனக்கு நினைப்பு. அப்படியிருக்க இந்த ரிப்போர்ட்—ரிப்போர்ட்டை தப்பு என்று சொல்லவில்லை—சரியான ரிப்போர்ட் வந்திருந்தால் அதைச் சமர்ப்பிப்பதால், அல்லது கோர்ட்டில் இருக்கிற விஷயம் என்றால் கோர்ட்டிற்கு விரோதம் இல்லாத பகுதிகளை மட்டுமாவது சபையில் சமர்ப்பிப்பதில் ஏதாவது சங்கடம் இருக்குமா? அப்படிச் சமர்ப்பிப்பதால் பொதுவாக எல்லோருக்கும் நன்மைதானே? அதை அரசாங்கம் செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு என்ன கூறினேன் என்று எனக்கு நினைவில்லை. சரியான ரிப்போர்ட் வந்திருந்தால் என்று சொல்வது புரியவில்லை. ரிப்போர்ட் வந்திருக்கிறது. கனம் அங்கத்தினர் அந்த ரிப்போர்ட் பற்றி என்ன கருத்து வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். இங்கு என்ன சொல்லக் கூடுமோ அதைச் சொல்லக் கூடாதா என்று கேட்கிறார்கள். சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். முடிவை சொல்லிவிட்டேன். அதற்கு மேல் கோர்ட்டில் வழக்கு இருப்பதால், அது 'ஸப்-ஜுடிஸ்ஸாக' இருக்கிறது. அப்படியே ரிப்போர்ட்டைப் பிரசுரிப்பதற்கில்லை என்றுதான் கூறினேன்.

SRI R. V. SWAMINATHAN : This enquiry deals with various aspects, particularly two aspects, viz., whether there is any justification for the firing and whether the Police officers would have avoided that situation. I want to know from the Hon. the Leader of the House, what the finding given by this enquiry officer is, so far as the avoidance of that situation is concerned. 9.00 a m

திரு. சா. கணேசன்: அப்படி இருக்குமானால் போலீஸ் தவறு செய்திருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுக்கவோ, அல்லது அவர்கள் சரியானபடி கடமையைச் செய்திருந்தால், அதற்கு ஏதாவது சன்மானம் அல்லது பாராட்டு கொடுக்கவோ அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கடமையைச் செய்யும்போதெல்லாம் பாராட்டுதல் வேண்டியதில்லை, பரிசு வேண்டியதில்லை. தவறு செய்தால் தண்டனை கொடுக்கவேண்டும். இப்பொழுது அவர்கள் சுட்டது சரி என்று முடிவு தெரிவித்துவிட்டார்கள். அதுவன்றி, வேறு சில கருத்துக்களையும் தெரிவித்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த அறிக்கையைப் பற்றி பொது நன்மையை உத்தேசித்து இந்த அறிக்கையை கொடுக்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி அவர் குறிப்பிட்டாலும், எந்த விபரமும் கொடுக்க மறுக்கிற காரணத்தினாலே, சர்க்காரின் நன்மையை முன்னிட்டுத்தான் இந்த அறிக்கையைக் கொடுக்க மறுக்கிறார்கள் என்று நினைப்பதற்கு ஒரு இடம் ஏற்படுகிறது அல்லவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் எந்தக் கருத்தை வேண்டுமானாலும் தனக்குள்ளே வைத்துக் கொள்ளலாம்.

திரு. கே. மூக்கையா தேவர்: இந்த நிகழ்ச்சியை இலகுவாகத் தடுத்திருக்கலாம் என்பது பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம். எதிரி படையெடுத்து வரும்போதுகூட எதிரிகள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யாமல், நடு நிலைமை வகித்து, அஹிம்சா முறையில் எதிர்ப்பதற்கெல்லாம் முன் ஏற்பாடு செய்வதுபோல், இது விஷயமாகவும் ஏதாவது முன்னேற்பாடு செய்து இதைத் தடுத்து நிறுத்தாமல், துப்பாக்கி கொண்டு சுட்டது அதுவும் எதிர்கட்சிகள் உள்ள பகுதிகளில் சுட்டது தவறு அல்லவா? இனிமேலாவது இம்மாதிரி தவறு செய்யாமல் இருப்பதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதில் கட்சி விஷயம் எதுவும் இல்லை. கனம் அங்கத்தினர் தீவிரவாதி. அவர்கள் எந்தக் கருத்து வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்.

SRI R. V. SWAMINATHAN: Sir, arising from the answer given by the Hon. the Leader of the House that some of the aspects of this enquiry are still under the consideration of the Government, may I take it that the Government are going to take action against such officers, if they find that something wrong has been done by those officers while dealing with that situation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, taking action against any particular officer would depend on the examination of the comments contained in that report and the view that is taken by the Government.

வேண்டியதில்லை. ஆனால், நெருக்கடியான காலத்தில் கடமையைச் செய்தால், அதற்காகப் பரிசு வழங்குவது பற்றி அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறும் பரிசுகள் வழங்கப் பட்டு வருகின்றன.

திரு. கே. ஏ. மதியழகன்: வழக்கு மன்றங்களில் இருக்கும் வழக்குகள் முடிந்த பிறகாவது, இந்தச் சபைக்கு இந்த விவரங்கள் அறிவிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்பொழுது தனியாக ஒரு கேள்வி கேட்டால், அதற்கு விடை அளிக்கலாம்.

எஃகு உருட்டாலை (அரக்கோணம்)

*162 **கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்கம் அரக்கோணத்தில் எஃகு உருட்டாலையை நிறுவ ஏற்பாடு செய்திருக்கிறதா?

(இ) அதற்கு எவ்வளவு இடம் ஆர்ஜிதம் செய்யப்படும்?

(உ) அதற்கு எவ்வளவு தொகை செலவிட உத்தேசம்?

(எ) வருஷம் ஒன்றிற்கு எவ்வளவு டன் சாமான்கள் செய்ய முடியும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அ, இ, உ, & எ. ஆண்டொன்றுக்கு 20,000 டன் உற்பத்தி செய்யும் Steel re-rolling mill ஒன்றைத் தமிழ்நாட்டில் பொதுத் துறையில் நிறுவும் திட்டம் ஒன்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாலையை நிறுவ அனுமதி கோரி மாநில சர்க்கார் விண்ணப்பம் செய்துள்ளனர். அது மத்திய சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது. ஆலை நிறுவ அரக்கோணம் தகுதியான இடமா என்பது பற்றி நிபுணர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: போன வருடத்திய பட்ஜெட்டிலே இந்த உருக்காலை தூத்துக்குடியில் நிறுவப்படும் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு பட்ஜெட் விவாதம் நடந்த நேரத்திலே ரீ ரோலிங் மில் இப்பொழுது நிறுவவேண்டியதில்லை, ரீ-காஸ்டிங் மில் வேண்டியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்களே? அதற்கும், இதற்கும் ஏதாவது முரண்பாடு இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முதலில் நாம் ரீ-ரோலிங் மில் வைக்கவேண்டும் என்று தீர்மானம் செய்கிறோம். அம்மாதிரி தீர்மானம் செய்தவுடன் அதற்கு வேண்டிய மூலப்பொருள் கிடைக்கிறதா என்று ஆராய்ச்சி செய்கிறோம். மூலப்பொருள்கள் கிடைக்கவேண்டும் என்று பார்க்கிறபொழுது, அதற்குப் போதிய 'ஸ்க்ராப்' தமிழ் நாட்டிலே இல்லை. இரண்டு விதமான 'ஸ்க்ராப்' இருக்கிறது. ஒன்று, 'ரோலபிள் ஸ்க்ராப்', மற்றொன்று 'மெல்டிங் ஸ்க்ராப்'. ரீ-ரோலபிள் ஸ்க்ராப் நம்முடைய தமிழ் நாட்டில்

கிடைக்கவில்லை. அதன் காரணமாக 'மெல்டிங் ஸ்க்ராப்' வாங்கி, அதை உருக்கி நாம் 'பில்லெட்ஸ்' செய்து அதன் மூலம் 'ரீ-ரோலிங் மில்' வைக்கலாம் என்பது பற்றி இப்பொழுது பரிசிலனை செய்துகொண்டிருக்கிறோம். அதனால்தான் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு போனாலும், மறு ஆண்டிலாவது இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஜோஸ்யம் சொல்லுவது எங்களுடைய கடமை அல்ல.

இரும்புத் தாது (செங்கற்பட்டு மாவட்டம்)

* 163 **கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன்:** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டுக்கு அருகேயுள்ள அம்மணம்பாக்கம் கிராமத்தில் இரும்புத் தாது கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) அது சம்பந்தமாய் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No Sir,

(b) Does not arise.

நவீன வசதி ஓட்டல் (சென்னை)

* 164 **கேள்வி.—திரு. ராம. அரங்கண்ணல்:** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அடையாறு ஊரூர்குப்பத்துக்கருகில் மேற்கத்திய முறையில் ஒரு மிகப்பெரிய ஓட்டல் கட்ட தனிப்பட்ட ஒருவர் முன்வந்திருப்பது உண்மையா?

(இ) அந்த ஓட்டலுக்காக எத்தனை ஏக்கர் நிலம் தேவை என்று வீட்டுவசதி போர்டிடம் கோரப்பட்டது?

(உ) அதுபற்றி வீட்டு வசதி போர்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes.

(b) 25–30 acres.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்த ஹோட்டல் கட்டுவதற்கு 10 ஏக்கர் நிலம் தேவையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 'இண்டர்நேஷனல் ஹோட்டல்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிச்சயம் 10 ஏக்கர் தேவைதான். ஏனென்றால், கார் பார்க் வேண்டும், 'ஸ்விம்மிங் பூல்' வேண்டும். இன்னும் அந்த இடத்தில் மற்றும் பலவிதமான வசதிகள் செய்துகொடுக்கவேண்டும். அது ஒரு பெரிய நகரம் போல் இருக்கும். முடி வெட்டுவதற்கு சலூன், 'ப்யூடி பார்லர்' இன்னும் மற்ற வசதிகளெல்லாம் அங்கே வைப்பார்கள்.

SRI R. V. SWAMINATHAN: Sir, in view of the importance of the Madras City and the State and the lack of such Western style hotels in the State, will the Government come forward to help this applicant—whoever he may be, I do not know him—in the speedy establishment of the hotel? I think for the establishment of such a hotel an extent of 10 acres of land is not sufficient and it requires more extent of land.

THE HON. SRI R. VENKATARAMAN: It is for the particular person interested in setting up the hotel to make an application to the Government for assistance.

திரு. இராம. அரங்கண்ணல்: இப்படி ஒரு ஹோட்டல் அமைப்பது என்று சொன்னால், சுமார் 2 அல்லது 3 கோடி ரூபாய்க்கு மேல் செலவு ஆகும். அதில் பாதித்தொகை சர்க்கார் கொடுக்க முன் வருகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படியானல் சர்க்காரே அந்த ஹோட்டலைக் கட்டி, மகாபலிபுரத்தில் இருப்பது போல, எல்லோருக்கும் வசதி செய்து கொடுக்க முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்கு 2, 3 கோடி ரூபாய் தேவையில்லை. சர்க்கார் பாதிப் பணம் கொடுப்பதாகவும் உத்தேசம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அந்த ஹோட்டல் கட்டுவதற்கான உரிமை தனிப்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால், அந்த நிலத்தையும் அவருக்கு வழங்கவேண்டியிருக்குமே? அதற்காக டெண்டர் கோர வேண்டிய அவசியம் ஏற்படாதா? அப்படியென்றால் அந்த உரிமை வழங்கப்படாதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒருவருக்கும் உரிமை கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இது 'இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்டு ரெகுலேஷன் ஆக்ட்'-ன் கீழ் வரவேண்டியதில்லை. இதற்கு லைசென்ஸ் தேவையில்லை. யார் அதைக் கட்டவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதற்கு எல்லோரும் மனுச் செய்தால், அது பற்றி முடிவு செய்வதிலே, ஆக்ஷன் விடுவதோ அல்லது 'லிமிடெட் டெண்டர்' அவர்களிடம் கோரி, யார் டெண்டர் அதிகமாகக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுப்பதோ என்பது பற்றி முடிவு செய்யவேண்டும்.

முன் வந்தால், அதை அரசாங்கம் கவனித்து, அதற்குக் கொடுக்கக் கூடிய அளவுக்குச் சலுகைகளை கொடுக்கவும், சரியான உதவியைச் செய்யவும் அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு சர்க்கார் ஒரு சலுகையும் கொடுக்கவில்லை. நாம் போட்டிருக்கிற 'ஊரூர் ஸவுத் மெட்ராஸ் நைபர்ஹுட் ஸ்கீமில்' இதற்காக ஒரு இடத்தை ஒதுக்கியிருக்கிறோம். அந்த இடத்தை நல்ல விலைக்கும் விற்கப் போகிறோம். அதனால் சலுகை ஒன்றும் கொடுக்கவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : வெளி நாட்டினரின் வருகை அதிகமாக இருக்கிற சென்னை நகரத்தில் இப்படிப்பட்ட ஹோட்டல் இல்லாததினால், பலர் சிரமப்படுகிற காரணத்தினால், இதிலே சர்க்கார் தனியாரை நம்பியிராமல் கொஞ்சம் சிரத்தை காட்டி இதைக் கட்டிக்கொடுத்து ஊக்குவிப்பதற்கு முன்வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் சில தொழில்களைத்தான் செய்யலாம். எல்லாத் தொழில்களையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற கொள்கையை இந்த நிர்வாகம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஹோட்டல் தொழிலை சர்க்கார் தாங்களே எடுத்து நடத்தப்போவதில்லை.

திரு. மு. கருணாநிதி : மாமல்லபுரத்தில் சர்க்கார் ஏற்று நடத்தி வந்த விடுதி இப்பொழுது தனிப்பட்ட ஹோட்டல் முதலாளியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், முன்பிருந்த வாடகையைவிட இப்பொழுது மூன்று மடங்கு அதிகமாக வாடகை வாங்குகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்து, இப்படிப்பட்ட தனிப்பட்ட முதலாளிகளிடம் இதை ஒப்படைக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது முதலில் நம் விடுதியாக இருந்தது. அதை மத்திய சர்க்கார் டூரிஸ்டு ஸ்கீமில் அவர்களுக்குக் கொடுத்துவிட்டோம். அதனால், இந்தக் கேள்வியை கனம் அங்கத்தினர் தன்னுடைய கட்சி அங்கத்தினர் மூலமாக பார்லிமெண்டில் கேட்டால் பதில் கிடைக்கலாம்.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னை மாநகரிலே இருக்கிற குடிசை வாழ் மக்களுக்கு இடம் தேடிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் எவ்வளவோ சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவோம். பத்து எக்கர் நிலம் என்று சொன்னால், கிட்டத்தட்ட 400 குடிசை வாழ் மக்களை அங்கே குடி வைக்கலாம். மேலும் சென்னையிலே நல்ல வசதியான பெரிய ஹோட்டல்கள் இருக்கின்றன. அவற்றை சர்க்காரே ஏற்று நடத்துவதற்கு முன் வரலாம் அல்லவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஊரூர்ப் பகுதியில் 600 எக்கர் நிலம் வாங்கி ஒரு டவுன்ஷிப்பை அமைக்கிறோம். அதில் வசிக்கின்ற மக்களில் 40 சதவிகிதம் குடிசை வாழ்பவர்களாக இருப்பார்கள். இந்த 10 எக்கரிலும் குடிசை வாழ் மக்களை வைக்க வேண்டும், மேலும் எல்லா இடத்திலும் வைக்க வேண்டுமென்று

சொன்னால், அது ஒரு புது ஸ்லம் ஆகத்தான் ஆகுமே தவிர, புது டவுன்ஷிப் ஆகாது. நாங்கள் அமைக்கின்ற புது டவுன்ஷிப்புக்கள் எல்லாவற்றிலும் ஒரு பகுதியை குடிசை வாழ்பவருக்கும், ஒரு பகுதியை 'லோ இன்கம் குரூப்' மக்களுக்கும், ஒரு பகுதியை 'மிடில் இன்கம் குரூப்' மக்களுக்கும், இன்னும் ஒரு பகுதியை அதிகமாகப் பணம் கொடுத்து, கிரவுண்ட் ஒன்றுக்கு ரூ. 10,000 கொடுத்து வாங்குபவர்களுக்கும் விட்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தை நடத்துவதன் மூலமாக, குடிசை வாழ்பவர்கள் நல் வாழ்வு வாழ்வதற்கு வசதியாக இருக்கும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : புதிதாக நிறுவப்படுகிற அந்த ஹோட்டல் எப்படிப்பட்ட தரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை அந்த ஹோட்டல் வைப்பவர்களே நிர்ணயிப்பார்களா, அல்லது அரசினர் ஆலோசனை கூறி இருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இண்டர்நேஷனல் ஸ்டாண்டர்டு பிரகாரம் இருக்கிறவர்களுக்குத்தான் இது கொடுக்கப்படும். அதிகமாக டெண்டர் போட்டாலும்கூட, அந்த ஸ்டாண்டர்டைப் பின்பற்ற விருப்பம் இல்லாதவர்களுக்கு அல்லது முடியாதவர்களுக்குக் கொடுக்கப்பட மாட்டாது. இண்டர்நேஷனல் ஸ்டாண்டர்டு என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதற்கு ஆர்க்கிடெக்ட்ஸ் இருக்கிறார்கள். பொது சுகாதார இலாகா எவ்வாறு சானிட்டரி ஃபிட்டிங்ஸ்களை அமைக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். மற்றும் பல இலாகாக்களும் யோசனை கூறுவார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : நகரத்திலே இருக்கின்ற பெரிய ஹோட்டல்களை சர்க்காரே ஏற்று நடத்தி, இது போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க முன்வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஹோட்டல் நடத்துவது சர்க்கார் தொழில் அல்ல என்பதை நான் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன்.

Improvement (Housing) Trusts

* 165 *Q.*—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute Improvement (Housing) Trusts at district and taluk levels?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

சிகரெட்டு விலை உயர்வைத் தடுத்தல்

* 166 **கேள்வி.—திரு. ஆ. கு சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிகரெட்டுகளின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுத்துள்ளதா ? விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

[16th August 1963

திரு. ஆ. கு. சுப்பையா : சிகரெட்டுகளின் விலை அதிகமாகி இருப்பதால், சிகரெட் குடிப்பவர்கள் சர்க்கார் மீது குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, விலையைக் கட்டுப்படுத்துவது பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலிலே மாநில சர்க்கார் சம்பந்தப்பட்டதல்ல இது. மத்திய சர்க்கார் எக்ஸைஸ் வரி போடுகிறார்கள். அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

Agricultural Maistries Conference

* 167 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government have received any resolution passed at the Conference of the State Agricultural Maistries Association during 1962; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) The Government considered the various requests made by the Association and have informed the Association of the action taken.

(அ) ஆம்.

(இ) சர்க்கார் சங்கத்தின் பல கோரிக்கைகளைக் கவனித்து, சங்கத்திற்கு தாங்கள் கோரிக்கைகளின் மேல் எடுத்த நடவடிக்கையைத் தெரிவித்துள்ளனர்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தக் கோரிக்கைகளில் அவர்களுடைய ஊதிய உயர்வைப் பற்றி ஏதாவது குறிப்பிட்டிருந்ததா? அதைக் குறித்து அரசாங்கம் என்ன பதில் அளித்திருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : ஊதியத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். உத்தியோக உயர்வைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து, இப்பொழுது இருக்கின்ற ஊதியத்திற்கு மேல் அதிகமாகக் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக மேஸ்திரியாக இருப்பவர்களை இரண்டாம் கிரேடிலிருந்து முதல் கிரேடுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மொத்தம் நமது மாநிலத்தில் 250 இரண்டாவது கிரேடு மேஸ்திரிகள் இருக்கிறார்கள். முதல் கிரேடு ஆக்குவதாக இருந்தாலும், 250 பேருக்கும் கொடுக்க முடியாது. 150 பேருக்காவது கொடுப்பதற்கு வசதி செய்ய முடியுமா என்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைகள்

* 168 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் மாவட்டத்திற்கு 1963-64-ம் ஆண்டிற்கு அபிவிருத்தி வேலைகளுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

16th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இம்மாநில அபிவிருத்தி வேலைகளில் திட்ட வேலைகளும் இருக்கின்றன; திட்டத்தின் கீழ் வராத வேலைகளும் இருக்கின்றன. திட்ட வேலைகளைப் பொறுத்தவரையில், இம்மாநில முழுவதற்குமாக 1963-64-ம் ஆண்டிற்கு 59.83 கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியான புள்ளிவிவரங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

The developmental works in the State include both plan and non-plan schemes. So far as plan schemes are concerned, a provision of Rs. 59.83 crores has been budgeted for the year 1963-64 for the State as a whole. The District-wise break-up of figures has not been complied so far.

திரு. சோ. ஆறுமுகம் : மாவட்ட ரீதியாக அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கப்படுகிற பணம் பொருளாதார அடிப்படையில் ஒதுக்கப்படுகிறதா? அப்படியானால் சேலம் மாவட்டத்தைப் பின் தங்கிய மாவட்டமாகக் கருதி, அதிகப்படியான தொகையை ஒதுக்குவதற்கு சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பின் தங்கிய மாவட்டங்களுக்கு விசேஷ கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்தில் தொடர்ந்து இருக்கிறது என்றாலும், இதை மாவட்ட வாரியாகப் பிரித்துப் பகிர்ந்து கொடுப்பதற்கில்லை.

Pudukkottai Municipality

* 169 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(a) whether the Pudukkottai municipality in Tiruchirappalli district is qualified to be up-graded as class I municipality; and

(b) if so, when a final decision would be taken?

THE HON. SRI S. M. A. MAJID : The proposal for reclassifying certain municipalities including Pudukkottai is under the consideration of the Government.

புதுக்கோட்டை நகராட்சி உட்பட சில நகராட்சிகளின் தரம் மாற்றுதல் பிரேரணை சர்க்காரின் கவனத்தில் இருந்து வருகிறது.

குழந்தை உணவுத் தொழிற்சாலை (உதகை)

* 170 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குழந்தை உணவு தொழிற்சாலை உதகமண்டலத்தில் நிறுவும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்தத் திட்டத்தை உதகை மாவட்டத்திலே வைக்க வேண்டுமென்று கடந்த ஐந்து ஆண்டுகளாக நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் இது

பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னீர்கள். எந்தவிதமான பரிசீலனையில் இருக்கிறது, எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: உதகையில் போதுமான வசதியில்லை. அந்த வசதியை எப்படிப் பெருக்குவது என்பது தான் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. வசதி என்று சொன்னால், போதிய அளவுக்குப் பால் கிடைக்க வேண்டும். கோடை காலத்தில் அங்கே வருகின்றவர்களுக்குக் கூட போதிய அளவுக்கு பால் கிடைப்பதில்லை. அந்த இடத்திலே பால் வசதியைப் பெருக்கி, இந்த பேபி ஃபூட் பாக்டரியை வைக்க முடியுமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர்: பால் வசதிக்குக் கூட அப்பகுதியில் உள்ள மசனகுடியில் மாடுகளை வைப்பதற்கு வசதியாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அங்கு பாக்டரி வைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு பால் வசதியை அதிகரிப்பதற்கு மாடுகளை வைத்து, இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முதலிலே மாடுகளை வளர்க்க வேண்டும். அதற்குப் பிறகு பால் அதிகமாகக் கிடைக்க வேண்டும். அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எந்த இடத்திலே பால் கிடைக்கிறதோ, அந்த இடத்திலே வைத்தால் சீக்கிரம் பாக்டரி வராதா என்று பார்க்கிறோம்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தற்போது உதகையில் தினம் ஆயிரம் லிட்டர் பால் அங்கே விற்பனை ஆகாமல் சென்னைக்குக் கொண்டு வரப்படுகிறது. அந்த அளவுக்குப் பால் இருந்தால், இந்த திட்டத்தை அங்கே வைக்க முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் முன்பே பதில் சொன்னேன், கோடை காலத்திலே அங்கே இருக்கிறவர்களுக்குக் கூடப் பால் கிடைக்கவில்லை. ஒரு பாக்டரி வைத்தால் ஆண்டு பூராவும் பால் கிடைத்தால்தான், அது வேலை செய்ய முடியும். இல்லாவிட்டால், எட்டு மாதங்களுக்குப் பால் கிடைத்து, நான்கு மாதங்களுக்கு முடியாதபடியான நிலைமை இருந்தால், அது சரியாக வராது. இதை எல்லாம் பரிசீலனை செய்து வருகிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர்: இப்பொழுது பால் அதிகமாகக் கிடைக்கவில்லை, கோடைக்காலத்தில் கிடைக்கவில்லை என்ற சாக்கை வைத்துக் கொண்டு, நீலகிரியிலிருந்து வேறு இடத்திற்கு இந்த பாக்டரியை மாற்றுவதாக யோசனை இருந்தால், அதை அரசாங்கம் கைவிட்டு விடுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: வசதி இருக்கும் இடத்தில் தான் பாக்டரி வைக்க முடியும். கனம் அங்கத்தினர் கோபித்துக் கொள்ளுகிறார்கள் என்பதற்காகத் தொழிற்சாலை வைக்க முடியுமா?

Cashew Research Station

* 171 *Q.*—SRI S. MADHAVAN :
SRI K. NARAYANASWAMI PILLAI : } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Cashew Research Station; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes Sir.

(*b*) The Cashew Research Station will be located in a site comprising 41·72 acres in Kuppanatham village of Virudhachalam taluk in South Arcot district. A sum of Rs. 71,200 has been provided for the purpose in the budget for the current year.

(அ) ஆம்.

(இ) தென்னாற்காடு ஜில்லா, விருத்தாசலம் தாலுக்காவிலுள்ள, குப்பநாதம் கிராமத்தில், 41.72 ஏக்கரா பரப்புள்ள பகுதியில் முந்திரி ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படும். அதன் பொருட்டு 1963-64-ஆம் ஆண்டு செலவிற்காக ரூபாய் 71,200 ஒதுக்கப்பட்டுள்ளது.

Medical facilities (N.G.Os.)

* 172 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to give a monthly allowance in lieu of the medical facilities extended to the N.G.Os. and others; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) எழாது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார், இந்த மாதிரிச் சலுகைகள் கொடுத்திருந்தாலும், அநேகம் பேர்கள் அதைப் பயன் படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆதலால், அவர்கள் எவ்வாறு ட்ரீட்மெண்ட் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அது பற்றி விரிவாக தாசில்தார் மூலமாக அவர்களுக்கு அறிவிக்கமுடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஸார், ரூ. 300 சம்பளத்திற்கு உட்பட்டவர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்கப்படுகிறது. கெஜட்டட் ஆபீசர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. ஆனால், டயட் சார்ஜ் மட்டும் வசூலிக்கப்படுகிறது.

[16th August 1963

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த சலுகை பெறுவதற்கு எந்த விதமான முறை கையாளப்படவேண்டுமென்று அநேகம் பேர்களுக்குத் தெரியவில்லை. எந்த முறையில் சலுகைகள் பெற வேண்டுமென்று அரசாங்கம் அவர்களுக்குத் தெரிவிக்க முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அங்கத்தினர் என்ன கேட்கிறார் என்று புரியவில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பொதுக் டிபார்ட்மெண்ட் எந்த முறையில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று . . .

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிக் கேள்வி போட வேண்டும்.

National Discipline Scheme

* 173 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the steps taken so far for the introduction of National Discipline Scheme in the schools;

(b) the details of the scheme and the number of schools to be covered during 1963; and

(c) the anticipated expenditure during the current year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (c) The matter is under the consideration of the Government of India.

SRI R. V. SWAMINATHAN : May I know from the Hon. Leader of the House about the nature of the National Discipline Scheme that is contemplated by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The National cipline Scheme is a Common Drill Scheme, Physical Exercise Scheme, which lays emphasis on discipline among the pupils.

Grama Sevaks (House-rent allowance)

* 174 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is an order of the Government for the payment of House Rent Allowance to Grama Sevaks at the rate of Rs. 5 per mensem; and

(b) if so, the reason for not paying the same till now?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

Emergency period

* 175 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Governments were consulted by the Union Government regarding continuance of the Emergency; and

(b) if so, the views offered by them?

16th August 1963]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The communication between Government of India and the State Government on this subject is confidential and cannot be disclosed.

(அ) & (இ) இந்திய அரசாங்கத்திற்கும் இம்மாநில அரசாங்கத்திற்கும் இடையில் இது விஷயமாக உள்ள கடிதப் போக்குவரத்து இரகசியமானது. அதை வெளியிடுவதற்கில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இந்த அவசர கால நிலையில் மக்களுடைய கட்டளையையும், ஆதரவையும் பெற்று பல்வேறு மாநிலங்களிலும், முதல் அமைச்சர்களாகவும் அமைச்சர்களாகவும் அமர்ந்து இருப்பவர்கள், நாட்டின் நலனைவிடத் தங்கள் கட்சி நலனே பெரிது என்று ராஜிநாமா செய்ய முன் வந்திருக்கிறார்கள் என்பது முறை கேடானது என்று அரசாங்கம் கருதவில்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்விக்கும் கனம் அங்கத்தினர்—அவர்கள் சொல்வது கருத்துக்கள்தான்—கருத்துக்களுக்கும் கொஞ்சம் கூடச் சம்பந்தம் இல்லை. கனம் அங்கத்தினர் தன்னுடைய கருத்தைத் தன்னோடு வைத்துக்கொள்ளலாம். இந்த மூலக் கேள்வியிலிருந்து அது எழாது.

திரு. கே. ஏ. மதியழகன் : நம் தேசப் பாதுகாப்புக்கு கம்யூனிஸ்டுகளால் குந்தகமில்லை என்று சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள் போலும். அவர்களால் ஏற்படக்கூடிய ஆபத்து நீங்கி விட்டதா அல்லது ஆபத்து வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. பாதுகாப்புக் கைதிகளாக வைப்பது என்பது அப்போதைக்கப்போது நிலைமையைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பாதுகாப்பில் வைக்க வேண்டுமென்றால், வைக்கப்படுகிறார்கள். விடுதலை செய்ய வேண்டுமென்றால் அதையும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

MR. DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II ANNOUNCEMENTS.

(1) THE MADRAS APPROPRIATION (NO. 4) BILL, 1963.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the Madras Appropriation (No. 4) Bill, 1963 (L.A. Bill No. 14 of 1963) has beeu passed by the Legislative Council without any recommendation.

III.—CALLING ATTENTION TO THE NON-AVAILABILITY OF RAW MATERIALS FOR THE MATCH FACTORIES IN SATTUR.

திரு. செ. மாதவன் : ஸார், சாத்தூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நடைபெறுவதற்கு வேண்டிய கச்சாப் பொருள்கள் கிடைக்காததால், மேலும்

[திரு. செ. மாதவன்] [16th August 1963

தொழிற்சாலைகள் 5—8—1963 முதல் மூடப்பட்டதும், அதன் விளைவாக 10,000 தொழிலாளர்கள் வேலை இழந்தனரென்பதும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் தொழில் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir. The small match producers (C class factories) in the Sattur taluk in Ramanathapuram district represented to the Government *inter-alia* their difficulties in getting raw materials. In order to precisely know what their difficulties are, I requested some of these small match producers to meet me. Accordingly, they met me on 6th August 1963 and explained to me their difficulties. After hearing them, it was explained to them that the best way of solving their difficulties was for them to form themselves into a co-operative society which could obtain the raw materials, stock them and arrange for their equitable distribution and that the proposed society could also assist the members in marketing the matches. They have readily agreed to this proposition. The Director of Industries and Commerce has been requested to submit a scheme on these lines.

IV.—STATEMENT *re* ADMISSION TO EDUCATIONAL INSTITUTIONS IN THE STATE.

MR. DEPUTY SPEAKER : Now the Hon. the Minister for Finance will make a statement under Rule 82.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, The strength of classes in colleges and the sanction of additional strength in them are decided by the University of Madras. In view of the greater demand for admission this year, the University sanctioned on increase of nearly 5,000 seats in the P.U.C. Classes in all the colleges in the State as against the additional strength of about 3,000 permitted last year. In this is included the strength of 160 in the Government P.U.C. College for Women at Kumbakonam newly opened this year.

Regarding High Schools, the Government have so far sanctioned 184 new High Schools this year. Besides, 600 additional sections in existing High Schools have also been permitted. Instructions have been issued that admission should not be refused in High Schools for want of accommodation and the heads of schools have been allowed to admit pupils in excess of the permitted number and obtain the approval of the competent departmental authority subsequently. There may be some difficulties in accommodation, however, where parents desire to admit their children in particular institutions of their choice in certain cities like Madras and Madurai.

16th August 1963] [Sri M. Bhaktavatsalam]

school. The opening of higher elementary Standards of VI, VII and VIII is permitted wherever necessary. The Third Five-Year Plan includes a scheme for the opening of about 1,750 additional sections in Standards VI to VIII every year during the first three years of the Plan period.

II.—ANNOUNCEMENTS—*Cont.*

(2) NOMINATION OF COUNCIL MEMBERS TO THE COMMITTEE ON ESTIMATES.

MR. DEPUTY SPEAKER : I have also to announce to the House that the Legislative Council has nominated the following five members to associate with the Committee on Estimates of the Legislative Assembly for the year 1963-64 :—

1. Sri T. S. Arunachalam.
2. Sri K. Ramadass.
3. Sri V. M. Surendraram.
4. Sri K. Anbazhagan.
5. Sri S. K. Sambandan.

(3) NOMINATION OF COUNCIL MEMBERS TO THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

MR. DEPUTY SPEAKER : I have further to announce that the Legislative Council has nominated the following five members to associate with the Committee on Public Accounts of the Legislative Assembly for the year 1963-64 :—

1. Sri T. Joghee Gowder.
2. Sri A. Sambasiva Reddiar.
3. Sri K. Rajaram.
4. Sri K. Anbazhagan.
5. Dr. A. Chidambaranathan.

V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION AND PAYMENT OF FAIR RENT (EXTENSION TO ADDED TERRITORIES) BILL, 1963.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963."

MR. DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963."

The motion was put and carried and leave was granted.

[16th August 1963

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS ESTATES LAND (REDUCTION OF RENT) AMENDMENT BILL, 1963.

9-30 a.m. THE HON. SRI V. RAMAIAH : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963[a] and move—

"That the Bill be taken into consideration."

Sir, the Bill together with the Statement of Objects and Reasons was published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 29th July 1963.

Sub-section (2) of section 3 of the Madras Estates Land (Reduction of Rent) Act, 1947, empowers the State Government to fix, by order, reduced rates of rent payable in respect of each class of ryoti land in an estate as defined in the Madras Estates Land Act, 1908. Cases have come to the notice of the Government in which, after the publication of the said Rent Reduction notification a Court, Tribunal or other authority has held that the area specified in the order is not an "estate" or that any land specified in the order is not a ryoti land. At present, there is no provision in the Act as to what should happen in such cases, to the amount already collected by the State Government under sub-section (4) of section 3 of the Act or as to the rights and liabilities of the landholder and the tenant.

The cancellation of Rent Reduction notification, especially after a long spell, will cause undue hardship to the tenants in that they have to pay in one lump-sum the difference in rent which the landholder will demand in consequence of such cancellation. Provision has, therefore, been made so as to enable the tenant to pay the difference of rent in easy instalments not exceeding ten. In the Bill as published the tenant could apply to the Collector for fixing the number of instalments not exceeding Rs. 10 in which he could pay this amount. But, however, Government consider that the tenant should be enabled to get this relief even at the hands of the Court in which the landholder files his suit for arrears and also that the relief should extend to decrees already passed but not fully satisfied. I shall be moving amendments for this purpose.

As regards the period of limitation for the landholder filing suits, it is considered necessary to exclude in its computation the period from the date of publication of the notification under section 3 (2) of the Rent Reduction Act, and the date of the Court's decision holding such notification to be invalid.

The landholder will have to take credit for the amounts paid by the ryot to the Government under the Reduction of Rent Act and can only sue for the balance.

a Published in the *Fort, St. George Gazette* Extraordinary, dated 29th July 1963.

16th August 1963] [Sri V. Ramaiah]

With these words, Sir, I commend the Bill for the acceptance of the House.

MR. DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 be taken into consideration."

திரு. எம். வி. கரிவேங்கடம்: மதிப்பிற்குரிய சட்ட மன்ற உப தலைவர் அவர்களே, இந்தச் சென்னை குத்தகை குறைப்பு திருத்த மசோதாவைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1947-ம் வருஷவாக்கில் குத்தகைக் குறைப்புச் சட்டம் ஒன்றை இந்த மாமன்றம் நிறைவேற்றியது. அதன்படி ஒரு சில இனாம் நிலங்கள் உள்ள பகுதிகளிலே உள்ள நிலங்களெல்லாம் எஸ்டேட்டுகள் என்று சொல்லப்பட்டு, அந்த எஸ்டேட்டுகளிலிருந்த குத்தகை குறைக்கப்பட்டது அந்தச் சட்டத்தின் வாயிலாக. அப்படிக் குறிப்பிட்ட விகிதத்திலே அரசாங்கம் குத்தகையைச் சுமார் 16 வருஷ காலமாக வசூலித்து வந்தது. அதன் பின்னர் ஒரு சில நிலச்சுவாந்தார்கள் வழக்கு மன்றங்களுக்குச் சென்று குறிப்பிட்ட நிலங்கள் எஸ்டேட்டுகள் அல்ல என்று வழக்காடிய காரணத்தினாலும், வழக்கு மன்றங்கள், ட்ரிப்யூனல்களும் அவைகள் எஸ்டேட்டுகள் அல்ல என்று தீர்ப்பு அளித்து விட்ட காரணத்தினாலும், அந்த நிலங்கள் இந்த ரெண்ட் ரிடக்ஷன் சட்டத்தின் கீழ் வராமல், மேற்கொண்டு அரசாங்கம் வசூலித்த குத்தகை குறைந்த குத்தகையாக இருந்த காரணத்தினாலும், ஏற்கனவே அந்த நிலச்சுவாந்தார்கள் வசூலித்து வந்த குத்தகை மிக அதிகமாக இருந்த காரணத்தினாலும், அதிகமாக இருந்த குத்தகைத் தொகையிலிருந்து, குறைவாக உள்ள குத்தகைத் தொகையைக் கழித்து, மீதம் உள்ள தொகைக்கு, அந்தத் தொகையை நிலச்சுவாந்தார்கள் பெற அருகதையுடையவர்களாக ஆகின்றார்கள். அப்படிப் பார்க்கப் போனால் ஏறக்குறைய 17 ஆண்டுகள் ரெண்ட் ரிடக்ஷன் ஆக்டின் படி குத்தகையை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். 17 ஆண்டுகளுக்கும் வித்தியாசம் இருக்கிறதல்லவா? ஏற்கனவே அரசாங்கம் வசூலித்த தொகைக்கும் ஏற்கனவே குடியானவர்கள் செலுத்தி வந்த தொகைக்குமிடையே உள்ள வித்தியாசத்திற்கு நிலச்சுவாந்தார்கள் வழக்கு தொடரலாம். அப்படி வழக்கு தொடர்ந்து அதற்கு டிக்ரி பெறலாம் என்ற நிலைமை இருக்கிறது. சாதாரணமாக மூன்று ஆண்டுகள் குத்தகை பாக்கியிருந்தால், மூன்று ஆண்டுகளுக்குமேல் போனால் லா ஆஃப் லிமிடேஷன்படி செல்லாது. இருந்தாலும் கூட ஏற்கனவே அரசாங்கம் குறைந்த குத்தகைப்படி வசூலித்து வந்ததால் அதை நம்பி குடியானவர்கள் அதுதான் தங்களுக்கு ஏற்பட்ட நியாயமான குத்தகை, அதுதான் குறைந்த வீதப்படி வசூலிக்கப்படுகிற குத்தகை என்று நம்பியிருந்தார்கள். இந்தச் சட்டப்படி 16 ஆண்டுகளுக்கு, குறைந்த குத்தகைக்கும் ஏற்கனவே இருந்த குத்தகைக்கும் உள்ள வித்தியாசத்தையும் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். ஏற்கனவே ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட்டுக்கு முன் செலுத்தி வந்த

தொகை ரூ. 100 என்று வைத்துக்கொண்டால், ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட்டின்படி பிறகு ரூ. 60 என்று வைத்துக்கொண்டால், வித்தியாசம் ரூ. 40 ஆகும். 16 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ. 640-ஐ ஒரே சந்தர்ப்பத்தில் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இந்த மசோதா மூலமாக அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இந்தத் திருத்த மசோதாவின் 10 ஆண்டுத் தவணைகளில் அந்தத் தொகையைச் செலுத்தலாம் என்று தவணை கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. 10 தவணைகள் என்றால் ஒவ்வொரு தவணையும் ஆண்டுத் தவணை என்ற முறையில் 10 தவணைகளுக்கு மேற்படாமல் என்று இருக்கிறது. இதைப் பொருத்த வரையில் பத்தும் உறுதியாகக் கிடைக்குமா என்பதற்கு இந்த மசோதாவில் உத்திரவாதம் இல்லை. கலெக்டர் உத்திரவு போடும்போது 6 தவணைகளுக்குள் கட்ட வேண்டும் என்று கூடச் சொல்லலாம். 10 தவணைகள் கொடுக்க வேண்டுமென்று இந்த ஷரத்து அமையவில்லை. அதோடு மட்டுமல்லாமல் குத்தகை பாக்கிக்கு 6 சத விகிதம் வட்டியையும் பெறலாம். எந்தத் தேதியிலிருந்து என்று கேட்டால் 1963-ம் ஆண்டு இந்தத் திருத்த மசோதா தேதியிலிருந்தாவது அல்லது ட்ரிப்யூனல் தீர்ப்பு ஏற்பட்ட தேதியிலிருந்தாவது எப்படி இருக்கிறதோ அந்தத் தேதியிலிருந்து. இந்தத் திருத்த மசோதாவின்படி நிலச்சுவந்தார்களுக்கு 10 ஆண்டுகளுக்குள் 16 ஆண்டு வரையில் உள்ள வித்தியாசத்தை வசூலிக்கும் உரிமை கிடைக்கிறது. அப்படிப் பெறுகிற தொகைக்கு வட்டியும் கொடுக்கப்படுகிறது. ஆகவே இந்தத் திருத்த மசோதாவைப் பொருத்த வரையில் குடியானவர்களுக்கு மிகவும் பாதகம் விளைவிப்பதாக இருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல, நாம் பார்த்திருக்கிறோம், நேற்றைக்கு முன் தினம் இதே மாமன்றத்தில், உயர் நீதி மன்றம் விற்பனை வரி வழக்குகளில் ஒரு சில தீர்ப்புகள் வழங்கின, அதன்படி சர்க்கார் கஜானாவிற்கு ஏராளமான பணம் வராமல் போய்விடும், ஆகவே சட்டத்தை திருத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம் என்று விற்பனை வரியில் ஒரு சில திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள் கனம் அமைச்சர் அவர்கள். இந்தச் சட்டப்படி குடியானவர்கள் பல ஆண்டுகளாகச் செலுத்தாமல் இருந்தும், அரசாங்கம் குத்தகைக் குறைப்பு செய்தது என்று எண்ணி அது தான் செலுத்த வேண்டிய குத்தகை என்று நினைத்து இருந்தும், இப்போது உடனடியாக ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட்படி கொடுக்கப்பட்ட சலுகைகளை எடுத்து விட்டு ஏற்கெனவே எந்த விதத்தில் செலுத்தி வந்தார்களோ அந்த விதத்திற்கும் இதற்கும் உள்ள வித்தியாசத்தை நிலச் சுவாந்தார்களுக்குச் செலுத்தவேண்டுமென்ற முறையில் இந்த திருத்த மசோதா இருக்கிறது. இதில் அரசாங்கம் தான் குத்தகைக் குறைப்பு செய்திருந்தது, அதன்படி செலுத்த வேண்டுமென்று செலுத்தி வந்தவர்களுக்கு பெரிய பாதிப்பை உண்டாக்குகிறோம். ஆகவே இந்த மசோதா குடியானவர்களுக்கு நன்மை பயப்பதாக இல்லை, நான் ஏற்கெனவே சொன்னேன்,

விற்பனை வரி மூலமாகச் சர்க்கார் கஜானாவிற்குப் பணம் வரவில்லை, ஆகவே சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று திருத்திய சர்க்கார், குத்தகை பாக்கிகளை குடியானவர்கள் கொடுக்க வேண்டியதில்லை, ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட்படி எவ்வளவு குத்தகை செலுத்தி வந்தார்களோ அதைத் தொடர்ந்து செலுத்தி வந்தால் போதும் என்று ஏன் செய்யக் கூடாது, ஏன் குடியானவர்களுக்கு இது போன்ற ஒரு நிவாரணத்தை அளிக்கக் கூடாது என்பதைச் சிந்தித்துப் பார்த்து, அதற்குத் தகுந்தபடி இந்தத் திருத்த மசோதாவை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. செ. மாதவன் :** மதிப்பிற்குரிய சட்டமன்ற துணை தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னால், இந்த நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சி, மக்களைப் பார்த்து உங்களுக்கு பல உரிமைகளை தரப் போகிறோம் என்றெல்லாம் சொல்லியது. அதன் விளைவாக 1947-ல் இந்த வரிக் குறைப்புச் சட்டம் வந்தது. அன்றைக்கு இந்த மசோதாவை கொண்டு வந்தபோது, காங்கிரஸ் கட்சி, நாங்கள் ஜமீன்தார்களையும் இனாம்தாரர்களையும் எடுத்து விடப்போகின்றோம், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய வரிகளை குறைக்கப் போகின்றோம் என்று சொல்லித்தான் 1947-ல் இந்தச் சட்டத்தை சட்ட மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். இந்தச் சட்டத்தை அன்றைக்குக் கொண்டு வந்த நேரத்தில், அன்றைக்கு ரெவின்யூ அமைச்சராக இருந்த திரு. காளா வெங்கட் ராவ் அவர்கள் இதைப் பற்றி மிக தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஜமீன் என்று சொல்லும் போது இனாம்களையும் சேர்த்துத்தான். ஜமீன் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு பல உரிமைகளைக் கொடுக்கும்போது இனாம் பிரதேசத்திலுள்ள மக்களுக்கும் வரி குறைப்பு செய்வதற்கும் எண்ணியிருக்கிறோம். என்று அன்றைக்கு மிக தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு இருந்த அமைச்சரவையை விட இன்றைக்குள்ள அமைச்சரவை பிற்போக்கான அமைச்சரவை என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அதே நேரத்தில் அன்றைக்கு இந்த மசோதா பற்றி மன்றத்தில் விவாதம் நடைபெறும்போது, விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர் மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். ஜமீன்தார்கள் கொடுமைக்காரர்கள், கொள்ளைக்காரர்கள், குண்டர்களை வைத்து மக்களை கஷ்டப்படுத்தக்கூடிய அளவுக்குக் கொடுமைக்காரர்களாக இருக்கிறார்கள், அந்த அளவுக்கு விவசாயப் பெருங்குடி மக்களை கஷ்டப்படுத்துகிறார்கள். அதே போல்தான் இனாம்தார்களும் கொடுமைக்காரர்களாகவே இருக்கிறார்கள் என்று அன்றைக்கு விவாதத்திலே கலந்து கொண்ட ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அங்கத்தினர் வேறு யாருமல்ல, இன்றைக்கு விவசாய அமைச்சராக அமர்ந்திருக்கின்ற திரு. கக்கன் அவர்கள் தான் அன்றையதின விவாதத்தில் நான் முன்னால் கூறிய கருத்துக்களை எல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். அன்றைக்கு அவர்கள் கூறிய கருத்து இன்றைக்கும் அமைச்சரவை

யில் இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஜமீன்தார்கள் கொள்ளைக் காரர்கள், கொடுமைக்காரர்கள், இனாம்தார்கள் கொடுமைக்காரர் கள் இவர்களை எல்லாம் ஒழித்துக் கட்ட வேண்டும் என்றெல்லாம் அன்றைக்கு வாரி இறைத்திருக்கிறார்கள். இந்தக் கருத்துக்கள் எல்லாம் 1947-ல் இந்நாட்டுக்கு அமைச்சராக வீற்றிருக்கின்ற கனம் கக்கன் அவர்கள் கூறிய கருத்துக்கள். இன்றைக்கு அந்த கருத்துக் களுக்கு இந்த அரசாங்கம் மதிப்புக் கொடுக்க மறுப்பதற்கு காரணம் என்ன? இனாம் பகுதிகளிலும் ஒரே நிலைமை இருக்கும்போது ஒரு பகுதியில் மட்டும் விலக்கு கொடுக்கப்படும் என்று சொல்வதில் என்ன பொருள் இருக்கிறது? இனாம் பகுதிகளில் இருக்கும் கொடுமைகளை நீக்கப்போகிறோம் என்று சொல்லுகிறவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வரிக்குறைப்பு என்று சொல்லும்போது, இனாம் பிரதேசங்களையும் இதில் சேர்த்துக் கொண்டாக வேண்டும்.

அடுத்தாற்போல், இனாம் பிரதேசங்களுக்காகத் தனியாக வேறு சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லுவதால் மட்டும் பிரயோசனமில்லை. இப்போது இதன் கூடவே இனாம் பிரதேசத் திலுள்ள மக்களுக்கும் வரிக்குறைப்பு செய்வதற்கு தயக்கம் காட்டு வதன் காரணம் என்ன? ஒரு சில இனாம்தாரர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இராது என்று நம்புகிறேன். அப்படியிருக்கும்போது இந்தத் திருத்த மசோதாவை எல்லாப் பகுதியிலுள்ள மக்களுக்கும் முழுக்க முழுக்க பிரயோசனப் படக்கூடிய அளவில் ஏன் கொண்டு வரக் கூடாது என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இம்மாதிரிப்பட்ட ஒரு வரிக்குறைப்புச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று நான் கனம் தொழில் அமைச்சர் அவர்களிடத் திலும் கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களிடத்திலும் கேட்டுக் கொண்டேன். இப்போது அம்மாதிரிப் பட்ட சட்டம் கொண்டு வந்ததற்காக நான் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன். ஆனால் கனம் அமைச்சர்கள் கொடுத்த வாக்குறுதிக்கும் இப்போது சட்டத்தில் கொண்டு வந்திருக்கும் விதிகளுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக குறிப்பிட்டார்கள். முக்கியமாக, சர்க்காருடைய சட்டத்தினால் விவசாய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உயர் நீதி மன்றம் ஒரு சில தீர்ப்புகளை வழங்கியிருக்கிறது. அத் தீர்ப்பின் காரணமாகவும், சர்க்காருடைய செயல்களின் காரணமாகவும், சாதாரண விவசாய மக்கள் 10, 12 ஆண்டுகள் சேர்ந்து குத்தகைத் தொகையை இப்போது செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் தந்திருக்கும் விளக்கம், வரிப் பளுவை நீக்காவிட்டாலும் ஆண்டு தோறும், இவ்வளவு செலுத்தவேண்டும் என்று ஒரு சலுகையை கொடுக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. இப்

போது அதிக பட்சம் 12 ஆண்டுகள் என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால் முன்னால் 10 ஆண்டுகள் என்று வைப்பதாக சொல்லப் பட்டது. அது மட்டுமல்ல, முன்னால் நான் சொன்ன கருத்துக்களுக் கும் இப்போது சட்டத்தில் சொல்லப்படுகிற கருத்துக்களுக்கும் முரண்பாடு இருக்கிறது. ஒரு உதாரணத்தைச் சொல்லுகிறேன். ராமநாதபுரம் மாவட்டத்தில் மருதிப்பட்டி என்கிற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமம் 1947-ல் வரிக்குறைப்புச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் நோட்டிஃபிக்கேஷன் செய்தது. இதைப் பார்த்த நிலச்சுவாந்தார் நீதி மன்றத்தில் வழக்குப்போட்டு ஸ்டே வாங்கினார். சர்க்கார் நோட்டிஃபிக்கேஷன் செய்த பின்னால் விவ சாயிகள் 10½ ரூபாய் செலுத்த வேண்டியிருந்தது. நீதி மன்றத்தில் வழக்கு பல ஆண்டுகள் நடந்தது. கடைசியில் சர்க்காருடைய உத் தரவு செல்லாது என்று நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. அது தான் இந்தத் திருத்தச் சட்டத்திற்கு அடிப்படையாக அமைந்தது. உண்மையிலேயே அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் இந்தச் சட்டம் வராவிட்டால், அதாவது நோட்டிஃபிக்கேஷன் செய்வ தற்கு முன்னால் இருந்தது போன்று ஆண்டு தோறும் நிலச்சுவாந் தாருக்கு தாங்கள் செலுத்த வேண்டியதை செலுத்திவிட்டு மிக அமைதியாகக் காலம் கழித்துக் கொண்டிருந்திருப்பார்கள். ஆனால் சர்க்காருடைய உத்தரவு வந்ததின் பின்னால் 10½ ரூபாய் கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சர்க்கா ருடைய சட்டம், அதன் காரணமாக எழுந்த நோட்டிஃபிக் கேஷன், நீதிமன்றத்தில் வழக்கு பல ஆண்டுகளாக நடந்து, கடைசியில் சர்க்கார் உத்தரவு செல்லாது என்று நீதி மன்றத்தில் தீர்ப்பு கொடுத்தது—இதன் காரணமாக இப்போது சாதாரண விவசாய மக்கள் ஒரே சமயத்தில் ஏராளமான குத்தகைத் தொகை யை செலுத்தவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இம்மாதிரிப் பட்ட சூழ்நிலையில் விளைவை ஆராய்ந்துப் பார்த்தால், கடைசியில் தனிப்பட்ட விவசாயி கஷ்டப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அங்குள்ள விவசாயிகளை எடுத்துக்கொண்டால் சாதாரணமாக ஒரு ஏக்கர், ஒன்றரை ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்கள். இப்படிப்பட்டவர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக தற்போது ஒரே ஆண்டில் எல்லாத் தொகைகளையும் கொடுக்க முடியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்போதுள்ள சட்டத்தின்படி எல்லாத் தொகைகளையும் செலுத்தாவிட்டால் நிலச்சுவாந்தார் வரி பாக்கிக்காக நிலத்தின் மீது கேஸ் தொடரு வதற்கு வாய்ப்பு இருக்கிறது. பொதுவாக விவசாய மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற தீமையைப் போக்குவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் தெளிவாக யார் யாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாக சொல்லவில்லை. சில இடத்தில் கலெக்டருக்கு அதிகாரம் கொடுக் கப்பட்டிருக்கிறது. சர்க்காரும் இப்போது சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற திருத்தங்கள் கூட கனம் சட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத் திற்கு கொண்டு வரப்பட்டதா என்று தெரியவில்லை. கனம் தொழில்

என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குழப்பம் இருக்கிறது. இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற திருத்தத்தைப் பார்த்தாலும் யாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது ஒரே குழப்பமாகத்தான் இருக்கிறது. அதோடு பத்து ஆண்டுகள் என்று (not exceeding ten years) சொல்லப்பட்டிருக்கிறது. இதில் வசூல் செய்வதற்கு யாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொல்லப்படவில்லை. விதிகள் செய்யும் போது தனியாக போட்டுக் கொள்ளலாம் என்று சொல்லக் கூடும். நான் குறிப்பிட்பிட்டது, எத்தனை ஆண்டுகள், அல்லது எத்தனை பசலிகள் பாக்கியிருக்கின்றன என்று பார்த்து, அத்தனை ஆண்டுகள் காலத் தவணையில் பாக்கியைக் கட்டுவதற்கு உரிமை கொடுக்க வேண்டும் என்று நான் முன்னால் கேட்டிருந்தேன். ஆனால் இப்போது வந்திருக்கின்ற சட்டத்தில் அவ்விதம் கொடுக்கப்படவில்லை. 1955-ம் ஆண்டு என்று நினைக்கின்றேன். திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் விவசாயிகளுக்கு ஒரு நிவாரணச் சட்டம் கொண்டு வந்தார்கள். அந்த நேரத்தில் நீதி மன்றத்தில் விவசாயிகள் எத்தனை தவணைகளில் கடன்களை செலுத்த வேண்டும் என்று உரிமை கொண்டாட வழி செய்யப்பட்டது. அந்த உரிமை இந்தச் சட்டத்திலே வழங்கப்படவில்லை. காரணம் என்ன? 'எனக்கு இத்தனை ஆண்டுகளுக்குப் பாக்கி இருக்கிறது, அதற்கு டிக்கிரி வேண்டும்' என்று கோரி நிலச்சுவாந்தார் நீதி மன்றத்திற்குச் செல்கிறார். ஏழை விவசாய மக்கள் பெரும்பாலும் நீதி மன்றத்திற்குச் செல்ல மாட்டார்கள். அப்பொழுது என்ன விளைவாகிறது? இந்தச் சட்டத்தின்படி அந்த விவசாயிகளும் நீதி மன்றத்திற்குச் சென்று ஒரு மனுப் போட்டு, 'எங்களுக்கு இந்தத் தொகையைக் கட்டத் தவணை கொடுக்க வேண்டும்' என்று கேட்க, அந்த நீதிபதி என்ன நினைக்கிறாரோ அத்தனை தவணையில் கொடுக்கலாம் என்கிற அளவுக்குதான் இந்தத் திருத்தம் வழி செய்கின்றது.

1955-ல் கொடுக்கப்பட்ட உரிமை போல, இந்தச் சட்டத்தில் ஒரு நிலச்சுவாந்தாருக்குப் பழைய பசலிகளுக்குள்ள பாக்கியை டிக்ரி செய்யும்போது, 'எத்தனை பசலிக்குக் கொடுக்கவில்லையோ அத்தனை தவணையில் விவசாயி கொடுப்பதற்கு உரிமை உண்டு' என்று சொல்லி விட்டால் என்ன? அதன்படி என்ன தவறு நேர்ந்து விட முடியும். இந்த டிஸ்க்ரிஷனை ஏன் நீதிபதிக்குக் கொடுக்கிறீர்கள். சட்டத்தில் பயனை உணர்ந்து நீதிபதிdiscretion -ஐ உபயோகப்படுத்துவாரா? ஏன் இந்த சந்தேகச் சூழ்நிலை? என்பதைப்பற்றித் தொழில் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குதிரை கீழே தள்ளியதோடல்லாமல் குழியும் பறித்தது என்று சொல்வார்கள். அதுபோல், சர்க்கார் செய்த தவறினால் விவசாய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதற்காக இந்தத் திருத்த மசோதாவில் ஒரு பிரிவு 'வட்டி கொடுக்க வேண்டும்' என்று இருக்கிறது. இந்தப் பிரிவைச் சட்டத் துறை அமைச்சர்

அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தத் திருத்தத்தைப் படித்துப் பார்த்தால், ஏற்கனவே இதுபோன்ற குத்தகை பாக்கி ஏற்பட்டு, நீதி மன்றத்தினர் டிக்ரி கொடுத்திருந்தால், அந்த டிக்ரியிலே பொதுச் சட்டத்தின் (காமன் லா) கீழ் 6 சத விகிதம் வட்டி கேட்கலாம். நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பின்படியும் வட்டி கேட்கலாம். அதாவது காமன் லா வின் கீழும் வட்டி கேட்கலாம். அந்தப் பிரிவு ஏற்கனவே இருக்கிறது. புதிதாக ஒரு பிரிவின் கீழ் 6 பர்ஸண்ட் வட்டி உண்டு என்றால் விளைவு என்ன ஆகும்? ஏற்கனவே டிக்ரி செய்வதற்கு இந்தச் சட்டத்தில் வழி செய்யப்படுகிறது. ஏற்கனவே டிக்ரி ஆகிவிட்டால் புதிதாக 6 சத விகிதம் வட்டி என்று சேர்த்து விட்டால் 12 சத விகிதம் வட்டி கேட்கக் கூடிய உரிமை நிலச்சுவாந்தார்களுக்கு வழங்கக்கூடிய ஒரு ஊகம் இதில் இருக்கிறது. வழங்க முடியாது என்று வாதிக்கலாம். ஆனால், நீதி மன்றத்திற்குச் செல்லும்போது, ஏற்கனவே ஒரு டிக்ரி 6 சத விகிதம் வட்டி அந்த நிலச்சுவாந்தாருக்குக் கிடைத்திருக்கிறது. இப்பொழுது, அதே நிலச்சுவாந்தார் இந்தப் பிரிவின் கீழே மேலும் ஒரு 6 சத விகிதம் வட்டி கேட்க வழி இருக்கிறது என்பதைச் சிந்தித்து, 6 சத விகிதம் வட்டியை இந்த ஷரத்திலே சேர்க்க என்ன மார்க்கம் இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொதுச் சட்டத்தின் கீழ் 6 சத விகிதம் வட்டி யாருக்கும் உண்டு. ஆகவே, அது தேவை இல்லை என்று நான் கூறிக் கொள்ளுகின்றேன். அந்த முறையில் ஏற்கனவே நீதி வழ்ங்கப்பட்டால் அதிலே ஒரு இடர்ப்பாடு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அந்த முறையில், கனம் அமைச்சர் அவர்கள், இதுபோன்ற திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, விவசாயிகளுடைய நன்மையைக் கருதியாவது, சற்று பூரணத்துவமாக ஆராய்ந்து வரி விலக்கு அளிக்க வேண்டும். அல்லது கொடுக்கப்படக்கூடிய தவணைகளைத் தெளிவாகச் சுட்டிக் காட்டும் வண்ணம் எத்தனை பசலிகளுக்குத் தீர்ப்பு வழங்கப்படுகிறதோ அத்தனை பசலிகளுக்கு அவர்களே கட்டுவதற்கு விவசாயிகளுக்கு உரிமை உண்டு என்கிற அளவில் இந்தச் சட்டத்தில் குறிப்பட வேண்டும் என்பதற்காகத் தான் நான் இது சம்பந்தமாகச் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். என்னுடைய திருத்தங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சர்க்கார் தரப்பில் அதே திருத்தங்களை கொண்டு வந்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஏற்கனவே விவசாயிகளுக்கு விதி விலக்கு அளிக்கக்கூடிய சட்டத்தில் இருக்கும் திருத்தத்தைத் தான் நான் கொண்டு வந்திருக்கிறேன். அந்தத் திருத்தங்கள் ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன், சார், மதிப்பிற்குறிய அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் பேசும்போது, நான் ஏதோ 1947-ஆம் வருஷத்தில் ஜமீந்தார்களையும் இனாம்தார்களையும் பற்றிப் பேசுகையில், கொள்ளைக்காரர்கள் என்றும், கொடுமைப்படுத்தக்கூடியவர்கள் என்றும் குறிப்

பிட்டதாகச் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் வழக்கறிஞர். சில சமயங்களில் உண்மைக்கு விரோதமாகவும் சொல்லக்கூடிய திறமை வாய்ந்த வழக்கறிஞர் அவர்கள். அந்த முறையிலே தான், தான் பேசாத ஒன்றை நான் பேசியதாகக் கனம் அங்கத்தினர் அவர்கள் என்னுடைய பெயரை இந்தச் சபையில் இழுத்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்று நான் இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதை எதிர்பார்த்தே நான் தயாராக வந்திருக்கிறேன். 1947-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ஆம் தேதியன்று கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் இந்தச் சபையில் பேசிய குறிப்பு ஒன்றை நான் இங்கே படிக்கின்றேன். அவர் பேசியதாவது :

"இந்த ஜமீந்தார்கள் உதவிக்குக் குண்டர்களை வைத்திருக்கிறார்கள். கொள்ளைக்காரன் மாதிரி இவர்களே எடுத்துக் கொண்டு போவார்கள். அவர்களைக் காப்பாற்ற நாதி கிடையாது . . . இனாம்தார்களைப் பார்த்தால் அவர்களும் ஜமீந்தார்களைப்போல் கொடூரமாகத்தான் நடக்கிறார்கள் . . ." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : 'குண்டர்களை வைத்து வரி வசூலித்து வருகிறார்கள்' என்று சொல்லியிருப்பேனே அல்லாது, அவர்களைக் 'குண்டர்கள்' என்றோ, 'கொடுமைக்காரர்கள்' என்றோ நான் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் கூற விரும்புகிறேன். 1947-ஆம் வருஷம் ஜமீன் ஒழிப்பு மசோதா வந்தபோது, அப்பொழுது நாட்டிலுள்ள எல்லா ஜமீன் கிராமங்களையும், இனாம் கிராமங்களையும் ஒழித்துவிட்டு, அவைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டு, குடியானவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது செலக்ட் கமிட்டியார் இனாம் கிராமங்களை அந்த மசோதாவிலிருந்து நீக்கிவிட்டார்கள். அப்பொழுது சட்டசபையிலும் பலவிதமான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டதன் பேரில், ஜமீன்கள் ஒழிப்பு மட்டும் மசோதாவில் சேர்க்கப்பட்டு, இனாம்கள் ஒழிப்பு சேர்க்கப்படவில்லை. அந்த மசோதாவின் மீது நாங்களெல்லாம் வாதம் செய்தோம். நானும் அந்த விவாதத்தில் கலந்து கொண்டேன். செலக்ட் கமிட்டியிலும் நான் அங்கத்தினனாக இருந்தேன். கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்களுக்கு நான் வக்காலத்து வாங்கிப் பேசுவதுபோல் நான் பேசவில்லை. அவர்களைக் காப்பாற்றிக்கொள்ள அவருக்குத் தெரியும். இந்த நாட்டிலே அரசாங்கம் தங்களுடைய அதிகாரிகளின் மூலம் வரி வசூலிக்கும் முறை வேறு. ஜமீன்தார்கள், இனாம்தார்கள் வரி வசூலிக்கும் முறை வேறு. ஜமீன் கிராமங்களில் ஜமீந்தார்கள் தங்களுக்குக் கீழ் இருக்கும் ஏழைக் குடியானவர்களிட

மிருந்து, சில குண்டர்களை வைத்துக்கொண்டு—கொள்ளைக்காரன் வீடுகளில் புகுந்து எடுப்பதைப்போல—வரி வசூலித்தார்கள் என்ற கருத்தில் கனம் திரு. கக்கன் அவர்கள் அன்று சொன்னார்களே தவிர, ஜமீன்தார்களைக் குண்டர்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. நிச்சயமாக நாங்களும் அந்த விவாதத்தில் கலந்து கொண்டோம். அதனால் அன்று நடந்தது என்ன என்பது எங்களுக்குத் தெரியும். ஜமீந்தார்களைக் கொள்ளைக்காரர்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. கொள்ளைக்காரன் எப்படியெல்லாம் வாங்கிக் கொள்வானோ அம்மாதிரி குடிகளிடமிருந்து ஜமீன்தார்கள் வாங்கினார்களே, அது நியாயமா? என்றுதான் கேட்டார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சில கனம் நண்பர்கள் பேசும்போது, 'அன்றைக்கு அப்படி சொன்னீர்களே !' என்று இருபது வருஷங்களுக்கு முன்னால் பேசியதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள்கூட அன்று அப்படி குறிப்பிட்டார்கள். காலம் வெகு வேகமாகச் சுழன்று கொண்டிருப்பது அவர்களுக்கே தெரியும். இன்றைக்கு நாம் என்ன நினைக்கிறோம், என்ன சொல்கிறோம் என்பதை முதலில் கவனிக்க வேண்டும்.

இப்பொழுது கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவின் மூலம் இனாம் கிராமங்களை எடுத்துவிட்டு, ரயத்துவாரியாக அவற்றை மாற்றிவிடுகிறோம். ஜமீன்களைப் போலத்தான் இனாம்களின் நிலைமையும் இருக்கின்றன என்று கருத்தில்தான், இனாம் கிராமங்களிலுள்ள குடியானவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கனம் திரு. கக்கன் அவர்கள் அன்று எடுத்துச் சொன்னார்கள். 'ஜமீன் முறையில் இருந்ததைக் காட்டிலும், இனாம் முறையில் இன்னும் அதிகம் கடுமையாக ரயத்துக்கள் நடத்தப்படுகிறார்களே, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டாமா?' என்று நாங்கள் அப்பொழுது கேட்டோம். அதற்கு அப்பொழுதிருந்த ரெவினியூ அமைச்சர், 'சட்டம் கொண்டுவரப் போகிறோம்' என்று சொன்னார்கள். 'எங்களுக்கு உடனடியாக பாதுகாப்பு வேண்டுமே' என்று கேட்டபோது, 'சட்டம் வரத் தாமதம் ஆனாலும், ரென்ட் ரிடக்ஷன் சட்டம் கொண்டு வந்து, இனாம் கிராமங்களில் உள்ள ரயத்துக்களுக்கும் பரிகாரம் கொடுப்போம்' என்று சொன்னார்கள். அதிலே பாதுகாப்பு கொண்டு வந்தார்கள். அதை நாங்கள் ஒரு தற்காலிகப் பரிகாரமாக அப்பொழுது நினைத்தோம். ரென்ட் ரிடக்ஷன் சட்டத்தை அரசாங்கம் செய்து விட்டது. ரெவின்யூ அதிகாரிகள் ஒவ்வொரு கிராமமாகப் பரிசீலனை செய்து, எது எது ரென்ட் ரிடக்ஷனில் வரலாம் என்று பரிசீலனை செய்து எடுத்தார்கள். சட்டம் இங்கே நிறைவேற்றப்பட்டபின், அந்தச் சட்டத்திற்குப் பலர் பலவிதமான வியாக்கியானம் செய்கிறார்கள். செக்ரடேரியட்டில் ஒரு வியாக்கியானம் கொடுக்கிறார்கள். ரெவினியூ போர்டிலே ஒரு வியாக்கியானம் கொடுக்கிறார்கள். கோர்ட்டில் ஒரு வியாக்கியானம் கொடுக்கிறார்கள். கோர்ட்[illegible]

10-00 a.m. பற்றி நாம் சட்டசபையில் ஒன்றுமே சொல்லக் கூடாது என்று வாய்ப் பூட்டு போட்டுவிடுவார்கள். ஆதலால், கோர்ட்டைப்பற்றி ஒன்றும் நான் சொல்ல விரும்பவில்லை. ஆக, இரண்டு விதமான அபிப்ராயங்கள் கொடுக்கப்படுகின்றன. ரெண்ட் ரிடக்ஷன் ஆக்டில் உள்ளவற்றுக்கு ரெவினியூ இலாகா, ட்ரைப்யூனல், ரெவினியு போர்டு, அதற்கு மேல் செக்ரடேரியட் ஆகியவைகள் பரிசீலனை செய்து, பழைய ரிகார்டுகளை யெல்லாம் பார்த்து, குறிப்பிட்ட கிராமங்கள் ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட்ன் கீழ் வரலாம் என்று கெஜட் பண்ணுவதற்கு இரண்டு, மூன்று வருஷங்கள் ஆகும். இப்படி இரண்டு, மூன்று வருஷங்கள் பரிசீலனை செய்துதான் அரசாங்க அதிகாரிகள் ஒரு கிராமத்தை ரெண்ட் ரிடக்ஷன் ஆக்டின் கீழ்க் கொண்டு வருகிறார்கள். அப்படிக் கொண்டுவரும்போது, இனாம்தார்களில் ஒரு சிலர், இல்லாத ரிக்கார்டை உற்பத்தி பண்ணிவிடுகிறார்கள். செப்புப் பட்டயங்களைக்கூட அவர்கள் தயார் செய்து, அதை மண்ணில் சில காலம் புதைத்து வைத்து, பிறகு, அந்தப் பட்டயங்கள் தங்களுக்கு அந்தக் காலத்தில் கொடுக்கப்பட்டதாகச் சொல்லி, கோர்ட்டிலே வழக்குப் போட்டுவிடுகிறார்கள். சில அதிகாரிகள்—சில ஜட்ஜுகள், அத்தகைய செப்புப் பட்டயங்களை ஆதாரமாகக் காட்டியதை வைத்துக்கொண்டு, தீர்ப்புக் கொடுத்துவிடுகிறார்கள். ஜட்ஜுகளைப்பற்றிச் சொல்லக்கூடாது என்று வாய்ப் பூட்டு போட்டாலும் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இவர்கள் எல்லாம் இந்த ரெண்ட் ரிடக்ஷன் ஆக்டின்படி எடுத்தது சரி என்கிறார்கள். ஆனால் கடைசியில் ஹைகோர்ட்டிலே இவற்றை எஸ்டேட் என்று எடுத்தது தப்பு என்று சொல்லிவிட்டார்கள். இப்போது விவசாயிகளுடைய நிலைமை என்ன என்று நாம் பார்க்கவேண்டும். விவசாயிகள் கிட்டத்தட்ட ஏழு, எட்டு, என் பத்து வருஷங்களாகக்கூட வரி கொடுத்து வந்திருக்கிறார்கள். அரசாங்கமே அந்த வரியை வசூல் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது ஹைகோர்ட் இப்படித் தீர்ப்புக் கொடுத்துவிட்டது, நாம் என்ன செய்கிறது என்றால் விவசாயிகளுடைய பிரச்னை என்ன ஆவது?

“ஸ்டேட்மெண்டு ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸிலே” கொடுத்திருக்கிறார்கள். இதுவரை சர்க்காருக்கு ஒவ்வொரு ஆண்டும் வரியாக எவ்வளவு கட்டி வந்தார்களோ அது போக, அவர்கள் கட்ட வேண்டுமென்று கோருகிற பணத்தில் பாக்கியைக் கட்ட வேண்டும். அதை எட்டு தவணைக்குள் கட்ட வேண்டும் என்றால் அது விவசாயிகளை மிகவும் பாதிக்கும். அரசாங்கத்திற்கு இதுவரை கட்டிவந்திருப்பது போக, ஓவர் அண்டு எபவ் ஆக இருக்கிறதையும் கட்ட வேண்டும் என்று நாமே இப்போது சட்டப்படி செய்கிறோம். இது ஒன்றுதான் மிகவும் ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம். இதில் அரசியல் அமைப்பு பிரச்னை கூட எழலாம். ஆகவேதான் நான் நினைக்கிறேன், ஒரு சின்ன செலெக்ட் கமிட்டியாகப் போட்டு இந்த ஒரு பிரச்னை

யைப் பற்றி மட்டும் மிக நன்றாகப் பரிசீலனை செய்து, கூடிய சீக்கிரமே இதை இந்தச் சபைக்குக் கொண்டு வந்து நிறைவேற்றலாம். அப்போது தான் நன்றாக இருக்கும். இல்லாவிடில் விவசாயிகளைப் பொறுத்த வரை இது நியாயமாக இருக்காது. கனம் அங்கத்தினர் மேற்கொண்டு என்ன அபிப்பிராயம் தெரிவிக்கிறார்களோ அதன்படி நடக்கத் தயாராய் இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திரு. கரிவேங்கடம், திரு. மாதவன் ஆகிய இருவரும் பொதுவாக ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். சில இனாம்களை சர்க்கார் பரிசீலனை செய்து அவை எஸ்டேட் என்ற அடிப்படையில் வருகிறதென்று முடிவு செய்து ஆர். ஆர். ஆக்ட்படி ரெண்ட் ரிடெக்ஷன் போட்டார்கள். அதை எதிர்த்து இவை எஸ்டேட் அல்ல என்று இனாம்தாரர்கள் வாதம் செய்தார்கள். என்ன காரணம் என்று சொன்னால் பழைய ஆக்ட் பிரகாரம் “ஹோல் இனாம்” Whole Inam ஆக இருந்தால் தான் எஸ்டேட்டின் கீழ் வரும். “பார்ட் இனாம்” Part Inam ஆக இருந்தால் அது எஸ்டேட் ஆகாது. அது “ஹோல் இனாமா?” “பார்ட் இனாமா?” என்று நிர்ணயம் செய்வது கோர்ட்டின் பொறுப்பு. ஆகவே கோர்ட்டார் இதைப் பரிசீலனை செய்து “இவை பார்ட் இனாம்” ஆகையால் இவை எஸ்டேட் ஆகாது என்று தீர்மானம் செய்தார்கள். இவை எஸ்டேட் என்று இருந்தால்தான் ரெண்ட் ரிடெக்ஷன் ஆக்ட் செல்லுபடியாகும். எப்போது இவை எஸ்டேட் அல்ல என்று தீர்மானம் செய்துவிட்டார்களோ அப்போது இவற்றுக்கு ரெண்ட் ரிடெக்ஷன் ஆக்ட் செல்லுபடியாகாது. இந்த ரெண்ட் ரிடெக்ஷன் ஆக்ட் செல்லுபடியாகாது என்று சொல்லிவிட்டால் பழைய அமினி பிரகாரம் என்ன வரி கொடுக்க வேண்டுமோ அதை விவசாயிகளிடமிருந்து வசூலிக்கின்ற உரிமையை இனாம்தார்கள் பெறுகிறார்கள். அந்த உரிமையைக் கட்டுப்படுத்தத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது.

இந்தச் சட்டம் என்ன சொல்கிறதென்றால் இந்த வழக்கு சம்பந்தமான தாவாக்கள் கோர்ட்டுகளில் எத்தனை காலம் இருந்தனவோ அந்தக் காலத்திற்கு—பீரியட் ஆப் லிமிடேஷனுக்கு—பாக்கிக்கு என்று வசூல் பண்ணக் கூடாது. மற்ற சட்டங்களிலும் கூட இதுபோல் மூன்று வருஷம், நான்கு வருஷம், ஐந்து வருஷம் என்று கணக்கிட்டு கோர்ட்டுகளில் தாவா இருந்த காலத்திற்கு விலக்கு அளிக்கப்படுவது உண்டு. ஆகவே இந்தச் சட்டத்திலும் நாம் அதுபோல வழக்கு கோர்ட்டில் இருந்த காலத்தைக் கணக்கிட்டு நீக்கிவிட்டு மற்ற காலத்திற்கு வசூலிக்கலாம் என்று போட்டிருக்கிறோம்.

இப்படி வசூல் செய்யலாம் என்று சொன்னவுடனேயே பழைய கணக்குகளை எல்லாம் கூட்டிப் போட்டு ஒரேயடியாக, எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்து வசூலிப்பது என்றால் அதனால் விவ

சாயிகள் மிகவும் பாதிக்கப்படக் கூடும். இது பற்றி கனம் மாதவன் அவர்களுக்குக் கூட நன்கு தெரியும். அவர்களே பல கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஒரு கிராமம், எஸ்டேட் அல்ல, இனும் கிராமம் என்று தீர்மானம் செய்யப்பட்ட பிறகு இனும்தாரர்களுக்குரிய தொகையை வசூலிக்கின்ற உரிமை அவர்களுக்குத் தானாகவே வந்துவிடுகிறது. ஆனால் நாம் இப்போது கொண்டு வந்திருக்கிற சட்டம் என்னவென்றால் அந்தத் தொகையை அவர்கள் உடனடியாகப் பெற முடியாது. பத்துத் தவணைகளுக்கு மேற்படாமல் அந்தத் தொகையை வசூலித்துக் கொள்ளலாம் என்று போட்டிருக்கிறோம். அதுவும் ரென்ட் ரிடெக்ஷன் ஆக்ட் பிரகாரம் இதுவரை வசூலிக்கப்பட்டுவிட்ட தொகை போக பாக்கியுள்ளதைத்தான் வசூலிக்கலாம் என்றும் இப்போது திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம்.

கனம் மாதவன் அவர்கள் ஓர் அபிப்பிராயம் சொன்னார்கள். பத்து தவணைகளுக்கு மேற்படாமல் என்று எதற்காக போட வேண்டும், எத்தனை பசலிகளுக்குப் பாக்கியாக இருக்கிறதோ அத்தனை வருஷங்களில் வசூல் செய்து கொள்ளலாமென்று போடக் கூடாதா என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லுகின்ற யோசனையை ஏற்றுக் கொள்கிறோம் என்று வைத்துக் கொண்டால் அதனால் ஒரு நன்மை இருக்கலாம், ஆனால் ஒரு கஷ்டமும் விளையும். ஓர் ஏழை விவசாயி ஒருவனுக்கு அப்படி நான்கு பசலிகளுக்குப் பாக்கியிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நம்முடைய சட்டப்படி, அவனுடைய கஷ்ட நிலைமையை எடுத்துச் சொன்னால் கோர்ட்டார் அவன் அந்த நான்கு பசலிகளுக்குக் கட்ட வேண்டிய தொகையை பத்துத் தவணைகளில் சிறுகச் சிறுகக் கொடுக்கும்படி அனுமதி அளிக்கக் கூடும். ஆனால் திரு. மாதவன் சொல்கிறபடி சட்டத்திலே நாம் செய்துவிட்டால் இந்த அனுகூலம் அந்த விவசாயிக்குக் கிடைக்காது. மொத்தத் தொகையையும் நான்கு வருஷத்திலேயே கட்டித் தீர வேண்டியிருக்கும். ஆகவேதான் எத்தனை தவணைகளில் கட்ட வேண்டும் என்று நிர்ணயிக்கிற உரிமையை பத்துத் தவணைகளுக்கு மேற்படாமல் என்கிற ஒரு வரம்பை மட்டும் வைத்துவிட்டு நாம் கோர்ட்டுக்கு விட்டிருக்கிறோம். இந்த நாட்டில் நாம் யாரை யாவது நம்பி வாழத்தான் வேண்டும். கோர்ட்டுகளை நம்புவது பொதுவாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். அதுவும் கனம் மாதவன் அவர்கள் ஹை கோர்டிலே ப்ராக்டீஸ் பண்ணவில்லை யென்று நினைக்கிறேன். இன்றைக்கு ஹைகோர்ட்டிலே எடுத்துக்கொண்டால் பல வழக்குகளில், பாக்கித் தொகை வசூல் என்று வருகிறபோது கடன்பட்டவர்களுடைய நிலைமையை நன்றாகப் பரிசீலனை செய்து, இத்தனை தவணைகளில் திருப்பித் தர வேண்டும் என்று நிர்ணயிக்கிறார்கள். ஆகவே இப்படி எத்தனை தவணைகளில் வசூலிக்க வேண்டும் என்று நிர்ணயிக்கிற பொறுப்பை நாமும் கோர்ட்டுக்கே விட்டிருக்கிறோம். இதை திரு. மாதவன் அவர்கள்கூட ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இப்படி கோர்ட்டுக்கு அதிகாரம் அளிப்பதுதான் நல்லது. அதுவும் பழைய பாக்கியை வசூல் செய்கிற காரணத்ினால் விவசாயிகளுக்குச் சங்கடம் வரக்கூடாது' என்றே இந்த முடிவு செய்தோம்.

இரண்டாவதாக ஒரு பிரச்னையை அவர்கள் சொன்னார்கள். 'எதற்காக மறுபடியும் வட்டி போட்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். அவர்கள் சிவில் ப்ரொஸீஜர் கோடு 34-வது செக்ஷனைப் பார்த்தார்களானால், தாவா போட்ட தேதியிலிருந்து வட்டி கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலைமை கோர்ட்டுகளுக்கு இருக்கிறது என்பது தெரியும். அதற்கு முன்பு எத்தனை காலம் இருக்கிறதோ அந்தக் காலத்துக்கும் 'ரீசனபிள் இண்டரஸ்ட்' கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலைமையும் இருக்கிறது. நாம் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தின்படி, கோர்ட்டிலே தாவா போட்ட அன்றிலிருந்துதான் 6 சதவிகித வட்டி கொடுக்க வேண்டுமே தவிர, பத்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கொடுக்க வேண்டிய நிலைமை இருந்தாலும் பழைய பாக்கிக்கு வட்டி வசூலிக்கக் கூடாது என்று போட்டிருக்கிறோம். இது விவசாயிகளின் நன்மைக்காகத்தான் செய்யப்பட்டிருக்கிறது. சிவில் ப்ரொஸீஜர் கோடின்படி பழைய பாக்கிகளும் கட்ட வேண்டுமென்று தீர்ப்பளிக்க வேண்டும். இந்தச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம் இதன்படி தாவா போட்ட தேதியில் இருந்துதான் 6 சதவிகித வட்டி கட்ட வேண்டுமென்று போட்டிருக்கும் காரணத்தால் பழைய பாக்கிகள் எவ்வளவு காலமாக இருந்ததோ அந்தக் காலத்திற்கெல்லாம் வட்டி கொடுக்க வேண்டியதில்லை என்பதற்காக இந்த விதமான திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, கனம் மாதவன் அவர்கள் இதை ஏற்றுக்கொள்வார்கள், இது விவசாயிகளுக்குச் சாதகமானது என்பதைப் புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தாற்போல், கனம் சாமிநாதன் அவர்கள், 'இந்தச் சட்டம் இவ்வளவு அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டியதில்லை; ரென்ட் ரிடக்ஷன் ஆக்ட் பிரகாரம் பரிசீலனை செய்த பிறகு நிறைவேற்றலாம்' என்று சொன்னார்கள். அதாவது பழைய முறைப்படி ரென்ட் ரிடக்ஷன் ஆக்ட் படி என்ன இருந்ததோ அதே நிலைமைக்குக் குறையுமா என்று பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கும் நிலைமையில் எவ்வளவு சீக்கிரம் இந்த மசோதாவை நிறைவேற்றுகிறோமோ அந்த அளவுக்கு இராமநாதபுரம், திருநெல்வேலியில் ஒரு பகுதி ஆகியவற்றுக்கெல்லாம் உடனடியாகப் பலன் கிடைக்கும். இதை நாளைக்கே நிறைவேற்றி சில நாட்களுக்குள்ளாக கெஜட் நோடிபிகேஷன் ஆகிவிட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எல்லோருக்கும் உடனடியாக நன்மை ஏற்படும். இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லுகிறபோது, அது நன்மை ஏற்படக்கூடிய பரிசீலனையாகவே இருந்தாலும் [illegible]

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [16th August 1963

வேண்டும். இன்றைக்கு நாம் கோர்ட்டின் தீர்ப்புப்படி 'எஸ்டேட்' அல்ல என்று சொல்லி விட்டதை 'எஸ்டேட்' என்று மாற்றவேண்டும். அதற்குப் பிறகு ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட் 'அப்ளை' ஆகும் என்று சொல்ல வேண்டும். அந்தமாதிரிச் செய்தால் அதிலிருந்து தாவாக்கள் தொடங்க வேண்டும். மேலும் மேலும் கேஸ்கள் வளர்ந்துகொண்டே போகும் நிலைமைதான் வருமே தவிர, விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்காது. ஏதோ பழைய பாக்கி தொலைந்தது என்று எட்டு அல்லது பத்து தவணைகளில் கொடுத்து விட்டால் அடுத்தாற் போல் கொண்டுவரப் போகிற சட்டத்தின்படி பார்ட் இனாம் வில்லேஜ், மைனர் இனாம் எல்லாவற்றையும் ஒழித்துவிடுகிறோம். அதனால் எந்த விதமான நஷ்டமும் ஏற்படாது. அது ஓரளவு கஷ்டத்தைக் கொடுத்திருக்கிறது என்பதை மறுக்கவில்லை. ரெண்ட் ரிடக்ஷன் ஆக்டை அப்ளை செய்தால், கோர்ட்டில் 'எஸ்டேட் இல்லை' என்று தீர்ப்புச் சொல்லிவிட்டால் தீர்ப்பை எதிர்த்து வழக்குப் போட்டாக வேண்டும். அதனால் எந்த விதமான பலனும் ஏற்பட்டு விடாது.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : இந்த மசோதா எவ்வளவு அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று என்று கனம் மந்திரியவர்கள் சொன்னதை நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறேன். செலக்ட் கமிட்டியில் ஒரே நாளில் பரிசீலித்து—இன்றைக்கு செலக்ட் கமிட்டி போட்டு பரிசீலித்து நாளைக்கே கொண்டு வரலாம். டூர் எல்லாம் போய் ஒரு மாதம், இரண்டு மாதம் என்று பரிசீலனை செய்ய வேண்டியதில்லை. நாளைக்கே கொண்டு வந்து நிறைவேற்றி விடலாம். விவசாயிகளுடைய நிலைமையைப்பற்றி கனம் மந்திரி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எந்த விதத்தில் அவர்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்பதைப்பற்றியும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களை விட எனக்குப் பிரமாதமாகத் தெரிந்து விட்டது என்ற எண்ணத்தில் நான் இல்லை. நான் ஒரே ஒரு பிரச்சனையைத்தான் சொல்கிறேன். உடனே பாக்கி கொடுக்க வேண்டியதை ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட் பிரகாரம் பணம் வசூல் செய்யலாம் ; அந்தத் தொகையை அப்படியே கஜானாவில் இருந்து வாங்கி விடலாம். பாக்கியை உடனே வசூலிக்காமல் இருப்பதற்கு வழி காண வேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கஜானாவில் இப்போது பணம் இல்லை. ரெண்ட் ரிடக்ஷன் ஆக்ட்படி வசூல் செய்யப்படுகிற தொகையை அந்த அந்த வருஷம் கொடுத்துக் கொண்டே வந்து விட்டோம். இப்போது ரெண்ட் ரிடக்ஷன் ஆக்டை இதற்கு அப்ளை செய்ய வேண்டுமென்று சொன்னால் 'எஸ்டேட் இல்லை' என்று கோர்ட்டார் சொன்னால், அவற்றை 'எஸ்டேட்' என்று சட்டம் போட வேண்டும். அந்தச் சட்டத்தினால் மறுபடியும் கேஸ்கள் எழும். அதன் காரணமாக இந்தத் தொல்லை நீடித்துக் கொண்டே தான் போகுமே தவிர, உடனடியாகத் தீர்க்கின்ற முறையாக இருக்காது. ஆகவேதான் பத்து தவணைகளுக்குள்ளாகக் கொடுக்கவிட வேண்டுமென்று சர்க்கார் கருதுகிறது.

16th August 1963]

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

That in clause 2,—

(*a*) in new section 3-F, for sub-sections (3) and (4), substitute the following, namely :—

(3) (i) In any suit or proceeding for the recovery of the amount and interest referred to in sub-section (2), the court or authority concerned shall order that such amount and interest shall be paid in such number of annual instalments not exceeding ten and in such manner as may be determined by the court or authority.

(ii) If, before the date of the publication of the Madras Estates Land (Reducation of Rent) Amendment Act, 1963, in the *Fort St. George Gazette*, any decree or order has been passed in any suit or proceeding for the recovery of the amount and interest referred to in sub-section (2), which is inconsistent with the provisions of this section, the court or authority concerned shall, on the application of any person affected by such decree or order, whether or not he was a party thereto, vacate the decree or order and pass a fresh decree or order which shall be in conformity with the provisions of this section :

Provided that nothing contained in this clause shall apply to any suit or proceeding in which the decree or order has been satisfied in full, before the date mentioned in this clause." ;

(*b*) re-number sub-sections (5) and (6) as sub-sections (4) and (5) respectively.

SRI S. MADHAVAN : Sir, I move—

(1) "That in clause 2 for the word 'tenant' wherever it occurs, substitute the word 'ryot'.

(2) (i) In clause 2, for the proposed sub-section (2) of section 3-F, substitute the following :—

'(2) The landholder shall, in respect of any such land as is referred to in sub-section (1), be entitled to recover from the ryot and the ryot shall be liable to pay to the landholder an amount equal to the difference between the rent which the ryot would have been liable to pay in respect of that land if the rates of rent had not been reduced under this Act, and the rent in respect of that land recovered by the State Government under section 3, sub-section (4).

[Sri S. Madhavan] [16th August 1963

(ii) In clause 2, for the proposed sub-sections (3) and (4) of section 3-F, substitute the following :—

" (3) Notwithstanding any law, custom, contract or decree of court to the contrary, a ryot or tenant shall be entitled to pay the amount referred to in sub-section (2) in as many yearly instalments as the number of years for which there are arrears."

(4) Where in respect of a decree for arrears of rent referred to in sub-section (2) passed before the coming into force of the Madras Estates Land (Reduction of Rent) Amendment Act, 1963, the ryot fails to make any one of the instalments referred to in sub-section (3) alone the decree-holder shall be entitled to execute the decree only in respect of the instalment which is in default ".

SRI T. P. ALAGAMUTHU : I second the amendment, Sir.

திரு. சா. கணேசன் : இந்தமாதிரி அமெண்ட்மெண்ட் ஒன்றும் கிடைக்கவில்லை. அமெண்ட்மெண்ட் இல்லாமல் இவ்வளவுதூரம் படித்ததை மனதில் வைத்துக் கொண்டு சரியா, சரி இல்லையா என்று கவனிக்கச் சந்தர்ப்பம் இல்லை.

MR. DEPUTY SPEAKER : The amendments of Sri S. Madhavan were circulated on the 10th itself. The Government amendments were circulated yesterday.

(Sri R. V. Swaminathan rose)

MR. DEPUTY SPEAKER : Does the hon. Member want to speak on the amendment?

SRI R. V. SWAMINATHAN : I want to oppose the amendment. I have got every right to oppose the amendment. இதுபற்றி நிர்ணயிக்கும் அதிகாரத்தை கலெக்டரிடம் கொடுக்க அவர்கள் முடிவின் பேரில் இனும்தாருக்கோ அல்லது ரயட்டுக்கோ க்ரீவன்ஸ் இருந்தால் கோர்ட்டுக்குப் போகலாம். முதலிலேயே கோர்ட்டுக்கு என்று ஏன் கொடுக்க வேண்டும்? கலெக்டர் பார்த்து சொல்வார்கள். ஏழைகளாக இருந்தால் அதைப் பார்த்து கலெக்டர் தீர்ப்பு வழங்குவார்கள். அது கோர்ட்டுக்கு கைடன்ஸ் மாதிரி இருக்கும். முதலிலேயே கோர்ட்டுக்குப் போனால் அவர்கள் சட்டம் சட்டம் என்றுதான் பார்ப்பார்கள். ஆகவே நான் சொல்வது கோர்ட்டுக்கு முதலில் செல்வது என்று இருக்கக் கூடாது. கலெக்டர்தான் முதலில் நிர்ணயம் செய்ய வேண்டும். பின்னால் வேண்டுமானால் கோர்ட்டுக்குப் போகட்டும். மற்றவை எப்படியாவது போகட்டும். எனக்குக் கூற வேண்டியது இது ஒன்றுதான்.

* **திரு. செ. மாதவன் :** கனம் சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கம் ஒன்று தந்தார்கள். பார்ட்வில்லேஜா? ஹோல் வில்லேஜா? என்பது க்வெஸ்டின் ஆப் பாக்ட் என்று சொன்னார்கள். எஸ்டேட் லாண்ட் ஆக்டில் ஹோல் வில்லேஜ் என்பதை டிபைன் செய்திருக்கிறார்கள். முழு கிராமம் தானம் செய்யப்பட்டால் அது வரி குறைப்புச் சட்டத்தின் கீழ் வர

16th August 1963] [திரு. செ. மாதவன்]

வேண்டும் என்பதுதான் சட்டத்தின் உள் அமைப்பு ஆனால் ஹைக் கோர்ட்டில் கொடுக்கப்பட்ட நீதி வேறு முறையில் இருக்கிறது. உதாரணமாக, 1947-ம் ஆண்டு சட்டப்படி ஒரு முழுக் கிராமம் தானம் செய்யப்பட்டால் சட்டப்படி, சர்க்கார் விருப்பப்படி, அந்த கிராமம் வரிகுறைப்புச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட வேண்டும். ஆகவே சர்க்கார் செய்ததுதான் சரி. பின்னால் நீதி மன்றம் ஒரு புது விளக்கம் தந்தது. முழு கிராமம் தானம் செய்யப்பட்டிருந்த போதிலும் முழு கிராமம் ஒரே நாளில் தானம் செய்யப்படாவிட்டால், பல நாட்களில் செய்யப்பட்டிருந்தால் அல்லது முழுக் கிராமம் ஒருவருக்கே தானம் செய்யப்படாமல் பலபேர்களுக்குத் தானம் செய்யப்பட்டிருந்தால் அது ஹோல் வில்லேஜ் அல்ல, எஸ்டேட் அல்ல, அது வரி குறைப்புச் சட்டத்தின்கீழ் வராது என்று நீதி மன்றத்தில் ஒரு புதிய வியாக்கியானம் தரப்பட்டது. " It is not a question of fact at all ". இதை நான் சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே கொள்கை அளவில் இருந்தால்கூட சர்க்கார் செய்தது சரி. ஆனால் நீதி மன்றம் ஒரு புது விளக்கம் தந்த காரணத்தினால் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இது கொள்கை அளவு என்று சொல்லிவிட்டு கனம் அமைச்சர் அவர்கள் தப்பித்துக் கொள்ளக் கூடாது. சாதாரண விவசாயிகள், ஏழை விவசாய மக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள். அவர்களுக்காகச் சிறிது இரக்கம் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொரு விளக்கம் தந்தார்கள், 'இயர்லி இன்ஸ்டால்மெண்ட்' பற்றி. சிலருக்கு அது நன்மையாக இருக்கலாம், ஆனால் பெரும்பான்மையினருக்கு அது பாதகமாக முடியவில்லையா? ஆகவே அந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்றால் கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தோடு இன்னொரு வார்த்தையையும் சேர்க்க வேண்டும். குறைந்தபட்சம் எத்தனை பசலிக்குத் தீர்ப்பு வழங்குகிறார்களோ அத்தனை பசலிக்கும் குறையாத இன்ஸ்டால்மெண்ட் மூலம் கட்டலாம் என்றிருந்தால்தான் விவசாயிகள் நன்மை அடைய முடியும். நீதிமன்றம் தீர்ப்புச் செய்யலாம் என்ற வாய்ப்பு இருக்கிறது. நாலு ஆண்டு பாக்கி உள்ளவர்களுக்கு நீதி மன்றம் பத்து ஆண்டுகள் வழங்க வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒப்புக் கொள்கின்றேன். நான் கேட்கிறேன், 12 ஆண்டு பாக்கியுள்ளவர்களுக்கு அதற்குக் குறைவாகக் கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறதல்லவா? சர்க்கார் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தில்

" in as many yearly instalments as the number of years for which there are arrears "

என்ற ஒரு திருத்தத்தையும் சேர்த்து விட்டால் அது விவசாயிகளுக்குச் சாதகமாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சர்க்கார் தரப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்களைச் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் படித்துப் பார்க்க வேண்டும். முதல் பாராவில்

" in such manner as may be determined by the Court or authority "

என்றிருக்கிறது. அதற்கு என்ன பிரின்ஸிபிள்? எந்த அடிப்படையில் நீதிமன்றம் நீதி வழங்க முடியும்? நீதிமன்றத்திற்கு, அவர்கள் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் செய்யலாம் என்றிருக்கிறது ஏழை விவசாய மக்களுக்கு ஒரு பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும். சர்க்கார் எண்ணம் தெளிவாக இருக்கிறது. நாங்கள் செய்த தவறால் அதன்பேரில் நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பினால் ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அதைத் தவிர்க்க வேண்டும். அதற்காகச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படித் தெளிவான கருத்தைக் கொண்டிருக்கும்போது அதைச் சட்டத்தில் தெளிவாகச் செய்தால் என்ன? நீதிமன்றத்திற்கு ஏன் 'டிஸ்க்ரீஷன்' கொடுக்க வேண்டும்? என் அமென்ட்மெண்டில் தெளிவாகக் கூறியிருக்கிறேன்.

" Notwithstanding any law, custom, contract or decree . . "

என்று. ஏற்கெனவே பழக்கம் காரணமாக ஒரு உரிமை இருந்திருக்கலாம். ஏற்கெனவே நிலச்சுவாந்தாருக்கும் விவசாயிகளுக்கும் இருக்கக்கூடிய ஒப்பந்தத்தால் உரிமை இருந்திருக்கலாம் நிலச்சுவாந்தாருக்கு. ஏற்கெனவே அவர்கள் தீர்ப்பு பெற்றிருக்கிற காரணத்தால் உரிமை இருந்து இருக்கலாம். ஏழை விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படும் வகையில்தான் சர்க்கார் திருத்தம் அமைந்திருக்கிறது. நான் கூறியிருக்கும் வாசகங்களை அதில் காணோம். ஏற்கெனவே விவசாயிகளுக்குச் சாதகமான வேறு சட்டங்களில் இந்த வாசகங்கள் எல்லாம் இருக்கின்றன. அதே வாசகங்களை இந்தச் சட்டத்திலும் போட்டால் தான், இந்தத் திருத்தம் விவசாயிகளின் நன்மைக்காகப் போடப்பட்டிருக்கிறது என்பது நீதிமன்றத்திற்கு தெளிவாகத் தெரியும் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவது பகுதிக்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதையும் சட்ட அமைச்சர் அவர்கள் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" which is inconsistent with the provisions of this section . . ."

என்று கொடுத்திருக்கிறார்கள். இது எப்படிப் பொருந்தும்? ஏற்கெனவே நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கி விட்டது. அது இந்த ப்ரொவிஷனுக்கு எதிராக இருந்தால் அதை மீண்டும் பரிசீலனை செய்யலாம் என்றால் காமன் லாவில் வரும் தீர்ப்பை இந்தத் திருத்தத்தால் தள்ளி விட முடியுமா?

" Notwithstanding any law, custom, contract or decree . . ."

என்று போடாவிட்டால் தவிர்க்க முடியாது. இந்தப் பிரிவு சட்டப்படி செல்லுமா?

" which is inconsistent with the provisions of this section, the court or authority concerned shall . . ."

என்று இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற பிரிவுப்படி ஏற்கெனவே ஒரு தீர்ப்பை நீதிமன்றம் வழங்கிவிட்டால் அதை மாற்றியமைக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டா? இன்னொரு வேடிக்கையான வார்த்தையை சேர்த்திருக்கிறார்கள்.

" whether or not he was a party thereto . . ."

இது எப்படி முடியும்? தீர்ப்பு ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. இன்டர் பார்ட்டீஸ் என்பார்கள். கட்டுப்பட்ட பார்டி தான் கட்டுப்பட முடியும். புதுத் தீர்ப்புப்படி இந்த விவசாயி அந்த தீர்ப்பில் ஒரு ஆளாக இல்லாவிட்டாலும், இன்டர் பார்ட்டியாக இல்லாவிட்டாலும் புதிதாகக் கோர்ட்டுக்கு போய் மனு போடலாம் என்றால் எந்தச் சட்டப்படி முடியும்? இது நீதி மன்றத்தில் நிற்காது. இந்தப் பிரிவு இப்படியிருந்தால் அது விவசாயிகளுக்குப் பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும். மேலும் ஒரு வார்த்தை கூறியிருக்கிறார்கள்.

" the court shall . . . vacate the decree or order . . ."

எப்படி முடியும்? ஏற்கெனவே தீர்ப்பு வழங்கப்பட்டு அது அமுலாகும்போது அந்த தீர்ப்பை வக்கேட் செய்யலாம் என்ற உரிமையை புதுச் சட்டத்தில் கொடுத்தால் காமன் லாவிற்கும் இதற்கும் முரண்பாடு வரும். ஆகையால் இந்தப் பிரிவு குழப்பத்தைத்தான் உண்டு பண்ணுமே தவிர இத்தனை பசலிக்கு என்று டிக்ரி வாங்கி வைத்திருந்தாலும் புதிதாக சூட் போட்டால் இத்தனை பசலிக்கு என்று கேட்க விவசாயிக்கு உரிமை உண்டு என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். என் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கனம் அமைச்சர் அவர்கள்

" not less than the number of yearly instalments for which there are arrears "

என்ற வாசகங்களையும் இணைத்து விட்டால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படாத நிலையை உண்டு பண்ணும். இன்னொரு ப்ரொவைஸோவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதன் அர்த்தம் புரியவில்லை.

" Provided that nothing contained in this clause shall apply to any suit or proceeding in which the decree or order has been satisfied in full . . "

ஏற்கெனவே ஒரு டிக்ரி போட்டிருந்து அது தீர்ந்து விட்டிருந்தால் இந்த ப்ரொவைஸோ எதற்கு? Is it not a redundant provision? அதையும் கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இக் குழப்பத்தைத் தவிர்ப்பதற்குச் சர்க்கார் முன்வர வேண்டும். இது விஷயத்தில் சிறிது யோசனை செய்து பின்னாலே கொண்டு வந்தாலும் கொண்டு வரலாம், பரவாயில்லை. இப்படிக் குழப்பம் இருந்தால் அது மேலும் பாதகத்தை உண்டு பண்ணும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலிலே கனம் அங்கத்தினர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் எழுப்பிய சந்தேகத்திற்குப் பதில் 10-30 a.m.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [16th August 1963

கூற விரும்புகிறேன். ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பில் இது எஸ்டேட் அல்ல என்று இருக்கிறது. எஸ்டேட்டுக்குத்தான் அதனுடைய ரெண்டு பாக்கிக்குக் கலெக்டர் நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரம் இருக்கிறது. எஸ்டேட் இல்லை என்று சொல்லிவிட்டால், அதை சிவில் கோர்ட்டுதான் தீர்மானம் செய்ய வேண்டும். அதனாலேதான் சிவில் கோர்ட்டில் கேஸ் போட்டு பழைய பாக்கி இருக்கிறது என்று சொன்னால் அதை 10 இன்ஸ்டால்மெண்டாகக் கொடுக்க வேண்டும் என்பதற்காக 'கோர்ட் ஆர் அதர் அதாரிடி' என்று போட்டிருக்கிறது. கோர்ட்டு என்ற வார்த்தையை எடுத்துவிட்டால், அது கோர்ட்டைக் கட்டுப்படுத்தாது. கோர்ட்டுக்கு வந்திருக்கிற பழைய பாக்கிக்கு 10 இன்ஸ்டால் மெண்டுகள் கொடுக்க வேண்டியதில்லை என்ற முடிவுக்கு கோர்ட்டு வந்துவிட முடியும். அதனால்தான் அந்த வாசகம் 'கோர்ட்டு ஆர் அதாரிடி' என்பது அவசியமாக இருக்கிறது.

கனம் அங்கத்தினர்கள் எஸ்டேட் என்று முதலில் தங்கள் மனதில் தீர்மானம் செய்துகொண்டு, அதற்கப்புறம் இந்த சட்டத்தைப் பார்க்கிறார்கள். எஸ்டேட் அல்ல என்பது ஹைக்கோர்ட்டு தீர்ப்பு. எஸ்டேட் அல்ல என்று வைத்துக் கொண்டு நாம் சட்டத்தை இயற்ற வேண்டும். நம் மனதில் எஸ்டேட் என்று நினைத்துக் கொண்டோ அல்லது எஸ்டேட்டாக இருக்க வேண்டுமென்று மனதில் வைத்துக் கொண்டோ, அல்லது சர்க்கார் ஒரு காலத்தில் எஸ்டேட் என்று கருதி, ரென்ட் ரிடக்ஷன் ஆக்ட் கொண்டு வந்தார்கள் என்பதை வைத்துக் கொண்டோ நாம் சட்டம் இயற்ற முடியாது. ஹைக்கோர்ட்டு தீர்ப்பு எஸ்டேட் அல்ல என்பதை வைத்துத்தான் இன்றைக்கு நாம் சட்டம் இயற்ற வேண்டும். எஸ்டேட் அல்ல என்று சொன்னால், சிவில் கோர்ட்டுக்குத்தான் பழைய பாக்கியை வசூலிக்கக்கூடிய உரிமை இருக்கிறது. அவர்கள்தான் 10 இன்ஸ்டால்மெண்டிற்கு மேற்படாமல் இன்ஸ்டால்மெண்டில் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யவேண்டும். கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் குழப்பம் இருக்கிறது என்று சொன்னார்கள். எனக்குக் குழப்பம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எதற்காக

"such number of annual instalments not exceeding ten and in such manner as may be determined by the court or authority"

என்று கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், ரூ. 20 பாக்கி இருக்கலாம். அதற்கு 10 வருஷங்கள் தவணை இருக்க வேண்டுமென்று சொல்லுவது நியாயம் இல்லை. ரூ. 20,000 பாக்கி இருக்கலாம். மூன்று, நான்கு வருஷங்களாகச் செலுத்த வேண்டிய பாக்கிக்கு மேல் இருக்கலாம். அதை இப்பொழுது 3, 4 வருஷங்களில் கட்ட வேண்டும் என்று சொல்லுவது சரியாக இருக்காது. அதற்காகத்தான் இப்படிப் போட்டிருக்கிறோம். இன்ஸ்டால்மெண்டில் கொடுப்பது என்பது புதியதாகச் செய்யவில்லை. 1908-ம் வருஷத்திய சிவில் ப்ரொஸீஜர் கோடிலேயே டிகிரி பாஸ் பண்ணுகிற கோர்ட்டே அந்த டிபெண்டெண்டின் நிலைமையைப் பார்த்து,

16th August 1963] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

இன்ஸ்டால்மெண்டாகக் கொடுக்கலாம் என்று ஆர்டர் பாஸ் செய்யலாம் என்ற நிலைமை இருக்கிறது. அந்த உரிமையைத்தான் இப்பொழுது கொடுக்கிறோம். புதியதாக ஒன்றும் உரிமை வழங்கவில்லை. அந்த உரிமையைச் சர்க்கார் எடுத்துக் கொள்வதோ அல்லது சட்டசபை எடுத்துக் கொள்வதோ அவ்வளவு பொருத்தமாக இருக்காது. இதை எப்படிக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்வது அதை விசாரிக்கிற கோர்ட்டுதான் தீர்மானம் செய்யவேண்டும்.

மற்றொரு கருத்தையும் கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தார்கள்.

"any decree or order has been passed in any suit or proceeding for recovery of the amount and interest referred to in sub-section (2) which is inconsistent with the provisions of this section, the court or authority concerned shall, on the application of any person affected by such decree or order, whether or not he was a party, etc."

என்று நாம் போட்டிருக்கிற கருத்து என்னவென்றால், இப்பொழுது ஒரு கோர்ட்டு ரூ. 10,000 கொடுக்க வேண்டுமென்று டிகிரி பாஸ் செய்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். சிவில் ப்ரொஸீஜர் கோடில் இருக்கிற முறைப்படி, ஒரு டிகிரி பாஸ் செய்து விட்டால், அந்த டிகிரியை திருத்துவதற்கோ, மாற்றுவதற்கோ அவர்களுக்கு உரிமை இல்லை. அதனால்தான் நாம் இப்பொழுது என்ன உரிமை கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், அப்படி டிகிரி பாஸ் செய்திருந்தாலும்கூட, இதை யாராவது ஒரு பார்டி எக்ஸ்-பார்டியாக இருந்தாலும் சரி, அதிலே சேராமல் இருந்தாலும் சரி, அதை அவர்கள் கோர்ட்டிற்கு எடுத்துக்கொண்டு சென்று அதை மாற்றிக் கொடுக்கவேண்டும் என்று கேட்கின்ற உரிமை இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது. சிவில் ப்ரொஸீஜர் கோடின்படி டிகிரி பாஸ் செய்ததை மாற்றுவதற்கு அதிகாரம் கிடையாது. அப்பீல்தான் செய்ய முடியும். இதற்கு அப்பீல் இல்லை. நாம் இப்பொழுது சொல்லியிருப்பது என்னவென்றால் அந்த டிகிரி தொகையை பத்து இன்ஸ்டால்மெண்டில் கொடுப்பதா அல்லது நான்கு இன்ஸ்டால்மெண்டில் கொடுப்பதா என்று கோர்ட்டு நிர்ணயம் செய்யும். ஒரு புது உரிமையைக் கொடுத்திருக்கிறோம். கோர்ட்டு டிகிரி பாஸ் செய்திருந்தாலும், புதுச் சட்டத்தின் கீழ் எனக்கு இம்மாதிரி உரிமை உண்டு என்று மனுக் கொடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு டிகிரி அல்லது ஆர்டரை மாற்றுவதற்கு 'notwithstanding any law, custom, contract or decree of court to the contrary என்று சொல்லவேண்டியது அவசியமில்லை. ஏதாவது ஒரு டிகிரி முன்பே பாஸ் செய்யப்பட்டிருந்தபோதிலும் அந்த டிகிரியை இப்பொழுது இன்ஸ்டால்மெண்டு டிகிரியாக மாற்றிக் கொடுக்கவேண்டும் என்று மனுப் போட்டுக் கொள்கிற உரிமையைக் கொடுத்திருக்கிறோம். அதுதான் இரண்டாவது ஷரத்து. அதில் எந்தவிதமான குழப்பமும் இல்லை.

"on the application of any person affected by such decree or order"

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [16th August 1963

என்று சொல்லியிருக்கிறோம். டிகிரியினால் பாதிக்கப்பட்டவர்கள் யார் வேண்டுமானாலும் மனு போடலாம். என்னுடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். அவர்களுடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று கோர்ட்டு நிர்ணயம் செய்ய வேண்டும். 'அபெக்டட் பெர்ஸன்' யாராக இருந்தாலும், எக்ஸ்-பார்ட்டியாக இருந்தாலும்கூட மனுப் போடலாம் என்பதற்காகத்தான்

" whether or not he was a party thereto."

என்று சொல்லியிருக்கிறோம். சாதாரணமாக நடக்கக்கூடியது என்னவென்றால், எக்ஸ்-பார்ட்டியாக இருந்தால், டிகிரியை மாற்றித் தருவதற்கு திருப்பிக் கேட்க முடியாது. ஸெட்-அஸைட் செய்யாமலே டிகிரியை மாற்றித் தருவதற்கு மனு போட இன்றைக்கு அதிகமான சலுகைகள் கொடுத்திருக்கிறோம் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு.

மூன்றாவது ஷரத்தில் "Provided nothing contained in this clause shall apply to any suit or proceeding in which the decree or order has been satisfied in full "

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே குழப்பம் ஒன்றுமில்லை. இது என்ன சொல்லுகிறது என்றால் பழைய பாக்கிக்கு டிகிரி வாங்கி, அந்த டிகிரியை நிறைவேற்றி பணத்தை அவர்கள் வசூல் செய்துவிட்டார்கள் என்றால், 'ஸாடிஸ்பைடு' என்று சொல்லுவது கனம் அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும்; " entering satisfaction execution of a decree " என்று சொன்னால் அந்த டிகிரி தீர்ந்து விடுகிறது, அந்த டிகிரி இனி அமுலில் இல்லை, அந்தவிதமாகப் பணம் கட்டி தீர்ந்துபோன டிகிரி பற்றி மறுபடியும் மனுக்கள் போடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த விளக்கம் கொடுத்திருக்கிறோம். இதிலே, 'கன்ப்யூஷன்' ஒன்றுமில்லை. கன்ப்யூஷனைப் போக்குவதற்குத்தான் இதிலே விளக்கம் கொடுத்திருக்கிறோம். இதில் படிப்படியாக யோசனை செய்ய வேண்டும். முதலில் டிகிரி பாக்கி இருக்குமானால் அதற்கு இன்ஸ்டால்மெண்டு கொடுக்க வேண்டுமென்பது முதல் ஷரத்து முன்பே ஒரு டிகிரி பாஸ் செய்திருந்தாலும்கூட, அந்த டிகிரியை திரும்பவும் கோர்ட்டுக்குக் கொண்டுவந்து, அதை இன்ஸ்டால்மெண்டு டிகிரியாக மாற்ற முடியும், மாற்ற வேண்டும் என்பது இரண்டாவது ஷரத்து. மூன்றாவதாக, டிகிரியை நிறைவேற்றி, அதில் வரவேண்டிய பணம் பூராவும் வசூல் செய்துவிட்டால், அதை மறுபடியும் திருப்பிக் கோர்டுக்குக் கொண்டுவர முடியாது என்பது மூன்றாவது ஷரத்து. இதிலே குழப்பம் ஒன்றுமில்லை. ஆகவே, இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : இதிலே 'கோர்ட்டு ஆர் அதாரிடி கன்ஸர்ன்டு' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'அதாரிடி கன்ஸர்ன்டு' யார் என்பதை நான் தெரிந்து கொள்ளவேண்டும். அதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

16th August 1963] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

புதியதாக நாம் சட்டம் பண்ணுகிறோம். அப்படி இருக்கும் போது கோர்ட் என் முதலில் நிர்ணயம் செய்யவேண்டும்? முதலில் கலெக்டர் அவர்கள் அதை நிர்ணயம் செய்து, அபெக்டட் பார்டிக்கு அதில் 'க்ரீவன்ஸ்' இருந்தால் பிறகு கோர்ட்டுக்கு போகலாம் என்று ஏன் வைக்கக் கூடாது? இந்த இரண்டு பாயிண்டுகளுக்கும் 'க்ளாரிபிகேஷன்' கொடுத்தால் போதும். ஒரே ஒரு அப்பீல் மினிஸ்டர் அவர்களுக்கு. அதுவும் இது மாதிரி சந்தர்ப்பங்களிலே உறுப்பினர்கள் இதுமாதிரி சிறு சிறு திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, எங்களுடைய கருத்துக்களை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எதற்காக இந்தச் சமயத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று இருந்துவிடாமல், தயவு செய்து அமைச்சர் அவர்கள் நாங்கள் சொல்லும் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு ஷரத்துக்களை அந்த அடிப்படையில் மாற்றி அமைப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் முன்பே சொல்லி விட்டேன். எஸ்டேட் ஆக இருந்தால் கலெக்டருக்குப் போகும். எஸ்டேட் இல்லை என்று சொன்னால் போகாது. முதலில் நாம் அதை எஸ்டேட் என்று செய்து, அப்புறம்தான் அவைகள் கலெக்டருக்குப் போக வேண்டும் என்று செய்ய வேண்டும். நான் முதலிலேயே விளக்கினேன். எஸ்டேட் இல்லாததை இப்பொழுது எஸ்டேட் என்று சொன்னால், அது சரியாக செல்லுபடியாகாது. புதியதாக கேஸ்கள் தொடரப்பட்டு, நீண்ட நாட்கள் தொடர்ந்து நடக்கும் 'லிடிகேஷன்' நடந்து கொண்டேயிருக்கும். பழைய பாக்கியையெல்லாம் ஒருமாதிரியாக ஒழித்துவிட வேண்டுமென்பது தான் கருத்து. அடுத்த ஒரு மசோதா கொண்டு வரப் போகிறேன். அதோடு எல்லா இனாமும் போய்விடுகிறது. அதன் காரணமாக இருக்கும் தொல்லைகள் ஒரே முறையாக ஒழிந்து விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோர்ட்டுதான் இருக்கும். அப்படி வேறு எதாவது 'அதாரிட்டி' இருந்தால் என்ன செய்வது என்பதற்காக, 'பை வே ஆப் அபண்டண்டு காஷன்' 'ஆர் அதாரிட்டி' என்று போட்டிருக்கிறோம். ஆனால், அதாரிட்டி இருக்க வேண்டுமென்று அவசியமில்லை.

* SRI S. MADHAVAN : There are common amendments for both the Clauses 2 and 3. With regard to amendment 1, I want to say a few words. It is only a formal amendment. The Hon. Minister will agree with me. It has got a legal significance. Because, the word ' tenant ' has been used. This word has not been used even in 1947 Principal Act and now here this word has not been defined.

Even in the Estates Land Act (Act I of 1908) the word ' tenant ' has not been defined. In the 1947 Act, the Preamble says—' The Act to provide for the reduction of rent payable by ryots. ...' not tenants. But here the word ' tenant ' is used. Why this word

[Sri S. Madhavan] [16th August 1963

' tenant ' is substituted, I am not able to understand. For example, the Madras Cultivating Tenants Protection Act will be applicable only to tenants and not to ryots. Therefore, the ryot who has got *kudivaram* will not admit that he is a tenant. Once he admits that he is a tenant, then his right to *kudivaram* will go. So, in any court the ryot who has got *kudivaram* will not admit that he is a tenant. Therefore, the proper word here is only ' ryot ". But, of course, the Department may say that there is an Explanation to the expression ' tenant '. Why is this Explanation? Explanation II says—

" . . . the expression ' tenant ' means a person from whom rent was recovered. . . "

So it denotes past. It is only when the rent is recovered from the ryots, the word ' tenant ' will be applicable. Why there should be such a confusion? Why the word ' ryot ' should not be used? At least both the words ' ryot ' or ' tenant ' may be used. If the word ' tenant ' alone is used, then there will be confusion. So, I think the Hon. Minister for Law will accept my amendment.

SRI K. V. SWAMINATHAN : Sir, I want to oppose the amendment. If a village comes under the Rent Reduction Act he will be called a ryot. If it is not an estate as defined in the Rent Reduction Act, how can we call him a ryot? If we say so, he will not get the benefit because he will not be called a tenant. I am not a lawyer but the hon. Member may be a lawyer. It is the common law and a common experience. So he should be called only a ' tenant ' and not a ' ryot '.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் நல்ல திறமையான வக்கீலை விட மிகவும் திறமையாக விளக்கிச் சொல்லிவிட்டார்கள். இப்பொழுது ஹைகோர்ட்டு தீர்ப்புப் பிரகாரம் அவர்கள் எல்லோரும் ரயத்துக்கள் அல்ல. அவர்களுக்கு இந்த சலுகை கிடைக்க வேண்டுமென்று சொன்னால், "ரயத்து" என்ற வார்த்தையை போட்டு விட்டால், அவர்கள் ரயத்துக்கள் இல்லை. ஆகவே பத்து தவணைகளில் கொடுக்க வேண்டுமென்ற சட்டம் அவர்களைப் பொறுத்தவரையில் செல்லுபடி ஆகாது என்று சொல்லிவிடுவார்கள். ஆகவேதான், "டெனென்ட்" என்று போட்டிருக்கிறோம். அந்த வார்த்தைக்கு டெபனிஷன் போடும் பொழுது, எந்த முறையிலாவது வரி வசூல் செய்திருந்தாலும், "டெனென்ட்" என்று போட்டிருக்கிறோம். ரயத்தாக இருந்தும் வாங்கி இருக்கலாம். ரயத்து இல்லாமல் இருந்தும் வாங்கியிருக்கலாம். எந்த முறையில் வசூல் செய்திருந்தாலும், "டெனென்ட்" என்று சொல்லி இருக்கிறோம். இது விவசாயிகளுக்கு சாதகமான ஷரத்து என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

The amendments of Sri S. Madhavan were put and lost.

The Government amendment was put and carried.

Clause 2, as amended, was put and carried.

16th August 1963]

Clause 3.

MR. DEPUTY SPEAKER : The question is—

' That clause 3 do stand part of the Bill.'

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

' In clause 3 (*a*), in the proposed new clause (ii), for the expression " sub-section (5) ", substitute the expression " sub-section (4) ".'.

The amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

Clause 4.

MR. DEPUTY SPEAKER : The question is—

' That clause 4 do stand part of the Bill.'

THE HON. SRI R. VENKATARAMAN : I move—

' In clause 4, for the expression " sub-section (5) ", substitute the expression " sub-section (4) ".'.

The amendment was put and carried.

Clause 4, as amended, was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963, as amended, be passed."

MR. DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963, as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed.

(3) THE MADRAS IRUVARAM INAM ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1962 (L.A. BILL NO. 2 OF 1962).

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the Madras Iruvaram Inam Estates (Abolition and conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 2 of 1962) as amended by the Joint Select Committee be taken into consideration."

Mr. Deputy Speaker, Sir, at the commencement of Independence we had two broad classifications of land holdings, one the zamindari or proprietory and the other roytwari. In the proprietory estates or zamindari, there were smaller grants of either

whole village or part village or piece or parcel of land measuring a few acres, as inams. When the Estates Land Act of 1908 was passed the lands which were under the zamindari or inams in respect of which only melwaram has been granted, had been included in the definition of "estates". Therefore, afterwards, inams in respect of which both the warams had been granted, which were not estates, did not come under the definition of Estates Land Act and did not get the benefits of Estates Land Act. It was found in practice that a large number of inams were grants of both warams and there the tenants had not protection whatsoever against eviction, exaction of heavy rents, etc. There was considerable agitation amongst people working in the agrarian field, people who wanted to introduce agrarian reforms, that the inams in respect of which both warams had been granted should also be brought under the definition of 'estate' and thereby the protection of Estates Land Act should be extended to them. Hence in 1936, the Estates Land Act was amended so as to extend its provisions to whole inam villages in which the inamdar has both melvaram and kudivaram right. Since then they have enjoyed protection from eviction. They have enjoyed protection against exaction of rents, etc. After transfer of power, Government decided on the policy of abolition of all intermediaries between Government and the cultivator. As a first step, the Madras Estates Land (Rent Reducation) Act was passed and under this Act, by adopting a summary procedure, rents prevailing in all estates were scaled down approximately to the level of ryotwari assessment which was collected in the neighbouring areas. The Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, i.e., the Zamindari Abolition Act, which for the purpose of convenience I will hereafter refer to as the Venkata Rao Act (Sri Saw Ganesan: Venkataraman's Act.) I shall refer it as Kala Venkata Rao Act. The Zamin Abolition Act will be referred to as the Kala Venkata Rao Act and the Inams Abolition Act might be referred to as Venkataraman's Act. There seems to be similarity in names also. (laughter). The Zamin Abolition Act, 1948, applied only to zamindaries and under-tenure estates and whole inam villages, in which the grant consisted of the melwaram only. The purpose of this Act is almost complete now and the estates to which this Act applies have been converted into ryotwari after the abolition of zamindaris. The intermediary tenures existing now are whole-inam village, which becames estates after the 1936 Amendment Act, i.e., Estates Land Amendment Act of 1936. In the original Act, inam villages in which the melwaram right alone was given to the landholder were treated as estates. After the Amendment Act of 1936, inam in which both the melvaram and kudivaram rights were granted were also made as estates. They are now to be abolished. We also have inam which comprise parts of village, which Sri Madhavan referred to during the discussion on the Bill. Grants were made to two or more persons of parts of a single village and they according to the definition of the Estates Land Act were not

estates. They now exist as certain intermediary tenures but not as estates. We have also minor inams, grants of small pieces of land, of say 10 acres to 50 acres, to individuals, or temples. We have also now a category of leasehold villages in and around Chingleput and Madras. In respect of these leasehold villages also, we are making provision in a separate Bill for abolishing them. We have also inams granted by the ex-Durbar of Pudukottai, which has since merged with the State of Madras. These are all the intermediary tenures, tenures in which there is intermediary person between the State and owner of the soil. It is the intention of all the three Bills' which we have now brought forward, to abolish all the intermediaries. After the three Bills are passed, Madras can say that it has completely abolished all the intermidiary tenures in the State and that there is only one tenure in the State, i.e., the ryotwari tenure. The main objective of these three Bills is to bring parity of conditions as between ryotwari areas and areas which were under special tenures. Hence the person having legal or occupancy right in a land will hold the land directly under Government after assessment, on the same basis and on the same principles as a ryotwari pattadar, to Government. Opportunity has further been taken to see that where in the absence of established rights, a land vests with Government, the person actually cultivating the land is enabled to get the patta, subject to his fulfilling certain prescribed conditions.

I shall now briefly deal with salient features of the changes made by the Joint Select Committee. The Iruvaram Inam Estates Abolition Bill as introduced in the legislature last year covered only whole inam villages which became estates as a result of the 1936 Amendment to the Estates Land Act. Several representations were made to the Joint Select Committee that the Bill should be made to apply to whole inams villages in Pudukottai merged territory as well as part village inams in the entire State, including Pudukottai. At present ryots in these two cases have no occupancy right and only the Cultivating Tenants Protection Act and Fair Rent Act apply to them. As conditions in those inams are comparable to those in the whole-inam villages, the Committee has decided that provisions applicable to the ryots of whole-inam villages may be extended to the ryots in these two types of inams to bring them under the purview of the Iruvaram Inam Estates Abolition Bill.

We have now extended the scope of Iruvaram Inam Estates Abolition Bill by including in it, part inam villages Pudukottai 11-00 a.m. whole inam villages and Pudukottai part inam villages.

The Committee made the following important changes in the Bill. I shall refer to them one by one.

Where no landholder or ryot is entitled to ryotwari patta in respect of any land, the patta should be granted to such of those persons as have been personally cultivating that land for the

period prescribed in clause 11 of the Bill. This is a major step which helps the tiller of the soil to become the owner of the land. I would like to point out that in the earlier land reforms measures including the Estates Abolition Act, 1948, there is no such provision. I want to inform the hon. members about the provision which we have introduced in this Bill. Hon. Members are aware that there are two rights generally in the Estates, viz. Melwaram and Kudiwaram. We have said that a private land will include khas, sir or pannai, which were not so defined in the abolition Act. We have deviated in favour of the cultivators in respect of the private lands. In clause 9, provision has been made that the landholder will be entitled to a ryotwari patta in respect of all lands which belonged to him as private land if such private land has been proved to have been cultivated by the landholder himself for a continuous period of three years within the preceding twelve years.

As regards Kudivaram, we have said that if he wants to get patta, he has a right to get the patta whether he has cultivated it even for a day or even if he has not cultivated it at all. Ryotwari patta will be given to him. The hon. members should appreciate that in case of ryoti land, if he establishes his right, then even though he has not cultivated the land for a day, still he will be entitled to ryotwari patta. In the case of private lands, even if the landholder establishes that it is a private land, it has got to be proved that he has cultivated the land for three years. In the Estate Abolition Act, we found that in certain cases neither the zamindar was able to establish that it is his private land nor was the ryot able to establish that it is a ryoti land and a large number of lands were in a nebulous state and reverted to the Government. In the Bill which is now before the House provision has been made that in the case of inam land, if he claims that it is a private land it has got to be proved. In other cases, it will be presumed as ryoti land. Even if it is a private land, he must have cultivated it for 3 years to be eligible for ryotwari patta for that land. Even in respect of the private land if the ryot has cultivated it for a period of 12 years continuously he will own the property, with a right to get ryotwari patta. Therefore, this piece of legislation will show now progressive we are with regard to the cultivators when compared with the similar legislations that have gone before.

The Committee has also modified the provision of the Bill in regard to service holder. In the Bill as introduced, the patta under section 9 was to be conferred on the service holder, subject to the condition of his continuing to render the service. If he fails to render the service, the land in respect of which he was given patta would stand forfeited to the institution, the institution being at liberty to make suitable arrangements for the performances of the service. I wish to explain this point. There are lands attached to the temples, etc., and the person is holding it on condition of

rendering some service, viz., Pujari service, Nandavanam service and other services of the kind. In the original Bill, we stated that the person will get ryotwari patta on condition that he continues to do that 'poojari' or 'nandavanam' service. In the Select Committee, we have modified it and said that there should be an option to the service holder either to hold the land and continue to render the service or to pay a lumpsum to the institution on payment of which the land shall stand discharged from the conditions of service. This option will be to the advantage of the service-holders as they can become the absolute owners and get ryotwari patta. If he fails to render the service, the land in respect of which he was given patta would stand forfeited to the institution, the institution being at liberty to make suitable arrangements for the performance of the service. That is what the law says. This change was effected in order to afford an opportunity to the service-holder to enfranchise his land and is thereby conducive to uniformity of tenure. It may also be noted that the compensation in respect of such estate or part held by the service-holder will not be paid to him but will be kept with the Institution which shall invest the amout in approved securities and pay the service-holder every year the interest accrued.

The Committee has also introduced a provision in the Bill enacting a presumption that any land in an inam estate will be presumed to be a ryoti land unless the contrary is proved. To establish as private land, provision has been made in line with the Estates Act. The inam landholder will have to establish his right otherwise it would be presumed as ryoti land. Further, any expression in the lease, patta or the like, which stipulated that it was a private land will not be taken into account, if that document is not earlier than the prescribed date. The expressions in a lease or the patta or the like on documents implying that the tenant has no occupancy rights in any land will not be admissible in evidence. This has also been included in the Bill. Provision has also been made by the Committee, excluding, temporarily lands in the inams, covered by the Bill, from the determination of the fixation of the ceiling area under the Land Ceiling Act, pending ryotwari settlement of these lands, to be effected under this Bill and issue of patta. If this is done, the land found to be included in the patta as of the respective holders will be taken into account for the purpose of refixing the ceiling area of the person.

I will presently explain this. To-day a person would have given certain lands as his own private land to the authority prescribed under the Land Ceilings Act. As a result of the new Act coming into force—Abolition of Inams Act—the lands may be proved to be ryoti lands and therefore if he had 30 or 40 acres as private land, he would find that he is not entitled to those 30 or 40 acres of land. Therefore, the ryotwari patta in respect of them would be given to some other person. If he had originally included them in the ceiling area, the ceiling area would have to be readjust-

[Sri R. Venkataraman] [16th August 1963

ed in relation to the decision that would be taken under the new Bill. That area will be taken out because he is not entitled to ryotwari patta in respect of that. Similarly, take the case of a ryot. If he has a ryotwari area of 20 standard acres and another ryotwari area of 20 acres, under this Bill, he will get a ryotwari patta in respect of those 20 standard acres which are his ryoti lands. That means that it will exceed 30 standard acres, and hence the ceiling will have to be refixed in relation to the final decision taken under this Bill.

In regard to compensation, the provisions in the Bill are the same as those in the Estates Abolition Act of 1948. It is estimated that the compensation in respect of whole village inams which are estates under the Estates Land Act will come to about Rs. 230 lakhs. We will have to pay compensation to the tune of Rs. 2 crores and 30 lakhs. This will be a substantial financial commitment for the Government. The compensation in respect of part villages and Pudukottai inams may not, it is estimated, exceed Rs. 50 lakhs. It may also be noted that the whole compensation would be deposited together, there being no provision for advance compensation. In the Zamin Abolition Act, we provided that compensation would be paid in parts. But under the Inam Abolition Bill, we are going to pay the entire compensation in one lump-sum. Therefore, no provisions regarding interim compensation and final compensation have been included in this Bill. The provisions regarding apportionment by the Tribunal are the same as in the Abolition Act. We have introduced the new provision that belated claims may be entertained by the District Court, under Clause 51. This also requires some explanation. In the Zamin Abolition Act, there is no provision for meeting cases like person who does not claim the amount deposited within a period of three or six months, to claim it later on—how he should get it and when he should get it. So, certain courts have completely rejected the applications made by certain of the landholders, saying that it is out of time. Therefore, they could not claim it. The Government have examined this position. I think, during the last Assembly session also a number of hon. Members raised this very issue before this House and the Government then promised to look into the matter and see that compensation is paid to the rightful owners. So, we have made provision for that also in the Bill passed by the House day before yesterday. Under that provision, the amount which has not been claimed, will be deposited in the District Court and the District Court will dispose of the amount, whenever the claim for compensation comes up.

I wish also to refer to a Government amendment—of which notice has been given—under which the ryot will be enabled to pay the accumulated arrears to the landholder in annual instalment not exceeding ten, in the case of new inam estates to which the Rent Reduction Act could not be applied. That is, in cases where there are arrears of rent due in respect of those lands, the tenure in

16th August 1963] [Sri R. Venkataraman]

respect of them has been abolished and converted into ryotwari, the court will have the discretion to order payment of the arrears in ten instalments. So, these are the salient features of the Bill now before this House.

But it is customary, while presenting the report of the Select Committee, to make reference to the Minutes of Dissent of hon. Members to the Report of the Select Committee. I shall not take much time of the House at this stage because I might have to reply in some greater detail at a later stage. But I shall briefly deal with the Minutes of Dissent given by the hon. Members. Since it is a Joint Select Committee, the Minutes of Dissent contained objections raised by some hon. Members of the Council as well as some hon. Members of the Assembly. Sri Balasubramanya Iyer, who was a Member of the Joint Select Committee, objected to the basic principles which the Government have adopted in this Bill. According to him, the right of a landholder is a well-established right. That should not be taken away by insisting that he should have cultivated a particular land for a period of three years. He said that it would be both improper as well as illegal. I have already explained that the intention of the Government in framing this Bill is to see that the ryot gets the benefit and that mere ownership proved through some document, does not preclude the ryot from getting title to the land.

The second objection he raised was with regard to the quantum of compensation. He said that the inams stand on a different footing being smaller and that the compensation for them should be a higher amount. The third objection he raised was that with regard to the introduction of the principle of paying less and less compensation in slabs, where the land is greater and greater. This sort of principle is accepted in a progressive taxation measure. But Sri Balasubramanya Iyer has cited the recent judgment of the Supreme Court and said that the principle of paying less rate of compensation to people who own a large extent of lands, is not payment of compensation and that it is not legal. My simple answer to the objection is this. In the first place, this is covered by Article 31-A of the constitution and if the Legislature in its wisdom thinks that compensation should be paid in a particular way, then the compensation as decided by it, will be final and it is not justicable. Taking into account that a large extent of lands have been cultivated by ryots over a large number of years, and taking into account the broad principles that are now accepted all over the world, the rights of ryots and farmers should be protected and that the burden on them should be eased. I do not think that the payment of compensation at a slab rate offends the principle of equity. That is the position I wanted to explain.

Then the hon. Member, Sri Kosalram has submitted a Minute of Dissent. He says that there has been discrimination between a ryot and a landholder. He says that if a landholder has cultivated his private land for three years, he gets a patta while in the

[Sri R. Venkataraman] [16th August 1963

case of a ryot, he should have cultivated the land for a period of 12 years. Therefore, he feels that it is highly inequitable and immoral. I am afraid, he has not understood both the concerned clauses as well as the law on the subject. Hon. Members may kindly refer to Clause 9. Clause 9 deals with the ryotwari patta given to a landholder. That is, in respect of private land, unless he has cultivated it for a period of three years, he will not get a patta. Then hon. Members may refer to Clause 10. It deals with the ryot. In clause 10 we have provided that if a person is a ryot, he need not have cultivated it even for a single day. It automatically follows that in respect of a ryoti land, the ryotwari patta will be issued. The hon. Member has completely misunderstood the scope of these two sections. What he probably means or intends is something different. In respect of these lands for which the landholder is not able to get the patta, in respect of those lands for which no ryots gets a patta, then in respect of those lands we say that the person who has cultivated the land for a period of twelve years will get the patta. That is to say, in an inam land, an inam private land, the landholder must have cultivated for three years. In an inam ryoti land he need not cultivate at all. The ryot gets the patta. Besides these two categories, if it becomes a Government land, what we say is, in respect of a Government land, any man who claims ryotwari patta must have cultivated it for a period of twelve years. It is because of confusion between a ryoti land and a land which has become vested with Government on account of no claims existing under the first two cases, this dissenting minute has been written. So I want to clearly clarify that in respect of a ryoti land, there is no prohibition. The ryot of a ryoti land will get the patta automatically. There is nothing more to be dealt with in that case. The same point has been raised by Sri Subbiah. A group of members have submitted a minute of dissent and they say the principle that the land belongs to the actual tiller of the soil has not been incorporated in this Bill. I want to clarify the position. The slogan that the land belongs to the tiller applied only to zamindari areas. This was the slogan raised all-over the country for the zamindari ryots. The slogan arose in this way. When the East India Company conferred these estates in favour of some people, they were not the owners of land. Actually some people were cultivating and some were collecting the rent, from the actual cultivators and gave it to Government. Then by judicial decisions subsequently step by step, collector of rent namely the Zamindar began to assert that he was the owner of the land. It was not accepted by the tenant and that was why, all over India, we raised the slogan that land must belong to the tiller. We never meant the ryotwari area. In a ryotwari land, belonging to me or say Sri Mathialagan, X, Y, or Z might be cultivating the land. Does it mean that I or Sri Mathialagan, who had got the land either by inheritance or purchase should not get the land but the cultivator? That is not so. The slogan referred only to Zamindari areas.

16th August 1963] [Sri R. Venkataraman]

The difference is this. At the inception the land was owned by the kudivaramdar. He was the owner. The Zamindar was appointed to collect the rent and pay it to Government. But subsequently by judicial decisions the zamindar became the owner of the land. Therefore we raised the slogan, quite legitimately, that the land belonged to the tiller. Where do we get that idea in ryotwari areas, where there is no intermediary? If it is said in a ryotwari area, the man who cultivates the land will become the owner of the land, then it means that we are putting forward a dangerous proposition which cuts down the right to become an owner of a property by inhertitance, etc. Even in respect of ryotwari land, if the owner is an absentee landlord, he could not evict the person cultivating his land. The Cultivating Tenants Protection Act and the Fair Rent Act are there to protect the cultivators of ryotwari lands. So there is this difference between the ryotwari area and a zamindari area. The slogan pertains only to the zamindari area. If we accept this, we will find that this Iruvaram Inam Estates Abolition Bill completely conforms to the very slogan raised by us in zamindari areas, namely that the land should belong to the tiller of the soil. I shall explain in greater detail, during the clause-by-clause discussion, to other points that might be raised by hon. Members. With these words I request that the Iruvaram Inam Estates (Abolition and Conversion into Rytowari) Bill, 1962, as amended by the Joint Select Committee, be taken into consideration.

MR. DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Iruvaram Inam Estates (Abolition and conversion into ryotwari) Bill, 1962, (L.A. Bill No. 2 of 1962) as amended by the Joint Select Committee be taken into consideration."

*திரு. செ. மாதவன்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே நிலப் பிரச்சினையைப்பற்றி எல்லாக் கட்சிகளும் கூடியவரை ஒரேவிதமான கருத்துக்களைத்தான் தெரிவித்து வந்திருக்கின்றன. அதை நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். உழுபவனுக்கு நிலம் கொடுக்கப்படவேண்டும் என்ற பிரச்சினை கூடுமானவரை எல்லாக் கட்சிகளாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால், இந்த நாட்டிலே உள்ள ஜமீன்கள், இனாம்கள் ஆகிய இந்த இரண்டு பிரச்சினைகளையும் தவிர்ப்பதற்காகக் காங்கிரஸ் அரசாங்கம் 1948-ஆம் ஆண்டில் ஒரு சட்டமும், இப்பொழுது ஒரு சட்டமும் கொண்டு வந்திருக்கிறது. சுதந்திரத்திற்கு முன்னால், காங்கிரஸ் கட்சியின் சார்பில் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட உறுதிகள்தான் இந்தச் சட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. 1948-ம் ஆண்டு, ஜமீன் ஒழிப்புச் சட்டம் வந்தபோதே இந்த இனாம் ஒழிப்புச் சட்டமும் வந்திருக்கவேண்டும். ஆனால், அன்றைக்குக் காங்கிரஸ் கட்சி

[திரு. செ. மாதவன்] [16th August 1963

யிலே ஒரு பிரிவினர் பலம் பொருந்தியவர்களாக இருந்து, இந்த இனும் ஒழிப்பு சட்டத்தையும் அன்றைக்கே வரமுடியாத ஒரு சூழ்நிலையை உண்டாக்கிவிட்டார்கள் என்றுதான் நான் நம்புகிறேன். அன்றைக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஜமீன் ஒழிப்புச் சட்டத்தைப்பற்றிய விவாதத்திலே கலந்துகொண்டவர்கள், காங்கிரஸ் கட்சியின் சார்பிலேகூட சில பேர் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள். இனும்களும் ஒழிக்கப்படவேண்டும், இனும்தார்களிடமிருந்து விவசாய மக்களை விடுவிக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்து 15 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்த நேரத்தில், உண்மையாகவே, எல்லோரின் சார்பிலே கூட என்று சொல்லலாம்—இந்தச் சட்டம் 1948-ஆம் ஆண்டு ஜமீன் ஒழிப்புச் சட்டத்தைவிட ஓரளவு புரட்சிகரமான சட்டம்தான் என்றுகூடச் சொல்லலாம். செலக்ட் கமிட்டியிலே உள்ள கனம் அங்கத்தினர்களும், இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்களும் தெரிவித்த கருத்துக்களெல்லாம், ஓரளவுக்குப் புரட்சிகரமான கருத்துக்களாக இருந்தாலுங்கூட, காங்கிரஸ் கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைத் தொழில் அமைச்சர் அவர்களும், ரெவினியூ அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதற்காக அவர்களை நிச்சயம் விவசாயப் பெருமக்களின் சார்பிலே பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறியபடி, இந்தச் சட்டத்திலே, 1948-ஆம் ஆண்டு சட்டத்தில் இல்லாத புரட்சிகரமான மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஓரளவு உழக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கின்றவன் இத்தனை ஆண்டுகள் உழுதால் பட்டா பெறக்கூடிய சூழ்நிலையை இந்தச் சட்டத்தில் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதற்காகவும் இந்தச் சட்டத்தை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளோம்.

'உழுபவனுக்கு நிலம்' என்ற தத்துவத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். 'அது ஜமீன் பிராந்தியங்களுக்கு மட்டும்தான்' என்று சொன்னார்கள் ஆனால், இனும் பிராந்தியங்களுக்கு அந்தத் தத்துவம் பொருந்துமா? என்று அவர்கள் விளக்கவில்லை. அவர்கள், 'ரயத்துவாரி ஏரியாவுக்கு இந்தத் தத்துவம் பொருந்தாது' என்று சொன்னார்கள். அதை ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளலாம். ஆனால், ஜமீன்களைப் போல்தான் இனும்களும். இனும்தார்களும் இடையிலே இருப்பவர்கள்தான். இந்த அடிப்படையை வைத்துப் பார்த்தால், ஒரு தவறான கருத்து இந்த நாட்டிலே நிலவி வருவது புரியும். இந்த இனும்தார்கள் ஏதோ அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள், உரிமை பெற்றவர்கள், ஆகையால் அவர்களைப் பற்றிச் சட்டம் இயற்றும்போது கொஞ்சம் எளிதான முறையிலே சட்டம் இயற்றவேண்டும் என்று வாதிடுவது

16th August 1963] [திரு. செ. மாதவன்]

அவர்களுக்கு ஏதோ ஒரு உரிமை இருக்கிறது என்ற கருத்தின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது. விளக்கம் தந்த அமைச்சர் அவர்கள் கூட இதை மறுக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த நாட்டில் இரு வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. பெரும்பான்மையான கருத்து, உழுபவனுக்கு உரிமை கொடுக்கவேண்டும் என்று இருந்தாலுங்கூட, இனும்தார்களை ஆதரிக்கக்கூடிய அளவிலேயும் ஒரு கருத்து இருக்கிறது. இப்படி இரு வேறுபட்ட கருத்துக்கள் இருக்கிற காரணத்தால் இந்த காங்கிரஸ் அரசாங்கம் இரண்டுக்கும் இடையிலே ஒரு கருத்தை ஆதரிக்கிறது என்று விளக்கம் தருவார்கள். ஜமீன்தார்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டும் விவசாயப் பெருங்குடி மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நாம் ஒத்துக்கொண்டாகவேண்டும். ஒரு வகையில் இனாந்தார்களும் ஜமீன்தார்களைப் போலத்தான். ஜமீன்தார்கள் நிலம் எங்கே இருக்கிறது என்பது 11-3 a.m. தெரியாமலேயே தாங்கள் பணக்காரர்களாக இருந்தாலும், ஏழை எளிய விவசாயிகளை துன்புறுத்தி மேல் வார உரிமையை வசூல் செய்து வந்தார்கள். ஜமீன்தார்களைப் போன்ற பணக்காரர்கள் இல்லை இனும்தார்கள், என்றாலும் இவர்களும் கூட தங்கள் இனும் நிலம் எங்கே இருக்கிறது என்பது கூடத் தெரியாமல் தான் விவசாயப் பெருங்குடி மக்களைத் துன்புறுத்தி மேல்வார உரிமையை வசூல் செய்து வருகிறார்கள். அதைத்தவிர இனாந்தார்கள் எந்தக் காலத்திலும் நிலத்தை அனுபவித்து வந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆகவேதான் ஜமீன்தார்களுடைய பிடியில் இருந்து எப்படி குடிமக்களைக் காப்பாற்றவேண்டுமென்று சட்டத்தினால் வகை செய்தோமோ அதுபோலவே இனும்தார்களுடைய பிடியில் இருந்தும் விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்றுகிற அளவில் இந்தச் சட்டம் அமையவேண்டுமென்ற தத்துவத்தை நாங்கள் கூறியிருக்கிறோம். இதைப் புரிந்துகொள்ளாத காரணத்தினால் வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறோம். இப்போது இந்தச் சட்டத்தின்படி பழைய பாக்கியை வசூலிக்க இடம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் ஒரே ஒரு புதுக் கருத்தை மட்டும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

1948-ஆம் ஆண்டு ஜமீன் ஒழிப்புச் சட்டத்தில் 55-ஆவது பிரிவு இருப்பதுபோலவே இதில் 56-ஆவது பிரிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இவ்வை இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்தால் பழைய பாக்கிகளை வசூலிக்கும் விஷயத்தில் ஒரு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. புது இனுமாக இருந்தால் அது கட்டுப்படாது என்று இருக்கிறது. ஏன் இந்த வேற்றுமை? பழைய இனுமாக இருந்தாலும், புது இனுமாக இருந்தாலும் இத்தகைய வேறுபாடு இருக்கக்கூடாது என்ற கருத்தை விளக்க ஆசைப்படுகிறேன்.

புதிய இனும்களில் பகுதி பகுதியாகக் கொடுக்கப்பட்ட இனும்கள் ஏராளம் இருக்கின்றன. முழு கிராமமாகக் கொடுக்கப்பட்டுள்ளதும் இருக்கிறது. பகுதி பகுதியாகக் கொடுக்

கப்பட்டது என்ற காரணத்தினால் அதைப் புது இனாம் என்று விலக்கிவிடுவதன் காரணத்தினால் சரியான நியாயம் அளித்ததாக சொல்ல முடியாது.

ஒரு கிராமம் ஒரு நபருக்கு ஒரு சமயத்திலேயே முழு இனாமாக கொடுக்கப்பட்டிருக்கலாம். அதேபோல பல நபர்களுக்கு ஒரு கிராமம் பல பகுதிகளாகப் பிரித்து இனாமாக அளிக்கப்பட்டிருக்கலாம். அந்த கிராமத்தில் உள்ள குடிமக்களுக்கும், இந்த கிராமத்தில் உள்ள குடிமக்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? ஆகவே இவர்களுக்குள் எவ்வித பாகுபாடுமின்றி இந்தச் சட்டம் அமைக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக இந்தச் சட்டம் காலம் தாழ்த்திக் கொண்டு வரப்பட்டாலும்கூட இந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்று என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை மகிழ்ச்சியோடு ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இனாம் ஒழிப்பு சம்பந்தமாக சரித்திர பூர்வமான விஷயம் பல குறிப்பிட முடியும். அவை எல்லாவற்றையும் பேசுவதற்கு நேரம் இல்லையென்று நினைக்கிறேன்.

ஜமீன்களை ஒழிக்கவேண்டும் என்பதற்கு 1928-ல் கிளர்ச்சி செய்தார்கள். 1928-இல் சிவகெங்கா ஜமீன் விவசாயிகள் சங்கத்தில் அடியேனும் செக்ரட்டரியாக இருந்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு வந்தேன்.

இந்த தேசத்தில் குறிப்பாக சென்னை மாகாணத்தில் ஏராளமான ஜமீன் பிரதேசங்கள் காங்கிரஸ் பிரசாரத்தினால் புத்துணர்ச்சிபெற்று விழிப்படைந்தன. அந்தக் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் ஜமீன் பிரதேசங்களில் உள்ள மக்களைக் கவர்வதற்கு சுயராஜ்யம் வந்தவுடன் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்படும் என்றே பிரசாரம் செய்தார்கள். அதனாலேயே ஜமீன் பிரதேசங்களில் காங்கிரசுக்கு அதிக ஆதரவு கிடைத்தது. 1946-ஆம் ஆண்டு சுயராஜ்யம் என்று வருவதற்கு முன்னரே—முழு அந்தஸ்துடன் சட்டசபை அமைக்கப்பட்டவுடனேயே ஜமீன்தாரி ஒழிப்பு முறை வந்தது. ஜமீன்களை ஒழிக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டபோதே இனாம்களையும் ஒழிக்க ஏற்பாடு செய்தோம். ஆனால் அப்போது அதற்குப் பலமான எதிர்ப்புகள் இருந்த காரணத்தினால்—இனாம் ஒழிப்புச் சட்டம் பின்னால் கொண்டுவரப்படும் என்று அப்போது ரெவின்யூ அமைச்சராக இருந்த திரு. காளா வெங்கட்டராவ் அவர்கள் அறிவித்தார்கள். அந்த உறுதியை நிறைவேற்றுவதற்கு முடியாமல் இத்தனை காலமும் கழிந்து விட்டது.

ஆனாலும் காங்கிரஸ் தன்னுடைய கொள்கையை உறுதிப்படுத்தும் வகையில் ஆர். ஆர். ஆக்ட் கொண்டு வந்தது. சோஷலிஸ சமுதாய அமைப்பை ஏற்படுத்துவது என்ற கொள்கையை வகுத்துக்கொண்ட காரணத்தினால்தான் இன்றைக்கு இந்த இனாம் ஒழிப்புச் சட்டம் வருகிறது. ஆனால் கிட்டத்தட்ட 15, 16 வருஷ காலம் ஆகிவிட்டது. 1948-இல் இருந்து இதுவரை இப்படி இழுத்துக் கொண்டே வந்ததே ஒரு ஆச்சரியந்தான். நண்பர் மாதவன் அவர்கள் பேசும்போது 'எல்லாக் கட்சிக்காரர்களும் ஜமீன்தாரி முறையினை ஒழிக்கவேண்டும்' என்றுதான் சொன்னார்கள் என்று சொன்னதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஜமீன்தாரி முறை ஒழியவேண்டும், இனாம்தார் முறை ஒழியவேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள்தான் சொல்லி வந்திருக்கிறார்கள். அதற்காகக் கிளர்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். 'அகில இந்தியா கிசான் சபா' என்று வைத்து அதன் மூலம் காங்கிரஸ்காரர்கள் விவசாயிகளின் நன்மைக்காகப் பாடுபட்டு வந்தார்கள். இன்று அந்த ஸ்தாபனத்தைக் கம்யூனிஸ்டுகள் பிடித்துக் கொண்டு விட்டார்கள். இந்த ஸ்தாபனம் விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காக என்றே அன்று ஏற்படுத்தப்பட்டது. இப்போது அநேக கட்சிக்காரர்கள், டி. எம். கே. கட்சிக்காரர்கள் உட்பட காங்கிரஸ் கட்சிக் கொள்கையை வரவேற்கிறார்கள். இதை வரவேற்காத சில கட்சிகள் இருக்கலாம். பெயரைச் சொன்னால் என்னுடைய நண்பர் சண்டைக்கு வந்து விடுவார். இதற்கு டி.எம்.கே. கட்சி ஆதரவு கொடுப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் மந்திரி வெங்கட்டராமன் அவர்கள் அவர்களுடைய ஆரம்ப உரையில் இந்த மசோதாவை ஆதரித்து மிகத் திறமையுடன் எடுத்துச் சொன்னார்கள். அதே சமயத்தில் நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். 'டில்லர் ஆப் தி சாயில்' என்ற கிளர்ச்சி இருந்தது ஜமீந்தாரி பிரதேசத்தில் மட்டுந்தான், ரயத்துவாரிக்கு இல்லை என்று சொன்னார்கள். 'டில்லர் ஆப் தி சாயில்' என்ற கிளர்ச்சியை ஆரம்பித்தது ஜமீந்தாரி பிரதேசத்தில் மட்டுமல்ல, இனாம் பிரதேசங்களையும் சேர்த்துத்தான் அந்தக் கிளர்ச்சி அன்று ஆரம்பிக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இப்போது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், அதுவும் தென் ஜில்லாக்களில் பார்த்தால் இனாம் கிராமங்களாக இருப்பவை எல்லாம் முன்பு ஜமீந்தாரி பிரதேசத்தில் இருந்தவைதான். இனாமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்களெல்லாம் ஜமீன்தார்களால் கொடுக்கப்பட்டவைதான். ஜமீன் கிராமங்கள் என்று சொல்லப்பட்டவையும் ஜமீன்தார்களுக்கே சொந்தமானவை அல்ல. விவசாயிகள் சொந்தமாகச் சாகுபடி செய்து வந்த நிலங்களை அக்கிரமமாக அபகரித்துக் கொண்டு அனுபவித்துக்கொண்டு வந்தார்கள். அந்த முறையில் அவர்கள் பெற்ற நிலங்களைத்தான் ஜமீன்தார்கள் அநேகம் பேருக்

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [16th August 1963

குத் தானம் பண்ணினார்கள். முழுக்கிராமம், அரைக்கிராமம், 10 பேருக்குச் சேர்த்து சொந்தம் என்ற முறையில் தானம் பண்ணினார்கள். எவ்வாறு இனாம் நிலங்களாக ஜமீன்தார்கள் கொடுத்தார்கள் என்பதை விளக்க விரும்புகிறேன். ஒரு ஜமீன்தார் வேட்டைக்குப் போயிருப்பார். மத்தியானம் சாப்பிடத்திரும்ப நினைக்கும்போது நேரமாகி விட்டிருக்கும். ஜமீன்தாருக்கு அதிகப் பசி எடுத்திருக்கும். அந்தப் பகுதியில் இருக்கிற கெட்டிக்காரன் ஜமீன்தார் வருவதை அறிந்து கோழி அடித்து சாப்பாடு தயார் செய்து அவருக்குச் சாப்பாடு போட்டான். சாப்பாடு போட்டதற்காக 'இந்தக் கிராமத்தை நீ வைத்துக் கொள்' என்று கொடுத்து விட்டார் ஜமீந்தார். ஜமீந்தாருக்கு அடைப்பக்காரன் இருப்பான். அவன் ஜமீந்தாருக்கு மேல் அமுக்கியதற்காக நிலம் கொடுக்கப்பட்டான். இந்த மாதிரி ஒருவிதமான காரணமும் இல்லாமல் இனாம் கொடுக்கப்பட்டது. எப்படி ஜமீந்தார் அக்கிரமமாக அவற்றை அனுபவித்து வந்தார்களோ அதே போன்று அக்கிரமமான முறையில் தானம் பண்ணினார்கள். அவ்வாறு தானம் வாங்கியவர்களில் பல பேர் அந்த நிலங்களை விற்று விட்டார்கள். நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு யார் தானம் பெற்றார்களோ அவர்கள் கையில் தற்போது இல்லை. அவை எல்லாம் இப்போது பெரிய மிராசுதார்களிடத்திலும், பணக்காரர்களிடத்திலும் இருக்கின்றன. எங்கள் ஊரில் ஒரு தேவருக்கு ஒரு ஜமீந்தார் தானம் கொடுத்தார். அவ்வாறு இனாம் பெற்ற பிறகு அந்தத் தேவர் ஜமீந்தார் மாதிரி வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார். கடைசியில் அவரிடம் இருந்த கிராமம் போயிற்று. அவர் வருஷத்திற்கு ஒரு முறை கிராமத்திற்கு போய் வருவார். அவர் கிராமத்திற்குப்போகும்போதெல்லாம் கிராமத்துக் குடிகள், 'இனாம்தார் வந்திருக்கிறார் அவருக்குக் காணிக்கை கொடுக்கவேண்டும்' என்ற முறையில் ஒவ்வொருவரும் ஒரு கோழி கொடுப்பார்கள். மொத்தம் 100, 200 கோழிகள் வரும். இவர் நாளைக்கு இரண்டு, மூன்று கோழிகள் சாப்பிட்டுக் கொண்டிருப்பார். இப்படி இருந்த காரணத்தால் கடன் பட்டு அந்தக் கிராமத்தை விற்று விட்டார். கடைசியில் அது ஒரு அய்யங்கார் கைக்குப் போயிற்று. அவர் பிரபலமான அய்யங்கார். அவர் முன்பு காங்கிரஸில் இருந்தார். இப்போது அவர் 'அந்தக்' கட்சியில் சேர்ந்து விட்டார். புதிய இனாம்தார் கிராமத்துக்குப் போனபோது எல்லோரும் கோழியைக் கொண்டுபோய்க் காணிக்கை கொடுக்க ஆரம்பித்தார்கள். அவர், 'கோழியைக் கொண்டு போய் நான் என்ன செய்வது? எல்லோரும் கோழிக்குப் பதிலாக ஒரு ரூபாய் கொடுங்கள்' என்று சொன்னார். அதன்படி ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் 100 ரூபாய்க்கு மேல் வந்தது. அதன் பிறகு அவர் வருஷா வருஷம் கோழி வரி என்றே கணக்கில் எழுதி பணம் வாங்க ஆரம்பித்து விட்டார். இதை நான் எடுத்துச் சொன்னதற்காக அந்த அய்யங்கார் எலக்ஷனிலே

16th August 1963] *[திரு. ஆர். வி. சுவாமிநாதன்]*

என்னை எதிர்த்து விரோதமாக வேலை செய்தார்கள். இந்த மாதிரி இனாம்களை எல்லாம் ஒழிக்கவேண்டுமென்று கடந்த 10, 15 வருஷங்களாகக் காங்கிரஸ் கிளர்ச்சி செய்து வந்திருக்கிறது. நம்முடைய கனம் முதல் மந்திரி காமராஜர் அவர்களுடன் சுற்றுப்பிரயாணம் செய்யும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவர்களிடம் விவசாயிகள் எல்லோரும் வந்து, 'ஜமீன்தாரி முறையை ஒழித்து விட்டீர்கள்; இப்போது இனாம் கிராமங்களில் இனாம்தார்கள் எங்களை இம்சிக்கிறார்கள் எங்களுக்குக் கதி மோட்சம் இல்லையா' என்று கேட்டார்கள். நமது முதலமைச்சர் அவர்கள், இனாம் குடிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் கண்டிப்பாகச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்தார்கள். இன்று நாம் பத்திரிக்கைகளில், 'நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதவியை விட்டு விலகிவிடப் போகிறார்கள்' என்ற செய்தியினைப் பார்க்கிறோம். அவர்கள் பதவியிலிருக்கும்போதே, இதனை நிறைவேற்றுவதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கனம் வெங்கட்டராமன் அவர்கள் முன்னுரையாக பேசும்போது மிகவும் திறமையாகவும், சாதுர்யமாகவும், சாமர்த்தியமாகவும் பேசினார்கள். பன்னிரண்டு வருஷம் ஒரு விவசாயி தொடர்ந்து விவசாயம் செய்து கொண்டிருந்தால்தான் பட்டா கொடுக்கவேண்டுமென்பது பற்றி மிகச் சாமர்த்தியமாக எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சட்டசபை வாதத்தில் அதிகத் திறமையானவர்கள். மூன்று வருஷம் இருந்தாலே பட்டா கொடுக்கலாம், 12 வருஷம் வேண்டாம் என்று நான் செலக்ட் கமிட்டியில் சொன்ன நேரத்திலே அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தைக் காட்டிலும் இன்று கேட்ட உடனேயே நியாயமாகப்படும் அளவுக்கு சாமர்த்தியமாக எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய வாதத் திறமைக்காக அவர்களைப் பாராட்டுகிறேன். ஆயினும், ஒரு விவசாயி 12 வருஷம் ஒரு இனாம்தாரிடம் உழைத்தால்தான் பட்டா கொடுக்கவேண்டுமென்று சாமர்த்தியமாகப் பதில் சொல்லாமல், சட்டம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம் தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற சென்னை இரு வார இனாம் மசோதாவின்மீது நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். அப்படி ஆதரிக்கிற நேரத்தில் மெத்த மகிழ்ச்சியும் அவர்களைப் போலவே அதில் பெருமையும் கொள்கிறேன். அப்படி வரவேற்கும் நேரத்தில் இரண்டொரு வருத்தங்கள் இருக்கின்றன என்று சொன்னாலும் இன்றாவது வருகிறதே என்று

அனைவரும் சந்தோஷப்படக்கூடிய நிலையில் இருக்கிறோம். சுவாமிநாதன் அவர்கள் கூறியதுபோல், காமா வெங்கட்ராமன் அவர்கள் காலத்தில் வரவேண்டிய இந்த மசோதா வெங்கட்ராமன் அவர்கள் காலத்தில்தான் பூர்த்தியாகிறது. இடையில் நிகழ்ந்ததை நாம் கவனிக்க வேண்டும். சுவாமிநாதன் அவர்கள் உருக்கமாக குறிப்பிட்டார்கள். வெங்கட்ராமன் அவர்கள் காலத்தில், அவர்கள் மந்திரியாக இருந்தபோது ஜமீன் ஒழிப்பிற்காகவும், இனாம் ஒழிப்பிற்காகவும் எதிராக இருந்த கிளர்ச்சிகள் பற்றி குறிப்பிட்டு அது நிறைவேற இந்த 14 வருட காலம் ஆகியிருக்கிறது என்று சொன்னார்கள். நாங்கள் எல்லாவற்றையும் செய்து விட்டோம் என்றும் சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். காமா வெங்கட்ராமன் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்த நேரத்தில் என் கட்சி சார்பில் அறிஞர் அண்ணா அவர்களும் வெங்கட்ராமன் அவர்களும் பிரசங்கத்தில் இந்த மசோதா பற்றி விவாதித்தார்கள். சுவாமிநாதன் அவர்களும் வந்து இருந்தார்கள். அது இப் பிரச்னை சம்பந்தப்பட்டதாகும். காலம் தாழ்ந்து இது வந்திருப்பதற்காக நான் குற்றம் கூறவில்லை. பல சக்திகள், தோற்றத்தில் ஒரு பெரிய சக்தியாக இல்லாவிடினும், இதை எதிர்த்து வந்தன. ஜமீந்தார்கள், கொள்ளைக்காரர்கள், கொடுமைக்காரர்கள் என்று பயப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் இந்த இனாம்தார்கள் சமுதாயக் கட்டுக்கோப்பில் எவ்வளவு அமைப்பாக இருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இனாம்தாரர்களை ஒழிக்கும் இம் மசோதா இன்று எல்லோருடைய ஆதரவையும் பெற்றிருக்கிறது. ஆனால் ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. இன்று ஒரு பலமான கருத்து இருக்கிறது. இனாம்தாரர்களுக்கு குடி வார உரிமை உண்டு, அது இம் மசோதாவினால் எடுக்கப்படுகிறது, அவர்களின் உரிமை பறிக்கப்படுகிறது என்று கூறுபவர்கள் இந்த மன்றத்தில் வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம், ஆனால் வெளியே இருக்கிறார்கள். பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் கூறியிருப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். இனாம்தார்களுக்கு குடி வார உரிமை இருக்கிறது என்ற ஒரு கருத்து இருக்கிறது. அல்லாடி கிருஷ்ணசுவாமி ஐயர், டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி அவர்கள் போன்ற பிரபல வக்கீல்கள் எல்லாம் 15 ஆண்டுகளுக்கு முன்னர், இனாம்தார்களுக்கு குடி வார உரிமை இருக்கிறது. அதை அவர்களிடமிருந்து பறிக்க முடியாது என்று வாதித்திருக்கிறார்கள். இன்னும்கூட செல்வாக்கு மிகுந்த பத்திரிகைகளான "ஹிந்து", "சுதேசமித்திரன்" போன்ற பத்திரிகைகள் எல்லாம் இனாம்தார்களுக்குள்ள குடி வார உரிமை பற்றி வற்புறுத்தி வருகின்றன. இன்று நாட்டில் தவறாக புரிந்துகொள்ளப்பட்டிருக்கிற ஒரு பிரச்னை, தவறாக வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிற ஒரு பிரச்னை இருக்கிறது என்றால் அது இந்த இனாம்தாரின் பிரச்னைதான். இன்றுகூட இனாம்தாருக்கு குடி வார உரிமை உண்டு என்று வாதிக்கிறார்கள். அதை இந்த சபை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். இனாம்தாரர்களிடமிருந்து குடி வார

உரிமையைப் பறிப்பது அடிப்படைக்கு விரோதம் என்கிறார்கள். இனாம்கள் எப்போது எழுந்தது? எந்த சூழ்நிலையில் வந்தது? எந்த நோக்கத்திற்காக இந்த இனாம்கள் கொடுத்தார்கள்? வேடிக்கையாக விளக்கினார்கள் திரு. சுவாமிநாதன் அவர்கள். இனாம்கள் எந்த காரணத்திற்காக கொடுக்கப்பட்டன? இந்த இனாம்கள் கொடுக்கப்பட்டபோது குடி வார உரிமை இருந்ததா? செல்வாக்குள்ள, மெஜாரிட்டி பலம் பொருந்திய சர்க்கார்கூட இத்தகைய ஒரு மசோதாவை கொண்டு வர முடியாத அளவிற்கு சர்க்காரை அலக்கழித்திருக்கிறார்கள், ஒரு சாரார். இந்த இனாம்களை இரண்டு வகையாக பிரிப்பது நல்லது. சர்விஸ் இனாம், கோவில்கள் போன்று மத காரியங்களுக்காக கொடுக்கப்பட்ட இனாம் என்று இரண்டாக பிரிப்பது நல்லது. சாதாரண வேலை செய்கிறவர்கள், சலவைத் தொழிலாளர்கள், தேவ தாசிகள் இவர்களுக்கெல்லாம் இனாம்கள் கொடுக்கப்பட்டு வந்தன. இதை சர்வீஸ் இனாம் என்று சொல்கிறேன். இந்த இனாம்தாரர்களுக்கு குடி வார உரிமை உண்டு என்று ஒரு கட்சி வாதாடுகிறது. இங்குவேண்டுமானால் அதற்கு ஆதரவு இல்லாதிருக்கலாம். வெளியிலே பெரியவர்கள் அதற்கு ஆதரவு திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். சர்வீஸ் இனாம்கள் சில நல்ல காரியங்கள் செய்வதற்காக படித்தவர்களுக்கு, கோவில்களில் பணி புரிகிற பிராமணர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த இனாம் சர்வீஸ் இனாம். ஜமீன்தார்களுக்குகூட குடி வார உரிமை கிடையாது. அப்படியிருக்க அவர்களால் கொடுக்கப்பட்ட இந்த இனாம்களை வைத்திருப்பவர்களுக்கு எப்படி குடி வார உரிமை இருக்கும்? ஆறில் ஒரு பங்கு அரசனுக்கு என்று கொடுக்கப்பட்டு வந்தது. அது இன்று கிடையாது. கோவில்களில் மந்திரம் சொல்வதற்காக, கோவில்களைப் பாதுகாத்து பூஜை செய்வதற்காக, வேதம் ஓதுவதற்காக, இந்த இனாம்கள் கொடுக்கப்பட்டன. நூறு ஆண்டு சரித்திரத்தை படித்துப் பார்த்தால் தெரியும், இந்த நிலத்திலிருந்துள்ள நலனை அனுபவிப்பதற்காகத்தான், அப்படி அனுபவிக்கும் உரிமைதான் இந்த இனாம்தார்கள் என்பவர்களுக்கு அளிக்கப்பட்டது, என்பது. அப்படியிருந்தும், இனாம்தார்களின் குடி வார உரிமையில் தலையிடுகிறார்கள், சொத்து உரிமையில் தலையிடுகிறார்கள் என்று சொல்லி இந்த 14 ஆண்டு காலமாக அலைக்கழித்திருக்கிறார்கள். குடி வார உரிமை இருக்கிறது என்பதை எந்த சாசனத்திலாவது காண்பிக்க முடியுமா? அதற்கென தனிப்பட்ட ஏதாவது சாசனம் இருக்கிறதா? தஸ்தாவேஜுகள் இருக்கின்றனவா? ஜமீந்தார்கள் என்றால் அவர்கள் வரியை வசூலித்து கொடுத்து வந்தார்கள். ஆனால் இந்த இனாம்தார்களோ அந்த நிலங்களில் இருந்து கிடைக்கிற வருவாயை மட்டும் அனுபவித்து வந்தவர்கள். நான் கேட்கிறேன், இந்த இனாம்தார்கள் யாராவது வயலில் களை எடுத்திருக்கிறார்களா? நாற்று நட்டிருக்கிறார்களா? அவர்கள் வயலில் ஏதாவது வேலை செய்திருக்கிறார்களா? வரப்பு எடுத்திருக்கிறார்களா? வாய்க்காலில் தண்ணீர் பாய்ச்சியிருக்கிறார்களா? ஒன்றுமே கிடையாது.

ஒன்றுமே செய்யாது எங்களுக்கு குடி வார உரிமை உண்டு, மேல் வார உரிமை உண்டு என்று திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். சோஷியலிச பாணியில் செல்லும்போது, சோஷியலிசத்தை நோக்கிச் செல்லும்போது, உலகம் போகிற முன்னேற்றப் பாதையில் இந்த இனாம்தார்களின் உரிமையை நான் ஏற்றுக் கொள்ளவே முடியாது, யாரும் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். ஜமீந்தார்களுக்கு காம்பன்சேஷன் கொடுத்ததே தவறு என்று சொல்கிறவர்கள் நாங்கள். கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதா அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். மதம், கடவுள் எல்லாம் வேண்டியதுதான். ஆனால் அதன் போர்வையில் நின்று ஏழைகளை, உழவர்களை பாதிக்கும்படிச் செய்வது தவறு, பிற்போக்கான கருத்துமாகும். ஆச்சாரியார் பெயரைச் சொல்லிக்கொண்டிருந்தாலும், சுதந்திர கட்சி பெயரைச் சொல்லிக் கொண்டிருந்தாலும், எதுவாகயிருந்தாலும் 14 ஆண்டுகளாக நம்மை அலைகழித்து வந்த ஒரு சதி இன்று ஒழிகிறது என்பதைக் கண்டு இன்று எங்களைப் போல் சந்தோஷப்படுகிறவர்கள் யாருமே இருக்கமுடியாது. உழுகிறவனுக்குத்தான் நிலம் சொந்தமாக இருக்க வேண்டும். இன்ஹெரிட்டன்ஸ் ஆப்கன்டி லாண்ட்லார்டிஸம் போன்றவை இல்லாது உழுகிறவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்ற நிலை இருக்க வேண்டும். செலக்ட் கமிட்டியில் இதுபற்றி விவாதிக்கும்போது ஒரு காம்ப்ரிஹென்சீவ் சட்டம் கொண்டு வருவது நலமென்று கூறப்பட்டது. ஆனால் இன்று மூன்றாக வந்திருக்கிறது. முதலில் தனித்தனியாக மசோதா வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. பின்னர் மறுபடியும் கமிட்டி அதை மாற்றி தனித்தனியாக கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களை இதற்காக பாராட்டுகிற நேரத்தில் இந்த நல்ல மசோதாவிற்கு எங்களுடைய ஆதரவும் தருகிறது என்று பெருமையும், பூரிப்பும் நாங்கள் அடைகிறோம் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

12-00 noon. **திரு. கோ. நாராயணசாமி நாயுடு:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் மிகமிக பாராட்டுகிறேன். இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கு யார் யாரோ காரணமாக இருப்பதாக சிலர் தெரிவித்தார்கள். அதையும் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். நல்ல காரியம் நடக்கிறபொழுது எனக்கும் அதில் பங்கு உண்டு, நான் தான் அதைச் செய்தேன், அந்த நன்மையை ஏற்படுத்தினேன் என்று சொன்னால், அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறேன். உழுபவர்களுக்குத்தான் நிலம் சொந்தம் என்று முதல் முதலில் நாட்டில் சொன்னது மதிப்பிற்குரிய தேசப் பிதா காந்தி அடிகள் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால் ஜமீன்தார்களுக்குப் பக்கத்திலுள்ள விவசாயிகளுக்கு மாத்திரம்தான் நிலம் சொந்தம் என்று

சொல்லுவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எவன் நிலத்தை உழுகிறானோ அவனுக்கு நிலம் சொந்தம் என்று தான் பொருள் கொள்ளவேண்டுமே தவிர, ஜமீன்தார் பகுதிகளில் இருப்பவர்களுக்குத்தான் அந்த வாசகம் பொருந்தும், அந்த உரிமை உண்டு என்று பின்னால் பொருள் கொள்வது அவ்வளவு உசிதமாக எனக்குப்படவில்லை.

நண்பர் மதியழகன் அவர்கள் ரொம்ப மனவேதனையோடு சொன்னார்கள். தேசத்திலே உள்ள பெரும் பத்திரிகைகளெல்லாம், நம்முடைய தமிழ் நாட்டிலே இருக்கிற 'சுதேசமித்திரன்', 'இந்து' பத்திரிகைகள், இந்த சீர்திருத்தத்திற்கு மாற்று கட்சி கட்டிக் கொண்டு வேலை செய்கிறது என்று வருத்தத்துடன் தெரிவித்தார். எந்தக் காலத்தில் 'இந்து',, 'சுதேசமித்திரன்' முற்போக்கு சக்தியை ஆதரித்தன? அப்படி அவர்கள் ஆதரித்து எழுதிய நாளைப் பார்த்திருக்க முடியாதே? அப்படியிருக்கும்பொழுது 'நாம் சொல்லுவதை அந்தப் பத்திரிகைகள் ஒத்துக்கொள்வதில்லை, ஏதோ கெடுதல் செய்கின்றன' என்று ஏன் ஆச்சரியப்பட வேண்டும்? எனக்குத் தெரியும், விவசாய இயக்கம் பல வருஷங்களாக நடந்தபொழுது, அதற்கு எதிராகத்தான் இந்தப் பத்திரிகைகள் எழுதிக்கொண்டு வந்தன. அப்படியிருக்கும்பொழுது அந்தப் பத்திரிகைகளைப் பற்றி சட்டசபையில் பேசி, அவைகளுக்கு விளம்பரம் கொடுத்திருக்கவேண்டிய அவசியமில்லை.

சட்டம் எவ்வளவு நல்லதாக இருந்தபோதிலும், அந்த சக்தி இருக்கிறதே அந்த சக்தியை சமாளிப்பது ரொம்பவும் கஷ்டம். அந்த சக்தி தன்னுடைய பலத்தைக் காட்டித்தான் தீரும். பரமபத படத்தில் சிறு பாம்புகள், பெரிய பாம்புகள் இருப்பதுபோல், இந்த மசோதாவிலும் சில ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். சர்வீஸ் மான்யம் என்று இருக்கிறதே, அதையும் இதில் சேர்த்திருந்தால்தான், இது முழு முதல் சட்டமாக இருக்க முடியும். இப்படி சர்வீஸ் கிராமங்கள் எங்கள் பகுதியில் மடாதிபதிகளின் ஆதிக்கத்திலும் கோவில்களின் ஆதிக்கத்திலும் இருக்கின்றன. அதையெல்லாம் இந்த சட்டத்தில் சேர்க்கவேண்டும். ஜமீன்தார்களை ஒழித்த மாதிரி, ராஜாக்களை ஒழித்த மாதிரி அவ்வளவு சீக்கிரம் இந்த சக்தியை ஒழித்துவிட முடியாது. இது ரொம்ப கடுமையான சக்தி. கடவுள் மாதிரி அவர்கள் இருக்கிறார்கள் என்ற நினைப்பு இருக்கிறது. அவர்களும் மனிதர்கள்தான். 'தெய்வம் மானுஷ்ய ரூபேண' என்று சொல்லுவதுபோல், அவர்களை தெய்வமாகக் கருதி, அந்த தெய்வம் போன்ற மனிதருடைய சக்தியில் கை வைத்தால், நமக்கு கேடு வந்துவிடுமோ, அல்லது ஏதாவது கொடிய வியாதி வந்துவிடுமோ, தீங்கு வந்துவிடுமோ அல்லது நமக்கு இருக்கிற பதவி போய்விடுமோ என்று பயம் ஏற்படுகிறதோ என்னவோ? மனிதர்க்குள்ளேயே சில பேர்களை ஏற்றுவதும், சில பேர்களை தாழ்த்துவதும் கூடாது. ஜமீன்தார்களுக்கு என்ன பலம் இருந்ததோ, என்ன சக்தி

இருந்ததோ, இனாம்தார்களுக்கு என்ன பலம் இருந்ததோ அல்லது சக்தி இருந்ததோ, அதைவிட அதிக சக்தி பண்டார சன்னதிகளுக்கு உண்டாக்கப்பட்டிருக்கிறது. அந்த சக்தியை, அந்த பலத்தை சீக்கிரம் சமாளிப்பது கஷ்டம். மதிப்பிற்குரிய அறநிலைய பாதுகாப்பு மந்திரி அவர்கள் அதற்குரிய சட்டம் சமீபத்தில் வரும் என்று தெரிவித்தார்கள். அதற்கும் நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள் ஏறுகிற ஏணியை நன்றாக அமைக்கவேண்டும். வெறும் ஏணியை மட்டும் வைத்து இரண்டு குச்சிகளை மட்டும் வைத்துவிட்டால் போதாது. படிக்களை நன்றாக அமைக்க வேண்டும். யாராவது ஒருவன் விவசாயியாக இருந்தால், அவன் விவசாயி என்று அவனே நிரூபிக்கவேண்டும், அப்பொழுதுதான் அந்த நிலம் அவன் கைக்கு வருகிறது. அவன் உள்ளபடியே விவசாயிதானா, அவனுடைய குடும்பத்திலே அவனுடைய மனைவியோ அல்லது வேறு யாராவதோ சாகுபடி செய்கிறார்களா என்பதை அவனே நிரூபிக்கவேண்டும். இப்படி நிலைமை இருப்பதினால்தான், 60-40 வாரச் சட்டம், அதுபோன்ற பாக்கிச் சட்டங்களெல்லாம் தவிடுபொடியாக்கப்பட்டிருக்கின்றன. யார் நேரடியாக விவசாயம் பண்ணுகிறானோ அவன் விவசாயி அல்ல என்று கன்ஸிலியேஷன் கோர்ட்டிலும், ரெண்டு கோர்ட்டிலும் ஏற்கனவே தீர்ப்பு வாங்கி வைத்திருக்கிறார்கள். பத்து வருஷம், 5 வருஷம், 12 வருஷம் ஒருவரிடம் நிலம் இருந்தால், அவன் கொடுக்கவேண்டிய பாக்கியிருந்தால் அதற்குரிய காம்பென்சேஷன் கொடுப்பதைப் பற்றி ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனால், இதை அவன் நிரூபித்துத்தான் ஆகவேண்டும் என்று சொல்லுவதில்தான் கஷ்டம் ஏற்படுகிறது. ஒரு நல்ல விவசாயியாக இருந்தால்கூட, அவன் வயலிலே இறங்க முடியாது, அவனுக்கு காலில் வாதம், அவன் வயலில் இறங்கினால் இறந்துவிடுவான் என்று அவன் தம்பியை விட்டே சாட்சி சொல்லிவைக்கக்கூடிய அளவுக்கு நிலைமை போய் விடுகிறது. அதற்காக டாக்டர் சர்டிபிகேட் கூட தாக்கல் செய்து விடுகிறார்கள். சமீபத்தில் நான் கேள்விப்பட்டேன். நாகப்பட்டிணத்தில் ஒரு மாஜிஸ்டிரேட் சரியாக இல்லை என்று எல்லோரும் சேர்ந்து அவரை பைத்தியக்காரர் என்று டெக்ளயர் செய்துவிட்டார்கள். அவர் கோர்ட்டுக்கு வரமுடியாமல் வெளியே அலைந்து கொண்டிருக்கிறார் என்று 5, 6 மாதங்களுக்கு முன்பு கேள்விப்பட்டேன். தண்ணீரில் இறங்கினால் செத்துவிடுவான் என்று டாக்டர் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டுவந்து தாக்கல் செய்யக்கூடிய திறமை கூட இருக்கிறது. இம்மாதிரி கோர்ட்டில் நிரூபிக்கிற அளவுக்கு நிலைமை போய்விடுகிறது. எதிர்பார்த்து கற்பனை செய்வது என்று இல்லாமல், அப்படியே நடந்த சம்பவம் போல் நன்றாக விவசாயம் தெரிந்தவர்களைக்கூட அவர்கள் நிலத்தில் சாகுபடி செய்யாதவர்கள் என்று இப்பொழுது கோர்ட்டில் தீர்ப்பு வாங்கிவிடுகிறார்கள். பாம்பை அடித்தால் ஒரே

அடியாக அடித்துவிடவேண்டும். அதை பாதி அடித்து விட்டுவிட்டால் விஷத்தன்மை அதிகமாகப் போய்விடும். உடம்பை அது நன்றாக பலமாக்கிக்கொண்டுவிடும். இன்னும் கட்சி வேறு பிரித்துக்கொண்டு, துணைசேர்த்துக்கொண்டு வந்துவிடும். இரண்டு, மூன்று தடவைகள் ஏமாந்துவிட்டோம். அடித்தால் ஒரே அடியாக அடித்துவிடவேண்டும். இல்லாவிட்டால் அது இண்டு இடுக்குகளில் புகுந்து விஷத்தை கொடுமையாக்கிக்கொண்டு, தேகத்தை பலப்படுத்திக்கொண்டு எந்த ரூபத்தில் வரும் என்று சொல்ல முடியாது. கட்சி ரூபத்திலோ அல்லது ஆசாமி ரூபத்திலோ துணை சேகரித்துக்கொண்டு வரும். சர்க்காருக்கு விரோதமாக பலப்படுத்திக்கொள்வதற்கு கொஞ்சம் கூட இடம் கொடுக்கக்கூடாது. இண்டு, இடுக்கு இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். விவசாயிக்கு டெபினஷன் கொடுப்பது சில சமயங்களில் விவசாயிக்கு பாதகமாக, விவசாயியின் நிலம் பறிபோகும் நிலைமையை, விவசாயி நிலத்தை இழக்கும் நிலைமையை ஏற்படுத்தி விடுகிறது. அம்மாதிரி நிலைமையை உண்டாக்கக்கூடாது. சில பேர்கள் நான் பேச எழுந்திருந்தால் பண்டார சன்னதிகளையும், மடாதிபதிகளையும் பற்றித்தான் பேசுகிறேன், தவறாக கடவுள் பேரில் கையை வைக்கிறேன் என்று தப்பாக நினைக்கிறார்கள். கடவுளிடம் பக்தி, பயம் இருக்கவேண்டியதுதான். ஆனால் தனிப்பட்ட மனிதர்களிடம் இந்த அதிகாரத்தைக் கொடுத்தால், ஒருவருடைய வாழ்க்கையை ஏற்றுவதற்கோ, அல்லது இறக்குவதற்கோ அவர்களிடம் சக்தி இருக்கக்கூடிய நிலைமையை வைத்துக்கொண்டிருந்தால், அது ஜனநாயக சர்க்காருக்கு பொருத்தமாக இருக்காது. அவர்கள் கடவுளைப்பற்றி சொந்த அபிப்பிராயம் எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அவர்கள் 1,000, 1,000 வருஷங்களாக தபசு செய்யட்டும், ஜபம் செய்யட்டும், பஜனை செய்யட்டும், யோகம் செய்யட்டும். அது தனிப்பட்ட மனிதர்கள் இஷ்டம் போல் மனதில் அபிப்பிராயம் வைத்துக்கொள்ளலாம். ஆனால், ஒருவருடைய வாழ்க்கையை ஏற்றுவதற்கோ, இறக்குவதற்கோ அவர்களிடம் அதிகாரம் இருக்கக்கூடாது. எண்ணெய் ஆட்டுகிற ஒரு வாணியனுக்குச் சொந்தமான நிலத்தை ரூ. 800-க்கு திருவாடுதுறை ஆதீனத்தில் வாங்கினார்கள். அதற்கு சமீபத்தில் இருக்கிற நிலத்தை ரூ. 3,500க்கு குமரகட்டளை தேவஸ்தானத்திற்கு தர்மபுரம் ஆதீனம் வாங்கினார்கள். ஒவ்வொரு ஊரிலும் தங்களுக்கு உரிமை இருக்கிறது என்பதை நிலைநாட்ட இப்படி நிலத்தை வாங்குகிறார்கள். திருவாடுதுறை ஆதீனம் வாங்கினால், தர்மபுரம் ஆதீனத்திற்கு மதிப்பு இல்லாமல் போய்விடும் என்று கருதி அவர்களும் வாங்குகிறார்கள். ரூ. 3,000 பெறுமான நிலம் இப்பொழுது பல 3,000 ரூபாய் மதிப்பு இருக்கும். சர்க்கார் கொண்டுவருகிற சட்டம் விவசாயிகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தாத நிலைக்கு இருக்கவேண்டும். மேலும் அவர்களுக்கு பாதகம் விளைவிக்கக்கூடாது. ஆளும் கட்சியின் அபேட்சகருக்கு எதிராக வேலை செய்யக்கூடிய நிலையில் அமையக்

கூடாது. திரு. மதியழகன், திரு. நெடுஞ்செழியன் அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்திலே ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியை தெரிவிக்கிறேன். அவர்கள் கட்சி காரியதரிசிகள் அங்கே வரிசையாக நிலம் வாங்கியிருக்கிறார்கள். அதெல்லாம் அவர்களுக்கு கூடிய சீக்கிரம் தெரியவரும். இப்பொழுதே தகராறு இருக்கிறது. எதிர்க்கட்சியில் இருப்பவர்கள்கூட நிலத்தை பெறக்கூடிய அளவுக்கு ஜனநாயக ரீதியிலே சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவர்கள் அதுபற்றி சமீபத்தில் கேள்விப்படுவார்கள் என்று நினைக்கிறேன், அவர்களுக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை.)

அம்மாதிரி முறையில் அவர்கள் கையில் அதிகாரத்தைக் கொடுத்து இந்த சட்டத்தை அமுல் நடத்தும் நிலைமை ஏற்படக்கூடாது. விவசாயிகள் ஏறும் ஏணியில் பழுக்கள் நன்றாக அமைக்கப்பட வேண்டும். பரமபத படத்தில் சிறு சிறு பாம்புகள் இருப்பது போல், பாம்புகளே இந்த சட்டத்தில் இருக்கக்கூடாது. இந்த சட்டத்தில் இண்டு, இடுக்குகள், ஓட்டை உடைசல்கள் இருக்கக் கூடாது.

நீதி மன்றத்தில் நீதி தேடிக்கொள்ளலாம் என்றால், என்னைப் பொறுத்த வரையிலே சில்லறை உள்ளவனுக்குத்தான் நீதி. ஸ்டாம்பு ஒட்டி, வக்கீல் வைத்து, வழக்கு மன்றத்தில் வழக்காடுவதற்கு ஏழை விவசாயிகளிடத்தில் ஏது சில்லறை? அதுவும் கையெழுத்துக்கூட போடத் தெரியாதவனுக்கு எங்கிருந்து நீதி பெற முடியும்? எந்தக் கட்சிக்காக பேசிக்கொண்டிருக்கிறார் வக்கீல் என்பது கூட அவனால் தெரிந்துகொள்ள முடியாது. இன்னும் 10, 20 வருஷங்களுக்கு சட்டசபை இருந்தால் எந்த வக்கீலும் வாங்கமுடியாத அளவுக்கு சட்ட புத்தகங்கள் சேர்ந்து விடும். அந்தச் சட்டத்தை இந்தச் சட்டம் இடிக்கும், இந்தச் சட்டத்தை அந்தச் சட்டம் இடிக்கும் என்று நினைப்போமானால், ஒரு காரியமும் நடக்காது. இப்பொழுது கொடுமையான வியாதிகளுக்கு எப்படி 'ஐ ஸ்பெஷலிஸ்ட்', 'நோஸ்' ஸ்பெஷலிஸ்ட், 'ஹார்ட்' ஸ்பெஷலிஸ்ட் என்று டாக்டர்கள் இருப்பது போல, வக்கீல்களிலும் எலக்ட்ரிசிடி சட்டத்திற்கு ஒருவர், குடிவாரச் சட்டத்திற்கு ஒருவர் என்று வக்கீல்கள் பிராஞ்சு பிராஞ்சாக இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சட்டம் மனிதனுக்கு சாதகமாக இருக்கிற நிலைமை போய், அவனுக்கு பாதகமாக இருக்கிற நிலைமைக்குத்தான் வந்துகொண்டிருக்கிறது. அதற்கு இது பாதுகாப்பாக இருக்கும், இதற்கு அது பாதுகாப்பாக இருக்கும் என்றெல்லாம் யோசனை செய்து நாம் இங்கே சட்டங்கள் இயற்றுகிறோம். ஆனால் எங்கள் பகுதியில் உள்ள ஒருவர் உற்சவ விக்கிரமாக இல்லாமல் மூல விக்கிரகமாக இருந்து இதற்கெல்லாம் என்னென்ன வியாக்கியானம் பண்ணலாம் என்பதை சொல்லிக் கொடுப்பார். இதை எல்லாம் பார்த்து, ஏணி

யிலுள்ள பழுவை பொருத்தமாக வைத்து, பாம்பினுடைய விஷத்தை எடுத்து, நம்முடைய காலத்திலே இந்த மகத்தான சட்டத்தை செய்திருக்கிறோம், குடிகளுக்கு ஒரு நல்ல காரியத்தை செய்திருக்கிறோம் என்ற நிலைமையை உண்டாக்க வேண்டும். சென்ற மூன்று ஐந்தாண்டு திட்டங்களிலும் விவசாய உற்பத்தி முன்னேறியதற்குக் காரணம், நிலத்திலுள்ள உரிமைகள் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு வருவதினால்தான். முதல் சட்டசபையில் இருந்தவர்களுக்குத் தெரியும், 1952-ல் நிலத்தை பணம் இல்லாமல் விவசாயிகள் கையில் ஒப்படைத்தால் எப்படி பயிர் விளையுமென்று பலர் நினைத்தார்கள். ஆனால் ஆறு, அல்லது எட்டு மாதத்திற்குள் பத்து அல்லது பன்னிரண்டு சதவிகிதம் அதிகமாக விளைந்தது. இந்த தேசத்தில் தானும் பற்றுதல் கொள்ளக்கூடிய சில இருக்கின்றன என்ற நிலைமை ஒவ்வொரு உழவனுக்கும் ஏற்பட வேண்டும். "சொத்து உரிமை இல்லாத தேசத்தில் தேச பக்தி ஏற்படாது . . ." என்று வெண்டல் வெல்கி சொல்லியிருக்கிறார். "எனக்கு நிலம் இருக்கிறது, எனக்கு வீடு இருக்கிறது", என்ற உணர்ச்சி ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் இருக்க வேண்டும். தேச பக்தியையும், தேச பாதுகாப்பையும் கருதிச் செய்ய வேண்டிய காரியம் இது. பல காரியங்களை நாம் தொடர்ந்து செய்து வந்திருக்கிறோம். ஆனால் எப்படிப்பட்ட காரியங்களைச் செய்தாலும், எதிராக உள்ளவர்கள் தங்களை பலப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒரு ஒருங்கிணைந்த சட்டத்தை கொண்டு வரப் போவதாகத் தெரிவித்தார்கள். அதைச் செய்கிறபொழுது, பூரணமாகச் செய்து, கச்சேரி போக முடியாத நிலையை உண்டாக்கினால்தான், விவசாயிகளுக்கு நீதி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இதைக் கொண்டு வந்த நமது சர்க்காருக்கு என்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி: ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார். கனம் அங்கத்தினர் சற்று முன்பு பேசியபொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த காரியதரிசி அவர்களும், இன்னும் சிலரும் நிலம் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஏதாவது ஆதாரத்தின் அடிப்படையில் சொல்லுகிறார்களா. அதை அவர்கள் நிரூபிக்க முடியுமா என்பதை தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் சபாநாயகர்: இது பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் இல்லை. இது ஒரு 'சாலஞ்'. அப்படி சாலஞ் பண்ணுவதற்கு இங்கே இடமில்லை. It connot be allowed.

* **திரு. சா. கணேசன்:** கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது சபை முன்னர் கொண்டுவரப் பெற்றிருக்கிற இருவார மசோதாவின் சாதக பாதகங்களை அழுத்தமாகப் பேசுவதை விட, மற்றவர்

களைப்பற்றித்தான் பல அன்பர்கள் மிக அழுத்தமாகப் பேசினார்கள், கனம் உதவி சபாநாயகர் அவர்கள் தலைமை ஏற்றிருந்த பொழுது. அதற்காக நான் வருத்தப்படவோ, சங்கோசப் படவோ, இல்லை. எங்களைப் பார்த்து கிண்டலும், கொஞ்சம் குத்தலும் கூடச் செய்தார்கள். இதற்கெல்லாம் மசிகின்றவர்கள் நாங்கள் அல்ல என்று அழுத்தமாகச் சொல்லுகிறேன். (சிரிப்பு) ஆண்டவனுக்குப் பொதுவாக எது நல்லது என்று கருதுகிறோமோ, அதைச் சொல்லுகிறோம். அதற்கு மேலே நான் போக இப்பொழுது விரும்பவில்லை. போனால் கொஞ்சம் நாசூக்காக நானும் பேசுவேன்.

இந்தச் சட்டத்திலே இருக்கிற சாதக பாதகங்களைப் பற்றி முதலிலே பேச நினைக்கிறேன். குறிப்பாக ரயத்து உடைமையாக ஆக்கத் தொடங்குகிறபொழுது, என்னுடைய இலட்சியம் எல்லாம்—என்னுடையது என்றால் எங்களுடையது என்றும் பொருள்—பெரிய பணக்காரர்களை, நிலச்சுவான்தார்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதே கிடையாது. உழவனை கண்ணியமாக வாழ வைக்க வேண்டும், அவன் மேலோங்க வேண்டும் என்பதில் நாங்கள் எவருக்கும் குறைந்தவர்கள் அல்ல, தாழ்ந்தவர்களும் அல்ல. இந்த நிலையிலே இனாம் நிலங்களை ரயத்து நிலங்களாக மாற்றுகிற பொழுது, எத்தனை ஆண்டுகள் என்று வரையறைகள் செய்யப்பட்டிருக்கின்றன, எவ்வளவு பணக்காரர்கள், உடைமைக் காரர்கள்—அவர்கள் மடாதிபதிகளாக இருந்தாலும் சரி, சாதாரண மனிதர்களாக இருந்தாலும் சரி, எனக்கு அக்கறை இல்லை—ஆகியோருக்கு உடைமையாக உள்ள நிலங்களை உழுபவனுக்கே சொந்தம் ஆக்குவதிலே எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் எல்லா மக்களுக்கும் பொதுவாக இருக்கிற தெய்வ ஸ்தாபனங்கள், இந்து மதமோ, முகமதிய மதமோ, கிருஸ்தவ மதமோ, அவற்றைச் சேர்ந்தவை, கல்விக் கூடங்கள் போன்ற ஸ்தாபனங்கள், ஆஸ்பத்திரிகளைப் போன்ற ஸ்தாபனங்கள், பொது நன்மைக்குரிய ஸ்தாபனங்கள், இவற்றிற்குரிய நிலங்களை, "அந்த ஆஸ்பத்திரி உழவில்லை, கோயிலில் இருக்கிற சுவாமி உழவில்லை, பள்ளிக் கூடத்திலே இருக்கிற ஹெட் மாஸ்டர் உழவில்லை, கல்லூரியிலே இருக்கிற பிரின்ஸிபால் உழவில்லை, யூனிவர்சிடியில் இருக்கிற வைஸ்-சான்ஸலர் உழவில்லை," என்று சொல்லி மாற்றி விடுவது தர்மம் அல்ல. அவ்வளவும் அவ்வளவு பேருக்கும் சொந்தம். அதற்காக யாரோ நாலு பேர் உழுகிறார்கள் என்றால், அவர்கள் உழவர்கள் என்ற காரணத்திற்காக மட்டும் உழவில்லை, உழத் தெரிந்தவர்கள் என்ற காரணத்தினாலேதான் உழுகிறார்கள். அதே போன்று ஆசிரியர்கள் கல்வி பயிற்றுவிக்க தெரிந்தவர்கள் என்ற காரணத்தினால் கல்வி பயிற்றுவிக்கிறார்கள், கல்வி பயிற்றுவிக்கிற ஜாதி என்று கூறி கல்வி பயிற்றுவிக்கவில்லை. இதை எல்லாம் ராக-துவேஷம், விருப்பு வெறுப்பு இல்லாமல் மனத்திலே கொள்ளல் வேண்டும். இதற்கெல்லாம் இந்திய சமுதாயத்திலே, அதிலும் சிறப்பாக எனக்குத் தெரிந்த தமிழர் சமுதாயத்திலே ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சான்றுகளைக் காண்கிறோம்; அவை எல்லாம் சமுதாய சொத்தாக இருந்தவை. எந்த சமுதாயச் சொத்தை எடுத்துக் கொண்டாலும், யார் யாருக்குத் திறமை இருக்கிறதோ, அவர்கள் அந்தந்தத் துறையை நிர்வகித்தார்கள். உழத் தெரிந்தவர்கள் நிலத்தை உழுகிறார்கள், கற்பிக்கத் தெரிந்தவர்கள் கற்பிக்கிறார்கள். பழங்காலத்தில் கோயில்தான் சர்வ கலாசாலையாக இருந்து விளங்கியது. நாட்டியம், பாட்டு, சமையல், சந்தனம் பூசுதல் முதலான ஆய கலைகள் 64-ஐயும் கொண்டிருந்த சர்வ கலாசாலை பழங்காலத்தில் கோயிலே. பல கலைகளையும் கற்பிக்கின்ற கோயில் பிரகாரங்களுக்குத்தான் கல்லூரி என்ற பெயர். அந்தக் காரணத்தால்தான் பலகலை பயிற்றுமிடத்திற்குக் கல்லூரி என்ற பெயர் ஏற்பட்டது. ஆயிரம் கோயில்களில் அக்கிரமங்கள் நடக்கலாம். ஆனால் அவற்றைத் திருத்த முயல வேண்டுமே தவிர, அவற்றை அழிக்க, ஒழிக்க, அல்லது தானாக அழிந்து விடக்கூடிய செயல்களை செய்ய, கூடாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு மேலே, சில இடங்களிலே 60 வருடங்கள் இருந்தால் போதும், அது கை மாறி விடும் என்ற நிலைமை இருக்கிறது. இதை முண்டுகிற இன்னொரு சட்டமும் இருக்கிறது. அது கோயில்களைப் பற்றிய சட்டம், அதாவது ஹிந்து எண்டௌமெண்ட்ஸ் ஆக்ட். நமக்குத் தெரியும், பல கோயில் சொத்துக்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து வருகின்றன. கனம் சகோதரர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள், ஏதோ ஜமீன்தார்கள் காலத்தில்தான் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும், ஜமீன்தார்கள் காலத்தில் கொடுக்கப்பட்ட தானங்கள் எல்லாம் ஜமீன் அபாலிஷன் சட்டத்திலேயே தொலைந்து போய் விட்டன. அதற்கு முந்தி இருப்பவை பல இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக் கூடாது. தேவதாயம், தர்மாசனம் என்று பல்வேறு பெயர்களிலே வரி இல்லாத நிலங்கள் பல இருக்கின்றன. அவை எல்லாம் பல்லவ, சோழ, பாண்டிய, சேரர் காலத்திலே—கி.மு. காலத்தில் இருந்து என்று கூடச் சொல்லலாம், ஆனால் அதற்கு ரிக்கார்டுகள் கிடையா. —கி.பி. 7-வது நூற்றாண்டிற்குப் பிறகு "Recorded evidence" கல்வெட்டுகளிலேயும் சின்னமனூர் செப்புப்பட்டயங்கள் போன்ற பட்டயங்களிலும் காணக்கூடும். அவற்றைப் பார்த்தால், பழங்கால மும்முடி வேந்தர்களால் கொடுக்கப்பட்ட நிலங்கள் அவை என்பது புலப்படும். இவற்றை எல்லாம் சட்டத்தைக்கொணர்ந்து சுலபமாக தகர்த்து விடுவதினாலேயே லாபம் ஒன்றுமில்லை. ஏதோ சில தனிப்பட்ட நபர்களுக்கு, அவர்கள் பொதுநலப் பிரதிநிதிகளா என்பதெல்லாம் தெரியமுடியாது—உழுதவர்கள் என்பதற்காக நிலத்தை சொந்தமாக்கிவிடுவது என்றால், கல்வி கற்பித்தவர் என்பதற்காக கல்வி ஸ்தாபனம் அவருக்குச் சொந்தம், வேலைக்காரர்களுக்கு ஓர்க்ஷாப் சொந்தம் என்று—அப்படி ஆகிவிட்டால் எனக்கு ஒரு நஷ்டமும் இல்லை—அது சாத்தியமா என்றுதான் பார்க்க வேண்டும். ஏதோ ஜமீந்தார் காலத்திலேதான் இப்படி கிராண்டுகளாகக் கொடுக்கப்பட்டன என்று கருதுவது சரி இல்லை. பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே கோவில்களிலும் மற்ற

ஸ்தாபனங்களிலும், பணி மானியங்கள் விடப்பட்டிருக்கின்றன, பலருக்கு. இன்றைக்கு மாதச் சம்பளத்திலே ஆட்களை வைத்துக் கொண்டிருப்பது போல, பழைய மன்னர்கள் காலத்தில் பரம்பரையை நியமித்தார்கள். பரம்பரை நியமனத்தைப் பற்றி இன்றைக்குப் பலருக்கு கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் எனக்கு அதுபற்றி உறுதியான அபிப்பிராயமுண்டு. அப்படி ஏற்படுத்தப்படவில்லை என்றால், நான்கு வேதங்களும் வாயாலே ஓதி பரம்பரையாக இன்றுவரை வந்து இருக்காது. தமிழிலும், எழுதாக்கிளவி என்றே நான்மறைக்குப் பெயர். அப்படியே பரம்பரையாக எவ்வளவோ வந்திருக்கின்றன. அப்படி இல்லை என்றால், இன்றைக்கு பரத நாட்டியம், நாதசுரம் இவை எல்லாம் என்ன ஆகி இருக்கும்? அவற்றைப் புதிதாக படித்து இன்றைக்கு நாம் நிபுணர்களாக ஆகிவிட முடியுமா? தமிழ் நாட்டில், பல கலைகள் காப்பாற்றப்பட்டு வந்து இருக்கின்றன. கட்டட, கோபுர ஸ்தபதிகளை வைத்து இருந்திருக்கிறோம். எங்கள் பக்கத்தில் தச்சன் மானியம் முதலியவை உண்டு. ஊருக்கே அல்லது ஒரு சாலைக்கே அந்த மாதிரிப் பெயர்கள் உண்டு. பின்னால் வந்தவர்கள் ஏதாவது தகிடுதத்தங்கள் செய்து இருக்கலாம். ஒரு "X" ட்ரஸ்டியாக இருந்தபோது, நிலத்தை ஒரு சுப்பனுக்கு விற்கிறார்; அவன் ஒரு கருப்பனுக்கு விற்கிறான். இப்படியே 10, 20, 50 கைகள் மாறி இருக்கலாம். அது சம்பந்தமாக கோர்ட்டிலே சென்று அந்த நிலத்தைக் கோவிலுக்கே திரும்பப் பெற எண்டோமெண்ட் சட்டத்திலே விதி இருக்கிறது, என்று சட்ட நிபுணர்கள் சொல்லுகிறார்கள்; அது சாத்தியம் என்று சொல்லுகிறார்கள். சில கோவில்களில் இது பற்றி சாசனங்கள் கூட இருக்கலாம். இதை எல்லாம் நாம் மனத்தில் கொள்ள வேண்டும். இவற்றை எல்லாம் ஒரு தனிப்பட்ட நிலைமை என்று கொள்ளாமல், இவை எஜுகேஷனல் அல்லது கம்யூனலோ அல்லது பப்ளிக்கோ, ரிலிஜியஸ் சாரிடீஸ் என்று கொண்டு, இவற்றிற்கெல்லாம், தக்க விதிவிலக்கு செய்வதோடு, பாதுகாப்பும் செய்யப்படவேண்டும் என்பது ஆட்சியின் கடமை, அரசின் கடமை என்பதை வலியுறுத்திச் சொல்ல நான் விரும்புகிறேன்.

ஊழிய மானியம் பற்றிச் சொல்லும்போது, மானியக்காரர் கோவிலுக்கோ அல்லது ஸ்தாபனத்திற்கோ 20 மடங்கு கொடுத்து விட்டால் நிலம் அவனுக்குச் சொந்தமாகி விடும் என்றும், அல்லது அவன் தொடர்ந்து ஊழியம் செய்ய விரும்பினால் அதையும் செய்யலாம் என்றும் அமைச்சரவர்கள் தமது உரையில் சொன்னார்கள். அதைக் கூட நன்றாக யோசித்துச் செய்ய வேண்டும். முடிந்தவன் செய்யட்டும். முடியாதவன் கஷ்டப்பட வேண்டியது இல்லை. ஆனால், அப்படிப் பட்டவனுக்கு ஸ்தாபனமே 20 பங்கு கொடுத்து விட்டு, சர்வீஸ் மானியத்தைப் பெறலாம் என்று செய்வது நியாயமாக இருக்கும், அவர்களுக்கும் சிறப்பாக இருக்கும் என்பது என் எண்ணம்.

அதற்கு மேலே, சில நிலங்கள் ராணுவ சேவைக்காகக் கொடுக்கப்பட்டவை. இப்பொழுது ராணுவ சேவைக்குக் கொடுக்கப்படும் நிலத்திற்கு ஊறு கிடையாது, ஆபத்தில்லை. ஆனால், பழைய காலத்திலே மன்னர்கள் ராணுவ சேவைக்கு மானியங்கள் கொடுத்தார்கள் என்றால், ஒரே சேவைக்கு இருவேறு தன்மைகள் ஏற்படும் நிலைமை உண்டாக்குவது நியாயமா என்று சிந்திக்க வேண்டும்.

அதற்கு மேலே, ஜமீந்தார்கள் காலத்திலேதான் அவ்வளவும் கொடுக்கப்பட்டன என்று கணக்குப் போடுவது சரி அல்ல. சில தருமங்கள் ஜமீந்தார்கள் என்ற ஒரு ஜாதி ஏற்படக்கூடும் என்று கனவு கூடக் கண்டிருக்கமுடியாதவை. பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டு விட்ட நிலைகளை நன்றாக உணரவேண்டும். அதை மனத்தில் கொள்ள வேண்டும். பேசும் போது கனம் உறுப்பினர் திரு. சுவாமிநாதன் சொன்னார்கள்; ஏதோ தாங்கள்தான் கிசான்களுக்காகப் பாடுபடுகிறவர்கள் என்றும், எங்களைத் தூச்சமாக கொஞ்சம் கண்டிக்கும் வகையில் சொன்னாரே, அதை உண்மையல்ல என்று மறுக்கிறேன். எனவே பதில் சொல்லாமல் இருக்க முடியவில்லை. எந்த கிசான் சபையில் அவர்கள் ஊழியராகப் பணியாற்றினாரோ, அதன் தலைவர்தான் இன்றும் எங்கள் தலைவர் என்பதை மறந்து விடப்படாது. அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொள்வதில் துவேஷம் காட்டுவது தருமம் இல்லை, நியாயம் இல்லை. ஒருவர் அவருடைய ஆத்ம திருப்திக்காக, இருதய பூர்வமல்லாதவற்றை அப்படிப் பேசுகிறார் என்றால், மற்றவர்களுக்கும் அப்படிப் பேச முடியாது என்பது அல்ல. இருதயபூர்வமாகச் சொல்லும் அபிப்பிராயங்கள் சரி என்றால் ஏற்றுக் கொள்ளலாம், சரி இல்லை என்றால் விட்டு விடலாம். ஆனால், இங்கே நாம் மெஜாரிடி, மைனாரிடி என்ற வகையில் செய்கிறோம். தனிப்பட்டவருடைய சரி, தப்பு என்ற அபிப்பிராயத்திற்கு இடம் இல்லை. நாங்கள் சொல்வதை ஒப்புக் கொள்ளமாட்டேன் என்று சொல்வது ஒருபுறம் இருக்க, "அவர்கள் அதைச் சொல்லுவார்கள், இதைச் சொல்லுவார்கள்" என்று சொல்லுவது எனக்குப் புரிகிறதே இல்லை. ஆட்சி பீடத்திலே இருப்பவர்களைச் சேர்ந்தவர்கள் அம்மாதிரிச் சுட்டிக் காட்டிக்கொண்டே இருப்பது சரியல்ல, ஆட்சி பீடத்தில் உள்ளவர்களின் செயலை விமர்சனம் செய்வதும், கண்டனம் செய்வதும், திருந்த வேண்டும் என்று கூறுவதும் எங்கள் உரிமை. திருந்திக்கொள்வதோ, அல்லது தாங்கள் செய்வதுதான் சரி என்று நிலைநாட்டுவதோ அரசாங்கத்தின் கடமை. அது மறப்பதும், துறப்பதும் ஜனநாயகம் அல்ல. ஜமீன் நிலத்தில் யார் யாரோ செய்ததைப் பற்றி கதைப் பிரசங்கம் போல் சொன்னார்கள். இவர்களும் அவர்களும் எத்தனையோ காரியங்கள் பண்ணினார்கள். அதெல்லாம் இங்கே வருமா? வரலாமா? அதற்கெல்லாம் போக வேண்டாம்.

சில இடங்களிலே, விவசாயிகள் தவிர, இந்த இனாம்தார்கள் இருக்கிறார்களே, அவர்களில் பலர் பரம ஏழைகளாக இருக்கிறார்கள். ஐந்து ஏக்கர் அல்லது ஆறு ஏக்கர் வைத்துக்கொண்டு பரம தரித்திரர்களாக இருக்கிறார்கள். இந்த இனாம்களையே ......

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது பற்றிச் சொல்ல வேண்டும். விளக்க வேண்டும். அது பற்றி பின்னல் "மைனர் இனும்" மசோதாவில் வருகிறது. யார் குடிவாரம் வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்குப் பட்டா கொடுப்பதாக இருக்கிறது. அது சர்வீஸ் மானியமோ, அது மிலிடரி மானியமோ எதுவாக இருந்தாலும், அப்படிப்பட்டவர்களுக்கும் பட்டா கிடைக்கும்.

திரு. சா. கணேசன் : உழுதவருடைய உரிமையை யாரும் மறுக்கவில்லை; உடைமையையும் மறுக்கவில்லை. இதையெல்லாம் இப்பொழுது இருக்கும் சட்டப்படி வரையறைப்பது என்று சொல்லும்போது, பின்னல் அவை எவ்வளவுக்கு மாற்றப்படப் போகிறது என்பதையும் மறந்து விடப்படாது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் 17-வது திருத்தம் வந்த பிறகு இந்த சட்டத்தினுடைய அமைப்பு இப்படியே இருக்குமா அல்லது மாறுமா என்பது எல்லாம் யோசிக்கப்படவேண்டிய ஒன்று. கனம் உறுப்பினர் திரு. நாராயணசாமி நாயுடு குறிப்பிட்டார்கள், வெண்டல் வில்கி எழுத்திலிருந்து ஒரு மேற்கோளைக் காட்டி சொத்து உரிமை இருந்தால்தான், தேச பக்தி ஏற்படும் என்று. அதைத்தான் நாங்கள் சொல்லுகிறோம்; சோஷலிஸ்டிக் பாட்டர்னுக்குள்ளே இந்தக் கருத்தை அடைக்க முடியாது. முயலலாம். ஆனல், அடங்காது என்பது எங்கள் வாதம். எல்லாருக்கும் உடைமை இருக்க வேண்டும். உடைமை இருந்தால்தான் உரிமை உணர்வு ஏற்படும். உரிமை உணர்வு தோன்றினல்தான், கடமை உணர்ச்சி அரும்பும். நாடு வளரும். அதற்காகத்தான் அவ்வளவு அழுத்தமாகச் சொல்லுகிறேன், கடமை வேண்டும் என்ருல் உரிமை வேண்டும். உடைமை, உரிமை இருந்தால்தான் எல்லாரும் பாடு படமுடியும், பலனை அனுபவிக்க முடியும். தொழிற் கூடங்களில்கூட, பாடுபடுகிறவர்களுக்கு, ஷேர்-ஹோல்டர்கள் போல, சம்பளம் வாங்குவதோடு, முதலுக்கு வட்டியும் வாங்குவது போல சம்பளத்திற்கும் மேல் நியாயமான அளவு லாபப்பிரிவினை—பிராபிட் ஷேரிங்—தரவேண்

12-30 p.m. டும் என்று வற்புறுத்தி வருகிறோம். ஆகவே, இதையெல்லாம் மனத்திலே வைத்துக்கொண்டு நலமான, நன்மையான காரியங்களுக்கு இடையூறு வராமல் பாதகம் இல்லாத நிலையிலே, யார் யாருக்கு என்னென்ன சாதகம் செய்தாலும் என்றும் நாங்கள் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதோடு நான் அமர்கிறேன், வணக்கம்.

திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இரு வார இனும் ஒழிப்புச் சட்டத்தை மனதார எங்கள் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். எவ்வளவு புரட்சிகரமான கருத்துக்களை இந்தக் கட்சி கொண்டிருக்கிறது என்பதற்குப் படிப்படியாக இந்த ஒழிப்புச் சட்டங்களைப் பார்த்தால் மக்கள் புரிந்து கொள்வார்கள். அதே நிலையில் இரு வாரத்தையும் ஜமீன் ஒழிப்பில் கொண்டு வராததற்குக் காரணம், அதிலே பல சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினுல், தனியாக அதற்கென்று நல்லதொரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று இப்போது

தனியாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே சமயத்தில் இந்த மசோதாவைப் படிக்கும்போது பொறுக்குக் கமிட்டி எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்று பார்க்கிறோம். அதிக அளவு அக்கறை எடுத்து, குறிப்பாக பழைய நீதிபதி திரு. ராஜமன்னர் அவர்கள் போன்ற சட்ட நிபுணர்கள் அதிக அளவு அக்கறை செலுத்தி எவ்வளவு சீர்திருத்தமான முறையில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீர்திருத்தமான முறையில் கொண்டுவர வேண்டும் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த மசோதாவிலே குறிப்பாக தவறுகளைக் காண்பது அவ்வளவு எளிதல்ல. குறிப்பாக இந்த மசோதாவில் கோடிட்ட இடங்களைப் பார்த்தால் பொறுக்குக் கமிட்டி எத்தனை மாறுதல்களை ஏற்றிருக்கிறார்கள் என்று தெரியும். ஆனல் எனக்கு ஒரு சிறு வருத்தம். பெரிய மசோதாவைக் கொடுத்து 48 மணி நேரம் கூடக் கொடுக்காமல் இப்போது சட்ட சபையின் முன்பு கொண்டு வந்து விட்டார்களே என்பதுதான். இன்னும் சில நாட்கள் கொடுத்திருந்தால் கருத்துக்களை நன்ருகப் புரிந்துகொள்ளலாம். எவ்வளவு வேகமாகப் படித்தாலும் பாதிப் புத்தகத்தைத் தாண்ட முடிகிறதே தவிர முழுப் புத்தகத்தையும் படிக்க முடியவில்லை. இன்னும் காலம் அதிகமாகக் கொடுத்து, அல்லது ஒரு வாரத்திற்கு முன்னலேயே கொடுத்து, படித்து விட்டுப் பின்னர் யோசனை கூறுங்கள் என்று கூறியிருந்தால் உண்மையிலேயே சட்ட சபை முக்கியமான சட்டத்திற்குப் பொருத்தமான கவனத்தைக் கொடுத்திருக்கிறது என்று கூறலாம். இவ்வளவு சீக்கிரமாக, 14-ம் தேதி மேஜையில் வைத்து, 16-ம் தேதி பேசுங்கள் என்று சொன்னல், அதுவும் 15-ம் தேதி முக்கியமான நாள், எங்களுக்கெல்லாம் நேரமே இல்லாத நாள், ஆகவே இதைப் பற்றி நன்ருகப் படித்து யோசனை கூறுவதற்கு நேரமே இல்லாது இருக்கிறது என்று மிகவும் தாழ்மையோடு சொல்லிக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : அப்படியானல் கனம் அங்கத்தினர் நாளை காலையில் பேசியிருக்கலாமே?

திருமதி டி. என். அனந்தநாயகி : 16-க்கும் 17-க்கும் ஒன்றும் அதிக வித்தியாசம் இல்லை. அதோடு நாளைய தினம் க்ளாஸ் பை க்ளாஸ் டிஸ்கஷன்தான் நடக்கப்போகிறது. இன்னும் நேரம் அதிகமாகக் கொடுத்திருந்தால் கவனம் அதிகரித்திருக்கலாம். நான் இதைப் பற்றி குறை கூற வேண்டுமென்று சொல்லவில்லை. இந்த மாதிரி சங்கடங்களை பல அங்கத்தினர்கள் அடிக்கடி சொல்லி வருவதால் இந்தச் சட்டத்தின் மீது நடக்கும் விவாதத்தின் மூலமாகத் தெரிவிக்கலாம் என்ற காரணத்தினல்தான் இதைச் சொல்லுகிறேன்.

குறிப்பாக இந்த மசோதாவிலே பல முக்கியமான ஷரத்துக்களைப் பார்க்கும்போது 9-வது க்ளாஸிலே '1950-ம் ஆண்டு, [illegible] -ம் தேதி' என்று ஒரு சிலவற்றுக்கு வைத்திருக்கிறார்கள்.

ப்ரைவேட் லாண்ட் இனும்தாருக்கா என்று நிர்ணயிப்பதில் '1950-ம் ஆண்டு, ஜுலை மாதம் 1-ம் தேதி' என்று வைத்திருக்கிறார்கள். சப்-க்ளாஸ் (பி)-யிலே '1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி' என்று போட்டிருக்கிறார்கள். அதே க்ளாஸிலே வேறு ஒரு இடத்தில் '1955-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 27-ம் தேதி' என்று போட்டிருக்கிறார்கள். க்ளாஸ் 11-ல் பார்த்தால் '1955-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 26-ம் தேதி' என்று போட்டிருக்கிறது. இப்படி பல பல தேதிகளைப் பல பல கட்டங்களில் போட்டிருப்பதன் முக்கியத்துவம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. அதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். பல தேதிகளைப் போட்டு குழப்பமான நிலையில் அனுபவிக்கின்றவர்களை வைப்பது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். பல டேட்டுகளைப் போட்டுக் குழப்புவதால் வக்கீல்களுக்கே ஒரே குழப்பமாக இருக்கிறது என்றால் விவசாயிகள் எவ்வளவு கஷ்டப்படுவார்களோ? ஒவ்வொரு தேதிக்கும் முக்கியத்துவம் ஏதாவது இருக்கலாம். அது என்ன என்று எனக்குப் புரியவில்லை. அதே சமயத்தில் ஹிந்து ரெலிஜியஸ் எண்டௌமெண்ட்ஸ் ஆக்ட்டில் செக்ஷன் 9-ல் 1955-க்கு முன்னாலோ என்னவோ, 1948-க்கு முன் ஒரு டேட் கொடுக்கிறார்கள். அந்த டேட்டுக்கும் இதற்கும் ஒத்துப்போகுமா என்று புரியவில்லை. இது பல சட்டங்களோடு தொடர்பு கொண்டிருப்பதால், இவ்வளவு தேதிகளைப் போட்டுக் குழப்புவது அவசியமா என்று பார்க்கவேண்டும். முடிந்தால் குறைக்க முடியுமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது போன்று, சர்விஸ் இனும்ஸ் என்று பார்க்கும்போது அக்கறையோடு கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன் பேசிய கனம் சுதந்திரா கட்சி அங்கத்தினர் தெளிவாகக் கூறினார். அந்த அளவுக்கு நான் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், ஓரளவு சொல்லுகிறேன். சர்விஸ் என்றால் கோவிலைச் சேர்ந்ததாக மட்டும் இருக்கவேண்டுமென்பது இல்லை. குறிப்பாக தஞ்சையில் செங்கிப்பட்டி ஸானிடோரியம் இருக்கிறது. அதற்கு நிலங்கள் இருக்கின்றன. பொது மக்களால் ஏற்படுத்தப்பட்ட கல்வி ஸ்தாபனங்களுக்கு இனும்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மகாராஜாக்களும், ஜமீன்தார்களும் பல தவறுகள் செய்தாலும் அவர்கள் நல்ல பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. ஏதாவது ஜமீன்தாரிடமிருந்து இனும் வாங்காத கோவில்களை நாம் பார்க்க முடியாது. பல பேர்கள் நல்ல எண்ணத்தோடு கொடுத்தார்கள். அவைகளை அமல் நடத்துவதில் அக்கிரமங்கள் மலிந்திருக்கலாம்.

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : இந்தச் சட்டத்தில் இதெல்லாம் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டினால் தேவலை.

திருமதி டி. என். அனந்தநாயகி : இப்படிப் பல சர்விஸ்களுக்குக் கொடுத்திருக்கும்போது அதை அமல் நடத்துவதில் தகராறு இருக்கலாம், தவறு இருக்கலாம் என்ற காரணத்தினால் இப்படிப்

பட்ட சட்டங்களைக் கொண்டுவந்து ஒழுங்கு படுத்த முன் வருகிறோம். அப்படி வரும்போது, க்ளாஸ் 33-ல் பார்க்கும்போது சர்விஸ் இனும்களுக்கு ஒரு டாஸ்டிக் அலவன்ஸ் அரசாங்கமே பார்த்துக் கொடுக்கலாம் என்று யோசிக்கிறார்கள். அது வரவேற்கத்தகுந்ததுதான். நாம் ஆளுங் கட்சியில் இருக்கும் வரையில் கொடுப்போம். வேறு கட்சி, நம்பிக்கையில்லாத கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் டாஸ்டிக் அலவன்ஸ் கொடுப்பார்களா என்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். சர்விஸ்களோடு இணைக்கப்பட்ட இனும்கள் என்றைக்குமே வேலையைச் செய்யக் கூடிய முறையில், பாதிக்கப்படாத அளவில் பாதுகாப்பது அவசியமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசியம். முற்போக்கான கருத்துக்கு முரணாகச் சொல்லுவதாகக் கருதக் கூடாது. முற்போக்குக் காரணமாகவும் தவறு ஏற்படலாம். பிற்போக்குக் கருத்துக்கள் காரணமாகவும் தவறுகள் ஏற்படலாம். ஒரே முற்போக்காக, இது நிறுத்தப்படவேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தால் நிலைமை என்ன ஆகும்? ஆகையால் அற நிலையங்கள், தர்ம ஸ்தாபனங்கள் ஆகியவைகளுக்கு எப்படியும் உரிமை இருப்பது அவசியம்தானா என்று கனம் அமைச்சர் அவர்கள் பொறுமையோடு சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நஷ்ட ஈட்டுக்கு வரும்போது 6 ஸ்லாப்ஸ் போட்டிருக்கிறார்கள். ரூ. 1,000-க்கு ஒன்று, ரூ. 1,000-லிருந்து ரூ. 3,000 வரை, ரூ. 3,000-லிருந்து ரூ. 20,000 வரை என்று இப்படியாக 6 ஸ்லாப்ஸ் போட்டு அதிலும் கூட ஒரு உச்சவரம்பு வைத்திருக்கிறார்கள். இவ்வளவு ஸ்லாப்ஸ் அவசியமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். எப்படியும் நமது அரசியல் சட்டத்தின்கீழ் நஷ்டஈடு கொடுக்கக் கடமைபட்டிருக்கிறோம். ஏறக்குறைய நியாயமாக இருக்கிறோம் என்று ஒத்துக்கொள்கிறோம். 17½, 15, 12½ என்று குறைத்துக் கொண்டு வரவேண்டுமா, குறைந்த அளவில் 2-3 ஸ்லாப் வைத்து அல்லது 3-4 உச்ச கட்டங்களோடு வைத்துக்கொள்வது நல்லது இல்லையா: இத்தனை கட்டங்களை ஏற்படுத்தி இதன் மூலமாகவும் குழப்பத்தைக் கொண்டுவருகிற சூழ்நிலை இருக்குமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நமது தொழில் அமைச்சர் அவர்கள் பெரிய நிபுணர். அவர்களுக்கு நாம் எடுத்துச்சொல்லி தெரியவேண்டியதில்லை. நஷ்ட ஈடு கொடுப்பதில் இத்தனை அடுக்குகளையும் ஏற்படுத்தியிருப்பது "ரீஸனபிள் ரெஸ்ட்ரிக்ஷன்" என்று சொன்னாலும் பின்னால் ஏதாவது கோளாறுகளை ஏற்படுத்திவிடக்கூடாது என்ற காரணத்தினால் தான் இதைப்பற்றி சற்று சிந்தித்துப்பார்த்து அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த சட்டத்தை அமல் நடத்துவதற்கு டைரக்டர் ஆப் செட்டில்மென்ட் ஆபீஸ் ஏற்படுத்தலாம் என்று சொல்லப்பட்டது. ஏற்கனவே ஜமீன் ஒழிப்புக்கு ஒரு இலாகாவை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த இலாகாவினர் சர்வே செய்து முடித்துவிட்டார்

கள் என்று நம்புகிறேன். இவர்களைக்கொண்டே இந்தச் சட்டத்தை அமல் நடத்தினால் நன்றாக இருக்கும். இதன் மூலமாக செலவையும் குறைக்கலாம்.

கடைசியாக, இனாம்தார்களுக்கு பட்டா கொடுக்கும் விஷயத்தில் கனம் ஆர். வி. சாமிநாதன் அவர்கள் சொன்ன கருத்தை நானும் கூற விரும்புகிறேன். 12 ஆண்டுகளில் ஏதாவது மூன்று ஆண்டுகள் உழுதிருந்தால் பட்டா கொடுத்து விடலாம் என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. குறைந்தது 12 ஆண்டுகளாவது அதில் உரிமை இருக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கவேண்டும். (குறுக்கீடு) நிலமே, தனிப்பட்ட உரிமையுள்ளதா இல்லையா என்பதை நிரூபிக்க வேண்டும். ஈஸ்மென்ட் உரிமையை மட்டும் எடுத்துக்கொள்வதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. நாம் "ரைட்டி லான்ட்" என்ற அடிப்படையிலேதான் சட்டங்களை போட்டிருக்கிறோம். பிரைவேட் லான்ட் என்று ப்ரூவ் பண்ணுவதே நிலச் சொந்தக்காரர்களிடம் விடப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் ஆலோசித்துப் பார்த்து, குறைந்தது 12 ஆண்டுகளாவது உரிமை இருக்கவேண்டும் என்று இருப்பது நியாயமாக இருக்கும், முற்போக்கான கருத்தாக இருக்கும், வரவேற்கக்கூடிய கருத்தாக இருக்கும் என்பதைக் கூறி என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இனாம் மசோதாக்கள் சம்பந்தமாக கழிந்த 10, 15 ஆண்டுகளாக சர்க்கார் பல தடவைகளில் பல மசோதாக்களை கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. இன்றைக்கு சாத்தியப்படக் கூடிய அளவிற்கு சிறப்பான முறையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன். இதில் இருக்கின்ற சிக்கல்களைப்பார்க்கும்போது, சர்க்காரைப் பொறுத்தவரையில், உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய அளவுக்கு இது அமைந்திருக்கிறது என்ற அளவில் நான் இதை முழுமனதோடு ஆதரிக்கவிரும்புகிறேன். இன்றுள்ள நிலையில் உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்கின்ற கருத்தை ஆட்சேபிக்கின்ற முறையில் எந்தவிதமான திருத்தங்கள் வந்தாலும், அவைகள் எல்லாம் காலத்திற்கு ஒவ்வாதது என்பதை யாரும் சொல்ல முடியும். இதற்கென்று ஆதாரமாக ஆய கலைகள் அறுபத்திநான்கையும் சொல்வதும், இக்காலத்தில் அவைகள் எல்லாம் அழிந்துவிடும் என்று சொல்வதும் இந்தக் காலத்தில் எந்தவிதமான பயனையும் தராது. நாட்டில் சமூக அமைப்புகள் எவ்விதம் மாறுகின்றனவோ, அதற்குத் தகுந்தபடி கலைகளும் மற்றவைகளும் மாறித்தான் தீரவேண்டும். அதற்கான முறையில் பிற துறைகளும் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். சமூக அமைப்புக்கள் மாறுகிற அளவுக்கு உலகத்திலுள்ள கலையும், நாகரீகமும், மனிதனுடைய பண்பாடும் மாறித்தான் ஆக வேண்டும். மனிதனுடைய வாழ்வுதான் முக்கியம். அதற்கெல்லாம் அடுத்ததுதான் பிற காரியங்கள். அந்த அடிப்படையில் சர்க்கார்

கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதா நல்லதொரு அமைப்பை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன். பொதுவாக இந்த மசோதாவைப்பற்றி அதிகமாக எனக்குத் தெரியாது என்பதை வெளிப்படையாக சொல்லிக்கொள்கிறேன். காரணம், கழிந்த பத்தாண்டு காலமாக இந்த இனாம்தார்கள், ஜமீன்தார்கள் பிரச்னைபற்றி யாரிடத்தில் கேட்டாலும், ஒருவரும் தெளிவான கருத்தை தெரிவிப்பதில்லை, அதற்குப் பதில் பல்வேறு குழப்பமான கருத்துக்களைத் தான் தெரிவித்திருக்கிறார்கள். இன்ன முறையில் இருந்தால் பிரச்னையை தீர்த்துவிடலாம் என்று சொல்வதை நான் பார்த்ததில்லை. இந்த நிலையில் சர்க்கார் இப்போது கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவின் மூலம் உழக்கூடிய விவசாயிகளுக்கு நிலம் சொந்தமாக சாத்தியக்கூறுகள் இருப்பதால், இதை பரிபூரணமாக ஆதரிக்கின்ற நிலையில் இருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் கலையின் பெயராலோ அல்லது வேறு ஏதன் பெயராலோ இத்தகைய ஒரு மசோதாவை எதிர்ப்பது நியாயமாக இராது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலேயே இத்தகைய ஒரு மசோதா வருகிறது என்பதை அறிந்து இது சம்பந்தப்பட்ட விவசாயிகள் மிக்க மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இதை பரிபூரணமாக வரவேற்கிறார்கள் என்பதை சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவை ஆதரித்து, வரவேற்று என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, இருவாரம், இனாம் ஒழிப்பு மசோதா கனம் தொழில் அமைச்சர் அவர்களால், இந்த மன்றத்தின் முன்னால் ஆய்வுக்காக வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த மசோதாவை ஆதரித்து எங்கள் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்களை ஆதரிக்கின்ற வகையில் நானும் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த இருவாரம் இனாம் ஒழிப்பு மசோதா பல ஆண்டுகளுக்கு முன்பே வரவேண்டியது, இவ்வளவு காலத்திற்கு பின்பாவது கொண்டு வரப்பட்டிருக்கிறதே என்றுதான் இப்போது மகிழ்ச்சியடைய வேண்டியிருக்கிறது. அந்த முறையில் இந்த மசோதாவைக் கொண்டு வந்ததற்காக ஆளும் கட்சியினரைப் பாராட்டவும் போற்றவும் ஆசைப்படுகின்றோம். ஆளும் கட்சியால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த இருவாரம் இனாம் ஒழிப்பு மசோதாவை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்லுகின்ற நேரத்தில், ஆளும்கட்சியினர் எப்போதும் சொல்வது போல், திராவிட முன்னேற்றக் கழகத்தார் எப்போதும் ஆளும் கட்சியினுடைய கோரிக்கைகளை எதிர்க்கிறார்கள் என்ற கருத்து சரியல்ல என்பது தெளிவாக விளங்கும். ஆளுங்கட்சியினரின் மசோதாக்களில் எதை எதிர்க்கவேண்டுமோ, அதைக் கழகத்தார் எதிர்ப்பார்கள், எதை ஆதரிக்கவேண்டுமோ, அதை ஆதரிப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும், ஆளும் கட்சியினர் கொண்டு வருகின்றார்கள் என்ற காரணத்திற்காக அதைக் கழகத்தார் எதிர்த்துவிடுவதுமில்லை என்கின்ற கருத்தை எடுத்துக்காட்டவும் இது பயன்படும். கழகத்திற்கு ஒட்டிய கருத்துக்கள் [illegible]

மசோதாவில் இருக்கின்ற காரணத்தினால், கழகம் இதை ஆதரிக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஜமீன் ஒழிப்பு ஏற்படவேண்டும், இனாம் ஒழிப்பு ஏற்படவேண்டும், ஜமீன் ஆதிக்கம், இனாம் ஆதிக்கம் ஒழிந்தால்தான் குடிமக்கள் நல்ல முறையில் வாழ முடியும் என்கின்ற கருத்தை நாட்டில் பரப்பி, அதற்கான கிளர்ச்சிகளை நடத்தியது காங்கிரஸ்கட்சிதான் என்பதை நான் மறுக்கவில்லை. அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தான் முதன் முதலில் இந்த கிளர்ச்சியை ஆரம்பித்தது என்று கூறவும் முன் வரவில்லை. ஆனால் இதற்கான கிளர்ச்சியை நடத்தியது காங்கிரஸ் கட்சி என்றாலும், வேறு பல கருத்துக்களிலும் காங்கிரஸ் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வேறுபாடுகள் இருக்கின்றன என்றாலும் ஜமீன் ஆதிக்க ஒழிப்பு, இனாம் ஆதிக்க ஒழிப்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையிலும் கழகம் தன்னுடைய ஆதரவை எப்போதும் தந்துவந்திருக்கின்றது. ஜமீன் ஒழிப்புக்காக மசோதா கொண்டு வந்த காலத்தில், இனாம் ஒழிப்புக்கும் வழிவகை செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி எடுத்துக்கூறிப் பல கூட்டங்கள் நடைபெற்றபொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தார் தங்களுடைய முழு ஆதரவையும் தந்திருக்கிறார்கள். அன்றைக்கு அமைச்சராக இருந்த திரு. காளா வெங்கட்ராவ் அவர்கள் ஜமீன் ஒழிப்பை கொண்டு வந்த நேரத்தில் அதை ஆதரிக்கின்ற வகையில், அன்றையதினம் திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் முழு மனதோடு ஆதரவைத் தந்து, இனாம் ஒழிப்புக்கும் மசோதா கொண்டு வர வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். அவ்விதம் எடுத்துக்கூறி 15 ஆண்டுகள் ஆனபின்னால் இப்போது இனாம் ஒழிப்பு வந்திருக்கிறது. அப்போதே இம்மாதிரியான மசோதாக்கள் கொண்டுவரப்படவேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வந்திருக்கின்றன. முன்னால் பேசிய கனம் உறுப்பினர் ஆர். வி. சாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதை போல், அப்போது இனாம் ஒழிப்புக்காக மசோதா கொண்டு வரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்ட நேரத்தில், அப்போது அமைச்சராக இருந்த திரு. காளா வெங்கட்ராவ் அவர்கள் "கூடிய விரைவில் கொண்டுவரப்படும்" என்று கூறினார். இப்போது அந்த "கூடிய விரைவில்" என்பது 15 ஆண்டு காலமாக ஆகியிருக்கிறது. பதினைந்து ஆண்டு காலம் கழிந்துதான் இந்த இனாம் ஒழிப்பு மசோதா வந்திருக்கிறது. இந்த மசோதாவை 15 ஆண்டுகளுக்கு முன்பே கூடியவிரைவில் கொண்டுவந்திருந்தால், மக்களுக்கு பல நன்மைகள் கிடைத்திருக்கக்கூடும். மேலும் இந்த மசோதாவின் மீது ஆளும் கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேந்த பல உறுப்பினர்களும், பிற உறுப்பினர்களும் பல கருத்துக்களை இந்த மன்றத்தில் வழங்கியிருக்கிறார்கள். இனாம் ஆதிக்க ஒழிப்பு மசோதா ரயத்துக்களுக்கு நன்மை அளிக்கக்கூடியதொன்று என்றாலும், மாயவரம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல், பரமபத படத்தில்

மேலே ஏறுவதற்கு ஏணியும், கீழே இறங்குவதற்கு பாம்பும் இருப்பது போல் இந்த மசோதாவிலும் சில பல குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. மற்றும் இனாம்தார்களுக்குத் தங்களுடைய சொந்த உரிமையை நிலைநாட்டுவதற்கு மூன்று ஆண்டுக் காலம் போதுமானது என்று இருக்கிறது. ரயத்துக்களாக இருப்பார்களானால், தங்களுடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு 12 ஆண்டுக் காலம் என்று இருப்பதைப்போலவே, இனாம்தார்களுக்கும் தங்களுடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு 12 ஆண்டுக் கால அளவு அமைக்கப்படவேண்டும். மூன்று ஆண்டுக் காலம் என்று அமைப்பதன் காரணமாக, உண்மையாகவே, சேர வேண்டிய பல ரயத்துக்களுக்கு அந்த உரிமை போய்ச் சேராமல் அவர்கள் பல தொல்லைகளுக்கும் அல்லல்களுக்கும் ஆளாக வேண்டிய அவசியம் ஏற்படுமோ என்ற அச்சம் இரு கட்சிகளைச் சேர்ந்தவர்களாலும் தெரிவிக்கப்பட்டது. அந்த முறையிலே ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் அதை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். எனவே, 60 : 40 மசோதா வந்தபோதும், பாது காப்புச் சட்டம் வந்தபோதும், அவற்றிலே இண்டு இடுக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, உயர்நீதி மன்றங்கள் வரையில் சென்று, தங்களுக்குச் சாதகமான நிலையை நிலப் பிரபுக்களும் மற்றவர்களும் ஏற்படுத்திக் கொள்ளவும், அவற்றின் காரணமாகப் பல பாதகங்கள் உழவர் பெருங்குடி மக்களுக்கு ஏற்படவும் ஆன நிலைமைகளை நாம் கண்டிக்கிறோம். இனாம்தார்கள் மீள முடியாத அளவுக்கு, நீதி மன்றங்களின் படிகளில் ஏறி இறங்கக்கூடிய அளவுக்கு, வழக்கறிஞர்களை வைத்து வழக்குகளை நடத்த முடியாத அளவுக்கு ஆளாகித் தங்களுடைய உரிமையை நிலைநாட்ட முடியாத அளவுக்கு ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடைஞ்சல் இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்படாமல் பாதுகாக்க, இப்போதே ரயத்துக்களுக்கு உரிமையை நிலைநாட்டிக் கொள்ள எப்படி 12 ஆண்டுக்காலம் வகை செய்யப்பட்டிருக்கிறதோ, அப்படியே இனாம்தார்களும் தங்களுடைய உரிமையை, உடைமையை நிலைநாட்டிக் கொள்வதற்கு 12 ஆண்டுக் காலம் என்று வழி வகை செய்தாக வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. அதை கனம் அமைச்சர் அவர்கள் ஏற்று, அதற்கான முறையில் இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களுக்கு நான் வற்புறுத்திக் கூறுகிறேன்.

இப்படிப்பட்ட சட்டங்கள் வரும்போதெல்லாம் அவற்றில் இருக்கும் சிறு சிறு பகுதிகள் நிலச் சுவான்தார்களுக்கும் மற்றவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில் மாறிவிட்டிருக்கின்ற காரணத்தால், இதிலேயும் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு, எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறதோ, அந்த நோக்கம் பறிக்கப்படாத அளவுக்கு, பாழ்படுத்தப்படாத அளவுக்குப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கும் காரணத்தால், மன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் மாயவரம் தொகுதி உறுப்பினர் பேசுகிறபோது, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொண்டுவருகிற சட்டத்தின் காரணமாக, எதிர்க் கட்சியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த செயலாளர்களில் சில பலர் இதன் வசதியைப் பெற்று, நிலபுலன்கள் பெற்றுவிடுகிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அதனுடைய தன்மையையும் விவரங்களையும் நிலைமைகளையும் நான் அறியவில்லை. ஆனால், ஒன்று ஊகிக்க முடிகிறது. எதிர்க் கட்சியினரால் அந்த அளவு சாதித்துக்கொள்ள முடிகிறது என்றால், ஆளுங் கட்சியில் உள்ளவர்கள் எந்த அளவுக்குச் சாதிக்க முடியும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆளுங் கட்சியில் மிகத் திறமை வாய்ந்த மாயவரம் தொகுதி உறுப்பினர் அதை எந்த அளவுக்குச் செயலுக்குக் கொண்டுவர முடியும் என்பதையும் நம்மால் ஊகித்துக் கொள்ள முடிகிறது. எதிர்க் கட்சியினர் எளிதாகச் சாதித்துக்கொள்ளும் ஒன்றை ஆளுங் கட்சியில் உள்ளவர்கள், அதிலும் திறமை வாய்ந்த மாயவரம் தொகுதி உறுப்பினர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் மிகத் திறமையாகச் சாதிக்கக் கூடியவர்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். என்றாலும் கூட, இப்படிப்பட்ட நன்மைகள் ஏற்படுமானால், உள்ளபடியே வரவேற்கத்தக்க ஒன்றுதான். இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் இது பல ரயத்துகளுக்கும் குடியானவர்களுக்கும் வழிவகை செய்கின்ற முறையில் அமைந்திருக்கின்ற காரணத்தால், இதை வரவேற்று, இதிலிருக்கும் ஒருசில குறைபாடுகளைப் போக்கி, இதை முழுநிறைவு உள்ளதாகச் செய்து, இதனுடைய நோக்கம் முற்றிலும் நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்யும்படியாக கனம் அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

MR. SPEAKER : How long does the Hon. Minister want to take?

THE HON. SRI R. VENKATARAMAN : I will finish within ten minutes, before 1-05 p.m.

MR. SPEAKER : All right.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மிக முக்கியமான மசோதாவிற்கு ஆதரவை எல்லாப் பகுதிகளிலிருந்தும் கொடுத்ததற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த மசோதாவானது ஓரளவு கட்சி பேதமற்ற முறையிலே, உழவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும், நன்மை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்தான் தயாரிக்கப்பட்டது. ஆனால், தயாரிக்கப்பட்டதைவிட மிகப் புரட்சிகரமான மாறுதல்களை ஆய்வுக் குழுவினர் செய்திருக்கிறார்கள். ஆய்வுக் குழுவில் எல்லோரும் சேர்ந்து விவாதித்து பல முடிவுகளை எடுத்திருக்கிறோம். ஆகவேதான், இப்பொழுது கொண்டுவந்திருக்

கிற இந்த கூட்டு ஆய்வுக் குழுவின் அறிக்கையானது, நான் முதலில் இதை மசோதா ரூபத்தில் கொண்டுவந்ததைவிட, நல்ல சிறந்த கருத்துக்களைக் கொண்டதாகவும், நல்ல முற்போக்கான எண்ணங்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. அதற்காக நான் இந்தக் கமிட்டியிலே பங்கெடுத்துக்கொண்டு, நல்ல, அரிய பல யோசனைகளைச் சொன்ன எல்லாக் கனம் அங்கத்தினர்களுக்கும் எனது நன்றியை இப்பொழுது தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, கனம் அங்கத்தினர் ஆர். வி. சுவாமிநாதன் போன்றவர்கள், எதிர்க் கட்சி கனம் உறுப்பினர்கள் ஆகிய எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பல நல்ல கருத்துக்களையெல்லாம் சேர்க்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்க சர்க்காரும் எந்த இடத்திலே அவசியமோ, அதையெல்லாம் சேர்த்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதில் ஒரு பிரச்னையைப்பற்றித்தான் எல்லாக் கனம் அங்கத்தினர்களும் பேசினார்கள். அதாவது, இனாம்தார்களுடைய சொந்த நிலத்தைப் (ப்ரைவேட் லாண்டு) பொறுத்த வரையில், மூன்று வருஷங்கள் அவர்கள் விவசாயம் செய்தால் அவர்களுக்குப் பட்டா கொடுப்பது என்று இருக்கிறது. ரயத்துக்கு 12 வருஷம் விவசாயம் செய்தால்தான் பட்டா கொடுப்பதாக இருக்கிறது என்று எல்லோரும் சொன்னார்கள். அவர்கள் புரிந்து கொள்ளாமல் அப்படி சொன்னார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ரயத்துக்குப் பட்டா கொடுப்பது பற்றி 10-வது ஷரத்திலே இருக்கிறது. அதைச் சற்றுப் பார்த்தால் தெரியும். 10-வது ஷரத்தில் இருப்பதாவது—

In the case of an existing inam estate every ryot shall, with effect on and from the notified date, be entitled to a ryotwari patta in respect of—

(i) all his lands which were finally held to be ryoti lands under Section 3-A of the Madras Estates Land (Reduction of Rent) Act, 1947, and

(ii) all ryotwari lands which immediately before the notified date, were properly included or ought to have been properly included in his holding and which are not lands in respect of which a landholder or some other person's entitled to a ryotwari patta under any other provision of this Act.

ரயத்துக்கு ஒரு நாள்கூடக் கல்டிவேஷன் செய்திருக்க வேண்டும் என்பது இல்லை. இதைத்தான் கனம் அங்கத்தினர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஒன்பதாவது செக்ஷனில், லாண்ட் ஹோல்டர் மூன்று வருஷம் பயிர் செய்திருந்தால், வெள்ளாமை செய்திருந்தால், உரிமை உண்டு. ரயத்தைப் பொறுத்த அளவில் அவர்கள் ஒரு நாள்கூடக் கல்டிவேஷன் செய்திருக்கவேண்டியதில்லை.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [16th August 1963]

'ரயத்' என்று பட்டயப்படி இருப்பவர்களுக்குள், அந்த ரயத்துக்கு ரயத்துவாரிப் பட்டா கொடுப்பது. இது நிச்சயமான விஷயம். இதைத்தான் போட்டிருக்கிறோம். இந்த அத்து பூராவையும் அவர்கள் படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எதை அவர்கள் குறிப்பாகச் சொல்லுகிறார்கள் என்றால் [illegible] பொருத்தம் இல்லாத நிலம், ரயத்துக்குப் பொருத்தம் இல்லாத நிலம் சர்க்காரைச் சேர்கிறது. அது செக்ஷன் 11-ல் இருக்கிறது. அப்படிச் சர்க்காரைச் சேர்ந்த நிலம் யாராவது ஒருவருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றால், அவர்கள் ரயத்தாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, 'டினண்ட்' ஆக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, 12 வருஷம் அவர்கள் தொடர்ந்து பயிர் செய்திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்குப் பட்டா கொடுப்பது என்பது. இதைத் தெரியாத காரணத்தால், இனாம்தார்களுக்கு அதிகமான சலுகை கொடுத்துவிட்டதாகவும், ரயத்துக்குக் கஷ்டங்கள் உண்டாக்கிவிட்டதாகவும் நினைக்கிறார்கள். அது கொஞ்சங்கூடச் சரியல்ல.

யாருக்கு 12 வருஷம் கழித்து நிலம் கொடுக்கிறோம் என்றால், பாரம்பரை வாரியாகச் சொத்தைப் பெறுவதும், கால் காசுகூடக் கொடுக்காமல் நிலத்தை வாங்கியவர்களும் 12 வருஷம் உழுதிருந்தால், அவர்களுக்குப் பட்டா கொடுப்பது என்று சொல்லியிருக்கிறோம். எந்தவிதமான உரிமையும் இல்லாதவர்களுக்கு, 12 வருஷமாக உழுதால் பட்டா என்றும், உரிமை இருக்கிறவர்கள் ரயத்தாக இருந்தால், அவர்களுக்கு உடனே பட்டா என்றும் சொல்லிவிட்டோம். 'உரிமை இருக்கிறவர்கள் இனாம்தார்களாக இருந்தால், மூன்று வருஷம் உழுதால் அவர்களுக்கு உரிமை; இல்லாவிட்டால் கிடையாது' என்று சொல்லியிருக்கிறோம்.

எல்லா இனாம் நிலங்களையும் 'ப்ரைவேட் லாண்டு' என்று சொல்லிவிடுவார்களோ என்ற அச்சம் எழுந்தது. அந்த அச்சத்தைப் போக்குவதற்காக 65-வது பிரிவில் 'land shall be presumed to be ryoti land' என்று இருக்கிறது. கோர்ட்டிலே 'ப்ரிஸம்ஷன்' என்னவென்றால் 'ரயத்தி லாண்டு' தான். இனாம்தார்கள் தான் போய், பட்டாக்களையும் டாக்குமென்ட்களையும் வைத்து 'எங்களுக்கு இது ப்ரைவேட் லாண்டு' என்று நிரூபிக்க வேண்டும். இதைவிட இன்னும் அதிகமான ப்ரொட்டெக்ஷன் எப்படிக் கொடுப்பது என்பது சட்டம் படித்த எனக்கே விளங்கவில்லை. எல்லாவிதமான ப்ரொட்டெக்ஷன்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர்கள் திரு. பாலசுப்ரமண்ய அய்யர் அவர்களும், திரு. சா. கணேசன் அவர்களும் ஒரு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால்--கோவில் இருக்கிறது; மற்ற தரும ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவை எப்படி-

16th August 1963] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

நேரடியாக மூன்று ஆண்டு 'கல்டிவேட்' செய்திருக்க முடியும்? இதனால் பட்டா கிடைக்கும் உரிமை போய்விடுமோ என்று சொன்னார்கள். அது வாஸ்தவம்தான். ஆனால் அந்தப் பிரிவில், அவர்கள் தாங்களாகக் கல்டிவேட் செய்திருக்க வேண்டும் அல்லது "by his own servants or by hired labour with his own or hired stock, in the ordinary course of husbandry .." என்று இருக்கிறது. இம்மாதிரி செய்திருந்தால்கூடப் பட்டா கொடுப்போம். கோவில்களோ தரும ஸ்தாபனங்களோ, நேரடியாக உழவேண்டியதில்லை. ஆட்கள் வைத்து, மூலதனம் போட்டு உழவு நடத்தியிருந்தால் பட்டா கிடைக்கும். குத்தகைக்கு விட்டிருந்தால், அந்த நிலத்தை அந்த தரும ஸ்தாபனத்திற்குக் கொடுப்பதா? அல்லது வருவாயை மாத்திரம் கொடுப்பதா? என்கிற சந்தேகம் எழுகிறது.

இனாம் என்று சொல்கிறபோது சிலவிடங்களில் நிலத்தைக் 1-00 p.m
கொடுத்திருக்கிறார்கள். சிலவிடத்தில் வருவாயில் ஒரு பகுதியை இனாமாகக் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே இனாம் நிலம் என்று வருகிறபோது நிலத்தையே இனாமாகக் கொடுத்தது, அல்லது நிலத்தைக் கொடுக்காமல், நிலத்தின் வருவாயில் ஒரு பகுதியை மட்டும் கொடுப்பது என்று ஏற்படுத்தப்பட்ட இனாம் பூமியா என்கிற சந்தேகம் எழுகிறது. ஆகவேதான் மூன்று வருஷம் சேர்ந்தாற்போல ஒருவன் நிலத்தில் உழுது இருந்தால் அதைப் பட்டா செய்து கொடுப்பது என்று சொல்லியிருக்கிறோம்.

அடுத்தாற்போல தாராபுரம் போன்ற பகுதிகளில் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னாலேயே டிரஸ்டிகள் இனாம் நிலங்களைப் பராதீனப்படுத்திவிட்டார்கள். இப்போது நஷ்டப்படுவது வாங்கினவர்களா? அல்லது கோயில்கள் போன்ற தர்ம ஸ்தாபனங்களா? வாங்கினவர்கள்—பணம் கொடுத்து வாங்கினவர்கள் நஷ்டப்பட வேண்டுமென்று சொல்வது நடக்காத காரியம். ஆகவே இதுபற்றி நீண்ட பரிசீலனை செய்து பார்த்தோம். எப்படியாவது அதை ரெகுலரைஸ் பண்ணியாகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதன் காரணமாக 60 வருஷங்களுக்கு முந்தி பராதீனம் செய்யப்பட்டிருந்தால் அந்த நிலத்தை வாங்கினவர்களுக்கு அதை அப்படியே பட்டா செய்து கொடுத்துவிடுவது என்றும், பன்னிரண்டு வருஷத்திலிருந்து அறுபது வருஷத்திற்குள்ளாக பராதீனம் செய்யப்பட்டது என்றால் அந்தச் சொத்தை வாங்கியவர்கள் அந்த அந்த தர்ம ஸ்தாபனத்திற்கு கொஞ்சம் காம்பென்சேஷன் கொடுத்துவிட்டு அந்தச் சொத்தை ரெகுலரைஸ் பண்ணிக் கொள்வது என்றும், பன்னிரண்டு வருஷத்திற்குள்ளாகப் பராதீனம் செய்யப்பட்ட சொத்தாக இருந்தால் அது செல்லுபடியே ஆகாது என்றும் எல்லோருக்கும் நியாயம் வழங்கக்கூடிய முறையில் செய்திருக்கிறோம். ஆகவே அதற்காகவும் பெரிய குறை சொல்ல முடியாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடி மிலிடரியில் சர்வீஸ் பண்ணினவர்களுக்கு இனும் அளிக்கப்பட்ட பூமியாக இருந்தால்—எல்லாம் ஐந்து ஏக்கர், பத்து ஏக்கருக்கு மேல் இராது—அதற்குத் தனியாகவே ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறோம். ஆகவே அதனால் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள்.

எல்லோரும் உரிமை வேண்டுமென்று சொன்னார்கள். அதைத் தான் நாம் இப்போது செய்கிறோம். யார் இதுவரை உழுதுக் கொண்டு வந்திருக்கிறாரோ, அவருக்குத்தான் கல்டிவேடிங் ரைட் வேண்டுமென்று சொல்கிறோம். ஆகவேதான் உழவருக்கு இருக்கிற உரிமையை பட்டா கொடுப்பதன் மூலம் ஊர்ஜிதம் செய்கிறோம்.

திரு. மாதவன் அவர்கள் போகும்போது ஒன்றிரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். அவை மிக முக்கியமானவை. குறிப்பாக சட்டப்படி நாம் ஒரு நிலத்தை ரயத்வாரி நிலம் என்றே முதலில் கொள்கிறோம். நம்முடைய பிரசம்ஷனே—இது ரயத்வாரி நிலம்—என்ற அடிப்படையில்தான் தொடங்குகிறது. அது ரயத்வாரி நிலமாக இல்லாது பிரைவேட் லாண்டாக இருந்தால், அந்த நிலத்தின் சொந்தக்காரர் அந்நிலத்தில் தமக்குள்ள பாத்யதையை நிலைநாட்ட பலவிதமான ரெக்கார்டுகளை எல்லாம் எடுத்து கோர்ட்டில் வைத்து, அது பிரைவேட் லாண்டுதான் என்பதாகத் தீர்ப்பு வாங்கி வரவேண்டும். அப்படித் தீர்ப்பு வாங்கி வந்து விட்டால் மட்டும் அந்த நிலத்தை அவருக்கே பட்டா செய்து கொடுப்பது இல்லை. மூன்றாண்டு அந்த நிலத்தில் உழுது இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த நிலம் அவருக்குப் பட்டா செய்து கொடுக்கப்படும். அப்படியின்றி யாரும் எங்களுக்குத் தான் அந்த நிலத்தில் உரிமை உண்டென்று சொல்லிமட்டும் பட்டா பெற முடியாது.

இன்னும் ஒரு விஷயம் மிகவும் முக்கியமானது. புது இனும் எஸ்டேட்களுக்கு—அந்த இனும்களுக்கு இரண்டு வருஷ பழைய பாக்கியைக் கொடுத்துவிட்டால் பழைய பாக்கி எல்லாம் ரத்தாகி விடும் என்று செய்யவேண்டுமென்று திரு. மாதவன் சொன்னார்கள். அது மிகவும் அவசியமானது. அவருடைய கருத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. ஆகவேதான் சர்க்கார் சாப்பில் இருந்து பழைய பாக்கிக்கு 3 ஆண்டுகளுக்குள்ளதைக் கொடுத்துவிட்டால் போதும், எல்லாம் ரத்தாகிவிடும் என்று ஒரு திருத்தம் கொண்டு வரலாமென்று இருக்கிறேன். இதனால் கொஞ்சநஞ்சம் இருக்கக் கூடிய விவசாயிகளுக்குள்ள கஷ்டங்களும் தீர்ந்துவிடும் என்று சொல்லி இதை ஏற்றுக்கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The discussion on this Bill will be con-

IV.—DISCUSSION re TURN SYSTEM OF DISTRIBUTION OF CAUVERY WATER IN THE THANJAVUR DISTRICT.

* **திரு. என். எஸ். ராமலிங்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, தென்மேற்குப் பருவக் காற்று பெய்க்கும் நாளில், நாட்டில் மழை பொழிவதைப் பொறுத்துத்தான் தஞ்சை ஜில்லாவின் வாழ்வும், தாழ்வும் இருக்கிறது. துரதிருஷ்டவசமாக இந்த வருஷத்தில் தென்மேற்குப் பருவ மழை எதிர்பாராத அளவில் பொய்த்து விட்டதன் காரணமாக காவேரிப் பாசனம் எந்த அளவு பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதைப்பற்றி மராமத்திலாகா அமைச்சர் அவர்கள் இந்தச் சபை முன்பு சமர்ப்பித்த அறிக்கையில் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டினார்கள். குறைவாக மழை பெய்ததன் காரணமாக—தஞ்சை ஜில்லா விவசாயிகளுடைய நலனைக் கருதுகிற அரசாங்கம்—கிடைக்கின்ற தண்ணீரை நல்ல முறையில் எப்படி விநியோகம் செய்யலாம் என்பதைப்பற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த விவரங்களையும் 41-வது விதியின்படி இந்த சபை முன்பு படித்த அறிக்கையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இதில் வருத்தம் அளிக்கக்கூடியது என்னவென்றால் இதுபற்றி கனம் அமைச்சர் அவர்கள் தஞ்சை ஜில்லாவுக்கு வந்து அதிகாரிகளோடும், மற்றவர்களோடும் கலந்து ஆலோசித்தபோது இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிற விவசாய மக்களையோ, அவர்களுடைய பிரதிநிதிகளாகிய சட்டசபை மெம்பர்களையோ கலந்து ஒன்றும் பேசவில்லை. இது மக்களுடைய பிரதிநிதிகளாகிய எங்களுக்கு மிகவும் வருத்தத்தைத் தருகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அவ்வாறு அவர்கள் ஏற்பாடு செய்திருக்கின்ற முறையில் கிடைக்கின்ற தண்ணீரைப் பங்கிட்டு வெண்ணாற்றில் 3½ நாட்களும், காவேரியாற்றில் 3½ நாட்களும் விடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்வாறு செய்வது, வேண்டுமானால் நாங்கள் இத்தனை க்யூசெக்ஸ் வாட்டர் காவேரியில் விட்டோம், வெண்ணாற்றில் விட்டோம் என்று புள்ளிவிவரம் கொடுக்க உதவுமே தவிர சாகுபடி செய்ய, உற்பத்தி செய்ய ஒருகாலும் பயன்படாது. குறிப்பாக இப்படி முறை வைத்துத் தண்ணீர் விடுவதன் காரணமாக கடலோரத்தில் இருக்கிற தாலுக்காக்களில் சீர்காழி, மாயவரம், அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி முதலிய தாலுக்காக்களில் தண்ணீர் ஏறிப் பாயாது. ஆகையால் கனம் அமைச்சர் அவர்கள் கடலோரத்தில் இருக்கிற தாலுக்காக்களுக்கு ஏறிப் பாய்கிற அளவில் தண்ணீரைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படிக் கொடுப்பது என்றால் மைசூர் அரசாங்கத்திடமிருந்து தண்ணீர் கடன் வாங்கித்தான் கொடுக்கவேண்டும். அவர்களுடைய அணைக்கட்டில்கூட 7 அடித் தண்ணீர் குறைந்தே இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் தம்முடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை கொடுத்து சில தினங்

கணக்கிடப்படவில்லை. அதுவும் இந்த வாரத்தில் மெர்க்காராவில் ஒரு சென்டிமீட்டருக்குக் குறையாமல் 5 சென்டிமீட்டர் வரையில் மழை பெய்து கொண்டேதான் இருக்கின்றன. ஆகவே அவர்களுடைய அணைக்கட்டில் இப்போது அதிகமாகத் தண்ணீர் வந்திருக்கும். "எழுபது குறைவு" என்று சொன்னது நிச்சயமாகக் குறைந்துதான் இருக்கும். ஆகவே மைசூர் அரசாங்கத்துடன் பேசி, அந்தத் தண்ணீரைக் கொஞ்ச காலத்திற்குக் கடன் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று நமது அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் இரண்டு மாதத்தில் அக்டோபர் 15-ஆம் தேதிக்குள்ளாக சென்னை ராஜ்யத்தில் வடகிழக்குப் பருவ மழை ஏற்பட்டு தண்ணீர் வந்துவிடும். அதற்குமேல் தண்ணீர் கடன்கொடுக்க வேண்டிய தேவையில்லை. இந்த இரண்டு மாதங்களுக்குள்ளாக நமக்கு எவ்வளவு தண்ணீர் இருந்தால் கடைக்கோடி வரையில் தண்ணீர் பாயுமோ, அந்த அளவு தண்ணீரைக் கடன் வாங்கியாவது அளிக்கவேண்டுமென்று தஞ்சை ஜில்லா விவசாயிகளின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிடில் தஞ்சை ஜில்லாவின் பொருளாதார நிலைமையே பாதிக்கப்பட்டு விடும். அதோடு நம்முடைய தேசம் ஒரு நெருக்கடியான நிலைமையில் இருக்கும்போது பெருமளவு உணவு நிலையும் பாதிக்கப்பட்டு விடும். ஆகவே கனம் முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி மைசூர் அரசாங்கத்துடன் பேசி நமக்குத் தேவையான தண்ணீரைக் கடன் வாங்கி விடவேண்டுமென்று நினைக்கிறேன். வடகிழக்குப் பருவக் காற்று நம் ராஜ்யத்தில் தொடங்கும் வரையில்—அதாவது அக்டோபர் மாதம் வரையிலாவது—இரண்டு மாதங்களுக்கு மைசூர் அரசாங்கத்திலிருந்து தண்ணீர் கடன் வாங்கி அளிக்கவேண்டுமென்று கோரி இந்த விவாதத்தை ஆரம்பித்து வைக்கிறேன்.

திரு. கோ. சி. மணி: கனம் தலைவர் அவர்களே, இன்றையதினம் பொறுப்புமிக்க திரு. என். எஸ். ராமலிங்கம் அவர்கள் இந்த அவையிலே கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின்மீது இரண்டொரு கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை தண்ணீர்ப் பங்கீடு முறையைப்பற்றி விவாதிக்கின்ற ஒரு நிலைமைக்கு வந்திருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தை வெண்ணாறு டிவிஷன் என்றும் காவிரி டிவிஷன் என்றும் இரண்டாகப் பிரித்து ஒவ்வொரு டிவிஷனுக்கும் 3½ நாள் வீதம் தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்கும் உத்தரவை மாவட்டக் கலெக்டர் அவர்கள் பிறப்பித்துள்ளார்கள். ஏற்கெனவே வந்து கொண்டிருந்த தண்ணீரின் அளவு குறைந்து தற்போது வருகின்ற 50 சதவிகிதம் தண்ணீரை 3½ நாளைக்கு ஒரு பகுதிக்கும் அடுத்த 3½ நாளைக்கு இன்னொரு பகுதிக்கும் பகிர்ந்து தருகிறார்கள். இந்த 3½ நாளிலும் கிழக்குத் தஞ்சைப் பகுதிக்கு அந்தத் தண்ணீர் வந்து சேருகிற காலம் ஒரு நாள் போக மீதி 2½ நாளைக்குத்தான் தண்ணீர் வருகிறது. இரண்டு போகம் குறுவை சாகுபடி எல்லாம் ஒரு போகம் நடுகிற அளவுக்கு, சம்பா நடுகிற அளவுக்கு ரொம்ப

நிலங்கள் குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை வண்டையிருப்பு போன்ற பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வாறு விடப்படுகின்ற தண்ணீரும் எல்லோருக்கும் கிடைக்கிறது என்றால், யாருக்கு வாய்ப்பும் செல்வாக்கும் இருக்கிறதோ அவர்கள் தங்களுக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி பெரும்பாலான முழுத் தண்ணீரைத் தடுத்துத் தங்களுடைய நிலத்திற்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இதன் காரணமாகக் கிழக்குப் பகுதியில் இருப்பவர்களும் அதற்கு மேலே இருப்பவர்களும் பெருத்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, போட்டிருக்கிற உத்தரவின்படி தண்ணீர் எல்லாப் பகுதிகளுக்கும் போய்ச் சேருகிறதா என்பதைக் கண்காணிக்க ரெவின்யூ இலாகாவினரும், பொது மராமத்து இலாகாவினரும் உயர்தர அதிகாரிகளும் இருக்கிற ஜீப்பை உபயோகப்படுத்தி ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் தண்ணீர் நடுவிலே தடுத்து நிறுத்தப்படாமல் போய்ச் சேருகிறதா என்பதைக் கவனிக்கவேண்டும். இந்த வகையில் உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் வசதி படைத்தவர்கள் தண்ணீரைத் தடுத்துநிறுத்திவிடுகிறார்கள் என்பதால்தான். ஆங்காங்கு பணியாற்றக்கூடிய சிறு உத்தியோகஸ்தர்களால், லஸ்கர், மேஸ்திரி போன்றவர்களால் அந்தச் செல்வாக்குப் படைத்தவர்களுக்கு எதிராக நடக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். சில இடங்களில் ரெகுலேட்டர் சாவி சில தனிப்பட்டவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மராமத்து பட்டாமணியம் கையில் சாவியை ஒப்படைக்கிறார்கள். அவர்கள் அந்தக் கிராமத்தில் 30, 40 வேலிக்குச் சொந்தமானவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அடுத்த கிராமத்தைப்பற்றிக் கவலைப்படாமல் வருகிற தண்ணீரைத் தடுத்து தங்கள் கிராமத்திற்கே முழுவதும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். நான் பொது மராமத்து ஊழியர்களின் பேரில் குறை சொல்லுகிறேன் என்று எடுத்துக் கொள்ளவேண்டாம். நாம் போடுகின்ற உத்தரவை அந்தச் சிறு ஊழியர்களால் நிறைவேற்றப் பட முடியாத காரணத்தால்தான் இந்த நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலைமையில் இருக்கின்ற தண்ணீர் நிச்சயமாகப் போதாது என்ற காரணத்தினால் கண்டிப்பாக மைசூர் அரசாங்கத்திலிருந்து தண்ணீரைக் கடனாக வாங்கித் தீரவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். கனம் அமைச்சர் அவர்கள் அதற்குரிய பரிகாரத்தைக் கண்டு கூடிய விரைவில் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கி. இரா. சம்பந்தம்: கனம் சபாநாயகர் அவர்களே, திரு. என். எஸ். ராமலிங்கம் அவர்கள் கொண்டு வந்த இந்த தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களை இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

MR. SPEAKER: The hon Members should make suggestions to solve the problem and not to mention the difficulties they are experiencing.

[16th August 1963

THE HON. SRI V. RAMAIAH : I must have some time to reply, Sir.

திரு. கி. இரா. சம்பந்தம் : தற்போது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் முறையிலே காவிரி, வெண்ணுறு இரண்டு பகுதிகளுக்கும் 3½ நாள் வீதம் பகிர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு இரண்டாகப் பிரித்துத் தண்ணீரை விட்ட போதிலும் காவிரியில் தண்ணீர் விடும்போது வெண்ணுற்றிலும் கொஞ்சம் தண்ணீர் ஓடும்படியான நிலைமையிலும், வெண்ணுற்றில் தண்ணீர் விடும்போது காவிரியிலும் கொஞ்சம் தண்ணீர் ஓடும்படியான நிலைமையும் இருந்தால்தான் கடைமடையில் இருக்கக் கூடியவர்களுக்குக் கொஞ்சம் வசதியாக இருக்கும். இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் குருவை சாகுபடியை அநேகம் பேர்கள் குறைத்துவிட்டார்கள். அடுத்தபடியாக சம்பாவுக்கு விதை இடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு மாத காலமாக மழை இல்லாத காரணத்தால் சம்பா நடவுக்கு நாம் மைசூர் அரசாங்கத்திலிருந்து கடன் வாங்க வேண்டிய அவசியத்திலே இருக்கிருேம். இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் கனம் அமைச்சர் அவர்கள் கூடிய அளவுக்கு இருக்கக்கூடிய தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிருர்கள். ஆயினும் கடைமடையில் இருப்பவர்களுக்குத் தண்ணீர் கிடைக்காத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு மாதத்திற்குப் பிறகு பருவ மழை பெய்து தண்ணீர் வந்துவிடும். ஆனால் இப்போது சம்பா நடவு இட்டிருக்கிறபடியால் தண்ணீர் நிறையத் தேவையாக இருக்கிறது. ஆகவே, தற்போதைக்கு மைசூர் அரசாங்கத்திலிருந்து தேவையான தண்ணீரைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சி. வி. வேலப்பன் : மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நண்பர் ராமலிங்கம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தற்போது தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் 3½ நாள் வீதம் கொடுக்கப்பட்டு வருகிறது. எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள், கண்டிப்பாக நம்முடைய அரசாங்கம் மைசூர் அரசாங்கத்துடன் கலந்து பேசி நமக்கு வேண்டிய தண்ணீரைப் பெற்றுத் தீர வேண்டிய அவசியத்தைப் பற்றி வலியுறுத்தினார்கள். அவர்கள் கூறிய அந்தக் கருத்தை நானும் வலியுறுத்த விரும்புகிறேன். காவிரி நீர்ப் பங்கீடு என்று சொல்லும்போது சேலம் மாவட்டத்தைச் சார்ந்த நானும் அதிலே கலந்து கொள்ளக்கூடிய நிலையிலே இருக்கிறேன். காவிரியில் தண்ணீர் குறைவு ஏற்படுகிறது என்று கேட்டவுடன், நம் பகுதிக்கும் அந்த பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் ஏற்பட்டது. எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள், தண்ணீர் இல்லாமையினால் அங்கு பாதிப்பு ஏற்படும், விவசாயம் பாதிக்கப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். நான் சார்ந்த பகுதிகளில் வெற்றிலைக் கொடிக்கால் விவசாயம்தான் அதிகமாயிருக்கிறது அது

16th August 1963] [திரு. சி. வி. வேலப்பன்]

மூன்று வருடப்பயிர். வெற்றிலை விவசாயமானது, ஒரு நாள் தண்ணீர் அதிகமாக இருந்தாலும் கெட்டு விடும், ஒரு நாள் தண்ணீர் இல்லாவிட்டாலும் கெட்டு விடும். ஆகவே அது போன்ற பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு வராத விதத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : சேலத்திற்குத் தண்ணீர் வேண்டுமென்று கனம் அங்கத்தினர் பேசுகிருர்களா? இது தஞ்சாவூர் ஜில்லாவைப் பற்றியது.

திரு. சி. வி. வேலப்பன் : ஆகவே அமைச்சர் அவர்கள் மைசூர் அரசாங்கத்துடன் பேசி நல்ல முறையில் இதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சை ஜில்லாவில் மழைக் குறைவினுல் பாசனத்திற்குத் தண்ணீர் நெருக்கடி ஏற்பட்டு அமைச்சர் அவர்கள் முன்னதாகவே வந்து உத்தியோகஸ்தர்களை எல்லாம் கூப்பிட்டு வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிருர்கள். அங்கு பாதிக் குருவை சாகுபடி நடந்திருக்கிறது. சம்பா வயலிற்கும் தண்ணீர் விட்டு அதுவும் காய்கிறது. அநேகயிடங்களில் நடவு நட்டும் அவை காய்கிறது. சாகுபடி செய்ய இடமில்லை. முதல் பாகத்தில் இருப்பவற்றிற்கே இவ்வளவு கஷ்டம் என்றுல் டெயில் எண்டில் இருப்பவர்களின் கஷ்டத்தைப் பற்றி கூறத் தேவையில்லை. அங்கு விவசாய அமைச்சர் அவர்களையும் வரும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். பதிமூன்று லட்சத்திற்கு மேற்பட்ட நஞ்சை நிலங்கள் பாதிக்கப்பட்டு விளைவு பாதிக்கப்படலாம். கேரளா போன்ற மற்ற மாநிலங்களுக்கு நாம் நெல் அனுப்புவது கூட பாதிக்கப்படும். அமைச்சர்கள் நேரில் வந்தால் தான் நிலைமையை அறிந்து உத்தியோகஸ்தர்களிடம் கூறி காரியங்களை சரியாகச் செய்யமுடியும். மைசூரிலிருந்து கடன் வாங்கியோ எப்படியோ காரியங்களை, அமைச்சர்கள் நேரிடையாக வந்து கவனித்தால்தான் காரியங்களை சரியாகச் செய்யமுடியும். 20, 25 அடியில் நல்ல தண்ணீர் வருகிறது. ஆகவே அங்கு போரிங்க் போட்டு, பம்ப் செட்கள் வைத்து தண்ணீர் எடுக்கலாம். மிராசுதார்கள் பம்ப் செட்கள் போன்றவற்றை தாங்களே வாங்கத் தயாராயிருக்கிருர்கள். ஆனல், போரிங், பம்ப் செட்கள் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. பார்மாலிட்டீஸ் படி நடக்கவேண்டுமென்றுல் அது வருடக் கணக்கில் ஆகிறது. ஆகவே கேட்ட மூன்று தினங்களுக்குள் பம்ப் செட்கள், என்ஜின்கள், போரிங் போன்றவைகள் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை ஜில்லாவில் நெருக்கடி ஏற்பட்டால் என்னென்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வதாக ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். தஞ்சை ஜில்லாவிற்கு முதல் இடம் அளிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அதை அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்து இரு அமைச்சர்களும் அங்கு வந்து உத்தியோகஸ்தர்களுடன்

[திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை] [16th August 1963

கலந்து ஆலோசித்து என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. நாராயணசாமி நாயுடு : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த நெருக்கடியான கட்டத்தில் எனக்கு முன் பெரிய நண்பர்கள் குறிப்பிட்டது போல் இரண்டு அமைச்சர்களும் அங்கு வந்திருக்கும்படியான நிலைமை ஏற்படுமானால்தான் இந்த நெருக்கடி நிலையை சமாளிக்க முடியும். நம் சர்க்கார் அதிகாரத்தின் கீழ் எவ்வளவு பம்ப் செட்கள் இருக்கின்றனவோ, எவ்வளவு டிராக்டர்கள் இருக்கின்றனவோ அவ்வளவும் அங்கு வந்தால்தான் நிலைமையைச் சமாளிக்க முடியும். சென்ற ஆண்டு எத்தனை க்யூசெக்ஸ் தண்ணீர் விடப்பட்டதோ அதை கணக்கில் வைத்து இரண்டு ஆற்றிலும் பிரிந்து சென்ற ஆண்டு விட்டதைவிட மூன்றில் ஒரு மடங்கு அதிகம் விட்டால்தான் தண்ணீர் பாய முடியும். கடுமையான விவகாரங்கள் இருக்கின்றன. தேவைக்கு அதிகம் தண்ணீரை சேகரித்துக் கொள்ளும் எண்ணம் ஏற்பட்டிருக்கிறது, நெருக்கடி காரணமாக. அதன் காரணமாக ஒருவர் நிலத்திற்கு வரவேண்டியதை இன்னொருவர் எடுத்து அதன் காரணமாக சச்சரவுகள் ஏற்படுகின்றன. ஆறு மாதப் பயிரை யாரும் போடாமல் வயது குறைந்த நெற்பயிரைப் போட்டு சீக்கிரமாக கண்டு முதல் செய்ய வேண்டும். ஐப்பசி, கார்த்திகையில் வருகிற மான்சூன் வருவது நிச்சயமில்லை. ஆகவே நிலைமையை எப்படியாவது சமாளிக்க வேண்டும். மைசூரிடமிருந்து வாங்குவதாக இருந்தால் அவர்கள் எப்போதும் ஒன்று செய்து கொண்டிருக்கிறார்கள். அக்ரிமென்ட் பிரகாரம் கொடுக்காமல் வேறு அணைக்கட்டுகளை கட்டி தண்ணீரைத் திருப்பி விடுகிறார்கள். அதனால் நமக்கு கிடைக்கக்கூடிய தண்ணீரின் அளவு குறைந்து கொண்டு வருகிறது, கடந்த பத்தாண்டுகளாக. ஆகவே தக்க நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு பாதகம் இல்லாத வகையில் நமக்கு தண்ணீர் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். அடுத்தபடியாக எல்லாவற்றையும் சாகுபடி செய்துதான் ஆகவேண்டுமென்ற நிலை இருக்கக்கூடாது. எல்லா நிலங்களுக்கும் பரவலாக விட்டு ஒன்றையும் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்படக்கூடாது. இருக்கிற நிலைமையில் கஷ்டம் இல்லாமல் இவ்வளவு செய்ய முடியும் என்ற நிலை இருப்பதில் தவறு இல்லை. யுத்த கேந்திரம் என்று விளம்பரம் செய்யும்போது அந்த இடத்தை காலி செய்யவேண்டுமென்று சொல்வதுபோல் பள்ளக் கிராமங்களில் தண்ணீர் விட்டு சாகுபடி செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் என்று விட்டுக்கொண்டிருந்தால் ஒன்றும் நடக்காது. தஞ்சை ஜில்லாவில் உள்ள வழக்கம், தாங்களும் பாய்ச்ச முடியாது, இன்னொருவரும் பாய்ச்ச சந்தர்ப்பம் கொடுக்கமுடியாது செய்துவிடுவார்கள். ஆகவே மீண்டும் சொல்லிக் கொள்கிறேன், அமைச்சர்கள் இருவரும் வந்து, எல்லா மெஷினரிகளையும் கொண்டு வந்து வேண்டிய காரியங்களை கவனிக்க வேண்டும். நெருக்கடி நிலை இருக்கும்போது எந்த உத்தியோகஸ்தரும் அங்கு நல்ல பெயர்

16th August 1963] [திரு. கோ. நாராயணசாமி நாயுடு]

எடுக்க முடியாது. தண்ணீர் தட்டு நீங்கினால்தான் அவர்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும். விவசாயிகள் தங்கள் கையில் உள்ளதையெல்லாம் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டுமென்றால் நேரில் வந்து பார்ப்பது நல்லது.

திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ராமலிங்கம் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தின் பேரில் நான் என் அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேட்டூர் அணையை இன்று எடுத்துக் கொண்டால் தண்ணீர் 57 அடிக்கு குறைவாக இருக்கிறது. சர்க்காருக்கும் விநியோகம் செய்யக்கூடிய முறையில் மிகுந்த கஷ்டம் இருக்கிறது என்பதை நாம் நன்கு உணருவோம். தஞ்சை ஜில்லாவில் அதிக தூரம் போய் பாய்வதால் டெயில் என்டில் தண்ணீர் வருவது கடினமாக இருக்கிறது. 26-ம் தேதி ஒரு மகாநாடு போட்டிருக்கிறார்கள். தஞ்சையைப் பொறுத்தவரை டெயில் என்ட் பிரதேசங்களில் பருத்தி சாகுபடி செய்ய ஆகஸ்ட் மாதம் வாய்ப்பிருக்கிறது. இதை சாதாரணமாகச் சொல்கிறேன் என்று நினைக்கவேண்டாம். தஞ்சை ஜில்லாவில் உள்ள டெயில் என்ட் பிரதேசங்களில் சில இடங்களை வெட் கிராப்பிலிருந்து டிரை க்ராப்பிற்கு மாற்றினால் நலமாயிருக்கும். மைசூர் சர்க்காரோடு நம் சர்க்கார் 1924-ம் ஆண்டில் செய்துகொண்ட அக்ரிமெண்டு பிரகாரம் அங்கே கிருஷ்ணராஜசாகரில் எத்தனை அடி தண்ணீர் 1-30 p.m.
இருந்தால், மேட்டூருக்கு எவ்வளவு க்யூஸெக்ஸ் தண்ணீர் விடவேண்டுமென்று இருக்கிறது. அந்த அணையில் இருக்கும் உயரத்திற்கும் இந்த அணையில் இருக்கும் உயரத்திற்கும் கணக்குப் பார்த்து, அந்த அடிப்படையில் மேட்டூருக்கு எவ்வளவு தண்ணீர் விடவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராஜசாகரில் இப்பொழுது 17,000 க்யூஸெக்ஸ் தண்ணீர் வரவு வந்துகொண்டிருக்கிறது இருந்தாலும் மேட்டூருக்கு 27,000 க்யூசெக்ஸ் தண்ணீர் விடுகிறார்கள் என்பதில் நாம் சந்தோஷப்படவேண்டியிருக்கிறது. நண்பர் ஜி. நாராயணசுவாமி நாயுடு அவர்கள் சொன்னதுபோல், கிருஷ்ணராஜசாகரில் தண்ணீர் என்ன உயரம் இருக்கிறதோ அந்த உயரத்தையும் மேட்டூர் தேக்கத்தின் தண்ணீர் உயரத்தையும் வைத்துக்கொண்டு, சராசரி விகிதத்தில் தண்ணீர் விடுவதற்கு நமது சர்க்கார் மைசூர் சர்க்காருடன் நேரிடையாக தொடர்பு கொண்டு, உயரத்தின் அடிப்படையில் இங்கு தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது காவேரி டெல்டாவில் ஏற்பட்டிருக்கக்கூடிய தண்ணீர் நெருக்கடியைக் குறித்து கனம் அங்கத்தினர் திரு. ராமலிங்கம் அவர்கள் இந்த விவாதத்தின்போதும் அங்கு இருக்கக்கூடிய நிலையை எடுத்துச் சொல்வதற்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள்.

[கனம் திரு. வெ. ராமைய்யா] [16th August 1963

காவேரிப் பகுதியைப் பொறுத்த வரையில் இது ஏதோ ஒரு ஜில்லாவைச் சேர்ந்த பிரச்னை, அல்லது இரண்டு ஜில்லாக்களைச் சேர்ந்த பிரச்னை என்று அந்த முறையில் அணுகாமல், தமிழ் நாட்டிலே அதிகமாக பாசன வசதி பெற்று ஏராளமான உணவுப் பொருளை உற்பத்தி செய்யக்கூடிய பகுதி என்ற அடிப்படையில் தான் இந்தப் பிரச்னையை நான் பரிசீலித்து வருகிறேன். நமக்கு இருக்கக்கூடியதெல்லாம், நாம் எல்லோரும் அறிந்திருப்பதைப்போல ஏறத்தாழ 14 லட்சம் ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு பாயக்கூடிய நீரைப் பற்றிய பிரச்னை இது. ஆகையால் இதில் சரியான முறையில் கவனம் செலுத்தி, ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டங்களை எப்படியாவது நிவர்த்தி செய்யவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய விடாத முயற்சி. இந்த வருஷம் மேட்டூர் தேக்கத்தில் தண்ணீர் மிகக் குறைவாக இருக்கிறது என்று நமக்கு எல்லோருக்கும் தெரியும். சாகுபடி ஆரம்பிக்கும்பொழுதே எப்பொழுதுமே இல்லாத ஒரு குறைந்த பட்ச அளவுதான் இந்த வருஷம் மேட்டூர் தேக்கத்தில் தண்ணீர் இருந்தது. அப்படி இருந்தாலும் நாம் அதிக காலம் அந்த அணையை திறப்பதை தள்ளிப் போட்டு விடாமல், கொஞ்ச காலம் கடந்தாலும், போதுமான முயற்சி எடுத்து, நீர்தேக்கம் நிறம்பும் வரைக்கும் காத்திராமல், பருவ மழை சரியாக பெய்யும் என்ற அடிப்படையில், இந்த நீர் தேக்கத்திலிருந்து ஜூன் மாதக் கடைசியில் தண்ணீர் திறந்து விடுவது என்று முடிவு எடுத்தோம். அந்த முடிவை நாம் எடுத்ததற்குக் காரணம், வருஷா வருஷம் தஞ்சை ஜில்லாவில் 'டெயில் எண்டு' பகுதிகளில் இருந்த குறைபாடுகள் இந்த வருஷம் இல்லாமல் போய்விடவேண்டும் என்பதும் முன்கூட்டியே தண்ணீரை திறந்து விட்டால் கடை கோடிப் பகுதிகளுக்கு தண்ணீர் உரிய காலத்தில்தான் கிடைக்கும் என்று கருதியதும்தான்.

தஞ்சை ஜில்லாவில் ஒரு சில வாரங்களுக்கு முன்பு நான் போய் பார்த்ததிலே விவசாயம் வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்று சந்தோஷம் ஏற்பட்டது. கனம் அங்கத்தினர் திரு. நாராயணசாமி நாயுடுவும், மற்றவர்களும் பேசும்போது சொன்னார்கள், இந்தத் தண்ணீரை மேட்டூர் டாமில் திறந்துவிட்ட தேதியிலிருந்து பாசனம் முடியும் வரைக்கும் விடாமல் தண்ணீர் வந்துகொண்டிருக்கும் என்று சொன்னார்கள். அது உண்மை. சமீப காலம் வரைக்கும் அப்படித்தான் நிலைமை இருந்தது. சென்ற வருஷம் தஞ்சை ஜில்லாவில் பல கஷ்டங்களைப் பார்த்த பிறகு, நாம் எடுத்துக்கொண்ட ஒரு முக்கியமான முடிவு இந்த வருஷத்தில் நாம் விநியோகம் செய்யக்கூடிய முறையை ஒழுங்குபடுத்தி, 'டெயில் எண்டு' பிரச்னையே இல்லாமல் செய்துவிடவேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில்தான் இந்தப் பிரச்னையை அணுகியிருக்கிறோம். அதனால் தான், ஆரம்பத்தில் நீர்தேக்கத்தில் போதுமான தண்ணீர் இல்லாமல் இருந்தாலும்கூட, காலம் கடத்தாமல் தண்ணீர் இருப்பதை திறந்துவிடவேண்டும் என்ற அடிப்படையிலே செய்தோம். அந்த முறையில் பார்க்கிறபொழுது கடைகோடிப் பகுதிகளிலிருந்து எந்தவிதமான தந்தியும் குறை சொல்லக்கூடிய முறை

16th August 1963] [கனம் திரு. வெ. ராமைய்யா]

யிலே வரவில்லை, யாரும் கஷ்டம் இருப்பதாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. இருக்கக்கூடிய நிலைமை எப்படி அமைந்தது என்று பார்த்தால், இந்த வருஷம் தண்ணீர் திறந்துவிட்ட ஒரு சில வாரங்களுக்குள்ளே நாகப்பட்டனத்தில் இருந்தபொழுது, அங்கே பயிருக்கு இருக்கக்கூடிய கஷ்டத்தைப் பார்த்தோம். நாம் நினைப்பதைப் போல இல்லாமல் பருவ மழை இந்த வருஷம் நமக்கு ஒரு பெரிய சோதனையாக அமைந்துவிட்டது. நாம் எதிர்பார்த்த நோக்கில், எதிர்பார்த்த அளவுக்கு பருவ மழை பெய்யவில்லை. அதை மனதில் கொண்டு இனிமேல் நாம் என்ன செய்ய முடியும் என்று காத்திருக்காமல் காலாகாலத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. எடுத்த நடவடிக்கையின் முடிவைத்தான், அதன் விவரங்களைத்தான் இரண்டு தினங்களுக்கு முன்பு ரூல் 41-ன் கீழ் மோஷன் வந்தபொழுதுதான் நான் விவரங்கள் கொடுத்திருக்கிறேன். அவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே விவரங்கள் கொடுத்திருக்கிறேன். எதையோ காரணத்தைச் சொல்லி மழுப்பி விடுவதற்கு நான் தயாராக இல்லை, அல்லது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கும் நான் தயாராக இல்லை.

சென்னை ராஜ்யத்தில் உணவு உற்பத்தி சம்பந்தமாக இருக்கக்கூடிய பெரும் பிரச்னை இது என்று நான் கருதக்கூடிய காரணத்தினால் எங்கே எந்த ஆலோசனையை யார் சொன்னாலும், நாம் கேட்டுக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் முயற்சி எடுத்திருக்கிறோம். முதலில் அதிகாரிகளை அழைத்து ஜூலை மாதத்தில் அப்பொழுது பேசியிருக்கவேண்டிய அவசியம் கிடையாது. அவர்கள் கொடுக்கக்கூடிய விவரங்களை வைத்து, அப்பொழுது இருக்கக்கூடிய நிலையை வைத்து ஒரு முடிவு எடுத்திருக்கலாம். அதிகாரிகள் நான் என்ன முறையில் இந்தப் பிரச்னையை அணுகுகிறேன் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பாசனம் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளையெல்லாம் அழைத்துப் பேசி, அப்பொழுது இருந்த நிலைக்குத் தகுந்த முறையிலே பல முடிவுகளை எடுத்தோம். அதற்குப் பிறகு, 15 தினங்களுக்குப் பிறகு நிலைமை ஓரளவுக்கு நல்ல விதமாக அமையும், பருவ மழையும் சரியாகப் பெய்யும் என்று எதிர்பார்த்து ஆரம்ப முடிவை எடுத்தோம். மீண்டும் ஆகஸ்டு முதல் வாரத்தில் தஞ்சையிலே பல இலாகாவின் தலைமை அதிகாரிகளையும் நான்கு ஜில்லாக்களின் கலெக்டர் அல்லது கலெக்டர்களையும் அழைத்து வைத்து இதில் இருக்கக்கூடிய பலவிதமான சிக்கல்களைப் பற்றி பேசினோம். இந்த மகாநாட்டில் அதிகாரிகள் அதிகமாக பங்கு எடுத்துக்கொண்டாலும், சட்டசபை மெம்பர்கள் வருவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். அங்கே இருக்கக்கூடிய நிலையை எடுத்துச்சொல்வதற்கு, தஞ்சையிலே மகாநாடு நடத்தக்கூடிய காரணத்தினாலே இந்த மகாநாடு நடக்கும்பொழுது சட்டசபை அங்கத்தினர்கள் வருவார்கள் என்று நினைத்தேன். எந்த மகாநாடு நடத்தும்பொழுதும் பொது மக்கள் பிரதிநிதிகளான சட்டசபை மெம்பர்கள் வரவேண்டுமென்று நினைக்கும் பொழுது என்னுடைய டூர் ப்ரொகிராம் மட்டும் அவர்களுக்கு

[கனம் திரு. வை. ராமையயா] [16th August 1963

அனுப்பினால் போதாது, விசேஷமாக அந்த மகாநாட்டுக்கு அழைப்பு விடுத்தால்தான் வருவார்கள் என்பதை இப்பொழுது தெரிந்துகொண்டேன். இது ஒரு பெரிய பிரச்னையாக இருப்பதினால் மற்ற ஜில்லாக்களில் இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளும் இந்த மகாநாட்டிற்கு வருவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். மகாநாடு முடியப்போகும் தருவாயில் என்னை வழியனுப்ப வந்தார்கள் அதுவும் இரண்டொருவர். இதைப்பற்றி சொல்லி இதில் சிக்கல் உண்டுபண்ண நான் தயாராக இல்லை. கனம் அங்கத்தினர், திரு. ராமலிங்கம் போல் உள்ளவர்கள் நான் மற்றவர்கள் தூண்டாமலேயே அரசாங்கம் எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். இப்படி பார்த்து பரிசீலனை செய்யும்பொழுது பல முடிவுகளை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அங்கே இருக்கக் கூடிய கஷ்டத்தை உணர்ந்திருக்கிற காரணத்தினால், தஞ்சை ஜில்லாவிலே காவேரி டெல்டா பகுதியிலே தண்ணீர் விநியோக முறை எப்பொழுதும் நடப்பதைப் போல இந்த வருஷம் இருக்கக் கூடாது என்ற பொது முடிவுக்கு வந்து இருக்கிறோம். அந்த முறையில் ஜில்லாவிலுள்ள ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளையும் நீர் பாசன இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு அங்கே தண்ணீர் பாயக்கூடிய பகுதிகளை ஒவ்வொரு பகுதி பகுதியாக பிரித்து, ஒவ்வொரு பொறுப்பு உள்ள அதிகாரியும் ஒவ்வொரு பகுதிக்கு நேரடியாக பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற முடிவு செய்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் திரு. கே. எஸ். மணி அவர்கள் சொன்னதுபோல் லஸ்கரையோ அல்லது அவருக்கும் கீழ் இருக்கக்கூடிய அதிகாரியையோ நம்பி, அவர்கள் யாரையும் நம்பி விடக்கூடிய சூழ்நிலை இப்பொழுதில்லை. அவசியமான ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கக்கூடிய காரணத்தினால், இந்த விநியோகம் சரியாக நடக்கும் என்பதை நான் தைரியமாகச் சொல்லுவேன். நாம் கொடுக்கக்கூடிய தண்ணீரை யாரும் விரயம் செய்யக்கூடிய முறையிலோ அல்லது யாரும் ஆக்கிரமித்துக் கொள்ளக்கூடிய முறையிலோ நடவடிக்கை இருக்காது. அதற்கு உடனடியாக பலன் தரக்கூடிய முறையிலே எவ்வளவு தூரம் அதிகாரிகள் இதிலே கவனம் செலுத்தியிருக்கிறார்கள் என்பதைத்தான் நாங்கள் தஞ்சையிலே கூடிய மறு தினமோ அல்லது அடுத்த நாளோ அதிகாரிகள் எடுத்திருக்கும் முடிவுகள் காட்டுகின்றன. அவை பத்திரிகையிலும் வந்திருக்கின்றன. பத்திரிகை செய்தியிலும் தலையங்கத்தைப் பார்க்கும்பொழுது சிலருக்கு சந்தேகம் ஏற்பட்டு இருக்கும். பத்திரிகையிலே கொட்டை எழுத்துக்களில் "காவிரி டெல்டா பகுதிகளிலே டர்ன் சிஸ்டத்தை நடைமுறையில் கொண்டு வந்து விட்டார்கள்" என்று போட்டிருந்தது. அதைப் பார்த்த உடனே எனக்கே பரபரப்பு வந்து விட்டது. இப்பொழுது தானே முடிவெடுத்திருக்கிறோம், அதற்குள் இந்த டர்ன் சிஸ்டத்தை ஏன் அதிகாரிகள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று. இந்தச் செய்தியை இன்னும் தொடர்ந்து படித்தால், எதற்காக அப்படிச் செய்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். ஆகஸ்ட் 1-ந் தேதி எவ்வளவு

16th August 1963] [கனம் திரு. வை. ராமையயா]

தண்ணீரை காவிரியிலும், வெண்ணாற்றிலும் விடலாமென்று முடிவு செய்தோமோ அதைத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டிருந்தார்கள். காவிரியில் 9,000 க்யூசெக்ஸும் வெண்ணாற்றில் 6,000 க்யூசெக்ஸும் ஆக மொத்தம் 15,000 க்யூசெக்ஸ் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். கனம் அங்கத்தினர் சம்பந்தம் சொல்லியது போல் டெயில் எண்டில் உள்ளவர்களுக்கு ஏதாவது பாதகம் வந்து விடக் கூடாது என்பதற்காக இந்த டர்ன் சிஸ்டத்தை அமுலுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த 9,000, 6,000 க்யூசெக்ஸை, அதாவது பதினைந்தாயிரம் க்யூசெக்ஸை, மொத்தமாக காவிரியிலோ அல்லது வெண்ணாற்றிலோ விடுவது கிடையாது. 3½ நாளுக்கு காவிரியில் 9,000 க்யூசெக்ஸும் மேற்கொண்டு ஆயிரம் க்யூசெக்ஸும் சேர்த்து விடுவார்கள். மீதமுள்ளது வெண்ணாற்றில் ஓடிக் கொண்டிருக்கும். அதே போன்று ஒரு 3½ தினங்களுக்கு வெண்ணாற்றிலே 6,000 க்யூசெக்ஸும் மேற்கொண்டு 1,500 க்யூசெக்ஸுமாகச் சேர்த்து 7,500 க்யூசெக்ஸ் விடுவார்கள். மீதமுள்ளது காவிரியில் ஓடிக்கொண்டிருக்கும். இதை அவர்கள் செய்து இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. அரசாங்கமோ, பிரதம என்ஜினியரோ செய்ததை முறையாக கொடுத்துக் கொண்டிருந்தால், இந்தக் கேள்விக்கே இடம் எழுந்திருக்காது. ஆனால் கூக்குரல் வந்திருக்கும். உண்மையில் கஷ்டம் ஏற்பட்டிருக்கும். இந்த முடிவு எடுத்ததிலிருந்து இன்று வரைக்கும் எனக்கு தஞ்சை ஜில்லாவிலிருந்து ஒரு கம்பிளேண்ட் கூட வரவில்லை. உண்மையிலேயே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தால், எதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும், ஒரு தந்தியாவது கொடுத்திருப்பார்கள். அதில் கொஞ்சம் கூட சந்தேகம் வேண்டாம். இதற்கென ஒரு பண்ட் கூட வைத்திருப்பார்கள். இந்த நிலைமை ஏற்படாமல் இப்பொழுது இருக்கக்கூடிய டர்ன் சிஸ்டத்தை வைத்து, கடைக் கோடியில் உள்ள விவசாயிகளுக்கு பாதகம் வரக்கூடாது என்ற முறையிலே சரியாக நடந்து கொண்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிகாரிகளைப் பொருத்தவரையில், ஆகஸ்ட் 15-ம் தேதிக்கு முன் கூட்டியே ஒவ்வொரு பகுதிக்கும் யார் பொறுப்பாளி என்ற முடிவுக்கு வந்திருப்பார்கள். அதிலே சந்தேகம் கிடையாது. அவர்கள் ஒரு ஸ்கீமை தயாரித்து எனக்கு அனுப்ப வேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன். அது இன்றைக்கு அல்லது நாளைக்கு வரும்.

இதிலே கொஞ்சம் கஷ்டம் இருக்கிறது. ஆனால் கஷ்டங்களை காரணமாகச் சொல்லி, நான் நிலைமையைச் சமாளிக்க விரும்பவில்லை. இந்தக் கஷ்டத்தை நேரிடையாகத் தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த பிரச்னையை நாங்கள் அணுகிக் கொண்டிருக்கிறோம். கனம் நாராயண சாமி நாயுடு அவர்கள், எனக்கு இங்கே அதிகமாக வேலை இருக்கும் ஆகையால் அங்கே வந்திருந்து கவனிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவசியம் ஏற்பட்டால் தஞ்சை ஜில்லாவில் உள்ள ஒவ்வொரு வாய்க்காலுக்கும்கூட நான் போவதற்குத் தயாராக இருக்கிறேன். என்னுடைய

[கனம் திரு. வெ. ராமையா] [16th August 1963

இலாகா பிரதம என்ஜினியரும் தயாராக இருக்கிறார். ஆகவே இந்தப் பொறுப்பை கனம் அங்கத்தினர்களும் மற்றவர்களும்கூட எடுத்துக் கொள்ள வேண்டும். "இது மந்திரியின் வேலை, அதிகாரிகளின் வேலை, நாம் ஏதோ ஒரு தந்தியோ அல்லது ஸ்டேட்மெண்ட்டோ கொடுத்து விட்டால் போதும்" என்று நினைக்கக் கூடாது. விவசாயம் முறையாக நடப்பதற்கும், உணவு உற்பத்தி குறையாமல் இருப்பதற்கும் நாம் எல்லா விதமான முயற்சிகளையும் எடுக்க வேண்டும். பேப்பரிலே கொடுக்கப்பட்டிருக்கும் நிலைமையை சரியாகத் தெரிந்துக் கொள்ளுவதற்கு முயற்சி எடுக்காமல், விவசாயிகளை குழப்பவேண்டாம் என்பதுதான் பொறுப்புள்ளவர்களுக்கு என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

மேலும் 24 அல்லது 26-ந் தேதி நாங்கள் கூடுகிறோமென்று முடிவு செய்தோம் என்று சொன்னால் சவுத் வெஸ்ட் மான்சூனின் சரியான நிலைமை அப்பொழுதுதான் தெரியும். அந்தத் தேதிக்குப் பிறகு அதிகமான மழை இருக்காது என்ற முடிவுக்கு வந்து விடலாம். சவுத் வெஸ்ட் மான்சூனின் நிலையைத் தெரிந்துக் கொண்டவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள். அதற்கு மேல் தான் பல முடிவுகள் எடுக்க வேண்டும். ஏதோ நெருக்கடி இருக்கிறது என்பதை மட்டும் சொல்லி விட்டால் போதாது. அதைத் தீர்க்கவேண்டிய முயற்சிகளிலே அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். முதல் தடவையாக ரெவின்யூ இலாக்காவும், நீர்ப்பாசன இலாகாவும் ஒன்றாக இணைந்து செயல்படக் கூடிய நிலையைப் பார்க்கிறோம். எத்தனையோ சிக்கல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். 15-ந் தேதியிலிருந்து 15 சதவிகிதம் தண்ணீர் வினியோகிப்பதிலே குறைக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். சுமார் 14 லட்சம் ஏக்கருக்கு தண்ணீர் பாயும்பொழுது அதிலே 15 சதவிகிதம் குறைந்தால் அதிகம் பாதகமில்லாமல் செய்து விடலாம் என்பது என்னுடைய முடிவு. அதிகாரிகள் அதிகமாக கவனம் செலுத்தினால் யாருக்கும் கஷ்டமில்லாமல் இதைத் தீர்த்து விட முடியுமென்று நான் நினைக்கிறேன். நான் ஒரு வரண்ட பகுதியைச் சேர்ந்தவன். எங்கள் பகுதியிலே 5 வருஷத்திற்கு ஒரு முறை தான் மழை பெய்யும். அப்பொழுதும் அரைகுறையாகத் தான் கண்மாய் நிரம்பும். அப்படி, இருந்தும் நாங்கள் விவசாயம் செய்து வருகிறோம். என்ஜினியரை அனுப்புவது கிடையாது. அங்கே கிராமங்களிலுள்ள ஒவ்வொருவரும் கட்டுப்பாடாக இருந்து எப்பொழுது பாசனம் செய்ய வேண்டுமோ அப்பொழுது செய்து, தண்ணீர் பஞ்சம் இருந்தாலும் கூட ஒருவாறு அதைச் சமாளித்து, விவசாயம் செய்யக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் இருக்கக் கூடிய பெரிய மிராசுதார்கள், பொறுப்புள்ள சட்டசபை அங்கத்தினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், இவர்கள் எல்லாம் ஒரு முகமாக ஒன்று சேர்ந்து நெருக்கடி காலத்தில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முன் வர வேண்டும். மைசூரிலிருந்து தண்ணீர் பெற வேண்டுமென்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். காச்மெண்ட் ஏரியாவில் கூட மழை கம்மியாக

16th August 1963] [கனம் திரு. வெ. ராமையா]

இருப்பதால் மைசூர் ராஜ்யத்தை அவர்களுடைய அணைக்கட்டுகளிலிருந்து தண்ணீர் தர வேண்டுமென்று கேட்டால் அவர்களுக்கும் போதாது என்று சொல்லக் கூடிய நிலைமை தான் இருக்கிறது. ஆகவே நமக்கு இருக்கக்கூடிய தண்ணீரை சரியான முறையில் பங்கீடு செய்து நெருக்கடியை சமாளித்து விட முடியும் என்பது தான் என்னுடைய எண்ணம். அதற்குத் தகுந்த முறையிலே எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எந்தெந்த பகுதிகளுக்கு தண்ணீர் விடாமல் தடுத்து விட முடியுமோ, அவற்றை எல்லாம் கூட யோசனை செய்து முடிவு எடுகிறோம். புதிதாக அமைந்துள்ள புள்ளம்பாடி கட்டளை ஹை லெவல் சானலுக்கு தண்ணீர் விட வில்லை. இன்னும் கீழ் பவானியைப் பொருத்தவரையில், அவர்கள் வேண்டுமென்று நினைக்கிற அளவுக்கு தண்ணீர் கொடுக்கவில்லை. சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக ஆகஸ்ட் 1-ம் தேதியிலிருந்து தண்ணீர் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இப்பொழுது பதினைந்து தினங்கள் தள்ளி கொடுத்திருக்கிறோம். அதிலும் 15 சதவிகிதம் குறைத்திருக்கிறோம். எல்லாப் பிரச்னைகளையும் நல்ல விதமாக தீர்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். கனம் சட்டசபை அங்கத்தினர்கள் நாளைக்கு கூட்டம் முடிந்தவுடனே தயவு செய்து தஞ்சை ஜில்லாவுக்குச் சென்று காவிரி டிவிஷன், வெண்ணாறு டிவிஷன் இவைகளுக்குப் போய் சுற்றிப்பார்த்து அதிகாரிகள் என்ன செய்து வருகிறார்கள், அவர்கள் செய்து இருப்பது போதுமானதா அல்லது போதவில்லையா, இன்னும் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு எனக்கு தந்தி கொடுத்தால் நானும் அங்கு வந்து விடுகிறேன். கனம் அங்கத்தினர் நாராயணசாமி நாயுடு சொன்னது போல் இதைவிட முக்கியமான வேலை எனக்கு இருப்பதாகத் தெரியவில்லை. 14 லட்சம் ஏக்கரை சாகுபடிக்குக் கொண்டு வந்தால் அதுவே ஒரு பெரிய காரியமாக இருக்கும். அங்கே வந்திருக்கவேண்டுமென்று சொன்னாலும் கூட நான் தயாராக இருக்கிறேன். விவசாய இலாகா அமைச்சர் அவர்களையும் அழைத்தார்கள். (குறுக்கீடு) துணைக்குத் தான் அழைத்தார்கள். யார் வேண்டுமானாலும் அங்கே வந்து இருக்க முடியும். ஆகவே அங்கத்தினர்களும், மற்றவர்களும் அதிகாரிகளை அணுகி நடந்திருப்பதை தெரிந்துகொண்டு பீதியை உண்டு பண்ணாத முறையிலே தயவுசெய்து ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காலா காலத்தில் எது எதைச்செய்ய வேண்டுமோ, அதை அரசாங்கம் செய்யத் தவறாது என்ற உறுதியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : I have to inform the House that the House will sit at 8-30 a.m. to-morrow and dispose of all the pending Bills. If necessary, the House will sit in the afternoon also from 2-30 p.m. to 5 p.m. or from 3 p.m. to 5-30 p.m.

The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-50 p.m.

The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

* 168. *Notification issued with G.O. Ms. No. 1100, Rural Development and Local Administration, dated 2nd July 1963 regarding rules relating to Panchayats issued under the Madras Panchayats Act, 1958. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

B. Reports, Notifications and other papers.

* 54. *A note on important changes made by the Joint Select Committee in the Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (English and Tamil.)*

* 55. *A note on important changes made by the Joint Select Committee in the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1963 (English and Tamil.)*

* 56. *A note on Inams and the proposed legislation for their abolition (English and Tamil.)*

* 57. *Summary of Evidence Tendered before the Joint Select Committee on (1) the Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1952 (L.A. Bill No. 2 of 1962), (2) the Madras Minor Inam (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 3 of 1962), and (3) the Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 13 of 1963.)*

† 58. *The Madras District Police (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 13 of 1963.)*

* Placed on the Table of the House on 14th August 1963.

† Circulated to Members on 14th August 1963.

INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

THIRD SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

13th, 14th, 16th and 17th August 1963.

Volume XIV (Nos. 1 to 4).

PAGES

A

ACCIDENTS—
(Lorry-Bus) Prevention 262

AGRICULTURE—
Agricultural Development, districtwise schemes 101
Crop Protection and Cattle Insurance Schemes 7-9

AGRICULTURISTS—
Compulsory Deposits 265-267
Dharmapuri taluk 273-274

LAGAMUTHU, Sri T. P.—
Cholera, outbreak in Tiruchirappalli district (C.A.) 106
Culture Diamond Workers, Government Aid 234
Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 170

ALLOWANCE—
House rent—Grama Sevaks 150

ANANDANAYAKI, Srimathi T. N.—
Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 67-68
District Police (Amendment) Bill, 1963 334-337
Iruwaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 206-210

ARANGANNAL Sri Rama—
District Police (Amendment) Bill, 1963 325-328
Government Assurances Committee, Third Report, Presentation .. 288
Registration offices for marriages 242-243
State Housing Board, delay in construction work 282-283

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

* 168. *Notification issued with G.O. Ms. No. 1400, Rural Development and Local Administration, dated 2nd July 1963 regarding rules relating to Panchayats issued under the Madras Panchayats Act, 1958. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

B. Reports, Notifications and other papers.

* 54. *A note on important changes made by the Joint Select Committee in the Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (English and Tamil.)*

* 55. *A note on important changes made by the Joint Select Committee in the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1963 (English and Tamil.)*

* 56. *A note on Inams and the proposed legislation for their abolition (English and Tamil.)*

* 57. *Summary of Evidence Tendered before the Joint Select Committee on (1) the Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1952 (L.A. Bill No. 2 of 1962), (2) the Madras Minor Inam (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 3 of 1962), and (3) the Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 (L.A. Bill No. 13 of 1963.)*

† 58. *The Madras District Police (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 13 of 1963.)*

---

* Placed on the Table of the House on 14th August 1963.
† Circulated to Members on 14th August 1963.

INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

THIRD SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

13th, 14th, 16th and 17th August 1963.

Volume XIV (Nos. 1 to 4).

PAGES

A

ACCIDENTS— 262
(Lorry-Bus) Prevention

AGRICULTURE— 101
Agricultural Development, districtwise schemes 7–9
Crop Protection and Cattle Insurance Schemes

AGRICULTURISTS— 265–267
Compulsory Deposits 273–274
Dharmapuri taluk .. ..

LAGAMUTHU, Sri T. P.— 106
Cholera, outbreak in Tiruchirappalli district (C.A.) 234
Culture Diamond Workers, Government Aid 170
Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 .. ..

ALLOWANCE— 150
House rent—Grama Sevaks

ANANDANAYAKI, Srimathi T. N.— 67–68
Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 334–337
District Police (Amendment) Bill, 1963 .. ..
Iruwaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 206–210

ARANGANNAL Sri Rama— 325–328
District Police (Amendment) Bill, 1963 288
Government Assurances Committee, Third Report, Presentation .. 242–243
Registration offices for marriages 262–263
State Housing Board, delay in construction work .. .. ..

PAGES

A—*cont.*

ARANGANNAL, SRI RAMA—*cont.*
- Slums in Madras City 282
- Western Style Hotel near Ururkuppm, Adyar 142–145

ARDANAREESWARA GOUNDER, SRI K. S.—
- Cauvery water—Distribution under turn system 225

ARUMUGAM, SRI S —
- Developmental Works, Salem district 146–147
- Medical College, Salem 234–235
- Official Language, Indian Union 247–248
- Registered marriages, Madras State 267
- S.S.L.C. Examination, 1963, successful candidates 127–129

AUCTION—
- Trees on poramboke lands 271

B

BANK(S)—
- Land Mortgage Banks, Legal Assistants 257–258

BHAKTAVATSALAM, SRI M.—
- Appropriation (No. 4) Bill, 1963.. 29–30
- B.O.H. Change in Order 57
- District Police (Amendment) Bill, 1963 .. .. 323–3 5, 357–362, 363, 364
- Educational Institutions, admissions—(St) 152–153
- Payment of Wages (Madras Amendment) Bill, 1963 63–64

BILL(S)—
- Agricultural Income-Tax (Amendment) Bill, 1963—Considered and Passed 61–63
- Message from the Legislative Council agreeing without recommendation 287
- Appropriation (No. 4) Bill, 1963—
  - Considered 29–30
  - Passed 30
- Message from the Council agreeing without any recommendation .. 151
- Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963—.
  - Considered 65
  - Passed 73
  - Message from Legislative Council agreeing without amendment 287

PAGES

B—*cont.*

BILL(S)——*cont.*
- Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963—Int. 153–154
- Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963—
  - Considered 30–50
  - Passed 50
- Message from Council agreeing without amendment 287
- District Police (Amendment) Bill, 1963—
  - Considered 323–364
  - Passed 364
- Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1963—
  - Considered 53–56
  - Passed 56–57
  - Message from the Council agreeing without amendment 287
- Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963—
  - Considered 154–169
  - Cons id 169–179
  - Passed 179
- General Sales Tax (Second Amendment) Bill, 1963 Considered and Passed 112–126
- Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1963—
  - Introduced 50
  - Considered 50–51
  - Passed 51
  - Message from the Council agreeing without amendment 287
- Inams (Supplementary) Bill, 1963—
  - Introduced 111, 112
  - Considered 321–323
  - Passed 323
  - Message from Governor 321
- Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963—
  - Referred to Select Committee 57–61
- Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962—
- Joint Select Committee Report, presentation 29
  - Considered 179–218
  - Consid 288–289, 296–313
  - Passed 313–314
- Lease-Holds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962—
  - Considered 318–320
  - Passed 320

PAGES

B—*cont.*

BILL(S)—*cont.*

Joint Select committee Report, presentation 29

Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962—

Considered 289–296

Consid 314–318

Passed 318

Joint Select Committee Report, presentation 29

Payment of Wages (Madras Amendment) Bill, 1963—

Considered 63–64

Passed 64

Message from Legislative Council agreeing without amendment. 287

Tenants ' and Ryots ' Protection (Amendment) Bill, 1963—

Considered 51

Passed 53

Message from the Council agreeing without amendment 287

BUILDING—

Tamilnad Co-operative Union Building, Government Contribution .. 271

BUS ROUTES (NEW)—

North Arcot district 284

C

CALLING ATTENTION—

Cholera, outbreak in Tiruchirappalli district 106–108

Low storage in the Mettur Reservoir 27–29

Madras Medical College Men's Hostel, unrest among students .. 284–285

Sattur Match Factories, non availability of raw materials 151–152

CAUVERY WATER—

Distribution under turn system [Dis. S. D.] 219–231

CEMENT—

Additional allotment during 1962 103–104

Adulteration 102

Allotment for 1962 104

Distribution in districts 104–106

Permit system 103

CEMENT FACTORY—

Ramanathapuram district 235

CENTRAL BANKS—

Co-operative Central Banks, By-law 270

PAGES

C—*cont.*

CHAIR—

Announcements—

Agricultural Income-tax (Amendment) Bill, 1963.. 61

Buildings (Lease and Rent Control (Amendment Bill, 1963 .. 64

Estimates Committee, nomination of members.. 153

General Sales-tax (Second Amendment) Bill, 1963 57

Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill, 1963.— 57

Public Accounts Committee, nomination of members 153

Ruling and Observations—

Adjournment Motion—

Action of the Management of B. & C. Mills in not taking back 32 of its employees—

Consent withheld on the grounds—

(1) that the motion did not relate to a matter which had happened all of a sudden .. ..
(2) that it should be definite and should not relate to something which may or may not happen .. ..
(3) 'fast' could never be the subject-matter of an adjournment motion.. 27

Bills—

First reading stage—

'During the first reading stage of a Bill Members should confine their remarks only to the salient points 41

Notice—

The Speaker had the power to waive notice and small Bills should not be postponed indefinitely to some other dates .. 287

Calling Attention Statement—

As there could not be more than one statement under rule 41 on the same day, there having been one statement under rule 41 on that day, a Calling Attention Statement under rule 41 was converted into a statement on a matter of public importance under rule 82 of the Assembly Rules. If objection was taken to such conversion, a copy of the statement under rule 41 would be sent to the member direct, in which case other members would not have the opportunity of knowing it 109

Decorum—

Challenge could not be allowed in the House 201

Objectionable Expression—

On objection being taken to the use of the expression "brute majority" with reference to the ruling party, the Chair observed that though the expression was used in Parliament, he would like the members to keep good taste in the proceedings .. 338

CHEEMAICHAMY, SRI K.—

Cement Factory, Ramanathapuram district 235

Medical Colleges, admission 258–260

Norwegian Fisheries Scheme 22

University at Madurai 260–261

Urappanur Shooting incident. 136–141

PAGES

C—*cont.*

COLONIES—
Thopputhurai colony, Tiruturaipundi taluk 280

COLLEGES—
Admission 262
Girl-student, death in class-room 17-18
Forest Engineering Colleges, Dharmapuri taluk 21
Medical Colleges, Admission 258-260
Medical Colleg s, admission (St) 108-111

CO-OPERATIVE SOCIETY—
Fishermen Co-operative Society, Killai 23
Handloom Weavers' Co-operative Society, Ponnammapet 253
Tamialnad Co-opetative Union Bnilding, Government Contibution.. 271

COMMITTEES—
District Harijan Welfare Committees 279
Estimates Committee, romination to 153
Government Assurances Committee, Third Report, presentation .. 288
Public Accounts Committee, nomination to 153
Subordinate Legislation Commiettee, Fifth and Sixth Reports, presentation. 287

COMPULSORY DEPOSIT—
Agriculturists 265-267

CONFERENCE—
Agricultural Maistries 146

CIGARETTES—
Price control 145-146

CRIMINAL CASES—
Legal aid to poor 235-236

D

DAM—
Thoppayar Dam, Salem district 255-256

DEVELOPMENTAL WORKS—
Salem district 146-147

DHAKSHINAMOORTHY GOUNDER, SRI A. S.—
District Police (Amendment) Bill, 1963 344-345

DHANDHAYUDHAPANI, SRI M.—
Agricultural Income-tax (Amendment) Bill, 1963 62
Cultivating Tenants Protection (Amendment) Bill, 1953 43-44

PAGES

D—*cont.*

DHRANGADHRA CHEMICAL WORKS—
Lands affected 233-234

DISEASES—
Cholera, outbreak in Tiruchirappalli district (C.A.) 106-108

DISTRICT BOARD—
Amount due to Government 18

DISTRICT DEVELOPMENT COUNCILS—
Resolutions 75-77

E

EDUCATION—
Three-year degree course 19
Admissions in Educational institutions, (St.) 152-153

ELECTRICITY—
Generation from small water falls 263

EMERGENCY—
Consultation with State Government for continuance.. 150-151

ESTATE VILLAGES—
Dharmapurai taluk 272-273

EXAMINATION—
S.S.L.C. Examination, 1963 127-129
S.S.L.C., Selection 276-277

F

FACTORY(S)—
Match factories, non availability of raw materials 152
Baby Food factory, starting at Ootacamund 147-148

FAIR PRICE SHOPS—
Opening 9-15
Supply of rice 249

FISHERIES—
Norwegian scheme 22

FILMS—
Shooting at Public places and buildings 245

FOREIGN ASSISTANCE—
Loans and Grants 278

PAGES

F—*cont.*

FUNDS—

Handloom Industries 274–275

G

GANESAN, SAW—

Building (Lease and Rent Control) Amendment Bill, 1963 .. . 69–72

District Police (Amendment) Bill, 1963 345–350

Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 201–206

Madras Medical College Men's Hostel, unrest among students, (C.A.) 284

GOVINDAN, PULAVAR, K.—

District Development Councils, resolution 75–77

Hindi Examination in High School 248–249

Legal aid to poor in Criminal cases 235–236

GOVERNMENT AID—

Culture Diamond Workers 234

GRAMA SEVAKS—

House rent allowance 150

H

HANDLOOM INDUSTRIES—

Funds 274–275

HARIJANS—

House-sites 275

HARIJAN COLONIES—

South Arcot district 278–279

Thanjavur district 280–281

HARIJAN WELFARE—

Scholarships 92–95

HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS DEPARTMENT—

Judicial Functions 254

HOSPITAL(S)—

Government Hospital, Gingee 267

Government Royapettah Hospital, Madras 6–7

Government Hospitals, Leprosy Control Scheme 274

Government Hospital, Jayankondacholapuram 89–90

PAGES

H—*cont.*

HOSTEL—

Harijan Hostel, Madurai 261

HOUSING—

Rural Housing Scheme, Singampunari 101–102

HOTEL—

Construction of Western Style Hotel, near Ururkuppam, Adyar .. 142–145

I

INDUSTRIAL AREAS—

Madras State 242

INDUSTRIAL ESTATE—

Guindy 246, 283

IRON ORE—

Extraction at Ammanambakkam, Chingleput district 142

IRON AND STEEL—

Factory—Opening at Arkonam 141–142

IRRIGATION—

New irrigation source, Latchipuram Kanmoi—Madurai district .. 6

Schemes—Thanjavur 282

Utilization of Cauvery Water 22

IRUVARAM INAM ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1962—

Joint Select Committee Report, presentation 29

J

JAYARAJ, SRI P.—

Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963 44–46

JEEPS—

Panchayat Union Councils, supply 271

JOTHI VENCATACHELLUM, THE HON. SRIMATHI—

Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 .. .. 65, 72–73

Cholera, outbreak in Tiruchirappalli district (C.A. St.) 106–108

Madras Medical College Men's Hostel, unrest among students (C.A. St.) 284–285

Medical Colleges, Admission (St.) 110–111

K

KAKKAN, THE HON. SRI P.—

Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 161–161

PAGES

K—cont.

KALYANASUNDARAM, SRI M.—
- Agricultural Production, Third Plan 276
- Agriculturists, Compulsory Deposits 265–267
- Text Books, objectionable 275–276
- Cement, Adulteration 102
- Cement, Permit system 103
- Continuance of Emergency 150–151
- Cuddalore Municipality, resignation of members 129 131
- House-sites for Harijans 275
- Motor Transport Workers' Act, rules 26–27
- National Water-Supply and Sanitation Committee Report 276
- National Discipline Scheme, introduction 150
- Official Correspondence in Tamil 236–238
- Public Health and Medical Department, Merger of 264–265
- Pudukkottai Municipality, upgrading 147
- State Transport System, fares 77–78
- Synthetic Stones Manufacturer's Association, Representation .. 263
- University at Madurai 260–261
- Utilisation of Cauvery Water 22

KAMARAJ, SRI K.—
- Reported resignation of the Chief Minister 285–286

KARCHA GOWDER, SRI T.—
- Baby Food Factory, Starting at Ootacamund 147–148
- District Police (Amendment) Bill, 1963 333–334
- I.A.S. Officers 131–132

KARIVENKADAM, SRI M. V.—
- Estates (Abolition add Conversion into Ryotwari) Amendment Bill, 1963 55–56
- Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 156–157
- General Sales Tax (Second Amendment) Bill, 1963 120–121

KHADI BOARD—
- Amount sanctioned in 1961–62 and 1962–63 133–136

KOSALRAM, SRI K. T.—
- Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 297–300

KRISHNAMOORTHY, SRI V.—
- Death in Police lock-up 97–99
- General Sales Tax (Second Amendment) Bill, 1963 114–116
- Harijan Hostel, Madurai 261
- Neyveli Thermal Station 263
- Panchayat Unions, tractors 78–81
- S.S.L.C. Examination, selection 276–277
- Urappanur shooting incident 136–141

KRISHNAVENI, SRIMATHI A.—
- Latchipuram Kanmoi, Madurai district 6

PAGES

L

LAKSHMIKANTHAM, SRIMATHI P. K. R.—
- Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 68–69

LEASE-HOLDS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1962—
- Joint Select Committee report, presentation 29

LANGUAGE—
- Official Indian Union 247–248

LOANS—
- Agriculturists 249–252

LOANS AND GRANTS—
- Foreign assistance 278

M

MANI, SRI K. S.—
- Cauvery Water, distribution under turn system 220–221
- Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963 38–41
- Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill 1962 201
- Killai Fishermen Co-operative Society 23
- Village Officers, Mayuram 283

MADHAVAN, SRI S.—
- Cashew Research Station 149
- District Police (Amendment) Bill, 1963 338–341
- Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 .. .. 157–161, 162, 169–173, 177–178, 170–173, 177–178
- Fair Price Shops, Madras State 249
- General Sales Tax (Second Amendment) Bill, 1963 116–117
- Government Hospital, Gingee 267–268
- Inams (Supplementary) Bill, 1963 321–322
- Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. .. 187–190, 308–310, 311, 312
- Marine Wing, Public Works Department 268
- Milk Pasteurisation Plant, Thanjavur 81–82
- Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. .. 292–293, 316
- National Water-Supply for Mudukulathur 268
- Notice for consideration of Bills 286
- Polytechnic, Vadipatti 132
- Rest House, Mudumalai Sanctuary 238–239

MADHAVAN, SRI S.—cont.
Rural Housing Scheme, Cingampunari 101-102
Sattur Match Factories, non availability of raw materials (A) .. 151-152
Taxis, Madras City 100-101

"MADRAS INFORMATION"—
Amount spent 55-57

MATHA GOWDER, SRI J.—
General Sales Tax (Second Amendment) Bill, 1963 117-120

MATHIALAGAN, SRI K. A.—
Cement, allotment for 1962 104
Cement, additional allotment during 1962 103-104
Cultivating Tenant's Protection Amendment Bill, 1963 31-34
District Police (Amendment) Bill, 1963 .. .. 328, 332, 362, 363
Gambling in Social Clubs 16-17
Government Royapettah Hospital, Madras 6-7
Handloom Industries, funds .. — 274-275
Khadi Board, Madras—amount sanctioned in 1961-62 and 1962-63 133-136
Loans to agriculturists 249-252
Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 193-196
Milk Pasteurisation Plant, Thanjavur 82-84
Three-Year Degree Course 19

MARRIAGES—
Registered ; Madras State 267

MEDICAL COLLEGE—
Salem 234-235

MEDICAL COLLEGE MEN'S HOSTEL (MADRAS)—
Unrest among students (C.A.) 284-285

MEDICAL DEPARTMENT—
Merger with Public Health Department 264-265

MEDICINES—
Spurious—Confiscation 50-52

MILK—
Pasteurisation Plant, Thanjavur 81-84

MINOR INAMS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1962—
Joint Select Committee Report, presentation 29

MOOKIAH THEVAR, SRI K.—
Urappanur, shooting incident 136-141

MOTION (S)—
Ad. Motions—Action of the Management, B & C Mills, in not taking back 32 of its employees 27
B.O.H. Change, in order 57, 320

MOTOR TRANSPORT WORKER'S ACT—
Rules 26-27

MUNICIPALITY—
Pudukkottai Upgrading 147
Cuddalore Whole-sale—Resignation of Members 129-131

N

NALLASIVAM, SRI K.R.—
Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963 46-47
District Police (Amendment) Bill, 1963 332-333
Generation of electricity from small water falls 263
Government Hospitals, Leprosy Control Scheme 274
Handloom Weavers' Co-operative Society, Ponnammapet 253
Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 210-211
Police firing at Maduranthakam 1-6
Prime Minister's tour in Madras State, June 1963 267
Private electrical undertakings, nationalisation 255
Tourist Bungalow, Ooty 239-241

NANJUNDA RAO, SRI S.—
Anti-Scorpion serum manufacture, Madras State 84-86

NARAYANASWAMY NAIDU, SRI G.—
Cauvery Water—Distribution under turn system 224-225
Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963 47-48
Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. .. 196-201, 300-302

NARAYANASWAMY PILLAI, SRI K.—
Cashew Research Station starting 149
Crop Protection and Cattle Insurance Schemes 7-9
Cuddalore Port, expansion 254
Harijan Colonies, South Arcot district 278-279
Industrial areas, Madras State 244
Junior Polytechnic Schools in Vridhachalam, Thittakudi 253-254
Nationalisation of Schools 264
Power Project, Kodayar 265
State Transport Bus Stands 278
Steel Rolling Factory, Arkonam 141-142
Sub-Registrar's office, Vridhachalam taluk 86-89

PAGES

N—*cont.*

NATIONAL DISCIPLINE SCHEME—
Introduction .. 150

NATIONAL EMERGENCY—
Wall Posters .. 283

NATIONALISATION—
Private electrical undertakings .. 255

NEDUNCHEZHIYAN, SRI V. R.—
Appropriation (No. 4) Bill, 1963 .. 29–30
District Police (Amendment) Bill, 1963 .. 352–357
Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. 211–214
Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. 319
Reported resignation of the Chief Minister .. 285

NEERA—
Permits .. 24–26

N.G.Os.—
Medical facilities, modification .. 149–150

O

OFFICERS—
I.A.S.—Appointment as Collectors .. 131–132

P

PALANI, SRI K. B.—
Highways Research Station, Madras .. 242

PANCHAYATS—
Panchayat unions, tractors .. 78–81

PANCHAYAT UNION COUNCIL—
Telephone facilities .. 277

PAPERS LAID ON THE TABLE—
Appropriation (No. 4) Bill, 1963 .. 126
Beedi Industrial Premises Act, 1958, notification .. 71
Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963, with annexure .. 126
Committee on Government Assurance, Third Report .. 365
Committee on Subordinate Legislation, Fifth Report .. 365
Committee on Subordinate Legislation, Sixth Report .. 365
District Police (Amendment) Bill, 1963 .. 232
Joint Select Committee, Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962, etc., Evidence .. 232
Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962, Joint Select Committee Report and proceedings .. 126

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*
Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962, note .. 232
Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962, Joint Select Committee Report and proceeding .. 126
Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 Joint Select Committee Report and proceedings .. 126
Minor Inams Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1963, note .. 232
A note on Inams .. 232
Panchayats Act, 1958, notification .. 232, 364, 365
Payment of Wages Bill, 1963, report .. 74
Payment of Wages (Madras Amendment) Bill, 1963, annexure .. 126
Public Service Commission Regulations, 1954, notification .. 364

PARTHASARATHY, SRI K.—
Subordinate Legislation Committee, Fifth and Sixth Reports, presentation .. 287

PENSION—
Liberalised Pension—Road Inspectors .. 257

PERSONNEL—
Non-Technical Personnel—Government Hospitals .. 269

PHARMACISTS—
Pay .. 20–21

POINT OF ORDER—
Reported resignation of the Chief Minister .. 285–286
Waiver of notice for consideration of Bills .. 286

POLICE OFFICERS—
Compulsory training to drive jeep cars and motor cycles .. 273

POLICE—
Firing at Maduranthakam .. 1–6
Police lock-up, death .. 97–99

PONNAMMAL SRIMATHI, A. S.—
District Police (Amendment) Bill, 1963 .. 343–344

POLYTECHNIC—
Vadipatti .. 132
Tanjore district .. 255

PORT—
Cuddalore Port, expansion .. 254

POWER PROJECT—
Kodayar .. 265

PRIMARY HEALTH CENTRES—
Visits of M.L.As., etc. .. 16

A. 105—4

PAGES

P—*cont.*

PRODUCTION—
Agricultural production—Third Plan 276

PROHIBITION—
Special staff 21–22

PUBLIC HEALTH DEPARTMENT—
Merger with Medical Department 264–265

PUBLIC WORKS DEPARTMENT—
Marine Wing 268

R

RAJATHI KUNCHITHAPATHAM, SRIMATHI—
Admission to Colleges 262

RAMAIAH, SRI V.—
Agricultural Income-tax (Amendment) Bill, 1963 .. .. .. 61–62, 63
Cauvery Water—distribution under turn system 222, 225–231
Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963 .. .. 30–31, 48–50
Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Added Territories) Bill, 1963 153–154
Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1963 .. .. 53–54, 56
Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 151–155
Holdings (Stay of Execution Proceedings) Madras, (Amendment) Bill, 1963 50–51
Irrigation (Levy of Betterment contribution) Amendment Bill, 1963 57–60
Low storage in the Mettur Reservoir (C.A St.) 27–29
Tenants and Ryots Protection (Amendment) Bill, 1963 51–53

RAMALINGAM, SRI N. S.—
Cauvery Water-distribution under turn system 219–220
Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 313–314

RAMASAMY, SRI S.—
Government Hospital, Jayankondacholapuram 89–90
Eucalyptus trees, Madras State 243–245

RAMASWAMI, SRI S. J.—
Bus Routes (new), North Arcot district 284
N.G.Os. in transferred territories 264

REGISTRATION OFFICES—
Marriages 242–243

REPORT—
National Water Supply and Sanitation Committee 276

PAGES

R—*cont.*

REST HOUSE—
Mudumalai Sanctuary 238–239

RESEARCH STATION—
Cashew Research station—starting 149

S

SANKARAN, SRI V.—
Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 65–67
Cultivating Tenants Protections (Amendment) Bill, 1963 34–36
District Police (Amendment) Bill, 1963 .. .. 341–344, 363
Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1963 54–55
General Sales Tax (Second Amendment) Bill, 1963 .. .. .. 113–114, 125

SAMBANDAM, SRI K. R.—
Cauvery Water, distribution under turn system 221–222
Low storage in the Mettur Reservoir (C.A.) 27
Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. 294

SCHOOLS—
High Schools Hindi, Examination 248–249
Junior Polytechnic Schools, Vrithachalam, Thittakudi 253–254

SELVARAJAN, SRI M. S.—
Lands affected by Dharangadhra Chemical Works 233–234

SENGOTTUVELU, SRI N. P.—
Foreign Assistance loans and grants 278
Improvement (Housing) Trusts—Constitution 145
Panchayat Union Councils, Telephone facilities 277
Slum Clearance Scheme, expenditure 277

SERUM—
Anti-Scorpion serum—Manufacture in Madras State 84–86

SHOOTING—
Urappanur—Report of the Revenue Divisional Officer 136–141

SLUMS—
Madras City 282

SLUM CLEARANCE SCHEME—
Expenditure incurred 277

SOCIAL CLUBS—
Gambling 16–17

SOCIETIES—
Building societies, Loans to members 262–263

SCHOOLS—
Nationalisation 264
Supply of milk powder to children 256–257

PAGES.

S—*cont.*

STATE HOUSING BOARD—
Delay in construction work .. 282-283

STATE SEED FARMS—
Nedumpalam .. 279

STATE TRANSPORT—
Bus Stands .. 278

STATION—
Highways Research station .. 242
Morappur station, stopping of trains .. 245-246

SUBBIAH, SRI A. K.—
Agricultural development, district-wise schemes .. 101
Cement, distribution in districts .. 104-106
Cigarettes, price control .. 145-146
Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963 .. 36-38
District Harijan Welfare Committees .. 279
Fair Price shops .. 9-15
Girl Student, Death in class room .. 17-18
Harijan Colonies, Thanjavur district .. 280-281
Irrigation Schemes, Thanjavur .. 282
Panchayat Union Chairmen, Travelling Allowance .. 281-282
Polytechnic, Thanjavur district .. 255
Public buildings and places allowed to be filmed .. 245
Spurious medicine, confiscation .. 90-92
State Seed Farms, Nedumpalam .. 279
Thopputhurai Colony, Thiruthuraipoondi taluk .. 280

SUBBIAH MUDALIYAR, SRI A. R.—
Cultivating Tenants Protection (Amendment) Bill, 1963 .. 42-43

SUB-REGISTRAR'S OFFICE—
Vriddhachalam Taluk .. 86-89

SWAMINATHAN, SRI R. V.—
Estates Land (Reduction of Rent, Amendment Bill, 1963 .. 162-165, 168
Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 .. 170, 176-177
Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 .. 176-177, 178
Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. 190-193
Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. 291-292

SYNTHETIC STONES MANUFACTURERS—
Synthetic Stones Manufacturer's Association, representation .. 263

PAGES

T

TAMIL—
Official Correspondence .. 236-238

TAXES—
Payment of Motor Vehicles' Taxes .. 274

TAXIS—
Madras City .. 100-101

TELEPHONE—
Panchayat Union councils .. 277

TEXT BOOKS—
Objectionable .. 275-276

THEFT—
Salem district .. 272

THERMAL STATION—
Neyveli .. 263

THIAGARAJA PILLAI, SRI M. D.—
Cauvery Water distribution under turn system .. 223-224

TOUR—
Prime Minister's tour in Madras State, June 1963 .. 267

TOURIST BUNGALOW—
Ootacamund .. 239-241

TRAINING COLLEGES—
Police—Swimming pools .. 273

TRANSFERRED TERRITORIES—
N.G. Os. .. 264

TRANSPORT—
State Transport System, fares .. 77-78

TRAVELLING ALLOWANCE—
Panchayat Union Council Chairmen .. 281-282

TREES—
Eucalyptus—Madras State .. 243-245

TRUSTS—
Improvement (Housing)—Constitution .. 145

U

UNIVERSITY—
Madurai .. 260-261

PAGES

V

VELAPPAN, Sri C. V.—
- Cauvery Water distribution under turn system 222–223

VEERAPPA CHETIAR, Sri R. S.—
- Agriculturists, Dharmapuri taluk, relief 273–274
- Agricultural Maistries Conference 146
- Building Societies, loans to members 262–263
- Co-operative Central Banks, By-law 270
- Dam across Thoppayar 255–256
- Forest Engineering College—Starting in Dharmapuri taluk 21
- Government Hospitals, Appointment of non-technical personnel .. 269
- Harijan students, scholarships 92–95
- House rent allowance, gramsevaks 150
- Judicial functions of Hindu Religious and Charitable Endowments department 254
- Land Mortgage Bank, posting of legal assistants 257–258
- Liberalised pension scheme to Road Inspectors 257
- Medical facilities (N.G.Os.) 149–150
- Neera permits 24–26
- Notified Estate villages, Dharmapuri taluk 272–273
- Panchayat Union Councils, Supply of Jeeps 271
- Payment of Motor Vehicle Taxes 274
- Ph armacists, pay 20–12
- Police Officers, compulsory training to drive jeep cars and motor cycles 273
- Police Training Colleges and Schools, swimming pools 273
- Prevention of Lorry Bus accidents 262
- Primary Health Centres 16
- Prohibition 21–22
- Salem District Board 18
- Stopping of Mail trains at Morappur Station 245–246
- Supply of milk powder for Schools 256–257
- Tamil Nadu Co-operative Union, Madras, Building grant 271
- Theft cases, Salem district 272
- Trees on poramboke lands, auction 271–272

VENKATARAMAN, Sri R.—
- B.O.H., Change in order 320
- District Police (Amendment) Bill, 1963 350–352
- Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 166–168
- Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 .. .. 169, 173, 178–179,
- Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1963 .. .. 173–176, 177, 178, 179
- General Sales Tax (Second Amendment) Bill, 1963 .. .. .. 112–113, 121–124, 124–125, 126

PAGES.

V—*cont.*

VENKATARAMAN, Sri R.—*cont.*
- Inams (Supplementary) Bill, 1963 .. .. 111–112, 321–322, 323, 179, 187, 206, 208, 214, 218
- Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. .. 296, 302, 303, 304, 305, 306, 307, 308, 310, 311, 312, 313.
- Lease-Holds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. 318, 319, 320, 289–291, 294–296
- Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962 .. 314, 315, 316, 317, 318
- Notice for consideration of Bills, waiver of 286
- Sathur Match factories, non-availability of raw materials (C.A. :St.).. 152

VILLAGE OFFICERS.—
- Mayuram 283

VISWANATHAN, Sri C. G.—
- Industrial Estate, Guindy 246
- Industrial Estate, Guindy 283
- Iron ore, Ammanambakkam 142
- "Madras Information", amount spent 95–97
- Wall Posters on National Emergency 283

W

WATER-SUPPLY SCHEME—
- National water-supply scheme, Mudukalathur 268

WORKERS—
- Culture Diamond Workers, Government .. ..

61423